வெளியீடு 12-3-2007 Issued 12-3-20(

760
3.07.07

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஆகஸ்ட் 17, 2006—தொகுதி 11—எண் 1

Thursday the 17th August, 2006 —Volume 11—No. 1

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

... Assembly Secretariat, Chennai - 600 009

V2ll,31 Po6.
227426

[Price Rs. 3.00

17–8–2006

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	v–ix
Governor and Council of Ministers	xi–xv
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvii–xix
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxi–xxxi
1. தகவல் கோரல்	
(அ) அனுதாபத் தீர்மானம் குறித்து	1-2
(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு	52,66
(இ) விவசாயிகளின் பம்புசெட்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் ஆணையை உரியவர்களுக்கு உடனே தெரிவித்தல்	53-54
(ஈ) இலங்கைத் தமிழ் இனப் படுகொலை விவரமறிய தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்புதல்	57-58
(உ) மின்சாரத் துறையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரம் பற்றிய அமைச்சரின் பேச்சு தொடர்பான செய்தி	59-60,65
2. வினாக்கள் விடைகள்	
(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	2-35
(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் I)	35-50

	பக்கங்கள்
3. இரங்கல் தீர்மானம்—	
முல்லைத் தீவில் குண்டு வீச்சினால் 61 மாணவிகள் உயிரிழப்பு மற்றும் பல மாணவிகள் படுகாயம் அடைந்தது குறித்து	50-51
4. சிங்கள இராணுவத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் இரங்கல் தீர்மானம் அமைந்ததற்குப் பாராட்டும், நன்றியும்	52-53,55-57 58-59,60-65
5. சுதந்திர தின விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் வெளியிட்ட மக்கள் நலம் பேணும் அறிவிப்புகளுக்குப் பாராட்டும், நன்றியும்	53,55
6. கவன ஈர்ப்பு—	
வால்பாறை சாலை, 27 வது வளைவு, தடுப்புச் சுவர் இல்லாததால் ஏற்பட்ட விபத்து	66-70
7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—	
தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006	70-71
8. மானியக் கோரிக்கைகள், 2006 2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	
கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	71-224
மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்	71,102, 180-212
*திரு. கே.ஏ. செங்கோட்டையன்	102-125,209
திரு. அ. ராஜன்	125-136
*திரு. என்.ஆர். ரங்கராஜன்	90-91, 137-145

	பக்கங்கள்
8. மானியக் கோரிக்கைகள், 2006 2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	
டாக்டர் க. நெடுஞ்செழியன்	94,146-155
*திரு. ஞா. ஜாண் ஜோசப்	80,155-160
*திரு. சு. குணசேகரன்	160-165
டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	96-97, 166-171
திரு. விஜயகாந்த்	171-174
*திரு. டி. இராமச்சந்திரன்	96,174-180
9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	225

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கரும்புச்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி & தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

2. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

3. மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227426
சென்னை-600 008

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்-அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

12. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

13. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம் திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம் எழுதுபொருள் மற்றும் அச்சு மற்று அரசு அச்சகம், நகரமைப்பு; திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச் மற்றும் சென்னைப் பெருநக வளர்ச்சிக் குழுமம்

14. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ. வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் நுகர்வோர் பாதுகாப்பு மற்று விலைக் கட்டுப்பாடு

15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டுவசதி, ஊரக வீட்டுவச மற்றும் வீட்டுவசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இட வசதி கட்டுப்பாடு மற்றும் தரிசு நி மேம்பாடு

16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.அ இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல் மற்றும் குடும்ப நலன்

17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரச**

தொழிலாளர்கள், மக்கள் தொ வேலைவாய்ப்பு மற்றும் பயிற் இரும்பு எஃகுக் கட்டுப்பா செய்தித்தாள் கட்டுப்பாடு, மக் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற் ஊரக வேலைவாய்ப்பு

18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

19. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

21. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

23. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

25. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை

மகளிர் மற்றும் குழந்தைக
நலன் உள்ளிட்ட சமூக நல
மதிய சத்துணவு, ஊனமுற்றோ
நலன், அனாதை இல்லங்க
குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாக
ஒருங்கிணைந்த குழந்தைய
வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவல
மறுவாழ்வு

26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்

கால்நடை பராமரிப்பு

27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:

ஆதி திராவிடர் நலன், மலைவா
பழங்குடியினர் மற்றும் கொத்தடிமை
தொழிலாளர்கள்

28. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சி
கழகம்

29. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:

பால் மற்றும் பால் பண்ணை
வளர்ச்சி

30. கதர்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:

கதர் கிராமத் தொழில் வாரியம்
பூமி தானம் மற்றும் கிராமதானம்

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR — THIRU SURJIT SINGH BARNALA

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

Chief Minister - **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

Minister for Finance - **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

Minister for Electricity and Rural Industries - **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

Minister for Rural Development and Local Administration - **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K. N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** .. **The Hon. Thiru E. V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Wasteland Development

16. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

17. **Minister for Labour** .. **The Hon. Thiru T. M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment

18. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K. R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

19. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

20. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

21. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

22. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

23. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona

24. **Minister for Highways** .. **The Hon. Thiru M. P. Saminathan:**

Highways and Ports

25. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

26. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

27. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

28. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

29. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

30. **Minister for Khadi** **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

மாற்றுத் தலைவர்கள்

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவ

திரு. செ.எ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல்.	- இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல்.	- இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல்.	- இணைச் செயலாளர்
திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்.	- இணைச் செயலாளர்
திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல்.	- துணைச் செயலாளர்
திரு. சா. த. சுப்பிரமணியன், எம்.ஏ.	- குழு அலுவலர்
திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட்.	- துணைச் செயலாளர்
திரு. எ.எம்.பி. ஜமாலுதீன் எம்.எஸ்சி., பி.எல்.	- துணைச் செயலாளர்
திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல்.	- துணைச் செயலாளர்
திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர்
திருமதி ச. நிர்மலா, பி.காம்.	- துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்
திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்
திரு. கோ. தேவராசன், பி.ஏ.	- சார்புச் செயலாளர்

திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்
திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ.	- சார்புச் செயலாளர்
திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்
செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்
திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்.	- தலைமை நிருபர்
திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ.	- தலைமை நிருபர்
திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல்.	- சார்புச் செயலாளர்
திரு. கோ. சுப்புராம், பி.ஏ.	- சார்புச் செயலாளர்
திரு. மு. கதிரேசன், எம்.ஏ.	- தலைமை நிருபர்
திரு. து. சீனிவாசன், பி.ஏ.	- சார்புச் செயலாளர்
திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல்.	- சார்புச் செயலாளர்
திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்
திரு. ம. பன்னீர் செல்வம்	- தலைமை நிருபர்
திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்
(அகர வரிசைப்படி)
பெயர்களும் தொகுதிகளும்

1.	அங்கையற்கண்ணி, செல்வி ஆ.	-	சங்கராபுரம்
2.	அப்துல் பாசித், திரு. எச்.	-	வாணியம்பாடி
3.	அப்பாவு, திரு. மு.	-	ராதாபுரம்
4.	அமரமூர்த்தி, திரு. து.	-	அரியலூர்
5.	அரி, திரு. கோ.	-	திருத்தணி
6.	அருண்மொழிதேவன், திரு. ஆ.	-	சிதம்பரம்
7.	அருள் அன்பரசு, திரு.	-	சோளிங்கர்
8.	அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு.	-	திருச்செந்தூர்
9.	அன்பரசன், திரு. தா.மோ.	-	ஆலந்தூர்
10.	அன்பழகன், திரு. எம்.	-	பழனி (செ.வ.)
11.	அன்பழகன், திரு. கே.பி.	-	பாலக்கோடு
12.	அன்பழகன், பேராசிரியர் க.	-	துறைமுகம்
13.	அன்பில் பெரியசாமி, திரு.	-	திருச்சிராப்பள்ளி-I
14.	ஆவுடையப்பன், திரு. இரா.	-	அம்பாசமுத்திரம்
15.	ஆறுமுகம், திரு. கி.	-	செங்கல்பட்டு
16.	ஆற்காடு நா. வீராசாமி, திரு.	-	அண்ணா நகர்
17.	இராசசேகரன், திரு. எஸ்.	-	ஆலங்குடி
18.	இராணி, திருமதி இரா.	-	உப்பிலியாபுரம் (ஆவா,
19.	இராமகிருஷ்ணன், திரு. நா.	-	கம்பம்
20.	இராமசாமி, திரு. கரி.	-	திருவாடானை

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராமபிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கோ. - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்

42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.எ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்

63.	குமாருகுரு, திரு. இரா	.. திருநாவலூர்
64.	குருசாமி, திரு. செ.	.. அந்தியூர் (செ.வ.)
65.	கோபாலன், திரு. போ.	.. உதகமண்டலம்
66.	கோபிநாத், திரு. கே.	.. ஓசூர்
67.	கோவிந்தசாமி, திரு. சி.	.. திருப்பூர்
68.	கோவை தங்கம், திரு.	.. வால்பாறை (செ.வ.)
69.	சக்கரபாணி, திரு. அர.	.. ஒட்டன்சத்திரம்
70.	சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி	.. அச்சரப்பாக்கம் (செ.வ.)
71.	சண்முகம், திரு. எஸ்.வி.	.. மதுரை மேற்கு
72.	சண்முகம், திரு. சி.வி.	.. திண்டிவனம்
73.	சண்முகவேலு, திரு. சி.	.. உடுமலைப்பேட்டை
74.	சதன் திருமலைக்குமார், டாக்டர் தி.	.. வாசுதேவநல்லூர் (செ.வ.)
75.	சந்திரகாசி, திரு. மா.	.. வரகூர் (செ.வ.)
76.	சந்திரா, திருமதி மு.	.. ராஜபாளையம் (செ.வ.)
77.	சாமி, திரு. ஆர்.	.. மேலூர்
78.	சாமி, திரு. கே.பி.பி.	.. திருவொற்றியூர்
79.	சாமிநாதன், திரு. மு.பெ.	.. வெள்ளக்கோவில்
80.	சிவசங்கர், திரு. எஸ்.எஸ்.	.. ஆண்டிமடம்
81.	சிவபுண்ணியம், திரு. வை.	.. மன்னார்குடி
82.	சிவராஜ், திரு. சு.	.. ரிஷிவந்தியம்
83.	சிவானந்தம், திரு. ஆர்.	.. ஆரணி
84.	சிவாஜி, திரு. இ.எ.பி.	.. திருவள்ளூர்

8.5.	சின்னசாமி, திரு. அ.	.. பேரணாம்பட்டு (செ.வ.)
86.	சின்னசாமி, திரு. ஆர்.	.. சிங்காநல்லூர்
87.	சின்னச்சாமி, திரு. செ.	.. மருங்காபுரி
88.	சின்னதுரை, திரு. கு.	.. தலைவாசல் (செ.வ.)
89.	சின்னப்பன், திரு. பொ.	.. விளாத்திகுளம்
90.	சின்னராஜ், திரு. ஓ.கே.	.. மேட்டுப்பாளையம்
91.	சீனிவாசன், திரு. கு.	.. பூங்கா நகர்
92.	சுதர்சனம், திரு. டி.	.. பூந்தமல்லி
93.	சுந்தரம், திரு. எம்.ஆர்.	.. ஆத்தூர்
94.	சுந்தரம், திரு. ந.	.. காரைக்குடி
9.5.	சுந்தர், திரு. க.	.. உத்திரமேரூர்
96.	சுப்பிரமணியம், திரு. ஓ.	.. பவானிசாகர்
97.	சுப்புராம், திரு. ராம.	.. திருமயம்
98.	சுப்ரமணியன், திரு. ந.	.. குளத்தூர் (செ.வ.)
99.	சுரேஷ் ராஜன், திரு. என்.	.. கன்னியாகுமரி
100.	சூரியகுமார், திரு. என்.கே.ஆர்.	.. நாட்றாம்பள்ளி
101.	செங்குட்டுவன், திரு. டி.	.. கிருஷ்ணகிரி
102.	செங்கோட்டையன், திரு. கே.ஏ.	.. கோபிசெட்டிப்பாளையம்
103.	செந்தமிழன், திரு. ஞா.	.. சைதாப்பேட்டை
104.	செந்தமிழ்ச்செல்வன், திரு. பா.	.. மேல்மலையனூர்
10.5.	செந்தில் பாலாஜி, திரு. வே.	.. கரூர்
106.	செல்வம், திரு. கு.	.. மங்களூர் (செ.வ.)
107.	செல்வராஜ், திரு. என்.	.. முசிறி

108. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்
109. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
110. சேகரன், திரு. கூ.ந. .. திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. .. மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. .. குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். .. சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. .. திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. .. வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. .. சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. .. ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. .. ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. .. பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. .. சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. .. பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

131. துரை சந்திரசேகரன், திரு. .. திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. .. சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. .. கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. .. புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி-2
140. பதர் சயீத், திருமதி .. திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. .. நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. .. ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். .. சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. .. அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர
152. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

154.	பிரபாவதி, திருமதி பெ.	தாராபுரம் (செ.வ.)
155.	பிரேமா, திருமதி ஆர்.	அவினாசி (செ.வ.)
156.	பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ்.	கடையநல்லூர்
157.	புஷ்பராஜ், திரு. செ.	கண்டமங்கலம் (செ.வ.)
158.	பூங்கோதை, டாக்டர் (திருமதி)	ஆலங்குளம்
159.	பெரியகருப்பன், திரு. கே.ஆர்.	திருப்பத்தூர்
160.	பெரியசாமி, திரு. இ.	ஆத்தூர்
161.	பெரியசாமி, திரு. மு.க.	பூம்புகார்
162.	பெரியண்ணன், திரு. பி.என்.	பெண்ணாகரம்
163.	பொங்கலூர் நா. பழனிசாமி, திரு.	கோயம்புத்தூர் கிழக்கு
164.	பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு.	பொள்ளாச்சி
165.	பொன்முடி, டாக்டர் க.	விழுப்புரம்
166.	பொன்னுசாமி, திரு. கே.	சேந்தமங்கலம் (ஆ.வா.)
167.	பொன்னுதுரை, திரு. செ.	பெருந்துறை
168.	போளூர் வரதன், திரு. ம.	செங்கம் (செ.வ.)
169.	போஸ், திரு. ஏ.கே.	திருப்பரங்குன்றம்
170.	மகேந்திரன், திரு. இ.	உசிலம்பட்டி
171.	மகேந்திரன், திரு. கே.	பெரம்பூர் (செ.வ.)
172.	மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த.	திருவோணம்
173.	மணி, திரு. எஸ்.	பொங்கலூர்
174.	மணி, திரு. கோ.சி.	கும்பகோணம்
175.	மணி, திரு. ஜி.கே.	மேட்டூர்
176.	மதிவாணன், திரு. உ.	திருவாரூர் (செ.வ.)

177.	மலரவன், திரு. தா.	கோயம்புத்தூர் மேற்கு
178.	மாணிக்கம், திரு. இரா.	குளித்தலை
179.	மாரிமுத்து, திரு. வே.	நாகப்பட்டினம்
180.	மாலைராஜா, திரு. என்.	திருநெல்வேலி
181.	முருகவேல், திரு. கே.	முதுகுளத்தூர்
182.	முல்லைவேந்தன், திரு. வ.	மொரப்பூர்
183.	மூர்த்தி, திரு. டி.	திருப்போரூர் (செ.வ.)
184.	மூர்த்தி, திரு. பி.	சோழவந்தான்
185.	மேகநாதன், திரு. த.அ.	காவேரிப்பட்டினம்
186.	மோகன், திரு. பெ.	ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187.	மைதீன்கான், திரு. டி.பி.எம்.	பாளையங்கோட்டை
188.	யசோதா, திருமதி டி.	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189.	ரங்கநாதன், திரு. ப.	வில்லிவாக்கம்
190.	ரங்கராஜன், திரு. என்.ஆர்.	பட்டுக்கோட்டை
191.	ரவிக்குமார், திரு. து.	காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192.	ரவிச்சந்திரன், திரு. எல்.	சேலம்-I
193.	ராணி வெங்கடேசன், திருமதி	சாத்தான்குளம்
194.	ராதாகிருஷ்ணன், திரு. ல.	கோவில்பட்டி
195.	ராமசந்திரன், திரு. கா.	கூடலூர்
196.	ராமநாதன், திரு. கே.வீ.	பவானி
197.	ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ்.	இளையான்குடி
198.	ராஜகுமார், திரு. எஸ்.	மயிலாடுதுறை

199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்
200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்.கே.கே.பெ. .. ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு.ச. .. போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
207. வரதாராஜன், திரு. ரா. .. விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. .. போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்-2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
221. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

222. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
234. (வெற்றிடம்) .. மதுரை மத்தி
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 1, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 ஆகஸ்ட் 17, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

1. தகவல் கோரல்

(அ) அனுதாபத் தீர்மானம் குறித்து

திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அனுதாபத் தீர்மானம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் Question Hour–ஐ முடித்துக்கொள்வோம், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் Question Hour முடிந்த பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர். Question Hour முடிந்த பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) எல்லோருக்கும் அந்த உணர்வு உண்டு. (குறுக்கீடு) Question Hour முடிந்த பிறகு சொல்லுங்கள், ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) எல்லோருக்கும் அது உண்டு, உட்காருங்கள். Question Hour முடிந்த பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ம.தி.மு.க.வினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் முதலிலே அனுதாபத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்கிறார்கள். Assembly தொடங்கியவுடன் முதலிலே கேள்வி நேரம். அது முடிந்த பிறகு, Zero hour–ல் இந்தப் பிரச்சினையை எழுப்பி, உங்கள்

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2006 ஆகஸ்ட் 17

அனுமதி பெற்று, அதற்குப் பின்னால் வேண்டுமானால், அதைப் பற்றி யோசிக்கலாமே தவிர, Question நேரத்தில் அதை எழுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிந்த பிறகு நீங்கள் கேளுங்கள், உட்காருங்கள்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

31—

நியாய விலைக் கடை

***439—திரு. கோ. அரி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், புதுமாவிளங்கை ஊராட்சி, எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியிலுள்ள எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் பகுதிநேரக் கடை தொடங்க 10—8—2006 ஆம் நாளிடப்பட்ட அரசாணை (டி) எண் 286—ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிடப்பட்டிருக்கிறது என்று கூறியுள்ளார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆணை வெளியிடப்பட்டது என்று சொல்லிவிட்டார்கள். என்ன சொல்ல வேண்டுமோ சொல்லுங்கள், அல்லது நன்றி சொல்லுங்கள். அவ்வளவுதான்.

2006 ஆகஸ்ட் 17]

திரு. கோ. அரி: உடனடியாக அதை ஆரம்பிப்பதற்கான வேலைகளை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: இந்த ஆணை அங்கு வந்து சேர்ந்தவுடன், அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் புதிய ரேஷன் கடைகளை அமைப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். நிறையக் கிராமப்புறங்களிலே நியாய விலைக் கடைகள் இல்லாமல், கிராமப்புற மக்கள் 4 கிலோ மீட்டர், அல்லது 3 கிலோ மீட்டர் தூரம் N.H. Road—ல் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகையால், தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமப்புறங்களுக்கு எப்படி, எந்த முறையில், எத்தனை கிலோ மீட்டர், அல்லது எத்தனை கார்டு இருந்தால் புதிய ரேஷன் கடைகள் அமைக்கலாம் என்று பார்த்து 1 கிலோ மீட்டர் அல்லது 1½ கிலோ மீட்டர் இடைவெளியில் புதிய நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஓர் ஆணையைப் பிறப்பித்து இருக்கிறோம். ஏற்கெனவே இருந்த இடைவெளி தூரத்தைக் குறைத்து ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அந்த நிர்வாகம் தொடங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மேக்களூர் காட்டுக்குளம், தென்னாசம்பட்டு போன்ற கிராமங்களில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பகுதிநேரக் கடைகள் ஒன்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் இருந்தன. கடந்த ஆட்சியிலே அவையெல்லாம் மூடப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதிநேரக் கடைகளைத் திறக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 17

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக அந்தக் கடைகளை எடுத்துத் தொடங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன்.

முற்பகல் 9-35

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளை இரண்டாகப் பிரிக்கிறபோது முதல் பகுதிநேரக் கடை என்றால், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரே பிரித்து விடுகிறார். 3 மைல், 4 மைல் இடைவெளி இருக்கின்றபொழுது 3—வது கடை பிரிக்கப்பட வேண்டுமென்ற நிலை ஏற்படுகிறபோது, அரசுக்கு அனுப்பித்தான் அனுமதி பெற வேண்டுமென்ற காரணத்தால், நீண்ட காலதாமதமாவதோடு, கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் 3—வது பகுதிநேரக் கடையைப் பிரிக்க மறுக்கிறார்கள். எனவே, 3—வது பகுதிநேரக் கடையைப் பிரித்துக் கொடுக்கவும், அப்படிப் பிரிக்கப்படுகிற கடைகளைக் கடந்த காலத்தில் கலைஞருடைய ஆட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களே நடத்துவதற்கான வாய்ப்பு இருந்தது. எனவே, தொடர்ந்து பெண்களுடைய மேம்பாட்டில் அக்கறை காட்டுகிற கலைஞருடைய அரசு, புதிதாகப் பிரிக்கப்படுகிற பகுதிநேர நியாய விலைக் கடைகளை மகளிரே நடத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கடைகளைத் திறப்பதிலே அதிகமான செலவினங்கள் ஏற்படாமல் அந்தச் செலவினங்களை யாராவது பொறுப்பேற்றுக்கொண்டு அந்தக் கடைகளை நடத்தலாம் என்று முன்வந்தால், அதற்கு முதலிடம் கொடுக்கப்படும். ஆனால், பகுதிநேரக் கடைகளைத் திறந்துகொண்டே போகும்போது, அவற்றிலே தாய்க் கடைகளிலிருந்து அங்கு போய்த்தான் வியாபாரம் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படி நடக்கிறபோது, தாய்க் கடையின் பணிகள் நேரம் குறைகின்ற நிலைமை வருகின்றது. இதையெல்லாம் அனுசரித்து, அந்தக் கடை திறக்கின்ற பணிகள் தொடங்கி நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

2006 ஆகஸ்ட் 17]

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையில், பகுதிநேரக் கடைக்கு 150 கார்டுகள் இருந்தால்—1½ கி.மீ. தொலைவில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பதற்காக ஆணையிட்டுள்ளார்கள். அந்த அரசாணை, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு இதுவரை சென்றடையவில்லை. அரசாணை எப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்றடையும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பகுதிநேரக் கடைகள் திறப்பதற்கான வழிமுறைகளை மாற்றியமைப்பது குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்துள்ளார்கள். இதன்மீது உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, திரு. வை. காவேரி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

32—

கட்டட வசதி

***1721—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமம், ஒண்டிக்கடை நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமம், ஒண்டிக்கடை நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சொந்த நிலமோ, புறம்போக்கு நிலமோ இல்லாததாலும், தானமாக நிலம் கொடுக்க அப்பகுதியில் யாரும் முன் வராததாலும், ஒண்டிக்கடை நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டத் தற்போது வாய்ப்பு இல்லை.

[2006 ஆகஸ்ட் 17

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஒன்றியக்கடை கடைக்கு அருகிலேயே 50 அடி தூரத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சம்பந்தப்பட்ட, அதாவது நெடுஞ்சாலையிலிருந்து 100 அடி தூரத்தில் 10 சென்ட் நிலம் இருக்கின்றது. அது நெடுஞ்சாலைத் துறை, சாலைப் போக்குவரத்தை ஒட்டி தள்ளி இருப்பதால், அங்கு நியாய விலைக் கடை கட்ட அனுமதி வழங்க முடியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை அனுமதி இல்லாமல் நாம் அந்தக் கடையைக் கட்ட முடியாது. ஆனால், நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், அவர்கள் ஒதுக்கியிருக்கின்ற இடங்கள் பூராவும் போக்குவரத்து வசதிக்காக அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடங்கள் என்றுதான் கருதப்படுகிறது. அப்படி ஒருக்கால் உறுப்பினர் அவர்கள் அதிலே தொடர்பு கொண்டு அந்த இடம் கிடைக்கும் என்று தெரிவித்தால், அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம அங்காடிகளுக்கான பணியாளர்கள் தேர்வு குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை ஏற்கெனவே வெளியிட்டிருந்தார்கள், ஒரு சில தினங்களுக்கு முன்பாக. எவ்வளவு பேர்களைப் பணி நியமனம் செய்யப் போகிறார்கள்? அது எந்தக் காலக்கெடுவுக்குள்ளாக நிறைவு பெற இருக்கிறது? அதைப்போலவே, தேவையான அளவுக்குரிய இந்தப் புதிய கடைகளைப் பற்றி ஏராளமான கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே, சில விதிமுறைகள் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகின்றன. அவை காலங்காலமாகச் சொல்லப்படுகின்றன. ஆகவே, விதிமுறைகளைத் தளர்த்தி, அந்தப் பகுதி கிராமங்களுடைய தேவைகளைக் கருதி, நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்குரிய முயற்சியை, புதிய முயற்சியை நமது அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்று, பரிசீலித்து, அது ஒருக்கால் முடியுமானால், முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

2006 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

(முற்பகல் 9-40)

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடை என்று வருகின்றபொழுது, பொருள்கள் மலிவாக இருக்கும், சிறப்பாக இருக்கும் என்பதுதான் வாடிக்கையாளர்களுடைய எண்ணம். குறிப்பாக, சென்னை மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி போன்ற கூட்டுறவு அங்காடிகளுக்குச் செல்கின்றபொழுது, Students Co-operative-க்குச் செல்கின்றபொழுது நாங்களெல்லாம் விலை குறைந்த பொருட்களை வாங்குவோம். அதுபோல, அரிசி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்களைத் தவிர்த்து, பிற பொருட்களான, சோப்பு போன்றவற்றை நியாய விலைக் கடைகளில் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரைப் பொறுத்தது. அவர் கொடுத்தால் அதை விநியோகிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர ரேஷன் கடைகளில் அரிசி உட்பட 100 சதம் கொடுக்கப்படுகின்றது. ஆனால், மண்ணெண்ணெய் போன்ற பொருட்கள் கடைகளின் அளவிற்கு ஏற்றவாறு வருவதில்லை. முறையாக 100 சதம் மண்ணெண்ணெய் கொடுப்பதற்கான உறுதிப்பாட்டைச் செய்ய முடியுமா? அதேபோல, பகுதிநேரக் கடைகளில், குறிப்பாக, எடை உட்பட பிரச்சினைக்குரிய விஷயமாக இருக்கிறது. வாடகையை எடுத்துக்கொண்டால், அந்த வாடகையை 3 ஆண்டு காலம், 5 ஆண்டு காலம் அந்தப் பகுதிப் பயனாளிகளே வசூலித்துக் கட்ட வேண்டிய அவசியமும் இருக்கிறது. எடைக் கல், தராசு உட்பட, அந்தக் கடையை நடத்துகின்ற நிறுவனமே, அல்லது அரசே ஏற்று நடத்துவதற்கான வாய்ப்புகள், சாத்தியக்கூறுகள் உண்டா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தராசு என்பது முக்கியமான பிரச்சினை. நான் அதைக்கூட என்னுடைய மானியக் கோரிக்கையில் விரிவாக எடுத்துச்

சொல்லியிருக்கிறேன். தகுதி வாய்ந்த சங்கங்கள் தராசு வாங்கிக்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதோடுகூட, அப்படித் தகுதி இல்லாதவர்களுக்குப் படிப்படியாகத் தராசுகள் வைத்துப் பழகுவதற்கு அரசும் அதற்கு ஒரு முதலீடு செலுத்துகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இவையெல்லாம் படிப்படியாக நிவர்த்தி செய்யப்படும். மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில், உணவுத் துறை எங்களுக்கு என்ன உத்தரவிடுகிறதோ, அதன் அடிப்படையில்தான் எங்களால் வழங்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

33—

அரசுக் கலைக் கல்லூரி

***333—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சங்ககிரியில் அரசுக் கலைக் கல்லூரி அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், ஒரு கோடி ரூபாய் பணமும், 5 ஏக்கர் நிலமும் அந்த ஊர் மக்கள் கொடுத்தால், அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கடந்த வாரம்கூட பொறியியல் கல்லூரி அமைக்கப்படுமா என்று உறுப்பினர்கள் கேட்டதற்கு, இதே பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். சங்ககிரி என்பது ஒரு divisional வருவாய்க் கோட்ட அலுவலகம் உள்ள ஊர். சங்ககிரி, எடப்பாடி, இரண்டு வட்டங்களைக் கொண்ட அந்த சங்ககிரியில் கலைக் கல்லூரியோ,

பொறியியல் கல்லூரியோ, பாலிடெக்னிக் கல்லூரியோ, அரசுக் கல்லூரிகளோ இல்லை. எடப்பாடியிலும் இல்லை. சங்ககிரி பகுதியிலே இருக்கின்ற மாணவ, மாணவிகள் படிப்பதற்காக சேலம் செல்ல வேண்டும், அல்லது ஈரோடு செல்ல வேண்டும். அங்கே தனியார் கல்லூரிகளிலே நிறைய நுழைவுக் கட்டணம் வசூலிப்பதால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயி வீட்டுப் பிள்ளைகள், தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் எல்லாம் நுழைவுக் கட்டணம் செலுத்திப் படிக்கின்ற வசதி வாய்ப்புகள் இல்லாத காரணத்தினாலும், சங்ககிரி தொகுதி Reserved Constituency—தனித் தொகுதி என்பதனாலும், இந்த ஒரு கோடி ரூபாயை, 50 இலட்சம் ரூபாயாகக் குறைத்து, விதியைத் தளர்த்தி அரசு ஏதாவது வழங்க முடியுமா? அல்லது சங்ககிரிக்கென்று தனியாக, பிரத்தியேகமாக மாண்புமிகு அமைச்சர் விதிகளைத் தளர்த்தி கல்லூரி அமைப்பதற்கு அரசாணை பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்ற வாரம் பதில் சொல்கிறபோதே இதைக் குறிப்பிட்டிருந்தேன். பெரும்பாலான உறுப்பினர்கள், ஏன் கிட்டத்தட்ட 234 உறுப்பினர்களுமே அவரவர்களுடைய தொகுதிகளிலே அரசுக் கலைக் கல்லூரிகள் வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். கேள்விகளே அந்த அடிப்படையில்தான் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே நான் பொதுவாகவே சொன்னேன். எந்த உறுப்பினர் வேண்டுமானாலும், அந்தத் தொகுதியிலே உள்ளவர்கள் அந்த நிதியை அளித்தால் அதற்குக் கொடுக்கலாம் என்ற ஒரு விதியை தலைவர் கலைஞர் முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இதுவும் சொல்லப்பட்டிருக்கிறது. சங்ககிரிக்குப் பக்கத்திலே பல ஊர்களிலே இருக்கின்றன. திருச்செங்கோட்டில் கல்லூரி இருக்கிறது. அங்கெல்லாம் விட்டுவிட்டு, பக்கத்தில் இருக்கின்ற ஊரை எல்லாம் விட்டுவிட்டு சேலத்திற்குப் போக வேண்டிய அவசியமே இல்லை. சேலத்திலே மூன்று அரசுக் கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, தனியார் யாரேனும் சங்ககிரியில் கல்லூரி தொடங்க முன்வந்தால், இந்த அரசு அவர்களுக்குத் தாராளமாக அனுமதி வழங்கும்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) இல்லை மணி, உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்கள்.

[2006 ஆகஸ்ட் 17

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டிலே தனியார் கல்லூரி இருப்பது என்பது உண்மை. திருச்செங்கோட்டிலே தனியார் கலைக் கல்லூரி இருக்கிறது என்பது உண்மை. மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே—ஏறத்தாழ 5,439 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கீடு செய்து, 12 கோடி ரூபாய் கட்டடங்களைப் பழுதுபார்ப்பதற்காக நிதி ஒதுக்கீடும் செய்திருக்கின்ற தலைவர் கலைஞரது ஆட்சியில், கலைக் கல்லூரி இல்லை என்றாலுங்கூட, நமது நிதிநிலை அறிக்கையிலே--பட்ஜெட்டிலே சொல்லியிருப்பதுபோல, கிராமப்புற மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்கேற்ப, பல் மருத்துவக் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள், உடலியக்க மருத்துவக் கல்லூரிகள் என்கிற Colleges of Physiotherapy—யோ அமைந்திட நடவடிக்கை எடுத்தால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழை, எளிய மக்கள் படித்து, பட்டம் பெற்று, உடனடியாக வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். வாழ்க்கைத் தரத்தையும் அமைத்துக்கொள்ள முடியும். எனவே, அந்த அடிப்படையிலேயாவது இந்த ஊரகப் பகுதியான சங்ககிரிப் பகுதிக்கு செவிலியர் கல்லூரியோ அல்லது Colleges of Physiotherapy—யோ அல்லது பல் மருத்துவக் கல்லூரியோ அமைக்கவாவது அரசு முன்வருமா? அதற்கு என்னென்ன அளவுகோல்கள் அரசாங்கத்திற்கு வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அரசுக் கலைக் கல்லூரிக்கு, பொறியியல் கல்லூரிக்குச் சொன்ன அதே பதிலையே திரும்ப மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லாமல்—இது கலைக் கல்லூரி. பொறியியல் கல்லூரிகளில்தான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): பொறியியல் கல்லூரிகளில்தான் 22,000 இடங்கள் காலியாக இருக்கின்றன. அரசுக் கல்லூரிக்கு அது இல்லை. ஆகவே, நான் இன்னொரு வேண்டுகோளையும் வைக்கிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் என்னுடைய வேண்டுகோளை ஏற்று, அமைச்சருக்குச் சிபாரிசு செய்ய முடியுமா (சிரிப்பு) என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைத் தலைவர் அவர்களே, கேள்வியை மாத்திரம் கேளுங்கள். (சிரிப்பு)

006 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றார்கள். முன்பு சொன்ன அதே பதிலைத் திருப்பிச் சொல்லக் கூடாது என்று நிபந்தனை விதிப்பது முறையல்ல. (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது; கிராமப் பகுதிகளிலே பல் மருத்துவக் கல்லூரியோ மற்ற அதைச் சார்ந்த கல்லூரிகளோ தொடங்குவதற்குத் தனியார்கள் முன்வருவார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு இந்த அரசு அனுமதியளிக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறோமே தவிர, அரசு இவற்றை அமைக்கும் என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார்மூலமாக அவர் குறிப்பிட்டிருக்கிற பல் மருத்துவக் கல்லூரியோ மற்ற நர்ஸ் பயிற்சிக் கல்லூரிகளோ, ஏதேனும் தேவையானால், தனியார்கள் முன்வருவார்களானால், அதற்கு இந்தத் துறை அல்ல, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்தான் அனுமதியளிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு கண்டிப்பாகச் செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பொறுப்பேற்ற இந்த 3 மாத காலத்திற்குள் கல்விக் கொள்கையில் பல்வேறு சீர்திருத்தங்களையெல்லாம், மாறுதல்களையெல்லாம் புரட்சிகரமாகச் செய்து சாதனை படைத்து வரக்கூடியதை நாட்டு மக்களும், மாணவர்களும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றில் ஒன்று குறிப்பிடத்தக்கது. கல்லூரிகளில் காலை நேர வகுப்பு, மாலை நேர வகுப்பு என்ற அருமையான ஒரு திட்டத்தை, அதாவது பகுதிநேரக் கல்லூரிகள் செயல்படுவதற்கு அரசு வழிவகுத்திருக்கிறது. அந்த அடிப்படையில், பொறியியல் பாடங்களையும், அதே கல்லூரிகளில், அரசுக் கல்லூரிகளில் மாலை நேர வகுப்பிலோ அல்லது காலை நேர வகுப்பிலோ பொறியியல் கல்லூரிகளை தொடங்கலாம். கட்டட வசதி இருக்கிறது. கூடுதலாக ஆய்வுக் கூட வசதி மட்டும் மேற்கொண்டால்

போதுமானது. ஆகவே, குறைந்த கட்டணத்தில் ஏழை எளிய மாணவர்கள் படிப்பதற்கு, பொறியியல் பாடப் பிரிவுகளை இதே கல்லூரிகளிலே தொடங்குவதற்கு அரசு முன் வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, 2002 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின்படி, அரசுக் கலை, அறிவியல் கல்லூரிகளெல்லாம் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்டன. அவை சரியாகச் செயல்படவில்லை என்று சொல்லி, இப்போது நம்முடைய அரசு அவற்றை மீளப்பெற்றிருக்கிறது. அது வரவேற்கக்கூடியது. அந்த நாட்களில், 2002 ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களெல்லாம் போராடினார்கள். இரண்டு கட்டப் போராட்டம், 25 நாட்கள். அந்த 25 நாட்கள் போராட்டத்தை வேலைநாட்களாகக் கருத வழிவகுத்து, அவர்களுக்கு ஊதியம் வழங்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கலைக் கல்லூரிகளில் மாலை நேரத்தில் பொறியியல் பாடப் பிரிவுகளையும் தொடங்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியிருக்கிறார்கள். இப்போது, பல்வேறு பகுதிகளிலே பொறியியல் கல்லூரிகளே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றிலேயே 20,000 இடங்கள் காலியாகவும் இருக்கின்றன. Shift முறை கொண்டு வந்திருப்பதற்கான காரணமே, கலைப் பிரிவுப் பாடப் பிரிவுகள், குறிப்பாக, B.Sc. (Computer Science), B.Sc. (Information Technology), அதேபோல, B.Com. போன்ற பாடப் பிரிவுகளுக்கு பல்வேறு கல்லூரிகளிலே 2 மடங்கு, 3 மடங்கு என விண்ணப்பங்கள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. ஆகவேதான், அந்தக் கல்லூரிகளிலே காலை நேரத்திலும், மாலை நேரத்திலும், இருக்கிற infrastructure—கட்டட வசதிகளை, அதேபோல மற்ற வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு, இரண்டு முறைகளிலே நடத்தலாம் என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. பொறியியல் கல்லூரிகள் நிறைய இருக்கிற காரணத்தினால், அவை தேவை என்ற அவசியம் எழவில்லை என்றே நான் கருதுகிறேன். ஆசிரியர்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். முதல்வர் அவர்களோடு பேசி, அனைத்துத் துறைகளுக்குமே அதுபோன்ற போராட்டக் காலங்களிலே ஏற்பட்டிருக்கிற இழப்புக்கள் ஈடுகட்டப்பட்டிருக்கிற காரணத்தினால், இந்தத் துறையிலேயும் அதை ஈடுகட்டுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

(முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் கூடுதலாக நன்கொடை வசூலிப்பதைத் தடை செய்வதற்கு அருகில் இருக்கக்கூடிய கேரள மாநிலத்தில் ஒரு தனிச் சட்டத்தைக் கல்வித் துறை அமைச்சர் கொண்டு வந்தார். அதுபோன்று, தமிழகத்திலும் நன்கொடைகளை முறைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் அப்படிப்பட்ட சட்டம் கொண்டு வர அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசாங்கம் கொண்டு வந்த சட்டம் தொடர்பாக Supreme Court–இலேயே இன்று அதற்கான வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. ஆனால், இதற்கான சட்டம் இப்பொழுதே இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டு, இராமன் குழு எந்த அளவிற்கு நிர்ணயம் செய்கிறதோ, அதைத்தான் தனியார் கல்லூரிகள் வசூலிக்க வேண்டும் என்ற விதிமுறையும் வகுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலுங்கூட, சில கல்லூரிகள் அதை மீறி வசூலிக்கின்றன என்பது நடைமுறை உண்மைதான். அதைக்கூட நான் என்னுடைய மானியக் கோரிக்கையிலே சொல்லியிருக்கிறபோதே, எச்சரிக்கையாகச் சொல்லியிருக்கிறேன். அந்தத் தனியார் கல்லூரிகளை நடத்துபவர்கள் அதை மாற்றிக்கொள்வார்கள் என்று நம்புகிறோம். அதே காலக் கட்டத்திலே, இந்தக் கூட்டத்தொடரிலேயே இவற்றையெல்லாம் வரன்முறைப்படுத்துகிற சட்டமும் வரவிருக்கிறது என்பதையும் நான் இங்கே அறிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 34, திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

34—

தொழில்நுட்பக் கல்லூரி

***1443—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 17

சாத்தான்குளம் தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசுத் தரப்பில் சாத்தான்குளம் தொகுதியில் புதியதாக அரசு தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் சாத்தான்குளம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. ஏழை மக்கள் அதிகமாக வாழ்கின்ற தொகுதி. கிராமங்கள் அதிகமாக உள்ள தொகுதி. பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற தொகுதி. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டாயமாக எங்கள் தொகுதிக்கு ஒரு தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தரும்படி மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, சாத்தான்குளம் தொகுதி அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் தற்போது இரண்டு அரசு polytechnic கல்லூரிகளும், 5 சுய நிதி polytechnic கல்லூரிகளும் உள்ளன. அந்த மாவட்டத்திலே மட்டும் 308 சீட்டுகள் சென்ற ஆண்டு காலியாகவே இருந்தன. ஆகவே, இந்தப் பொறியியல் கல்லூரிகள் இதுபோன்ற கல்லூரிகள் எல்லாம் மாணவர்கள் சேர்க்கைக்கு அதிகமாகவே இருக்கிற காரணத்தினால், அரசு தனியாகக் கல்லூரிகளைத் தொடங்கும் என்று சொன்னாலுங்கூட தொடங்குவதற்கு முயற்சித்தாலுங்கூட, மாணவர்கள் சேருவார்களா என்ற ஐயப்பாடும் இருக்கிறது. அரசுக் கல்லூரிகளிலே சேருவார்கள் என்ற நிலை இருந்தாலுங்கூட, இன்று பல்வேறு தனியார் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கிற சூழலில் இதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரி தொடங்க வேண்டும் என்று சொன்னால், ஒரு கோடி ரூபாய் நிதியும், 5 ஏக்கர் நிலமும் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு

2006 ஆகஸ்ட் 17]

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு கோடி ரூபாய் கொடுப்பதற்குத் தனியார் தயாராக இருக்கிறபொழுது, ஒரு கோடி ரூபாய் கொடுக்கக்கூடிய எங்களுக்கு அந்தக் கல்லூரியில் என்ன பங்கு என்று அவர்கள் கேட்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலிலேயே அறிவித்திருக்கிறார்கள். அதுபோன்று நன்கொடை கொடுக்க வருபவர்களுடைய பெயரிலேயே அந்தக் கல்லூரிக்கு, அந்தக் கட்டடங்களை உருவாக்குவதிலேயோ, அந்தக் கல்லூரிக்குப் பெயரை வைப்பதிலேயோ இந்த அரசு நிச்சயமாக முன்னுரிமை கொடுத்து, அவர்களுடைய பெயரிலேயே அந்தக் கல்லூரி இயங்குவதற்கு, கட்டடங்கள் இருப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாயும், 5 ஏக்கர் நிலமும் வழங்குகின்றவர்களுக்கு அவர்கள் பெயரிலேயே கல்லூரி ஆரம்பிக்கப்படும் என்று சொன்னீர்கள். அந்த முதலீட்டாளர்களுக்கு அந்தக் கல்லூரியில் மாணவர்களை அல்லது மாணவிகளைச் சேர்ப்பதற்கு ஏதாவது முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரே ஆள் கொடுப்பதாக இருந்தாலும் சரி அல்லது பொது மக்களே சேர்ந்து வசூலித்துக் கொடுக்கிற நிதியாக இருந்தாலும் சரி, இப்போதுகூட—அண்ணா பல்கலைக்கழகம் போன்ற பல்வேறு பல்கலைக்கழகங்களிலே—அண்ணா பல்கலைக் கழகத்திலேகூட இதுபோன்றவர்களுக்கு இட ஒதுக்கீடு, அந்த சிண்டிகேட்டிலே நிறைவேற்றி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றது. வருங்காலங்களிலே உறுப்பினருடைய கோரிக்கையைக்கூடப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

35—

பேருந்து வசதி

***576—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதி, வேதாரண்யத்திலிருந்து பழனிக்குப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் வேதாரண்யத்திலிருந்து பழனிக்கு, திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, தஞ்சாவூர், திருச்சி வழியாகப் பேருந்து இயக்கப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எனினும், வேதாரண்யத்திலிருந்து பழனி தடத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணத்தின்மூலமாக திருத்துறைப்பூண்டியிலிருந்து பழனிக்கு கோரிக்கை வழித்தடத்தின் வழியாகப் பேருந்து ஒன்று நேரடியாக ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9—55

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அது மிகவும் பயன்பாடுள்ள ஒரு வழித்தடமாகும். பரிசீலனையில் இருப்பதை உடனடியாக இயக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்தப் புதிய வழித்தடத்திலே இயக்குகின்ற பேருந்துகள், புதிய பேருந்துகளாக இயக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே அந்த வழித்தடத்திலிருந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, வேதாரண்யத்திலிருந்து பழனிக்குப் புதிய பேருந்தாகவே விடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேன்கனிக்கோட்டை அரசுப் போக்குவரத்துப் பணிமனையில் 18 ஆண்டுகளுக்கு முன்பாக விடப்பட்ட பழைய பேருந்துகள்தான் உள்ளன. இந்த அரசு புதிய பேருந்துகளை அந்தப் பணிமனைக்கு விடும் நோக்கம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது அவ்வளவு உண்மையாக இருக்காது. 15 ஆண்டு பேருந்துகள் எல்லாம் போக்குவரத்துக் கழகத்தில் இல்லை. பழைய பேருந்துகளாக இருக்கும். நிச்சயமாக அவை மாற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னிமலை, கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. ஈரோட்டிலிருந்து தினசரி கைத்தறி நெசவாளர்கள் அங்கே செல்வதற்கும், அங்கே நெய்கின்ற துணிகளை ஈரோட்டுக்குக் கொண்டு வருவதற்கும் L.S.S. பேருந்துகள் இல்லை என்கின்ற குறை பல ஆண்டுகளாக இருக்கிறது. அது குறித்த மனுவையும் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கொடுத்திருக்கிறேன். எனவே, ஈரோட்டிலிருந்து சென்னிமலைக்கு L.S.S. பேருந்துகள் இயக்குகின்ற திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த வாரம் என்னிடம், அந்தப் பகுதியிலே எந்தெந்தப் பகுதிக்குப் பேருந்து வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. விரைவிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

[2006 ஆகஸ்ட் 17

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை விவாதத்தின்போதும், பொது விவாதத்தின்போதும் பேசுகின்றபோது, பண்ருட்டியிலிருந்து மாண்புமிகு அமைச்சருடைய சொந்தப் பகுதியான திருச்சி பகுதிக்கும், திருப்பதிக்கும் புதிய பேருந்துகள் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா எனக் கேள்வி எழுப்பியிருந்தேன். அரசு ஆவன செய்திருக்கிறதா? அதை விடுவதற்கு, அதுவும் புதிய பேருந்தாக விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதற்கிணங்க, அனைத்துப் பகுதிகளிலுமே சட்டமன்ற உறுப்பினர்கள் புதிய வழித்தடங்கள் கேட்கிறார்கள். பொதுவாக இப்பொழுது பேருந்துகளிலே இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது என்பது எனக்கே நன்றாகத் தெரியும். அதனால், பல பகுதிகளிலே புதிய வழித்தடங்கள் தேவை என்று சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். விரைவிலே சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாள் கோரிக்கைக்கு இன்று ஒரு விடை கேட்டுக்கொண்டிருக்கின்றேன். சுமார் 1,000 புதிய பஸ்கள் விடப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அறிவித்தார். அந்த அனைத்து பஸ்களிலுமே physically challenged—உடல் ஊனமுற்றோர்கள் ஏறி இறங்கக்கூடிய வசதி செய்யப்படுமா என்பதைத் தயவுசெய்து தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,000 பேருந்துகள் அல்ல. 2,230 பேருந்துகள். அதிலே 100 பேருந்துகள் vestibule bus ஆக, இரண்டு வண்டிகள் இயக்குவதைப்போல, இணைத்துப் போகின்ற trailer பஸ் 100 வண்டிகள், சென்னையிலே போடப்பட்டிருக்கின்றன. 300 வண்டிகள் ultra deluxe வண்டிகளாக விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குத் தரப்பட்டிருக்கின்றன. அது

2006 ஆகஸ்ட் 17]

மட்டுமல்ல, low floor பஸ் என்று சொல்லி, குறைந்த உயரமுள்ள படிக்கட்டுகள் உள்ள பஸ்களாக, அவை ஒரு 400 வண்டிகளுக்கு மேலாக வாங்கப்படவிருக்கின்றன. Handicapped—உடல் ஊனமுற்றவர்கள் ஏறி இறங்குகின்ற வகையிலே, ஒரு சில இடங்களிலேதான்--அந்தப் பள்ளிகள் எங்கிருக்கின்றனவோ, அல்லது அவர்கள் எங்கு அதிகமாக உபயோகப்படுத்துகிறார்களோ, அந்தப் பகுதிக்கு மட்டும் அந்தப் பேருந்துகள் விடுவதாக அரசு பரிசீலித்து, அதுபோல வண்டிகள் வாங்க முயற்சி எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திரு. கே. உலகநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

36—

புதிய பேருந்துகள்

***652—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையிலுள்ள பழைய பேருந்துகள் மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழைய பேருந்துகளை மாற்றிப் புதிய பேருந்துகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி கிளையில் இயங்கி வந்த 11 பழைய பேருந்துகளும் கழிவு செய்யப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக, 2005 ஆம் வருடத் தயாரிப்பு 4 புதிய பேருந்துகளும், மீதமுள்ள 7 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, நல்ல நிலையில் உள்ள பேருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. தற்போது, அனைத்துப் பேருந்துகளும் நன்கு பராமரிக்கப்பட்டுப் புதிய பொலிவுடன் இயக்கப்படுகின்றன.

முற்பகல் 10–00

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. இருந்தாலும்,

திருத்துறைப்பூண்டியிலிருந்து தொலைதூரம் செல்லுகின்ற பஸ்கள் பழைய பேருந்துகளாக இருப்பதால், இடையிலே நின்று பயணிகள் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே, அனைத்துப் பேருந்துகளையும் புதிய பேருந்துகளாக விடுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும்தான் ஆறு மாதத்திற்கு ஒரு முறை அந்தப் பேருந்துகளையெல்லாம் முழுமையாகச் செப்பனிட்டு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான், அந்தப் பகுதியிலே பேருந்துகள் நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை உரிய அதிகாரிகளிடம் தெரிவித்து, பரிசீலித்து, அப்படி அங்கே பழைய பேருந்துகளாக இருக்குமானால், மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மேகநாதன்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதி, நிறைய வியாபாரிகள் சென்னைக்கு அடிக்கடி வரக்கூடிய தொகுதியாகும். அங்கிருந்து விரைவுப் பேருந்து முன்பிருந்த காலத்தில் வந்துகொண்டிருந்தது. கடந்த ஆட்சியில் அது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, அதை விரைவில் இயக்க அரசு முன்வருமா? கிருஷ்ணகிரியிலிருந்து வரக்கூடிய தமிழக அரசுப் பேருந்துகள் மிகவும் sound–உடன், பழுதடைந்த நிலையில் வருகின்றன. அப்பேருந்துகளைப் புதியதாக மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 900 புதிய பேருந்துகள் இப்போது இயக்கப்பட்டு வருகின்றன. பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள், தங்கள் பகுதிகளிலே இதுபோல் இருந்தவை நிறுத்தப்பட்டிருப்பதை மீண்டும் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, நூறு வழித்தடங்கள் புதிதாக உருவாக்குவது என்றும், அப்படி உருவாக்குகின்ற தடங்களிலே புதிய பேருந்துகள் விடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக, அரசின் சார்பாக மொத்தம் 300 பேருந்துகள் இயக்கப்பட இருக்கின்றன. அதைக் காட்டிலும் வெளி மாநிலங்களுக்குச் செல்கின்ற பேருந்துகள்

ஆந்திராவைப்போல, கர்நாடகாவைப்போலத் தனியாரிடமிருந்து வாடகைக்குப் புதிய பேருந்துகளைப் பெற்று, அவற்றையும் இயக்க அரசு முன் வந்திருக்கிறது. அதனால், விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக இயக்கப்படுகின்ற பேருந்துகள் இன்னும் 4, 5 மாதங்களில் முழுமையாக அனைத்துமே புதிய பேருந்துகளாக இயக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், திருப்பதிக்கு விடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அனைத்துப் பகுதிகளுக்கும், முதன்முதலாகவே நமது வேல்முருகன் அவர்கள் சொன்ன கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, பழைய பேருந்துகளை மாற்றுவதற்கான முயற்சி எடுக்கப்படுகிறது அதுவும், குடந்தைக் கோட்டத்திலே அப்படிப்பட்ட பணி சிறப்பாக நடைபெறுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், எங்களது மன்னார்குடி பகுதி, அதைப்போல திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், திருவாரூர் பகுதிகளிலே குறைந்த அளவிலேயே பயணம் செய்யக்கூடிய வழித்தடங்கள் இருக்கின்றன. அந்த வழித்தடங்களில் எல்லாம் இப்படிப் பழுதான அல்லது மிகவும் பழமையான பேருந்துகளை இயக்குவதற்கான முயற்சி எடுக்கப்படுகிறது, குறைந்த தூரம் என்ற காரணத்தினாலே. ஆனால், வழியில் பல இடங்களிலே அவை நின்று விடுகின்றன. ஆகவேதான், இந்தக் கோரிக்கை இப்போது இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி நீங்கள் ஆழமாகப் பரிசீலித்து, ஒரு பஸ் போகிற வழித்தடங்களாக இருக்கிறபோது அது பழைய பேருந்தாக இருக்குமானால், அங்கே நின்றால், அன்றையதினம் முழுவதுமே அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் நகர்ப் பகுதிக்கு வந்து சேர முடியாத இன்னலுக்கு ஆளாகிறார்கள். இதைப் போக்குவதற்கான முயற்சி எடுக்கப்படுமா என்பதோடு, நமது போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்கள், அவர்கள் பயணிப்பதற்காக அவர்களுக்கு இலவச பஸ் பாஸ் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அது முழுமையாக எல்லாப் பேருந்துகளிலும் இல்லாமல், நகரப் பேருந்துகளுக்கு மட்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அது அவர்களுக்கு எந்த வகையிலும் பலனளிக்காது என்ற காரணத்தினாலே, அந்த ஓய்வு பெற்ற

பணியாளர்கள், வயதான காலத்திலே அவர்கள் பல்வேறு பணிகளுக்கு வெகு தூரம் செல்ல இயலாது. ஆகவே, அவர்கள் பயன்படுத்துகிற வகையிலே எல்லாப் பேருந்துகளிலும் பயணம் செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், பழைய பேருந்துகளை மாற்ற வேண்டும் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். நேற்று முன்தினம்கூட தஞ்சையில் இருந்து 5 புதிய வழித்தடங்களைத் தொடங்கி வைத்துவிட்டுத்தான் வருகிறோம். இதை உடனடியாக ஆய்வு செய்கிறோம். அப்படி மாற்றித்தான் தீர வேண்டும் என்ற நிலை இருந்தால், முன்னுரிமை தந்து மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். மேலும், பணியிலிருந்து ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு இலவச பஸ் பயணம் செய்கின்ற பாஸ் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அதைப் பற்றிப் பின்னர் உங்களுக்கு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 37, மாண்புமிகு திரு. துரை சந்திரசேகரன். மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

37—

புதிய கட்டடம்

***18—திரு. துரை சந்திரசேகரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு, குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம்

திருவையாறு, குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு நிலத்தைக் கையகப்படுத்தி 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அங்கே நீதிமன்றம் இயங்கிக்கொண்டிருக்கின்ற கட்டடம், வெள்ளையர்கள் காலத்துக் கட்டடம். அடிக்கடி நீதிபதிகள்மீதும், வழக்கறிஞர்கள்மீதும் அந்த ஓடுகள் விழுகின்றன. எனவே, அரசு முன்னுரிமை கொடுத்து, புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய அரசினுடைய நிதியை மாநில அரசு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து நிதி வந்தவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற உரிமையியல் நீதிமன்றத்திற்குச் சொந்தமாகப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற 60 நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டு ஏற்கெனவே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலும் நினைவூட்டல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது. வெகு விரைவிலே மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்று, மாநில அரசும் அதனுடைய பங்கைச் செலுத்தி, கட்டடங்கள் கட்டுவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவியிலே குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் நடந்து வருகின்றன. மிகவும் குறுகலான

[2006 ஆகஸ்ட் 17

கட்டடத்தில், சின்னக் கட்டடத்திலே அந்த நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. வேறு ஓர் இடமும் ஆய்வு செய்யப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அந்த இடத்திலே உடனடியாக இந்த ஆண்டே புதிய கட்டடம் கட்டித் தருவதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற கோரிக்கையைப்போல, இந்த அவையிலே உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் நீதிமன்றக் கட்டடம் வேண்டுமென்ற கோரிக்கை இருக்கின்றது. வெகு விரைவாக நடவடிக்கை எடுத்து, மத்திய அரசினுடைய நிதியைப் பெற்று, மாநில அரசினுடைய பங்கோடு நீதிமன்றங்கள் கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவானந்தம்.

திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதியில் இயங்கி வருகின்ற நீதிமன்றங்கள் ஆங்கிலேயர் காலத்திற்கு முன்பிருந்த ஜாகீர் காலத்தில் கட்டப்பட்ட குதிரை லாயங்களில் நடைபெற்று வருகின்றன. எட்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே பொதுப் பணித் துறை அதிகாரிகளால், 'இந்தக் கட்டடம் பயன்படுத்துவதற்கு உகந்ததல்ல' என்று சான்றிதழ் வழங்கப்பட்டும், அந்த நீதிமன்றங்கள் அங்கேயே நடைபெற்று வருகின்றன. இடிந்து விழும் நிலையில் உள்ள நீதிமன்றக் கட்டடங்களுக்குப் பதிலாக, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமாகக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல, ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள்தான் தற்சமயம் கட்டப்பட்டு வருகின்றன. புதிதாகக் கட்டப்படுகின்ற நீதிமன்றக் கட்டடங்கள், குற்றவியல், உரிமையியல் நீதிமன்றக் கட்டடங்கள். ஆக, இரண்டு நீதிமன்றக் கட்டடங்களும் ஓரே இடத்தில்தான் இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன. அந்த முறையிலேதான், வருகின்ற காலத்திலேயும் புதிய கட்டடங்கள் கட்டும்பொழுது, கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

2006 ஆகஸ்ட் 17]

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்பொழுது, 61 திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய ஆட்சிக் மத்திய அரசுக்கு மாண்புமிகு அம்மா அவர்களினுடைய ஆட்சிக் காலத்திலே அனுப்பப்பட்டு, 206 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுகின்றது என்பதைச் சொல்லி, நினைவூட்டல் கடிதம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருப்பதாகச் சொன்னார்கள். நன்றி. ஆனால் இடைப்பட்ட காலத்திற்காக, அன்றைக்கு என்ன செய்தோம் என்றால், சில இடங்களிலே உள்ள சில நீதிமன்றக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், இரண்டாண்டுகளுக்கு 7½ கோடி ரூபாய் செலவில் செப்பனிடுகின்ற பணி, அதாவது repairs and maintenance பணிக்கு ஒதுக்கப்பட்டது. அந்த இரண்டாண்டு காலம் முடிந்துவிட்ட சூழ்நிலையில், at least repair செய்வதற்காகவாவது, வருகின்ற ஐந்தாண்டு காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு கோடி ரூபாய் என்று ஒதுக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, இந்திய அளவிலே அனைத்து மாநிலங்களிலிருந்தும் ஒரு தொலைநோக்குத் திட்டத்தைத் தயார் செய்து, ஒவ்வொரு மாநிலமும் அனுப்ப வேண்டுமென்று மத்திய அரசு, மாநில அரசைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாநில அரசுகள் அனுப்பியிருக்கின்றன. அதனுடைய தொடர் நடவடிக்கையிலே நிதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழுதுபார்ப்பது சம்பந்தமாகச் சொன்னார்கள். நிச்சயமாக இந்த அரசு அது சம்பந்தமாகப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சட்டத் துறை அமைச்சர் அவர்கள் புதிதாக நீதிமன்றங்களை உருவாக்கவிருக்கிறார்கள். அப்படி உருவாக்க இருக்கின்றபொழுது, கடந்த ஐந்து ஆண்டு காலமாக நான் கேட்டுக்கொண்டிருந்த ஒரு கேள்வியைத் திரும்பவும் மறுபடியும் கேட்கின்றேன். ஏற்கெனவே இருந்தவர்களுக்கு அது பழைய கேள்வி புதிதாக வந்தவர்களுக்கு அது புதுக் கேள்வி என்கின்ற காரணத்தினால்

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலே ஒரு தாலுக்கா நீதிமன்றம் உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்கின்ற கேள்வியை உங்கள் முன்னாலே வைக்கின்றேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிய நீதிமன்றம் தொடங்குவது சம்பந்தமாகக் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அது சம்பந்தமான பிரேரணைகள் உயர் நீதிமன்றத்திற்கு வந்து, பரிசீலனையில் இருக்கின்றன. வந்தவுடன் அதைக் கண்டிப்பாக அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

திரு. கு. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி, திட்டக்குடி பகுதியிலே வாடகைக் கட்டடத்தில் நீதிமன்றம் இயங்கி வருகிறது. வழக்கறிஞர்களும், பொது மக்களும் ஒன்று கூடி, அரசு இதுவரை சொந்தக் கட்டடம் கட்டித் தரவில்லையென்று, அவர்களே பணம் வசூல் செய்து, அரசாங்கத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அந்த நீதிமன்றம் கட்டப்படுமா, அப்படியே கிடப்பில் கிடக்குமா என்று அமைச்சர் அவர்கள் கூற வேண்டும்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, நீதிமன்றம் கட்டுவதற்கு உரிய நிதியைப் பொது மக்களே செலுத்தியிருப்பதாகச் சொல்கின்றார்கள். அது சம்பந்தமான விவரங்கள் பற்றித் தனிக் கேள்வி எழுப்பினால், நிச்சயமாக அதற்குப் பதில் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

38—

Rope Car வசதி

***807—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு Rope Car வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், சோளிங்கர் நகர், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு வரும் பெருந்திரளான பக்தர்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர், ஊனமுற்றோர் ஆகியோர் நலன் கருதியும், சுற்றுலா வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், கம்பிவட ஊர்தி (Rope Car) அமைத்திட முடிவு செய்யப்பட்டு, மத்திய அரசு நிறுவனமான "ரைட்ஸ் இந்தியா லிமிடெட்" நிறுவனத்தை ஆய்வு செய்திடக் கேட்டுக்கொண்டு, மதிப்பீடு அளிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க, 14—3—2006 அன்று, உத்தேச மதிப்பீடு ரூ. 5.15 கோடி ஆகும் என்று தெரிவித்துள்ளார்கள். இத்திட்டத்திற்குத் திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை என்பதால், உபரி நிதி மிக்க திருக்கோயில்களிலிருந்து தேவையான நிதியைக் கடனாகப் பெற்று, இத்திட்டத்தைச் செயல்படுத்தப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதன்முதலாக என்னுடைய முதல் கோரிக்கையாக Rope Car வசதி செய்து தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டேன். அதை உடனடியாகப் பரிசீலனை செய்து செயல்படுத்த நடவடிக்கை எடுத்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், சோளிங்கர் சட்டமன்ற வாக்காளப் பெருமக்களின் சார்பாகவும், சோளிங்கர் அருள்மிகு நரசிம்மசுவாமி சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். அந்தப் பரிசீலனையைத் தீவிரப் பரிசீலனையாக, உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள.

[2006 ஆகஸ்ட் 17

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அருள் அன்பரசு அவர்கள் முதல் முறையாகக் கேள்வியைக் கேட்டிருக்கலாம். அவருடைய இயக்கத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் தொடர்ந்து பல ஆண்டு காலமாக இந்தக் கேள்வியை வலியுறுத்தி, கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். ஆக, இவர்கள் இருவருடைய கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய செங்கல்பட்டு தொகுதியில் இருக்கிற திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு--ஏறக்குறைய 900 படிகள் இருக்கின்றன. அந்தத் திருக்கோயிலுக்கு ஏராளமான உள் மாநில பக்தர்கள் மட்டுமல்லாமல், வெளி மாநிலங்களில் இருந்தும், வட மாநிலத்திலிருந்தும், பட்சி தீர்த்தம் என்று அழைக்கப்படுகிற திருக்கழுக்குன்றத்திற்கு, ஏராளமான பயணிகள் வருகிறார்கள். அதிலும் குறிப்பாக, வயது முதிர்ந்தவர்கள் வருகிறார்கள். அவர்கள் படிகளிலே ஏற முடியவில்லை. எனவே, திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் கோயிலுக்குக் கம்பிவட ஊர்தி அமைக்கப்படுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலும் தரப்பட்டிருக்கிறது. ஆய்விலே இருக்கிறது. உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கரில் இருக்கக்கூடிய அருள்மிகு நரசிம்மசுவாமி கோயிலுக்கு முதலிலே Winch கேட்டிருந்தோம். Winch போட, அங்கே இருக்கக்கூடிய பாறைகள் உறுதியாக இல்லை. ஆகவே, Winch போட முடியாத காரணத்தால், Rope Car வேண்டுமென்று, தொடர்ந்து கோரிக்கை

2006 ஆகஸ்ட் 17]

வைத்திருக்கிறோம். கடந்த கால ஆட்சியிலேகூட இது அறிவிக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது நம்முடைய அமைச்சர் அவர்கள், RITES INDIA மூலம் ஏற்கெனவே ரூ.5.15 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது, அதற்கான நிதியை உபரி நிதியிலிருந்து பெற வேண்டுமெனத் தெரிவித்திருக்கிறார்கள். பழனியிலே இப்பொழுது உபரி நிதி நிறையவே இருக்கிறது. இப்பொழுது அமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய பழனி தண்டாயுதபாணி கோயிலில் இருக்கக்கூடிய நிதியிலிருந்து இந்தப் பணத்தை உடனடியாக ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டே Rope Car வசதியைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை, துறையினுடைய மானியக் கோரிக்கையில் விரிவான பதில்களை அளிக்கின்றேன் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் பெரியசாமி.

திரு. அன்பில் பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருச்சி தொகுதிக்குட்பட்ட, உச்சிப் பிள்ளையார் கோயில், அருள்மிகு தாயுமானவர் சுவாமி கோயிலுக்கு அதிக பக்தர்கள் வருகின்ற சூழ்நிலையிலே, அந்தக் கோயில்களுக்கு Rope Car வசதி செய்து தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுடைய பல்வேறு கோரிக்கைகளுக்கெல்லாம் நாளை விரிவான பதிலைத் தங்கள்மூலமாகச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39, திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

39—

கட்டட வசதி

***1449—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 17

முசையூர் தொகுதி, சித்தாத்தூர் கிராமத்தில் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசையூர் தொகுதி, சித்தாத்தூர் கிராமத்தில் இயங்கி வரும் ஸ்ரீசண்முகானந்தா நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1994–1995 ஆம் ஆண்டிலேயே, கைத்தறி வளர்ச்சி மையத் திட்டத்தின்கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் விற்பனை மையக் கட்டடம் கட்டப்பட்டு, அக்கட்டடத்தில் இச்சங்கம் தற்போது செயல்பட்டு வருகிறது என்பதும், ஏற்கெனவே அரசு நிதி உதவியுடன் கட்டடம் கட்டப்பட்டுச் செயல்பட்டு வரும் நிலையில், மற்றும் ஒரு கட்டடம் கட்டித் தர இந்த அரசிடம் திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் முசையூர் தொகுதியைப் பொறுத்தவரையில், அதிக நெசவாளர்கள் இருக்கின்ற பகுதி. எனவே, அந்தப் பகுதியில் ஒரு கைத்தறித் தொழிற்சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினரவர்களுடைய இந்தக் கேள்வியை மனுவாக வைத்து, அதற்குரிய சூழ்நிலை இருப்பின், அங்கே அது செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதியில் பெரிச்சிபாளையம் திரு.வி.க. கூட்டுறவுச் சங்கம், மணமங்கலம், காந்திஜி கைத்தறி கூட்டுறவுச் சங்கம் எனப் பல்வேறு கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றிற்குக் கட்டடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கங்களுடைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, வருகின்ற காலங்களிலே அவற்றிற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2006 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எங்கள் பகுதியிலே லுங்கி, சம்கி வேலைகளெல்லாம் செய்கின்றவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். மழைக் காலம் வந்துவிட்டால், ரோட்டிலே அவர்களால் அங்கே பணி செய்ய முடியாது. அப்போது அவர்களுக்கு மூன்று மாத காலம் வேலைகள் எல்லாம் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கும். அதனாலே, அதுபோன்ற பகுதிகளில், நூற்றுக்கும் மேற்பட்டவர்களெல்லாம் அதுபோன்ற தொழில்களிலே ஈடுபட்டிருக்கிற இடங்களுக்கு, அரசு நிலங்களிலே, சரியான ஒரு Hall மாதிரி கட்டடம் கட்டிக் கொடுத்து, அந்தத் தொழில் தடைப்படாமல் இருப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டபடி, இதுவரை எந்தவிதமான திட்டங்களும் இல்லாவிட்டாலும், தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இருக்கிற இந்த அரசு இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

40—

தரம் உயர்த்துதல்

***510—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 17

பட்டுக்கோட்டை தொகுதியில் த.வடகாடு ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில், த.வடகாடு ஊராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக இக்கல்வியாண்டில் (2006–2007) தரமுயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்றாண்டு காலமாக, பட்டுக்கோட்டை தொகுதி, த.வடகாடு மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையாக இருந்த, இந்தப் பள்ளியைத் தரமுயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நமது மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு நிறைவேற்றியிருக்கின்றது. அதற்காக, மாண்புமிகு முதல்வர் ஐயா டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தினுடைய மரியாதைக்குரிய மூத்த அமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், பட்டுக்கோட்டை தொகுதி மக்களுடைய சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி வளர்ச்சிக்காக அரசு ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்துக்கொண்டிருக்கிறது. நவீன காலத்தில், கம்ப்யூட்டர் கல்வியைப் பற்றி நாமெல்லாம் சிந்தித்துக்கொண்டிருக்கின்ற வேளையில், கிராமப்புறங்களிலே இருக்கிற பள்ளிக்கூடங்களில் இருக்கை வசதியில்லாமல், இன்னும் பள்ளி மாணவர்கள் தரையிலே அமர்ந்து, கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, மாணவர்களின் நலன் கருதி, அரசுப் பள்ளிக்கூடத்திலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு அனைத்துப் பளளிகளிலும் இருக்கை வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பேரவைத் தலைவர்மூலம் அறிய விரும்புகிறேன்.

2006 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே, இப்போது NABARD, 8—வது பிரிவின்கீழ், பள்ளிகளுக்குத் தேவையான இருக்கை வசதிகளைச் செய்வதற்கு, நிதி ஒதுக்குவதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அத்தகைய கோரிக்கைகளையெல்லாம் ஆராய்ந்து, நிச்சயமாக இந்த ஆண்டே தொடங்கி, பல்வேறு பள்ளிகளிலே இருக்கக்கூடிய இந்த நிலைமைகளை ஆராய்ந்து, இருக்கை வசதிகளைச் செய்வதற்கு அரசு நடவடிகதை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை. எங்கள் உடுமலைப்பேட்டை தொகுதியிலே குப்பம்பாளையம் என்ற இடத்தில் உள்ள ஒரு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு, ஒரு இலட்சம் ரூபாய் பணம் கட்டி இரண்டு ஆண்டு காலம் ஆகிறது. இப்போது அரசு அறிவித்த அந்த 100 பள்ளிகளோடு, 20 பள்ளிகளை அறிவித்ததிலே, இந்தப் பள்ளியையும் சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்குமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சேர்க்கக் கேட்டுக்கொள்கிறேன். அது ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதி; அங்கே அருகில் இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளியிலே 2,000 குழந்தைகள் படிக்கிறார்கள். இந்தப் பள்ளியை அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்குச் சௌகரியமாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத தரமுயர்த்துகிறபோது, அரசு சில வரையறைகளை வகுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, அததகைய வரையறைகள் எல்லாம் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன என்று இங்கே தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு அரசு தரமுயர்த்தக்கூடிய பள்ளிகளுடைய பட்டியலிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை அரசு பரிவோடு பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அச்சரப்பாக்கம் தொகுதியில், கடப்பாக்கத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் இருந்த சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டிருக்கிறது. கிழக்குக் கடற்கரைச் சாலையை விரிவுபடுத்துவதற்காக, நெடுஞ்சாலைத் துறையால் அந்தப் பள்ளியினுடைய சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் சாலையைக் கடக்கின்றபோதோ அல்லது உள்ளே பள்ளியில் படித்துக்கொண்டிருக்கிறபோதோ, வெளியிலே செல்கிறபோதோ அல்லது உள்ளே வருகிறபோதோ, சுற்றுச்சுவர் இல்லாத சூழ்நிலையில், கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக விரைந்து செல்கின்ற பேருந்துகளால், வாகனங்களால், அவர்களுக்கு விபத்து ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பள்ளிக்கு உடனடியாகச் சுற்றுச்சுவர் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியை நேரில் சென்று ஆய்வு செய்து, அங்கே படிக்கக்கூடிய மாணவர்களுடைய பாதுகாப்பிற்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாத வகையில், முறையான வகையில் பாதுகாப்பு வசதிகளை அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

முற்பகல் 10—25

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வள்ளியூர் ஒன்றியம், கோலியாங்குளம் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு விதிப்படி அங்குள்ள பஞ்சாயத்துத் தலைவர் திரு. திரவியம் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் பொது மக்களிடமிருந்து வசூல் செய்து வைப்பு நிதியாகவும் கட்டியுள்ளார்கள். மேற்படி பள்ளியைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்ததோடு மட்டுமல்லாமல், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, 8—வது வகுப்புப் பொதுத் தேர்விலே வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் சுமார் 50 பேர்களை வேறு பள்ளிகளுக்கு அனுப்பாமல்,

அந்த ஊரிலேயே ஓர் இடத்தில் வைத்து, ஊரிலிருந்து ஆசியனை நியமனம் செய்து, ஒன்பதாம் வகுப்புப் பாடம் தங்குதடையின்றி நடைபெற்று வந்துகொண்டிருக்கிறது. அந்தப் பள்ளியை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே தரம் உயர்த்தித் தருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தரம் உயர்த்துவதற்கு முன்பாகவே, அவர்களாகவே அங்கே பள்ளியை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலுங்கூட, அந்தக் கோலியாங்குளம் பள்ளி அங்கே தரம் உயர்த்தப்பட வேண்டிய பள்ளி என்பது குறித்து முன்மொழிவுகள் ஏற்கெனவே அரசுக்கு வரப்பெற்றிருக்கின்றன. அந்த நிபந்தனைகளை எல்லாம்கூட அவர்கள் அங்கே முழுமையாகப் பூர்த்தி செய்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திரு. அப்பாவு அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிவோடு பரிசீலித்து, அதற்காக ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் @

(பட்டியல் 1)

1—

பேருந்துகள் சீர்படுத்துதல்

வினா எண் 110—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் ஓடும் பேருந்துகள் மிகவும் பழுதடைந்துள்ளதைச் சீர்படுத்த அரசு முன்வருமா?

@இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2006 ஆகஸ்ட் 17

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை மலைப் பகுதியில் இயங்கும் பேருந்துகள் தினசரி 15,338 கி.மீ. வீதம், மாதம் ஒன்றுக்குச் சராசரியாக 4,66,530 கி.மீ. இயக்கப்படுகிறது. 2005—2006 வருடத்தில் மட்டும் 13 புதிய பேருந்துகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும் 31 பேருந்துகளுக்குக் கூண்டு, பெரும் பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) பழுதுகள் கண்டறியப்படும்போது உடனுக்குடன் சரிசெய்யப்படுகின்றன.

2—

பேருந்து வசதி

வினா எண் 952—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, முருகாளி எஸ்டேட் குடியிருப்புப் பகுதிக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள முருகாளி எஸ்டேட் குடியிருப்புப் பகுதி, பேருந்துகள் இயங்கி வரும் பிரதான சாலையில் இருந்து மிகக் குறுகிய தூரத்திலேயே (சுமார் 500 மீட்டர்) அமைந்துள்ளது. தற்போது பிரதான சாலையில் 56 நடைகள் தினசரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் பேருந்துகள் இயங்கி வருகின்றன. இதுவே தற்போதைய பயணிகள் அடர்விற்குப் போதுமானதாகும்.

2006 ஆகஸ்ட் 17]

3—

பேருந்து வசதி

வினா எண் 1245—திரு. வி.ஏ.டி. கலிவரதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, அருமலை கிராமத்திற்கு ஆரகண்டநல்லூர்–நெற்குணம் வழியாக அரசுப் பேருந்து கூடுதலாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நகரத் தடம் எண் 17 மூலமாக திருக்கோயிலூருக்கும், புத்தூருக்கும் இடையே நெற்குணம், ஏமப்பேர் மற்றும் அருமலை வழியாக 4 நடைகளில் சென்று வரும் பேருந்து வசதி உள்ளது. இந்தப் பேருந்து வசதி தற்சமயம் இப்பகுதி மக்களுக்குப் போதுமானதாக உள்ளது.

4—

பேருந்து வசதி

வினா எண் 1270—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமானூரிலிருந்து ஏலாக்குறிச்சி, ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா கோயில், காமரசவல்லி, சிலுப்பனூர் வழியாக கண்டக்குடி வரை நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரியலூர் தொகுதி, திருமானூரிலிருந்து ஏலாக்குறிச்சி, அடைக்கல மாதா கோயில், காமரசவல்லி, சிலுப்பனூர் வழியாக கண்டக்குடி வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மண்டலம்மூலமாக நகரப் பேருந்தும், திருச்சி மண்டலம்மூலமாகப் புறநகர்ப் பேருந்தும் இயக்கப்படுகிறது. இது தவிர, மினி பேருந்துகளும் கோரிக்கை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 17

5—

சுற்றுலா மையம்

வினா எண் 31—திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், மேகமலையைச் சுற்றுலா மையமாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், மேகமலையைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின் ஆய்வில் இல்லை.

6—

விளம்பரக் கட்டணம்

வினா எண் 933—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை பத்திரிகைகளுக்கு அரசின் சார்பாக வழங்கப்பட்ட மொத்த விளம்பரக் கட்டணம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை பத்திரிகைகளுக்கு அரசின் சார்பாக வழங்கப்பட்ட மொத்த விளம்பரக் கட்டணம் ரூ. 164,83,68,181/– ஆகும்.

7—

விளம்பரக் கட்டணம்

வினா எண் 934—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2006 ஆகஸ்ட் 17]

2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை செய்தித்தாள்கள் மற்றும் சிற்றிதழ், வார இதழ்களுக்கு விளம்பரக் கட்டணம் உயர்த்தி வழங்கப்பட்டதா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

ஆம். 2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை, 12 அரசு ஆணைகளில், கீழ்க்கண்ட வார இதழ் மற்றும் நாளிதழ்களுக்கு விளம்பரக் கட்டணம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

தமிழ் வார இதழ்

(1) எம்ப்ளாய்மென்ட் சர்வீஸ்

தமிழ் நாளிதழ்கள்

(1) டாக்டர் நமது எம்.ஜி.ஆர்.

(2) மக்கள் குரல்

(3) தின பூமி, அதிஷ்டம்

(4) தினத்தந்தி

(5) தின பூமி

(6) தினத்தந்தி, மாலை மலர்

இதர மொழி நாளிதழ்கள்

(1) மாத்ரு பூமி	மலையாள நாளிதழ்
(2) டைனிக் ஜாக்ரன்	இந்தி நாளிதழ்
(3) டைம்ஸ் ஆப் இந்தியா	ஆங்கில நாளிதழ்
(4) பைனான்சியல் டைம்ஸ்	ஆங்கில நாளிதழ்
(5) இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும்	
(6) பைனான்சியல் எக்ஸ்பிரஸ்	ஆங்கில நாளிதழ்கள்

8—

குடும்ப நல நிதி

வினா எண் 935—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 17

2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை எத்தனை பத்திரிகையாளர்களுக்குக் குடும்ப நல நிதி வழங்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகைத் துறையினரின் நலன் கருதி, பத்திரிகைத் துறையில் தொடர்ந்து இருபது ஆண்டுகள் பணியாற்றிய பத்திரிகையாளர்கள் பணியிலிருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. 2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை 9 பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்குக் குடும்ப நல நிதி வழங்கப்பட்டுள்ளது.

9—

ஓய்வூதியம் வழங்குதல்

வினா எண் 936—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை எத்தனை பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றி, ஓய்வு பெற்று, நலிந்த நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்குத் தமிழக அரசால் பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை 13 பத்திரிகையாளர்களுக்குப் பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

10—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 937—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2006 ஆகஸ்ட் 17]

2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை எத்தனை பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

தமிழகத்தில் பணியாற்றி வரும் பத்திரிகையாளர்களுக்குச் சலுகை விலையில் அல்லது சந்தை விலையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. 2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை 110 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

11—

குழுக்கள் அமைத்தல்

வினா எண் 2146—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு அறிவிக்கும் புதிய திட்டங்கள் மக்களிடம் சென்றடைகின்றனவா என்று கண்காணிக்கக் குழுக்கள் அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

அரசு அறிவிக்கும் புதிய திட்டங்கள் மக்களிடம் சென்றடைகின்றனவா என்று கண்காணிக்கக் குழுக்கள் அமைப்பது குறித்துத் தற்போது அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.

12—

மண்ணெண்ணெய் வழங்குதல்

வினா எண் 410—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏற்கெனவே மண்ணெண்ணெய் வழங்கி நிறுத்தப்பட்ட ரேசன் கார்டுகளுக்கும், புதிதாக வழங்கப்பட்ட ரேசன் கார்டுகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2006 ஆகஸ்ட் 17

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

மாநில அரசு மைய அரசை வலியுறுத்தியதன் அடிப்படையில் கூடுதல் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு பெறப்படும் பட்சத்தில், புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே மண்ணெண்ணெய் வழங்கி (மண்ணெண்ணெய் விருப்ப அட்டைகள்) நிறுத்தப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு மீண்டும் மண்ணெண்ணெய் வழங்குவது குறித்து அரசு அளவில் பரிசீலனை ஏதும் தற்போது இல்லை.

13—

குடியிருப்பு வசதி

வினா எண் 85—திரு. ஆர். சாமி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் நகராட்சிப் பகுதிகளிலுள்ள ஏழை, எளிய மக்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித் தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:

ஆம். மைய அரசின் ஒருங்கிணைந்த வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் (Integrated Housing and Slum Development Programme) நகரக் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு வீட்டு வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்புதல் பெறப்பட்டவுடன், மேலூர் நகரில் வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

கட்டட வசதி

வினா எண் 1422—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2006 ஆகஸ்ட் 17]

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயிலில் செயல் அலுவலருக்குத் தனி அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை வட்டம் மற்றும் நகர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நிலை—I, செயல் அலுவலரால் நிர்வகிக்கப்படும் திருக்கோயிலாகும். இச்செயல் அலுவலருக்கு இதுவே தலைமையிடத் திருக்கோயிலாகும். செயல் அலுவலர் அலுவலகம் திருக்கோயில் வளாகத்திலேயே உள்ளது.

15—

நிதியுதவி

வினா எண் 1469—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியிலுள்ள கிராமக் கோயில்கள் அனைத்திற்கும் ஒரு கால பூஜை செய்ய அரசு நிதியுதவி அளிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 465 திருக்கோயில்கள் ஒரு கால பூஜைத் திட்டத்தின்மூலம் நிதியுதவி பெற்று, ஒரு கால பூஜை நடைபெற்று வருகிறது. அவற்றில், செங்கல்பட்டு தொகுதியில் மட்டும் 18 திருக்கோயில்கள் பயன்பெறுகின்றன. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் ஒரு கால பூஜைகூட செய்ய நிதி வசதியில்லாத திருக்கோயில்கள் இருப்பின், அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், ஒரு கால பூஜைத் திட்டத்தின் நடைமுறைப்படி நிதியுதவி வழங்கிடப் பரிசீலிக்கப்படும்.

16— [2006 ஆகஸ்ட் 17

நிதியுதவி

வினா எண் 2065—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, போடிப்பட்டியில் மதுரை வீரன் கோயில் கட்டுவதற்கு அரசு ரூ.25,000/– நிதியுதவி வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, போடிப்பட்டியில், மதுரை வீரன் கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, ஆதி திராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். 2006–2007 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் திருப்பணி நிதி உதவித் திட்டத்தின்கீழ் இத்திருக்கோயிலைச் சேர்க்கப் பரிசீலனை செய்யப்படும்.

17—

கடனுதவி

வினா எண் 1211—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, இராமணமுதலிபுதூர் நெசவாளர்களுக்குக் கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, இராமணமுதலிபுதூரில் 80 நெசவாளர்கள் உள்ளனர். 60 நெசவாளர்கள்

2006 ஆகஸ்ட் 17]

கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களாகவும், எஞ்சிய 20 நெசவாளர்கள் கூட்டுறவின்கீழ் அல்லாத நெகமம் மாஸ்டர் வீவரிடமும் உள்ளனர். கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலிருந்து வழங்கப்படும் காசுக் கடன் அனுமதிமூலம் பயனடைந்து வருகிறார்கள். தனியார் நெசவாளர்கள், மத்திய அரசின் நெசவாளர்களுக்குக் கடன் அட்டை வழங்கும் திட்டத்தின்கீழ் (ஸ்வராஜ்கார் கடன் அட்டைத் திட்டம்) பயன் அடைந்து வருகின்றனர். மேலும், இவர்கள் விரும்பும்பட்சத்தில், அருகிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து அரசு வழங்கும் நலத் திட்டத்தின் பயன்களைப் பெறலாம்.

(ஆ) NABARD வங்கியின்மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் அட்டை வழங்கும் திட்டமும், தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கு ஸ்வராஜ்கார் கடன் அட்டைத் திட்டத்தின்மூலமும் (Swarozgar Credit Card Scheme) கடன் வழங்குவது நடைமுறையில் உள்ளது.

18—

விலை நிர்ணயம்

வினா எண் 1213—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் சேலைகள், வேட்டிகளுக்கு உரிய விலை கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:

ஒவ்வொரு ஆண்டும் நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் சேலைகள், வேட்டிகளுக்கு உரிய விலை அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

19—

கடனுதவி

வினா எண் 2063—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 17

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுக்கம்பாளையம் கிராமத்திலுள்ள நெசவாளர்களுக்குக் கடனுதவி வழங்கிட அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுக்கம்பாளையம் கிராமத்தில் 150 நெசவாளர்கள் உள்ளனர். அவர்களில் 10 நெசவாளர்கள் கஞ்சம்பட்டி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களாகவும், 140 நெசவாளர்கள் கூட்டுறவின்கீழ் அல்லாத மாஸ்டர் வீவரிடமும் உள்ளனர். கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலிருந்து வழங்கப்படும் காசுக் கடன் அளிமதிமூலம் பயனடைந்து வருகிறார்கள். தனியார் நெசவாளர்கள், மத்திய அரசின் நெசவாளர்களுக்குக் கடன் அட்டை வழங்கும் திட்டத்தின்கீழ் (ஸ்வராஜ்கார் கடன் அட்டைத் திட்டம்) பயன் அடைந்து வருகின்றனர். மேலும், இவர்கள் விரும்பும் பட்சத்தில், அருகிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து அரசு வழங்கும் நலத் திட்டத்தின் பயன்களைப் பெறலாம்.

(ஆ) NABARD வங்கியின்மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் அட்டை வழங்கும் திட்டமும், தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கு ஸ்வராஜ்கார் கடன் அட்டைத் திட்டத்தின்மூலமும் (Swarozgar Credit Card Scheme) கடன் வழங்குவது நடைமுறையில் உள்ளது.

20—

ஹஜ் பயணிகள்

வினா எண் 451—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2006 ஆம் ஆண்டு ஹஜ் பயணிகளின் எண்ணிக்கையைத் தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக ஒதுக்கீடு செய்ய மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

2006 ஆகஸ்ட் 17]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஹஜ் 2006-II ஆண்டுக்கு முஸ்லீம் மக்கள் தொகை அடிப்படையில் மத்திய ஹஜ் குழு தமிழ்நாட்டிற்கு நிர்ணயித்துள்ள ஒதுக்கீடு 2,461 ஆகும். ஆனால், ஹஜ் விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசித் தேதி 27-6-2006 வரையில், 4,990 ஹஜ் விண்ணப்பங்கள் (குழந்தைகள் 14 தவிர) தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவால் பெறப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீட்டிற்கு மேலாக ஹஜ் விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், கூடுதலாக ஒதுக்கீடு செய்ய மாநில ஹஜ் குழு மற்றும் தமிழக அரசு, மத்திய ஹஜ் குழு மற்றும் மத்திய அரசின் வெளிவிவகாரத் துறை அமைச்சகத்திடம் வற்புறுத்தி, கூடுதல் ஒதுக்கீடு பெற்று, தமிழகத்தில் ஹஜ் புனிதப் பயணத்திற்காக விண்ணப்பித்துள்ள அனைவரும் புனிதப் பயணம் மேற்கொள்ளத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

21—

நிதியுதவி

வினா எண் 2152—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதியில் குறிச்சி பிரிவில் உள்ள ஷாபியா இஸ்லாம் சுன்னத் ஜமாத்துக்கு வக்ஃபு போர்டுமூலம் நிதியுதவி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) புதிதாகப் பள்ளிவாசல் கட்டடம் கட்ட நிதி உதவி வழங்கும் திட்டம் ஏதும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஆ) எழவில்லை.

[2006 ஆகஸ்ட் 17

22—

பள்ளிவாசல்களைச் சீரமைத்தல்

வினா எண் 2153—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதியில் பழுதடைந்துள்ள இஸ்லாமியர் பள்ளிவாசல்களைச் சீரமைக்க அரசு நிதியுதவி அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதியிலுள்ள பழுதடைந்த பள்ளிவாசல்களைப் பழுதுபார்க்க மற்றும் புதுப்பிக்க மனுச் செய்யப்படும்பட்சத்தில் தகுதியின் அடிப்படையில் தமிழக அரசால் வழங்கப்படும் சிறிய மராமத்து மானியம் (Minor Renovation Grant) மற்றும் பெரும் மராமத்து மானியம் (Major Renovation Grant) ஆகிய திட்டங்களின்கீழ் வக்ஃபு வாரியத்தின்மூலம் நிதியுதவி அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

23—

துணை இயக்குநர் அலுவலகத்தை விரிவுபடுத்துதல்

வினா எண் 2637—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு கால்நடைத் துறை துணை இயக்குநர் அலுவலகத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2006 ஆகஸ்ட் 17]

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டில் கால்நடை பராமரிப்பு துணை இயக்குநர் அலுவலகம் இல்லை. அங்கு கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் கால்நடை மருத்துவமனை ஆகியவை உள்ளன. தற்போது அவற்றை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

24—

கூடுதல் சம்பளம்

வினா எண் 1214—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் வாரியங்களில் பணிபுரிபவர்களுக்குக் கூடுதல் சம்பளம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு கதர் வாரியப் பணி விதி 48-ன்படி தமிழக அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும், சம்பளம் உட்பட, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களுக்கும் பொருந்தும். அதனடிப்படையில் தமிழக அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப் பெறும் ஊதியத்தின்படி, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. கதர் வாரியப் பணியாளர்களுக்கு மட்டும் தனியே கூடுதல் சம்பளம் வழங்குவதற்கு இயலாது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2006 ஆகஸ்ட் 17

25—

கதர் வாரியத்தை விரிவுபடுத்துதல்

வினா எண் 1294—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் வாரியத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) கதர் வாரியத்தைத் தற்போது விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிடாத வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. இரங்கல் தீர்மானம்

முல்லைத் தீவில், குண்டு வீச்சினால் 61 மாணவிகள் உயிரிழப்பு மற்றும் பல மாணவிகள் படுகாயம் அடைந்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். ஓர் இரங்கல் தீர்மானம் இருக்கிறது எல்லோரும் உட்காருங்கள்.

"14-8-2006 அன்று இலங்கை முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள அனாதைக் குழந்தைகள் காப்பகத்தின் மீது இலங்கை இராணுவத்தினர் சரமாரியாகக் குண்டுகளை வீசித் தாக்கியதன்

2006 ஆகஸ்ட் 17] [பேரவைத் தலைவர்]

காரணமாக 61 மாணவிகள் உயிரிழந்தது குறித்தும், 150-க்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயம் அடைந்தது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மனித நேயத்தில் தோய்ந்துள்ள எவராயினும் அவர்களால் மன்னிக்கப்பட முடியாத இந்த நிகழ்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதில் இரு வேறு கருத்துக்கு இடம் இல்லை. இந்த நாகரிகமற்ற, காட்டுமிராண்டித்தனமான, மனிதாபிமானம் சிறிதுமற்ற, கொடுமை நிறைந்த இலங்கை இராணுவத்தின் இச்செயலை இப்பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது. நிலையான வாழ்க்கை முறைகளுக்கும், நிலைத்த பாதுகாப்புக்கும் போராடி வரும் இலங்கை வாழ் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து வரும் இந்தப் போர் நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இலங்கை அரசை இந்திய அரசு கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தியப் பிரதமரிடம் வற்புறுத்தியிருக்கிறார்.

இலங்கை இராணுவத்தின் இக்கொடிய கொலை வெறியாட்டத்தில் உயிரிழந்த பள்ளிக் குழந்தைகளுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

மறைந்த இந்தப் பள்ளிக் குழந்தைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது)

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

திரு. சி. ஞானசேகரன்: Speaker sir,..

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை வாழ் தமிழர்கள் நிம்மதியற்று இலங்கையில் வாழ்வதற்குரிய ஒரு சூழ்நிலை அங்கு உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. 14-8-2006 அன்று முல்லைத் தீவு மாவட்டம், செஞ்சோலை சிறார் பராமரிப்பு இல்லத்தில் சிங்கள இராணுவம் கண்மூடித்தனமாகக் குண்டு மழை பொழிந்ததன் காரணமாக, 61 மாணவிகள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு யாழ்பாணத்தைவிட்டு ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை வாழ் தமிழர்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள் என்ற துயரச் செய்தி, தமிழ்நாட்டு மக்களின் அத்தனை இதயங்களிலும் இன்றைக்கு ஆறாத துயரமாக உருமாறியிருக்கின்றது. இந்த நிலைமை குறித்து, சபையை ஒத்திவைத்து, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கடிதம் கொடுத்திருக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொடுத்த அந்த வேண்டுகோள் என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனைக்குப் பின்பு முடிவெடுக்கப்படும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

4. சிங்கள இராணுவத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் இரங்கல் தீர்மானம் அமைந்ததற்குப் பாராட்டும், நன்றியும்

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக இலங்கையிலே சிங்கள இராணுவம் கண்மூடித்தனமாகத் தமிழர்களைச் சுட்டுக் கொன்று, கொடூரமான செயலில் ஈடுபட்டு வருவது, தமிழகத்திலே இருக்கிற தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்களுக்கு ஆழ்ந்த அதிர்ச்சியை உண்டாக்கி வருகிறது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான், நேற்று அந்த செஞ்சோலை சிறுவர் பள்ளியிலே 61 பிஞ்சு உள்ளங்களைக்

காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியிருப்பது மிகப் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது. ஆகவே, தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வாகப் பிரதிபலிக்கக்கூடிய வகையில், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் நல்லாட்சி என்பதற்கு இலக்கணமாக, இது தமிழர்கள் ஆட்சி என்ற காரணத்தினாலேதான், அந்தப் பிஞ்சு உள்ளங்களுக்கு இரங்கல் தெரிவிக்கின்ற நிகழ்ச்சியாகவும், அதே வேளையில், சொல்ல முடியாத காட்டுமிராண்டித்தனமான, வெறித்தனமான காரியத்தில் ஈடுபடுகிற சிங்கள இராணுவத்திற்குக் கண்டனக் குரலை எழுப்புகிற வகையில், இந்த மாமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றிய நம்முடைய கலைஞர் அரசுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தமிழர்களுடைய அரசு என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

5. சுதந்திர தின விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் வெளியிட்ட மக்கள் நலம் பேணும் அறிவிப்புகளுக்குப் பாராட்டும், நன்றியும்

திரு. ஜி.கே. மணி: நேற்று முன்தினம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அரசு சார்பில் சுதந்திர தினக் கொடியேற்று விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு ஒரு மிகப் பெரிய அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். சுதந்திர தினச் செய்தியைச் சொல்லக்கூடிய அதே வேளையில், இந்த நாட்டிலே இருக்கிற ஏழையெளிய மக்களுக்கு இலவச எரிவாயு அடுப்பு வழங்கப்படும் என்ற நல்ல செய்தியை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலே இதற்காகவும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) விவசாயிகளின் பம்புசெட்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் ஆணையை உரியவர்களுக்கு உடனே தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், சுய நிதி அடிப்படையில், ஏற்கெனவே விவசாயிகள் பெற்றிருக்கக்கூடிய விவசாய பம்புசெட் இணைப்புகளுக்கு, இனி free current தான் வழங்கப்படும்; அதற்கான கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது என்று, ஏற்கெனவே அவர்களுடைய மானியக் கோரிக்கைக்கான பதிலுரையின்போது இந்த அவையில் அறிவித்தார்கள். இன்றுகூட ஓர் அறிக்கையை அறிவித்திருக்கிறார்கள். இனி அதற்குக் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்று அரசாணை வெளியிடப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில், நானேகூட, S.E. அவர்களை contact செய்து கேட்டபோது, 'இன்னும் எங்களுக்கு அரசாணை வரவில்லை. ஆகவே, அதுவரை நாங்கள் நிதி வசூலிப்போம்' என்று, நானேகூட அந்த நிதியைக் கட்டியிருக்கிறேன், கட்டணத்தைக் கட்டியிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த அரசாணையை, அந்தந்த S.E.–க்களுக்கு அனுப்பி, அவர்கள் இனி வசூலிக்கக்கூடாது என்று இந்த அவையின்மூலமாக ஓர் ஆணையைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் தெரிவித்ததைப்போல, இது குறித்து ஆகஸ்ட் மாதம் 1 ஆம் தேதி இந்த அவையிலே நான் பதிலுரை அளிக்கும்போது, மிகத் தெளிவாக, 2 இலட்சத்து 40 ஆயிரம் இணைப்புகள், சுய நிதி மின் திட்டத்தின்கீழ் விவசாயிகள் யார், யார் பணம் செலுத்தி வருகிறார்களோ, அவர்கள் இனி செலுத்தத் தேவையில்லை என்று அறிவிப்புச் செய்தேன். அதற்குப் பிறகு, இந்த மாதம் 11 ஆம் தேதி அரசாணை பிறப்பிக்கப்பட்டு, வாரியத்திற்கும், அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஒரு சில இடங்களிலே, அதிகாரிகளுக்கு அந்தத் தகவல் கிடைக்கவில்லை என்று, நேற்று உயர் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்கள் விழுப்புரத்திலேயிருந்து எனக்குத் தெரிவித்தவுடன், உடனடியாக ஓர் அறிக்கையை விட்டு, உடனடியாக மின் வாரியத் தலைவர்மூலமாக, எல்லா அதிகாரிகளுக்கும் தெரிவிக்கச் சொல்லி, யாரும் வசூலிக்கக்கூடாது என்று அறிக்கை விட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பணம் செலுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படிச் செலுத்தியிருந்தால், அது திருப்பி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சுதந்திர தின விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் வெளியிட்ட மக்கள் நலம் பேணும் அறிவிப்புகளுக்குப் பாராட்டும், நன்றியும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

முற்பகல் 10-35

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோட்டையிலே கொடியேற்றி வைத்துவிட்டு நீண்டதொரு அரிய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அந்தச் சொற்பொழிவின்மூலமாக, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையிலே முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடனே இங்கே இருக்கின்ற தாய்மார்கள் மகிழ்கின்ற வகையிலே ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்குக் கொடுத்ததையும், விவசாயிகள் நலனிலே அக்கறை கொண்டிருக்கின்ற அரசு, விவசாயிகள் கடன்களை ரத்துச் செய்ததையும் நினைவுகூர்ந்து, ஏழைத் தாய்மார்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள், துயரப்படுகிறார்கள், விறகு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள், அதேபோன்று மண்ணெண்ணெய் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் இலவச கேஸ் அடுப்பு 150 கோடி ரூபாய் செலவிலே தைத் திங்கள் 1 ஆம் நாள், பொங்கல் திருநாளன்று கொடுக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத் தமிழகத்திலே இருக்கின்ற ஏழை எளிய சமுதாயத்திலே, பின்தங்கியிருக்கின்ற கோடானு கோடித் தாய்மார்கள் சார்பாகக் காங்கிரஸ் கட்சி நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

4. சிங்கள இராணுவத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் இரங்கல் தீர்மானம் அமைந்ததற்குப் பாராட்டும், நன்றியும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம்.

திரு. கு. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15 ஆம் தேதி தமிழ் ஈழ முல்லைத் தீவு மாவட்டத்திலே, செஞ்சோலை சிறார் இல்லத்திலே, சிங்களப் பேரினவாத

இராணுவத்தினர் விமானம்மூலமாகக் குண்டுகளை எறிந்து, அங்கு தங்கியிருந்த பச்சிளம் குழந்தைகள் 61 பேரைக் கொடுங்கொலை செய்திருக்கிறார்கள். இந்தப் படுகொலையைக் கண்டித்து இரங்கல் தீர்மானமும், இலங்கைப் பேரினவாத அரசைக் கண்டித்துத் தீர்மானமும் இயற்றிய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும், விடுதலைச் சிறுத்தைகளின் சார்பாக மனமார்ந்த நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், இந்திய அரசு ஒரு அதிகாரியை நம்முடைய தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி, முதல்வர் அவர்களைச் சந்திக்க வைத்தது. இந்தியாவிலே மூத்த முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர். இந்தியாவிலே அனுபவம் வாய்ந்த முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர். குறைந்தபட்சம் ஒரு மத்திய அமைச்சரைக்கூட அனுப்பாமல், ஒரு அதிகாரியை அனுப்பிச் சந்திக்க வைப்பது, எந்தவிதத்தில் சரி என்று எம்மால் புரிந்துகொள்ள இயலவில்லை.

இந்திய அரசு எதற்காக மௌனம் சாதிக்கிறது? **

நம்முடைய குழந்தைகள், பிஞ்சு உள்ளங்கள் அங்கே படுகொலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இதை அரசியல் ஆக்காமல் தங்களுடைய கட்சிக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்கவிட ஒருமனதாக இங்கே ஒரு தீர்மானத்தில், அந்தந்தக் கட்சித் தலைவர்கள் உரையாற்ற வேண்டும்.

இலங்கைப் பேரினவாத அரசுக்கு எச்சரிக்க, அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலே கூட்ட வேண்டும். இன்றுகூட, எங்களுடைய கட்சிப் பொதுச் செயலாளர் அண்ணன் திருமாவளவன் அவர்கள், அவருடைய பிறந்த நாளை தமிழர் எழுச்சி நாளை, ரத்துச் செய்துவிட்டு, தமிழ் ஆர்வலர்களோடும், ஆயிரக்கணக்கான தமிழ் உள்ளங்களோடும் அங்கே உண்ணாநிலை அறப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நம்முடைய அரசு இதோடு விட்டுவிடாமல், இதில் முழுக் கவனம் செலுத்தி, அங்குள்ள நம்முடைய தமிழர்களுக்குப் பாதுகாப்பு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அளிக்க வேண்டும். மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். இப்படி மத்திய அரசு மௌனம் சாதிப்பதற்கும், நம்முடைய தமிழக முதல்வரின் கோரிக்கையை ஏற்காது இருப்பதற்கும் தன்னுடைய கண்டனத்தைத் தெரிவித்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறது.

(விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர்கள் அவையைவிட்டு வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன். (குறுக்கீடு)

திரு. டி. சுதர்சனம்: அவர் சொன்னதற்கு ஒரு clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஈ) இலங்கைத் தமிழ் இனப் படுகொலை விவரமறிய தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தீவில் தமிழ் இனத்தைப் படுகொலை செய்யும் சிங்களப் பேரினவாத அரசின் இராணுவத் தாக்குதலால் உயிர் நீத்த தியாகிகளுக்கு, அனாதைக் குழந்தைகள் காப்பகமான செஞ்சோலை மீது, திட்டமிட்டு இலங்கை இராணுவ விமானங்கள் குண்டு வீச்சு நடத்தி, கொல்லப்பட்ட அந்த இளந்தளிர்களுடைய துயா மரணத்திற்கு, இந்தச் சபை தன்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்திருக்கிறது.

(முற்பகல் 10-40)

அதோடு மட்டுமல்லாமல், இலங்கைத் தீவில் தமிழ் இனத்தையே கூண்டோடு அழிக்க வேண்டுமென்று சபதம் எடுத்து, இன்றைக்கு சிங்கள இராணுவம் அந்தப் பிரதமராலேயே ஏவிவிடப்பட்டிருக்கிறது. இத்தகைய நிலைமைகளையெல்லாம் நேரிடையாகத் தெரிந்துகொள்வதற்கு அரசாங்க அதிகாரிகளாலே முடியாது என்ற காரணத்தினால், ஏற்கெனவே இலங்கையில்

இருக்கக்கூடிய தமிழ் அமைப்புகளின் சார்பிலும், தமிழ் அறிஞர்களின் சார்பிலும் வலியுறுத்தப்பட்டு வருகின்ற, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களை நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் சந்தித்து, அந்த நாட்டினுடைய நிலைமையை நேரிடையாக விளக்க வேண்டும்.

அதேபோல நம்முடைய இந்திய நாட்டைச் சேர்ந்த, குறிப்பாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இலங்கைக்கு அனுப்பி, அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற தமிழ் இனப் படுகொலை பற்றி நேரிடையாகத் தெரிந்து, அதற்கேற்ற வகையில் இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசுக்கு முன்னாலே நான் வைக்கிறேன். அதோடு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இங்கே வலியுறுத்தப்பட்டிருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தை நானும் வழிமொழிகிறேன்.

4. சிங்கள இராணுவத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் இரங்கல் தீர்மானம் அமைந்ததற்குப் பாராட்டும், நன்றியும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே நடைபெற்ற மிகக் கொடூரமான அந்தத் துயரச் சம்பவத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நானும் வன்மையாக இந்த அவையின்மூலமாகக் கண்டிக்கிறேன். இறந்த 61 குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டிருப்பது ஒரு மன ஆறுதலை அளிக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலே அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வன்முறைக் கொடூரச் சம்பவத்தை நம்முடைய மன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது என்ற அந்தத் தீர்மானமும் வரவேற்கக்கூடியது. அதோடு, இதிலே மத்திய அரசாங்கம் தலையிட்டு சமாதானம் செய்வதற்கான உரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நமது மன்றம் வைக்க வேண்டும். அதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், அண்டை மாநிலம் என்ற அளவிலேகூட ஒரு நாடு இருக்கிறது. குறிப்பாக, இப்படித்தான் இஸ்ரேல், லெபனான்மீது தொடர்ந்து குண்டு மழை பொழிந்து அப்பாவி மக்களைக் கொன்று

குவித்துக்கொண்டே இருக்கிறது. இதைப்போல, உலகிலே எந்த நாட்டிலே நடந்தாலும், அது அனுமதிக்கக்கூடாத ஒன்று என்று பொதுவுடைமைக் கட்சிகள் கருதுகிற காரணத்தினாலே, இலங்கையிலே இப்படி நடைபெறுகிற அப்பாவிப் பொது மக்களைக் கொன்று குவிக்கின்ற இந்தக் காரியங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அங்கே நடைபெறுகின்ற போர் நிறுத்தப்படுவதற்கான முயற்சியை, நமது நாடு அண்டை நாடு என்ற முறையிலே, ஒரு பெரிய நாடு என்ற முறையிலே, ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள நாடு என்கின்ற முறையிலே நமது இந்தியா அதிலே தலையிட்டு, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை நமது மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடந்திருக்கக்கூடிய துயரச் செய்தி, 61 குழந்தைகள், சின்னஞ்சிறார்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிற அந்த நிகழ்ச்சி கடுமையான கண்டனத்திற்குரிய நடவடிக்கை. பொருத்தமான முறையில் இந்தப் பேரவையின்மூலமாக அதற்குரிய அஞ்சலியைத் தெரிவித்திருப்பது சரியானது. மாநில அரசு, மத்திய அரசின் கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு ஏற்படுத்தக்கூடிய வகையில் இரு தரப்பாரும் போரைக் கைவிட்டு, அந்தப் பேச்சுவார்த்தையின்மூலமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசு இதில் தலையிட வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(உ) மின்சாரத் துறையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரம் பற்றிய அமைச்சரின் பேச்சு தொடர்பான செய்தி

திரு. சி. கோவிந்தசாமி: ஒரு செய்தி, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு, மின்சாரத் துறையில் பணியாற்றுகிற ஊழியர்களுக்குப் பல்வேறு சலுகைகளை, நிரந்தர

ஊழியர்களுக்கு இந்த அரசு வழங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அந்தத் துறையில் சற்றேறக்குறைய 23 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் நேற்றையதினம் பேசியதாக ஒரு செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். 6 ஆயிரம் பேர் நிரந்தரமாக்கப்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பொருளில் ஒரு செய்தி வந்தது. இன்று காலையிலிருந்து மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் தொலைபேசியிலே தொடர்புகொண்டு, 23 ஆயிரம் ஒப்பந்த ஊழியர்கள் இருக்கிறபோது, 6 ஆயிரம் பேரை மட்டும் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறாரே என்று, அமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஒப்பந்தத் தொழிலாளர்களுடைய அந்தப் பணி நிரந்தரப் பிரச்சினையில் அனைவருக்கும் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்தச் செய்தியைச் சொல்லி, அதற்குப் பொருத்தமான நல்ல பதிலை எதிர்பார்க்கின்றேன்.

முற்பகல் 10-45

4. சிங்கள இராணுவத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் இரங்கல் தீர்மானம் அமைந்ததற்குப் பாராட்டும், நன்றியும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவையிலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் இலங்கையிலே இருக்கின்ற, தமிழ் பேசுகின்ற மக்கள் வாழ்கின்ற பகுதியிலே சிறுவர்கள் இருந்த, மாணவிகள் இருந்த பகுதியிலே, குண்டு வீசித் தகர்த்ததை வன்மையாகக் கண்டித்தார்கள். நீங்களும் இங்கே தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றீர்கள். அதிலே காங்கிரஸ் கட்சிக்கு எந்த மாறுபாடும் கிடையாது. ஆனால், மத்தியிலே, காங்கிரஸ் தலைமையிலே இருக்கின்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்த பின்னாலே, இலங்கையிலே பல்வேறு விரும்பத்தகாத சூழ்நிலைகள் நடைபெறுகின்றன என்பதை இந்த நாட்டிலே இருக்கின்ற மக்கள் நன்கு அறிவார்கள். இருந்தாலும், அதற்குக் காங்கிரஸ் கட்சி ஆட்சி எந்தவிதத்திலும் பொறுப்பேற்க முடியாது என்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள்.

இங்கே உண்ணாவிரதத்திற்குப் போக வேண்டுமென்று சொல்லி, வெளிநடப்புச் செய்துவிட்டு வெளியே போன விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், ஏதோ ஓர் அரசு அதிகாரியை அனுப்பி, முதலமைச்சரிடத்திலே பேசினார்கள் என்று, விவரம் தெரியாமல் சொல்லியிருக்கின்றார்கள். அன்னை இந்திரா காந்தி காலத்திலே இலங்கைப் பிரச்சினை ஏற்பட்டபோது, பார்த்தசாரதி என்கின்ற ஓர் அரசு அதிகாரியைத்தான் அந்த இலங்கைப் பிரச்சினையைத் தனியாகக் கவனிப்பதற்கு, தமிழ் தெரிந்த ஒருவரை, தமிழகத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியை நியமித்தார்கள். அவர்தான் அன்றைக்கு அத்தனை பிரச்சினைகளையும் கையாண்டு, அதற்குப் பின்னாலே அமைதித் தீர்வு காண வேண்டுமென்று முயற்சி செய்து, அன்னை இந்திரா காந்தி படுகொலைக்குப் பின்னாலே, ராஜீவ் காந்திக்கு ஏற்பட்ட பிரச்சினைகள்—இந்த விவாதத்திற்குள் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும், இன்றைக்குப் பாரதப் பிரதமருடைய தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருக்கிற திரு. எம்.கே. நாராயணன் அவர்கள் நன்கு தமிழ் தெரிந்தவர்கள்; கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்; நன்கு தமிழ் அறிந்தவர்கள். தமிழர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள். இலங்கைப் பிரச்சினையைப் பற்றி நன்றாக அறிந்தவர்கள். அவர்மூலமாகச் சில செய்திகளை பாரதப் பிரதமர் அவர்கள் முதல்மைச்சர் அவர்களிடத்திலே தெரிவிக்கச் சொல்லி, அவரை இங்கே அனுப்பியிருக்கிறார்களே தவிர, ஏதோ உள்நோக்கம் கொண்டு, ஒரு மத்திய அமைச்சரை அனுப்பாமல், ஓர் அதிகாரியை அனுப்பினார்கள் என்று இந்த அவையிலே பதிவு செய்வது விரும்பத்தகாத செயல்.

திரு. எம்.கே. நாராயணன் அவர்கள் சிறந்த நிர்வாகி என்பதை இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை மக்களும் நன்கு அறிவார்கள். தமிழ் நன்கு தெரிந்தவர்கள். இலங்கைப் பிரச்சினையை நன்கு அறிந்தவர்கள். அதைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளக்கூடிய சக்தியும், திறமையும் அவருக்கு உண்டு என்று பிரதமர் நினைத்த காரணத்தினாலேதான் இங்கே முதலமைச்சரை அவர்கள் சந்தித்து, ஆலோசனை நடத்தியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும், பாரதப் பிரதமர் அவர்களும் இலங்கைப் பிரச்சினையிலே உன்னிப்பாகத் தங்களுடைய கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்று இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட இலங்கையில், முல்லைத் தீவில், செஞ்சோலை சிறார் இல்லத்தில் 61 மாணவிகள் குண்டு வீசிக் கொல்லப்பட்டது குறித்து எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், அதைப்போலவே, இந்தப் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. சுதர்சனம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. கோவிந்தசாமி அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. சிவபுண்ணியம் அவர்களும், ம.தி.மு.க. சார்பிலே திரு. கண்ணப்பன் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் திரு. செல்வம் அவர்களும் தங்களுடைய கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். பா.ம.க. சார்பிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோ.க. மணி அவர்களும் தனது கருத்தை இங்கே எடுத்து வலியுறுத்தி இருக்கிறார்கள். இந்தக் கருத்தை இவர்கள் எல்லாம் வலியுறுத்துவதற்கு முன்னாலேயே, பேரவைத் தலைவராகிய தாங்கள் இலங்கைத் தீவிலே, தமிழ் இளம் பிஞ்சுகளுக்கு ஏற்பட்டுவிட்ட ஓர் அநீதியை, அக்கிரமத்தைக் கண்டித்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றியிருக்கிறீர்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, இலங்கையிலே நடைபெறுகின்ற அந்தக் கொடுமைகளை இந்த அவையிலே இருக்கக்கூடிய எந்தக் கட்சி உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வதாக இல்லை. இன்னும் சொல்லப் போனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடுமையாக இலங்கை அரசைக் கண்டிப்பதற்கு நாங்கள் தயங்கவும் இல்லை. ஆனால், அங்கே நடைபெற்றுவிட்ட அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, இன்று உலக நாடுகள் எந்த அளவிற்கு அதிலே அக்கறை காட்டியிருக்கின்றன என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகின்றேன்.

(முற்பகல் 10-50)

ஐக்கிய நாடுகள் சபையிலேகூட, இலங்கையிலே நடைபெற்றுவிட்ட அந்தக் கொடுமையைக் கண்டித்திருப்பதோடு மட்டுமல்ல, அங்கே ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை அரசைக் கண்டித்துவிட்டு, இலங்கையிலே நடைபெறுகின்ற சம்பவங்களைக் கவனிப்பதற்காக ஒரு தூதுவரை அனுப்புவது என்று முடிவு செய்திருக்கிறது. அதைப்போல, அமெரிக்க நாட்டிலேயிருந்து Steven Mann என்ற அமெரிக்க அரசினுடைய பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்பி, இலங்கையிலே என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அமெரிக்க நாட்டுக்கு ஓர் அறிக்கை தர வேண்டுமென்று கேட்டிருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், ம.தி.மு.க. கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் கண்ணப்பன் அவர்கள் பேசும்போது இரண்டு கருத்துகளை இங்கே சொன்னார்கள். ஒன்று, நம்முடைய பிரதமர் இலங்கையிலே இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து, அங்கே இருக்கின்ற பிரச்சினைகளை விவாதித்து, ஒரு தீர்வு காண வேண்டும் அல்லது இங்கே இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பி இலங்கையிலே என்ன நடக்கிறது என்பதை ஆராய ஒரு குழுவை அனுப்ப வேண்டும் என்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இன்றுள்ள சூழ்நிலையிலே, இந்திய அரசு வெளியுறவுத் துறைக் கொள்கையிலே எதைப் பின்பற்றுகிறதோ, அதைத்தான் நாமும் பின்பற்றிக்கொண்டிருக்கிறோம் பல ஆண்டு காலமாக. அது அ.தி.மு.க.-வாக இருந்தாலும் சரி, அல்லது தி.மு.க.-வாக இருந்தாலும், யாராக இருந்தாலும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே இருக்கின்ற தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் இந்த அவையினுடைய நோக்கமே தவிர, இதை மேலும், மேலும் பேசி, அங்கே வாழ்ந்துகொண்டிருக்கின்ற தமிழர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் மேலும் தொடர்வதற்கு, பல இன்னல்களுக்கு அவர்கள் ஆளாவதற்கு நாம் இடம் கொடுத்துவிடக்கூடாது. நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்திய அரசை வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதோடு இந்தப் பிரச்சினையை இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்புவதை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம்... (குறுக்கீடு)

திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏனம்மா, என்ன விஷயம்? சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு அதைப் பற்றிப் பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு)

திருமதி டி. யசோதா: ஒரு தவறான தகவல் இந்த அவை நடவடிக்கைகளிலே பதியப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ** இங்கே குறிப்பிட்டுச் சொல்லி இருக்கின்றார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர். அந்தத் தவறான தகவல் இந்தக் குறிப்பேடுகளிலே.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சட்டமன்ற நடவடிக்கைகளிலே இருக்கக்கூடாது என்பதைத்தான் உங்கள் மத்தியிலே சொல்கின்றேன். தவறான ஒரு தகவல் ** என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** *(குறுக்கீடுகள்)* அந்தக் குறிப்பு அவைக் குறிப்பில் இருந்தால் நீக்கிவிடுங்கள்.

திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்கள் பேசும்போது, எம்.கே. நாராயணன் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. அவர்கள் வந்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, மத்திய அரசாங்கத்தினுடைய நிலையைப் பற்றித் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்களும், அதே மாதிரி பிரதமருடைய தூதுவராக வந்த திரு. நாராயணன் அவர்களும் என்ன பேசினார்கள் என்பதெல்லாம் இந்த நாட்டுக்கும், அவைக்கும் தெரியாது. அதைத் தெரியப்படுத்தினால் நலமாக இருக்கும். அதோடு, இங்கே இருக்கக்கூடிய தமிழர்கள் நாம் துடித்துப் போய், அங்கே இருக்கின்ற ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கு சட்டமன்றத்திலே பேசுவதும், நம்முடைய கருத்துகளைச் சொல்வதும் எந்த வகையிலும் ஈழத் தமிழர்களுடைய பாதுகாப்புக்குக் குந்தகம் ஆகாது. அதோடு, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் இரண்டு நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உண்மைகளைத் தெரிந்து வருவதற்காக நாம் அனுப்ப வேண்டுமென்று சொல்கிறோமே தவிர, வேறல்ல. அதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்பதை மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்லிவிட்டார் அல்லவா? (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ம.தி.மு.க. கட்சியினுடைய தலைவர் கண்ணப்பன் அவர்கள் சொன்ன கருத்தில், எம்.கே. நாராயணன் அவர்கள் முதலமைச்சரை வந்து சந்தித்துவிட்டு, பேசிவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்கள் என்ன பேசினார்கள் என்ற ஒரு கேள்வியை இங்கே எழுப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியாதது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அல்ல. வெளிநாட்டுப் பிரச்சினைகளைப் பற்றி இந்திய அரசினுடைய தூதுவர் ஒரு முதலமைச்சரிடத்திலே பேசுவது இரகசியம். அதை வெளியிடுவது இந்த நாட்டிற்கும் நல்லதல்ல, இலங்கையிலே வாழக்கூடிய தமிழர்களுக்கும் நல்லதல்ல. எனவே, அதைப் பற்றி நாம் இங்கே விவாதிக்க விரும்பவில்லை. மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன் அவர்கள் தெரிவித்ததைப்போல, இந்த அவையிலே இவ்வளவு நேரம் நாம் இந்தக் கருத்துகளை வலியுறுத்தி, இறந்துவிட்ட இளஞ்சிறார்களுக்கு நாம் இரங்கல் தெரிவித்திருப்பதன்மூலம் அங்கேயிருக்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கு அது ஆறுதல் அளிக்கும் என்பதையும், இலங்கை வெறியர்களுக்கு ஓர் அச்சத்தை ஏற்படுத்தும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10-55

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(உ) மின்சாரத் துறையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரம் பற்றிய அமைச்சரின் பேச்சு தொடர்பான செய்தி—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் நேற்றையதினம் ஒரு மாநாட்டிலே கலந்துகொண்டு பேசியதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். நான் அந்தக் கூட்டத்திலே பேசியது என்ன என்பது, 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிறது, 'சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது, சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், எந்த அறிவிப்பைச் செய்தாலும், அது சட்டமன்றத்தினுடைய, உறுப்பினர்களுடைய உரிமையை மீறிய செயலாகும். எனவே, எந்த அறிவிப்பையும் நான் சொல்ல இயலாது, அறிவிக்க இயலாது' என்று சொல்லிவிட்டுத்தான் வந்திருக்கின்றேன். ஒவ்வொரு பத்திரிகையிலும் ஒவ்வொரு விதமாகச் செய்தி போட்டிருக்கிறார்கள். இருந்தாலுங்கூட, மின்சார வாரியத்திலே பணியாற்றக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினை குறித்து ஒரு முடிவெடுக்கும்போது, எல்லாக் கட்சித் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசித்தான் இந்த அரசு ஒரு முடிவெடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த... (குறுக்கீடு) சும்மா உட்காருங்கள் சார், முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள், (குறுக்கீடு) சும்மா கத்திக் கொண்டிருக்கக்கூடாது. (குறுக்கீடு) சேகர்பாபு, நீங்கள் அனுமதியில்லாமல் எழுந்து நின்று பேசுவது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடு)

6. கவன ஈர்ப்பு

வால்பாறை சாலை, 27-வது வளைவு தடுப்புச் சுவர் இல்லாததால் ஏற்பட்ட விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "வால்பாறை சாலையில் 27—வது வளைவில் தடுப்புச் சுவர் இல்லாததால் ஏற்பட்ட விபத்து" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, வால்பாறை தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன் உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கவன ஈர்ப்பு சம்பந்தமா துறையின் சார்பாக விவர அறிக்கை ஒன்று அவைமு வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

பொள்ளாச்சி—வால்பாறை சாலையில் கி.மீ.40/6-ல், அதாவது 27-வது கொண்டை ஊசி வளைவு அருகில், 8-7-2006 அன்று மாலையில் கேரள மாநிலப் பதிவு எண் கே.எல். 080-2423 கொண்ட கார், வால்பாறையிலிருந்து பொள்ளாச்சிக்கு வரும்பொழுது விபத்துக்குள்ளானது. மேற்படி கொண்டை ஊசி வளைவில் எச்சரிக்கைப் பலகைகள் மற்றும் கைப்பிடிச் சுவருடன்கூடிய தடுப்புச் சுவர் 25 மீட்டர் நீளத்திற்குக் கட்டப்பட்டுள்ளது. மேலும் 10 மீட்டர் நீளத்திற்கு வழிகாட்டிக் கற்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் சாலையின் அகலம் 8 மீட்டர் உள்ளது. இப்பகுதியில் சாலையின் ஓரமாக ஓடுதளத்தை ஒட்டிய பகுதியில் நிறுவப்பட்டுள்ள வழிகாட்டிக் கற்கள்மீது மோதி, மலைப் பகுதியில் சுமார் 50 அடிப் பள்ளத்தில் கார் கவிழ்ந்துள்ளது. மேலும், கார் ஓட்டுநரின் கவனக் குறைவினாலும், மலைப் பாதையில் ஓட்டிப் பழக்கம் இல்லாததாலும் விபத்து ஏற்பட்டதாகவும், பயணம் செய்தவர்களுக்கு எவ்விதக் காயமும் ஏற்படவில்லையென்றும் நீர்வீழ்ச்சி (Waterfalls) புறக்காவல் நிலையத்தில் மனுக் கொடுத்துள்ளார்கள் எனத் தெரிய வருகிறது. இம்மலைப் பாதையிலுள்ள கொண்டை ஊசி வளைவுகளில் தடுப்புச் சுவர்களைப் புதிதாகக் கட்டுவது பற்றியும், வலுப்படுத்துவது பற்றியும் நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். வால்பாறை செல்கின்ற பாதை, ஆழியாறு முதல் வால்பாறை வரை 40 வளைவுகள் இருக்கின்றன. அந்த 40 வளைவுகளில் பல வளைவுகளில் தடுப்புச் சுவர் இல்லை. சென்ற முறை, நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராக இருந்தபோது வால்பாறைக்கு வந்திருக்கின்றார்கள். மதிப்பீட்டுக் குழுவிடம், பல வளைவுகளில் தடுப்புச் சுவர் இல்லை என்பதை நேரடியாகச் சுட்டிக்காட்டி இருக்கின்றேன். 27-வது வளைவு, 24-வது வளைவு, 26-வது வளைவு போன்ற வளைவுகளில் மிக மோசமான நிலை இருக்கிறது. பல வளைவுகளில் தடுப்புச் சுவர் இல்லாததால், செல்லுகின்ற வாகனங்களுக்கு ஆபத்து ஏற்படுகின்ற நிலை இருக்கிறது. அந்த 27-வது வளைவில், சுமோ கார் விழுந்து இருந்ததை நான் நேரடியாகப் பார்த்தேன். 1,500 அடி பள்ளம். ஆனால், 50 அடி

[திரு. கோவை தங்கம்] [2006 ஆகஸ்ட் 17

அளவிலேயே, அந்த சுமோ கார் விழுந்தபோது, 'சில்வர் ஓக்' மரம் போன்ற பல மரங்கள் அதைத் தாங்கிக்கொண்டன. அதனால் உயிர்ச் சேதம் இல்லாத நிலை ஏற்பட்டது. நான் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை வால்பாறையில் இருக்கின்ற பாதை முழுவதிலும் தடுப்புச் சுவர்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வால்பாறை தங்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளவாறு, ஆழியாறிலிருந்து வால்பாறை செல்லக்கூடிய அந்தச் சாலை, குறிப்பாக மலைப் பகுதி ஏறத்தாழ 35 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இதில் 40 வளைவுகள் உள்ளன. இதில், இந்தச் சம்பவம் நடந்துள்ள வளைவு எண் 27. இதில் ஏறத்தாழ 25 மீட்டர் அளவில் கைப்பிடிச் சுவரும், அதேபோல வழிகாட்டிக் கற்களும் அமைந்துள்ளன. இதிலே வழிகாட்டிக் கற்கள்மீது மோதி, வால்பாறையிலிருந்து கீழே இறங்கிய அந்த சுமோ கார் தவறுதலாக அந்தப் பள்ளத்தில் இறங்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதிலேகூட, அந்த நீர்வீழ்ச்சி புறக்காவல் நிலையத்திலே, அந்த ஓட்டுநரே, தன்னுடைய கவனக் குறைவின் காரணமாகத்தான் அந்தச் சம்பவம் நடந்துள்ளது என்பதை அவரே எழுதிக் கொடுத்து ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, ஏற்கெனவே இருக்கின்ற வளைவுகளில் கைப்பிடிச் சுவர் இல்லாத பகுதிகளிலே இந்த அரசு விரைவில் கைப்பிடிச் சுவர் அமைப்பதற்கு CRIDP என்கின்ற திட்டத்தில் சுமார் 25 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டுக்கு ஒதுக்கியுள்ளது. மேலும், அதுபோன்ற குறைபாடுகளுள்ள கி.மீ. 40/6, கி.மீ. 60/2, 56/2, 56/6 மற்றும் கி.மீ. 58/8-ல் உள்ள வளைவுகளில் தடுப்புச் சுவர் அமைப்பதற்கும், அதேபோல, மிகக் குறுகிய வளைவுகளாக உள்ள, கொண்டை ஊசிப் பகுதியிலுள்ள, 24-வது வளைவு மற்றும் 26-வது வளைவு ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தி, கைப்பிடிச் சுவர்களையும், தக்க பாதுகாப்புச் சுவர்களையும் ஏற்படுத்துவதற்கு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் CRIDP திட்டத்தில் 25 இலட்சம் ரூபாயும், அதற்குப் பிறகு மேலும் தேவைப்படக்கூடிய அளவிலே, தோராய மதிப்பீடாக சுமார் 40 இலட்சம் ரூபாய் அளவிலும் ஒதுக்குவதற்கு எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான அரசு, வால்பாறை தனித் தொகுதிமீது

2006 ஆகஸ்ட் 17] [திரு. மு.பெ. சாமிநாதன்]

தனிக் கவனம் செலுத்தி, இனி வால்பாறை தொகுதியில் கோவை தங்கம் அவர்களை, வால்பாறை வைரம் என்று அழைக்கக்கூடிய அளவிலே தனிக் கவனம் செலுத்தும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரவர்கள் நல்ல பதிலை வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர், தமிழினத்தினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்கள் ஏற்கெனவே வால்பாறைக்குக் கலைக் கல்லூரியைக் கொடுத்ததற்காகவே மக்கள் நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நெடுஞ்சாலைத் துறை அமைச்சரவர்கள் செய்து தருவதாகக் கூறினார்கள். மேலும், வால்பாறையில் அந்த 40 வளைவுகளோடு வால்பாறை நின்றுவிடுவதில்லை. வால்பாறை என்பது மெயின் ரோடு. அதற்கு மேல்தான் மக்கள் குடியிருக்கின்ற பகுதி இருக்கின்றது. அந்தப் பகுதியிலே சென்ற மாதம் சோலையாறுக்குப் பக்கம் குறுவம்பாடி என்ற இடத்திலே ஒரு பஸ் கவிழ்ந்துவிட்டது. அங்கேயும் தடுப்புச் சுவர் இல்லை. அங்கேயும் சில்வர் ஓக் மரம் இருந்ததால், பஸ் கவிழ்வதை 50 அடி அளவிலேயே அது தடுத்து நிறுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ளமலை, ஊசிமலை, கருமலை, அக்காமலை, பச்சமலை, நடுமலை, பாலாஜி கோயில் செல்லும் பாதை, அதுபோல, முடீஸ், தாய்முடி, குரங்குமுடி, தோனிமுடி, கஜமுடி, ஆனைமுடி போன்ற பகுதிகளுக்கும் தடுப்புச் சுவர்களை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வால்பாறையில் பல பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறை ரோடுகள் பழுதடைந்து இருப்பதால், அந்த ரோடுகளையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் பழுது நீக்கிச் சீர்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, சென்ற மாதம் கோவையிலே சிறந்த ஆய்வை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு உட்காருங்கள். அந்த முடி, இந்த முடி என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். (சிரிப்பு) சொல்லி முடியுங்கள்.

திரு. கோவை தங்கம்: நெடுஞ்சாலைத் துறை அமைச்சரவர்கள் சென்ற மாதம் கோவையிலே சிறந்த ஒரு ஆய்வை நடத்தி, சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலெல்லாம் குறைகளைக் கேட்டார்கள். அட்பொழுதும் இந்தக் குறையைக் கூறியிருக்கின்றேன், செய்து தருகிறேன் என்று கூறினார். அவருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர். (குறுக்கீடு) சரி.

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006–2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.85,85,71,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1789, திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூரில் உள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டியும், ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளபடி 50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2752, திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோவிலூர் தாலுக்கா மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் வசதி ஏற்படுத்திக் கூடுதல் படுக்கை வசதிகளை அமைத்துத் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3591, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப்பட்டு தொகுதி, சொரக்காய்ப்பேட்டை கிராமத்தில் ஏற்கெனவே நிலுவையில் உள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை உடன் தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4761, திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு தலைமை அரசு பொது மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7234, திரு. ராம. சுப்புராம்.

திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் தொகுதிக்குட்பட்ட திருமயம் தலைமையிடத்து அரசுப் பொது மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9397, திரு. து. செல்வராஜ்.

திரு. து. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5633, திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட சுகுணாபுரம், குளத்துப்பாளையம், பி.கே. புதூர், குனியமுத்தூர், ராமசெட்டிப்பாளையம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்து, கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 70 திரு. கே.வீ. ராமநாதன்.

திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "பவானி தொகுதியில் மாணவ, மாணவியருக்கு ஒரு வருட நர்சிங் பயிற்சிக் கல்லூரி, ரத்தப் பரிசோதனைப் பயிற்சி (Lab), ஸ்கேன் பயிற்சிப் பள்ளி போன்றவை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 139 திரு. கே.எல். இளவழகன்.

திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் மாணவ மாணவியருக்கு ரத்தப் பரிசோதனைப் பயிற்சி (Lab), ஒரு வருட நர்சிங் பயிற்சிக் கல்லூரி, ஸ்கேன் பயிற்சிப் பள்ளி போன்ற நுண்ணறிவு அரசுக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 528 திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட திருவெண்காடு ஆக்கூர், மேலப்பெரும்பள்ளம் கிராமங்களில் உள்ள அரசின

மருத்துவமனைகளுக்குப் போதிய மருத்துவர்கள் இல்லை; போதிய மருத்துவர்கள் நியமனம் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5439, திரு. பா. செந்தமிழ்ச் செல்வன்.

திரு. பா. செந்தமிழ்ச் செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் அரசு மருத்துவமனைகளில் குறைவாக உள்ள மருத்துவப் பணியாளர்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6739, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7822, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர் தொகுதி, கண்டாட்சிபுரத்தில் மருத்துவமனைக் கட்டடம் பழுது அடைந்துள்ளதால், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது; புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8349, திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், புதூர் நாடு ஊராட்சி, புதூர் நாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8568, திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் ஆரம்ப சுகாதார மையங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8733, திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, வனவாசியில் துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8957, திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து மருத்துவமனைகளிலும் கூடுதல் மருத்துவர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9036, திரு. கோ. எதிரொலி மணியன்.

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட தெள்ளார், தேசூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையான பராமரிப்பின்றிக் கிடக்கின்றன. சுகாதார நிலையங்களைச் சுற்றியுள்ள இடங்கள் அனைத்தையும் சுத்தம் அடையச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8690, திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் உள்ள ஆலோசனைக் குழுவில், மாவட்டத்திலுள்ள அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3636, திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒமலூர் நாரணம்பாளையத்தில் செயல்படாமல் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1671, திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள கோவிலூற்று, மருதம்புத்தூர், வீரவநல்லூர், கரிசல்பட்டி ஆகிய ஊர்களில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இரண்டு மருத்துவர்களும், நடமாடும் மருத்துவ ஊர்தியும் வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3333, திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, வெள்ளலூரில் இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை, மேம்படுத்தப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3349, திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குலசேகரம் மருத்துவமனையில் காலிப் பணியிடங்களை நிரப்புவதன் அவசியம் குறித்தும், மருத்துவர் குடியிருப்பு அமைப்பதன அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7538, திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி, அரசு மருத்துவமனையில் இயங்கி வரும் சித்த மருத்துவமனையைத் தனியாகப் பிரித்து தனிக் கட்டடத்தில் இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6918, திரு. நா. இராமகிருஷ்ணன்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டட வசதிகள் ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5986, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஹோமியோ மருத்துவப் பிரிவு தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3378, திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3410, திரு. வே. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மருத்துவமனையில் பழுதாகியுள்ள மின் விசிறி, கட்டில், மின் விளக்குகளைச் சரி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3448, திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதி, கடக்கத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5646, திரு. மா. தண்டபாணி.

திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் தொகுதிக்குட்பட்ட குஜிலியம்பாறை அரசு மருத்துவமனைக்குப் போதிய வசதிகளை வழங்கி, மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5522, திரு. இரா. குமரகுரு.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் தொகுதிக்குட்பட்ட இருவேல்பட்டு கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள சித்த மருத்துவப் பிரிவிற்குத் தேவையான மருத்துவர் மற்றும் உதவியாளர் இல்லாமல் சித்த மருத்துவப் பிரிவு சரிவரச் செயல்படாமல் உள்ளது; உடன் சித்த மருத்துவர்களைப் பணியமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5563, திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம், சூலூர் அரசு மருத்துவமனைகளுக்குக் கூடுதல் கட்டடம், அடிப்படை வசதிகள் செய்து தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5584, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8336, திரு. பெ. கண்ணன்.

திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சியில் சந்தைப்பேட்டை அருகில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3940, திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்குப் போதிய ஊழியர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3519, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்குக் குடியிருப்பு வளாகம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9013, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில், சிங்காரப்பேட்டை மற்றும் கல்லாடி ஆரம்ப சுகாதார நிலையங்களை வட்டாரத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8243, திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதிக்குட்பட்ட திருப்பாச்சேத்தியில் ஒரு அரசு மருத்துவமனை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5106, திரு. பி. பலராமன்.

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சென்னை–கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் பஞ்சட்டி கிராமத்தில் தற்போது இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசுப் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, சுமார் 30–க்கும் மேற்பட்ட கிராமப் பொது மக்களும், விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களும் உடனடியாக சிகிச்சை பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6255, திரு. ரா. வரதராஜன்.

திரு. ரா. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் தலைமை மருத்துவமனையில் கழிப்பிட வசதி அறவே இல்லை. விருதுநகர் தொகுதியில் உள்ள சுகாதார மையங்களில் மருத்துவர்கள் இல்லை. பணியிலுள்ள மருத்துவர்களும் வருவதில்லை. புதிய மருத்துவர்களை நியமனம் செய்து, தொகுதி மக்களைக் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9239, திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரத்தில் அரசுப் பொது மருத்துவமனையில், சேலம் மாவட்ட அனைத்துப் பகுதிகளிலிருந்து வரும் நோயாளிகளின் கூட்ட நெரிசலைத் தவிர்க்கக் கூடுதல் மருத்துவர்களையும், செவிலியர்களையும் நியமனம் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2889, திரு. கு. செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3157, திரு. இரா. இராம்பிரபு.

திரு. இரா. இராம்பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி நகரில் அரசுப் பொது மருத்துவமனையில் செயல்படாமல் இருக்கக்கூடிய அவசர சிகிச்சைப் பிரிவைச் செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6564, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி ஊராட்சி ஒன்றியம், குலசேகரப்பட்டணம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2917, திரு. பி. தங்கமணி.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்ட மன்றத் தொகுதி, பள்ளிப்பாளையத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் தினந்தோறும் 1,000-க்கும் அதிகமான நோயாளிகள் வருகை தருகிறார்கள்; எனவே, போதிய மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2906, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அரசு மருத்துவமனைக்குப் போதிய மருத்துவரும், மருந்தாளுநரும் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5066, திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருத்தணி நகரில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைக்குப் பல்லாயிரக்கணக்கில் நோயாளிகளும், வறுமையில் பாதிக்கப்பட்டவர்களும் வருகின்றனர்; அம்மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, அங்கே I.C.U. அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1966, திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, வடகாடு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8782, திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருத்துவத் துறையிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்களுக்குப் போதிய பணி இல்லாததால், அவர்களை அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி அமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4413, திரு. ஓ.கே. சின்னராஜ் .

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், நெ. 4, வீரபாண்டி கிளைச் சுகாதார நிலையத்தை (S.H.C.), ஆரம்ப சுகாதார நிலையமாக (P.H.C.) மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7591, திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி தொகுதி, புலிகுத்து ஊராட்சியில் உள்ள துணை சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8031, திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதிக்குட்பட்ட, சிதம்பரம்-கடலூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள புதுச்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பல வசதிகளுடன்கூடிய அரசு பொது மருத்துவமனையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2799, திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலுள்ள துணை சுகாதார மையங்களில் செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல், முழு நேரமும் மூடிக் கிடக்கும் துணை சுகாதார மையங்களில் செவிலியர்களைப் பணி நியமனம் செய்து, மூடிக் கிடக்கும் துணை சுகாதார மையங்களை மீண்டும் விரைவில் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8470, திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெரிய வேட்டுவபாளையம், கந்தாம்பாளையம், கோட்டைமேடு, கருமாண்டி, செல்லிபாளையம், சுள்ளிப்பாளையம், சீலம்பட்டி, தண்ணீர்பந்தம்பாளையம், வீரணம்பாளையம், எல்லீஸ்பேட்டை, முள்ளம்பட்டி, பாப்பம்பாளையம், மிரப் நகர், செல்லப்பம்பாளையம் ஆகிய ஊர்களில் இயங்கி வரும் துணை சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2594, திரு. இரா. துரைக்கண்ணு.

திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் தாலுகாவில் உள்ள பாபநாசம் அரசு மருத்துவமனையில் ஸ்கேன் வசதி இல்லை; போதிய படுக்கைகள் இல்லை; குறிப்பாக, பிரசவத்திற்கெனப் பிரத்தியேக முறையில் இடம் மற்றும் வசதி இல்லை; பழுதடைந்த நிலையில் கட்டடம் உள்ளது; கட்டடம் கட்டித் தருவதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8445 திரு. ஞா. செந்தமிழன்.

திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "சைதாப்பேட்டை தொகுதி, ஜீனிஸ் சாலை, அரசு மகப்பேறு மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமிப்பது மற்றும் மருத்துவமனையை மேம்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2842 திரு. என்.ஆர். ரங்கராஜன்.

***திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம், அரசு மருத்துவமனையில் பழுதடைந்த கட்டடங்களைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4445, திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் தொகுதியில் தளவாய்புரம் கூட்டுறவு மருத்துவமனைக்கு நிரந்தரமாக அரசு மருத்துவர் நியமனம் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8700, திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூரில் உள்ள மாவட்ட மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2790, திரு. கே. மகேந்திரன்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பூர் தொகுதி, வியாசர்பாடி பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிகக, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2803, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யாறு மருத்துவமனையைப் புதுப்பித்து நவீன மருத்துவக் கருவிகள் வழங்கி, அறுவை சிகிச்சை அளிக்கும் விதமாக அவசர ஊர்தி வழங்கி, நவீனமயமாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9131, திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5413, திரு. மா. ராஜசேகரன்.

திரு. மா. ராஜசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொட்டியம் சட்டமன்றத் தொகுதியில் தரத்தையார்கான்பேட்டை ஒன்றியத்தில் 24 மணி நேர P.H.C. மருத்துவமனை இருந்து வருகிறது. அங்கு டாக்டர் பற்றாக்குறை உள்ளது; வாகன டிரைவர் இல்லை; நர்சு இல்லை; மருத்துவர், வாகன ஓட்டுநர், நர்சு நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5342, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5484, திரு. ந. கணபதி.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதி, தைலாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மற்றும் வானூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றிற்குச்

சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும், அவற்றைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5471, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், பழையூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுத்தம் செய்து பழுது நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 902, திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலத்தில் செவிலியர் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1304, திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர், வரகூர் தொகுதியில் உள்ள பெருமத்தூரில், செவிலியர்

பயிற்சிப் பள்ளி தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 754, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

***டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருத்துவக் கல்லூரிகள் அரசால் நியமிக்கப்பட்ட இராமன் கமிட்டி பரிந்துரைத்த கட்டணத்திற்குக் கூடுதலாக மாணவர்களிடம் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4176, திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம், மத்திய சிறையில் உள்ள மருத்துவமனைக்குப் பதிலாக புதிய மருத்துவமனை ஒன்று அமைப்பதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4607, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9155, **திருமதி எஸ். தேன்மொழி.**

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குள் அதிகமாக விபத்து ஏற்படுகிறது; அவசர சிகிச்சைக்கு மதுரைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது; எனவே, நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை மையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9195, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் அரசு பொது மருத்துவமனை சரியான பராமரிப்பு இல்லாத நிலையிலுள்ளது; கழிப்பிட வசதி இல்லை; திருடர்கள் பயம் உள்ளது; அதைப் போக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8507, திரு. ஆர். வைத்திலிங்கம்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஆவிடல் விஜயபுரம் ஊராட்சி, நார்த்தேவன் குடிகாடு ஆகிய இடங்களில் உள்ள சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2725, திரு. டி. இராமச்சந்திரன்.

***திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புறங்களிலுள்ள அரசு ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்களில் கூடுதலாக செவிலியர்கள் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8152, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய்த் தடுப்புத் திட்ட, 637—ன்படி தொகுப்பூதியப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8110, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "30,000 (முப்பது ஆயிரம்) மக்களுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்கிற அடிப்படையில், வாசுதேவநல்லூர் தொகுதி தென்மலையில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8065, திரு. ஆர். ஞானதாஸ்.

திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும், வட்டார மருத்துவமனைகளிலும் நாய்க் கடி மற்றும் பாம்புக் கடிக்குப் போதிய மருந்து கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5140, திரு. சொ. கருப்பசாமி.

திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2763, திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதி, இனாம்கரூர் நகராட்சி, வெங்கமேடு பகுதியில் புதிய அரசு மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7671, திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, கொருக்குப்பேட்டையில், சிக்குன்குன்யா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த பரிகாரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8519, திருமதி ஆர். பிரேமா.

திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தாய்—சேய் நல விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியது குறித்தும், அவினாசி, அரசு மருத்துவமனையில் 40 படுக்கைகள், கரெண்ட் ஜெனரேட்டர், ஏ.சி. வசதியுடன்கூடிய ஆப்பரேஷன் தியேட்டர், டி.ஜி.ஓ. படித்த மகப்பேறு மருத்துவர், இருப்பிட மருத்துவர் நியமனம், பிரேதப் பரிசோதனைக் கூடம் ஆகியவற்றை உடனடியாகப் போர்க் கால அடிப்படையில் சரி செய்து தர வேண்டியது குறித்தும், சித்த மருத்துவக் கட்டடங்கள், அன்னூர், அவினாசியில் கட்டித் தரக் கோரியும், P.H.C.—களுக்கு அவசர மருத்துவ ஊர்திகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5887, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, துகிலி ஆரம்ப சுகாதார மையத்தை விரிவுபடுத்தவும், அதிகப் படுக்கை அறைகளையும், சிறப்புப் பிரசவ விடுதி வசதியையும், போதிய மருத்துவர் நியமனத்தையும் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2110, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் அரசு பென்ட்லாண்ட் மருத்துவமனையில் (Government Pentland Hospital) அனைத்துப் பிரிவுகளையும் பழையபடி நிறுவி, முழு அளவில், முதலமைச்சர் அறிவித்தவண்ணம் உடனே திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7256, திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள், மற்றும் ஆப்பரேஷன் தியேட்டர் வசதியிருந்தும், ஒரு மருத்துவர், இரண்டு செவிலியர்கள் மட்டுமே பணியாற்றி வருகிறார்கள்; அந்த மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர்களும், ஊழியர்களும் உடன் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *6488*, திரு. செ. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி சட்டமன்றத் தொகுதி, வேம்பனூர் கிராமத்தைச் சுற்றி சுமார் 20 கிராமங்கள் உள்ளன; அங்குள்ள மக்கள் மிகவும் ஏழ்மையானவர்கள்; இவர்கள் மருத்துவ வசதி செய்துகொள்ள 15 கி.மீ.-ல் மணப்பாறை அல்லது 10 கி.மீ.–ல் வளநாடு வரவேண்டியுள்ளது; எனவே, வேம்பனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *5801*, திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *6887* திரு. க. இராஜேந்திரன்.

திரு. க. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "மீன்சுருட்டி, அரசு மருத்துவமனையில் போதிய செவிலியர்கள் இல்லாததால் நோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்; எனவே

கூடுதல் செவிலியர்களைப் பணியமர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3959* திரு. செ. தாமோதரன்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதி, சின்னநகமம், ஐயம்பாளையம், ஆர். கோபாலபுரம், போடிபாளையம் ஆகிய துணை சுகாதார மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1558*, திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், முண்டுவேலம்பட்டி கிராமத்துப் பொது மக்கள் மருத்துவ சிகிச்சை பெற வசதியாக, செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுமதி வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,865,42,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,85,71,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3199*, திரு. து. ரவிக்குமார். இருக்கையில் இ...

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227426
சென்னை-600 008
நகல்
D
V24, 31 Pob
Pob 11.1

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும, ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைமீது விவாதம். 12 உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. அதற்குப் பிறகு அமைச்சரும் பதிலுரையாற்ற வேண்டியுள்ளது. அதனால், ஒவ்வொரு உறுப்பினரும் பத்து நிமிடங்களுக்கு மேலாகாமல் தங்களுடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கும்படி அன்போடு வேண்டுகிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போருக்கு அனுப்ப இன்னொரு மகன் இல்லையே என்று வீரக் குரல் கொடுத்த புறநானூற்றுத் தாயின் வழியில் வந்த இலக்கியத் தாயே! 'மக்கள் நலன் காக்கக் கோட்டைக்குச் செல், அரசன் தவறு செய்தாலும் அஞ்சாமல் நில், ஏழைகளின் உரிமை காக்க நெறிமுறைகளைச் சொல்' என்று என்னை அனுப்பி, இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்த நண்பர்களுக்கும், மீண்டும் எனக்கு ஐந்தாவது முறையாக கோபிசெட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி வாகை சூட்டியிருக்கிற வாக்காளர் பெருமக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 227 முதல் 323 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல—இதே சட்டமன்றத்தில் அண்ணா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார். 'ஜனநாயகத்தைக் கட்டிக் காக்க ஆளுங்கட்சி, மற்ற அரசியல் கட்சிகளிடம், பூனை தன் குட்டியைக் கவ்விக்கொண்டு போவதைப்போல நடந்துகொள்ள வேண்டுமே தவிர, பூனை எலியைக் கடித்துக் குதறிக்கொண்டு போவதைப்போல நடந்துகொள்ளக்கூடாது' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவேதான், மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துகளை இந்த மன்றத்தில் எடுத்து வைப்பது எங்களுடைய கடமை என்று நாங்கள் கருதுகின்றோம்.

இங்கே மக்கள் நல்வாழ்வுத் துறையில், தமிழ்நாட்டில் சமுதாயத்தில் பின்தங்கிய மற்றும் ஏழையெளிய மக்களுக்காகச் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு உலக வங்கி நிதியுதவியோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் ரூ.597.15 கோடியை ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பெற்று, பல்வேறு நலத் திட்டங்களைப் படிப்படியாக செய்து காட்டிய சரித்திர வரலாறு இன்றைக்கும் இருக்கிறது. ஆனால்... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் அனுபவம் நிறைந்தவர்கள். எங்களுடைய ஆட்சியிலே, எங்களுடைய தலைவர் கையொப்பமிட்டு அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். எங்களுக்குப் பின்னாலே வந்த நீங்கள், அந்த வேலையைச் செய்திருக்கிறீர்கள். அதையும் செய்ய முடியாமல் இப்போது நாங்கள் வந்து அந்தப் பணியை நிறைவேற்றப் போகிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார். 2005 ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலக வங்கியோடு பேசி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல, இந்த மாமன்றத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பில்—பழைய கொள்கைக் குறிப்பில் 80—வது பக்கத்திலே கொடுக்கப்பட்டிருப்பது ரூ.597.15 கோடி. ஆனால், புதிய கொள்கைக் குறிப்பில் 63—வது பக்கத்திலே கொடுக்கப்பட்டிருப்பது, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே இருப்பது ரூ.482.49 கோடி மட்டும்தான். அப்படியென்றால், 114.66 கோடி ரூபாய் குறைவாக இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அல்லது இதிலே எந்தக் குறைபாடுகள் எங்கே இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தின்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11—15

அது மட்டுமல்ல, மேலும் 70 கோடி ரூபாயில் மருத்துவமனைகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் தளவாடங்களை வாங்குவதற்கு கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது, பக்கம் 65—ல். ஆனால் உலக வங்கி உதவியோடு 5 ஆண்டு காலத் திட்டத்தில் தமிழ்நாட்டிலே இருக்கிற சுகாதாரத் திட்டத்தின் உபகரணங்கள் வாங்குவதற்கு மட்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் 101.53 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தொகை 3 கட்டங்களாகப் பிரித்து அளிக்கப்படும் என்று அன்றையதினம் குறிப்பிடப்பட்டிருப்பதை இந்த மாமன்றத்திற்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே முதல் கட்டத்தில் உபகரணங்களை வழங்குவதாகத் தெரிவித்துள்ளீர்கள். அப்படியானால் 3—வது கட்ட ஒதுக்கீடு எவ்வளவு? 2—வது கட்டம் வரை முடித்து விட்டீர்களா என்று இந்த நேரத்தில் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆனால் உலக வங்கி விதித்துள்ள நிபந்தனையின்படி, தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்திற்கான தொகை 3 கட்டங்களாகச் செலவிடப்பட வேண்டும். இது குறித்துச் சரியான விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த மன்றத்திலே பார்க்கிறபோது, தனியார் மருத்துவக் கல்லூரியிலே மாணவர்கள் இட ஒதுக்கீடு—110-வது விதியின்கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஒரு வார காலத்திற்குள்ளாக ஒரு அறிக்கையைப் படித்தார்கள். உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, நீதிபதி சுப்பிரமணியம் கமிட்டி தனியார் மருத்துவக்

கல்லூரிகளிலே மாணவர்கள் சேர்க்கை நுழைவுத் தேர்வை
நடத்துவதற்கு—அதன் முடிவு இன்னும் வெளியிடப்படவில்லை.
இதனிடையே நீங்கள் 110—வது விதியின்கீழ், தனியார் மருத்துவக்
கல்லூரிகளில் அரசுக்கு 65 சதவிகிதம், 35 சதவிகிதம் தனியாருக்கு
என்ற அடிப்படையிலே மாணவர்களைச் சேர்க்கலாம் என்றும்,
அதேபோல, minority என்று சொல்லப்படுகிற அந்தத் தனியார்
கல்லூரிகளில் 50 சதவிகிதம், 50 சதவிகிதம் என்று நீங்கள்
அறிவித்திருக்கிறீர்கள். நாங்கள் இங்கே இருந்து தெரிந்துகொள்ள
விரும்புவது, நீதிபதி திரு. சுப்பிரமணியம் கமிட்டியைக் கலைக்காமல்
இட ஒதுக்கீடு வழங்க முடியுமா என்பது மாண்புமிகு அமைச்சர்
அவர்களுக்குத் தெரியுமா? இது குறித்த அரசின் நிலைப்பாட்டைத்
தெளிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அந்தத் தீர்ப்பிலேயே, அவர்களோடு கலந்து
பேசி ஒரு consensus, ஒருவிதமான, ஒட்டுமொத்தமான ஒரு முடிவு
எடுத்தால், அதை அமல்படுத்தலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.
சட்டமுன்வடிவை இந்த அவையிலே கொண்டு வர இருக்கிறோம்.
அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலே, அந்தக் குழு தானாகக்
கலைந்துவிடும் என்ற விதியும் அதிலேயே சேர்க்கப்பட்டு இருக்கிறது.
ஆகவே, முதலில் இருக்கிற விதியே அதுதான், சுப்ரீம் கோர்ட்
தீர்ப்பிலேயே சொல்லியிருக்கிறது. சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டால்,
அதோடு அந்தக் குழுவினுடைய காலவரையறை முடிந்துவிடுகிறது என்று,
முதல் பாயின்டே அதில்தான் இருக்கிறது. இந்தச் சட்டம் இப்போது
இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்பட இருக்கிறது. அது
நிறைவேற்றப்பட்டுவிட்டால், அந்த இரண்டு குழுக்களும்—ராமன் குழு,
சுப்பிரமணியம் குழு ஆகிய இரண்டுமே போய்விடும். அந்தச்
சட்டத்திலே சொல்லப்பட்டிருப்பதைப்போல புதிதாக அமைப்புக்கள்
உருவாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒருமித்த கருத்து, consensus
வந்தால் நிறைவேற்றலாம்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள்.

சுப்ரீம் கோர்ட் ஆர்டர் வேறு. நான் தெரிந்துகொள்ள விரும்புவது, நீங்கள் சொல்கிற நோக்கில், நீதிபதி சுப்பிரமணியம் கமிட்டியை ஒரு ordinance கொண்டு வந்து கலைக்கப் போகிறேன் என்று சொல்லி இருக்கிறீர்கள். சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து, அதிலே... (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது குறித்த ஒரு சட்டம், சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டுவிட்டாலே—அந்தச் சட்டத்தை இப்போது கொண்டு வருகிறோம் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டாலே··· இயற்கையாகவே, அந்த இரண்டு குழுக்களும் கலைக்கப்பட்டுவிடும்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணியம் கமிட்டி கலைக்கப்படவில்லை. கலைக்கப்படாத நோக்கில் அந்த சுப்பிரமணியம் கமிட்டியினுடைய நிலையை வைத்துக்கொண்டு, மாணவர்கள் அங்கே நுழைவுத் தேர்வு முடிவு வெளியிடப்பட்டிருக்கிறது. இதை நீங்கள் நிறைவேற்றப் போகிறீர்களா? அல்லது 65 சதவிகிதம் அல்லது 35 சதவிகிதம் தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நிறைவேற்றப் போகிறீர்களா என்பது, இந்த மாணவர்கள் மத்தியிலே இருக்கிற கேள்விக்குறியாக இருக்கிறது. பெற்றோரும் அதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்த நாடும் தெரிந்துகொள்ள விரும்புகிறது.

முற்பகல் 11—20

அது மட்டுமல்ல, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற விதிகளைப் பார்க்கின்றபொழுது, மாண்புமிகு தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபொழுதுதான், மருத்துவக் கல்லூரியிலே அரசால் ஒதுக்கப்படுகின்ற இடத்திற்கு 80,000 ரூபாய் முதலிலே இருந்தது. நீதிபதி ராமன் கமிட்டியிலே தனியார் மருத்துவக் கல்லூரி அரசு ஒதுக்கீடு ரூ.1 இலட்சத்து 30 ஆயிரம் ஆக உயர்த்தப்பட்டது. ஆனால், இன்றைய ஆட்சிக் காலத்திலே உயர்த்தப்பட்டிருப்பது 4 இலட்சம் ரூபாய் என்பதை நான் இந்த நோக்கில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு
மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர்
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் இந்த அரசாங்கம் நியமித்ததைச் சொல்லவில்லை. இந்த
அரசாங்கம் 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்தான் வாங்க
வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், சம்பந்தப்பட்ட
மருத்துவக் கல்லூரியைச் சார்ந்தவர்கள் சென்னை ஐகோர்ட்டிலே
அதற்கு ஒரு தடையாணை வாங்கி, ரூ.4 இலட்சம் என்று அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் இன்றைக்கு அப்பீல்
செய்து அதைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை
எடுத்துக்கொண்டிருக்கிறோம், கமிட்டியும் எடுத்துக்கொண்டிருககிறது.
சம்பந்தப்பட்ட அந்தப் பையன்களும் அந்த வேலையைச் செய்து
கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இந்த அரசைப் பொறுத்தவரையில்,
எதை வேண்டுமானாலும் மக்களுக்காகச் சாதிக்கிற அரசு என்று
சொல்லுகிற இந்த அரசு, உயர் நீதிமன்றத்திலே இருக்கிற வழக்குகளை
விரைவுபடுத்தி உடனடியாக அவை நிறைவேற்றப்படவில்லை...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு
மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வார காலமாகத்தான் இந்த counselling நடந்துகொண்டிருக்கிறது. ஏதோ 3 மாதம், 4 மாதங்களாக நடந்து நாங்கள் எடுக்கவில்லை. கடந்த 10 தினங்களாக Private Engineering Colleges counselling நடந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே counselling எல்லாம் அரசாங்கத்தின் முறைப்படி நடந்துகொண்டிருக்கிறது. இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவசரமாக, வேகமாக நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஒன்றைச் சொல்லி முடிக்கின்ற வரையிலும்
அமைச்சர் அவர்கள் காத்திருக்க வேண்டும். நான் இதைச்
சொல்வதற்குக் காரணம், ஒன்றைச் சொல்லி முடிப்பதற்குள்ளேயே
அமைச்சர் எழுந்து விட்டார். நான் சொல்வது, 11 ஆம் தேதியிலிருந்து
நுழைவுத் தேர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மக்களிடத்திலேயும்,
பெற்றோரிடத்திலேயும், மாணவர்களிடத்திலேயும் சீட் கிடைக்குமா என்ற
அச்சம் இருக்கிறது. இந்த அச்சத்தைப் போக்குவதற்கு, நீங்கள் 110-வது

விதியில் அன்றைக்கு அறிக்கை படித்தீர்களே, அதைப்போலப் படித்திருக்கலாம். நாங்கள் விரைந்து இந்த வழக்குகளை வாதாடி, வெற்றி பெறப் போகிறோம் என்று சொல்லியிருக்கலாம். ஆனால் அதைச் சொல்லவில்லை. ஆகவே, மக்களிடத்திலே இந்த அச்சத்தை வெளிப்படுத்துவதற்கு சட்டமன்றத்தை விட்டால் வேறு வழி எங்கேயிருக்கிறது? உங்களிடத்திலா நாங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகளிலேயும், மருத்துவக் கல்லூரிகளிலேயும் counselling நடத்தப்பட்டு, அரசு இட ஒதுக்கீடுகள் 65 சதவிகிதம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தனியார் மருத்துவக் கல்லூரிகள், இன்னும் இருக்கிற கல்லூரிகள், மொத்தமே 3 கல்லூரிகள்தான். அவற்றிலே இருக்கிற இடங்களே மொத்தமே கிட்டத்தட்ட 225 இடங்கள்தான் இருக்கின்றன—225 இடங்கள்தான் இருக்கின்றன. அந்த 225 இடங்களிலேயும் 65 சதவிகிதம் அரசு ஒதுக்கீட்டிலிருந்து counselling கொடுத்திருக்கிறார்கள். அதிலே எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆகவே, மாணவர்களுக்கு இப்பொழுது எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் நிதியைப் பொறுத்தவரையில், அவர்களே உயர் நீதிமன்றத்திற்குச் சென்று ரூ.4 இலட்சம் கட்ட வேண்டுமென்று ஒரு stay வாங்கியிருக்கிறார்கள். வாங்கியதுகூட ஒரு வாரம்தான் ஆகிறது. அதை முதலில் வாங்கவில்லை. Stay வாங்கியதற்குப் பிறகு, இந்த 3 நாள் விடுப்பு வந்திருக்கின்றது. அதையும்கூட, இந்த ரூ.4 இலட்சம் வாங்கக் கூடாது என்று அரசுத் தரப்பிலே மேல்முறையீடு செய்து, அதையும் குறைப்பதற்கான எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்;

இந்த அரசைப் பொறுத்தவரையில், மாணவர்களுக்கு நிதியைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான், அரசுக் கல்லூரிகளிலே கடந்த ஆட்சியிலே 12,550 ரூபாய் என்று இருந்ததை, 5,000 ரூபாயைக் குறைத்து 7,550 ரூபாயாக ஆக்கியிருக்கிற அரசும் இந்த அரசுதான். ஆகவே, மாணவர்களுடைய நலனிலே அக்கறையுள்ள இந்த அரசு, நிச்சயமாக அவர்களுடைய கட்டணத்தைக் குறைப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ரூ.597 கோடி இருக்க வேண்டுமே, எப்படி ரூ.482 கோடி இருக்கிறது என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். அந்த ரூ.597 கோடிதான் sanction. அதிலே ரூ.115 கோடி உலக வங்கியிலிருந்து எடுத்து தமிழ்நாட்டிலே சுனாமி வந்த நேரத்தில் அந்த funds—ஐ divert பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் divert பண்ணியிருக்கிற நேரத்திலே வேலை முடிகிற கடைசி வருடத்தில் இந்தப் பணம் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொல்லித்தான் அதை divert பண்ணியிருக்கிறார்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலே அது இல்லை. ஆகவேதான் நான் கேட்டேன். கொள்கை விளக்கக் குறிப்பிலே அது இருந்திருந்தால், எனக்குக் கவலையில்லை. சுனாமிக்காக 115 கோடி ரூபாய் நாங்கள் செலவு செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் இரகசியமாக நடந்துகொள்கிற வேலை இதெல்லாம். இதைச் சொல்ல வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கவே கூடாது. ஏனென்றால், உலக வங்கி சொல்கிற விதியை மீறி divert பண்ணுவது என்பதே, சொல்லக்கூடாத விஷயங்கள். அதைப் போய் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே சொல்ல வேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள், அது உங்கள் அரசாங்கம் செய்த வேலை. ஒதுக்கப்பட்ட நிதி சுனாமிக்காக ஒதுக்கப்பட்டது; இதையெல்லாம் கொஞ்சம், கொஞ்சம் அப்போதைக்கப்போது ஒளிவுமறைவாகத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். செய்த தொகையை கரெக்டாகத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கொறடா அவர்கள், அமைச்சர் எவ்வளவு உதவி பண்ணுகிறார்கள் பாருங்கள் உங்களுக்கு?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அதையெல்லாம் செய்கிறார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலே தரப்படவில்லை என்று சொல்லப்படுவதற்குக் காரணம், இது ஒரு secrecy என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், எந்த அரசாங்கம் செய்திருந்தாலும் அதைப் பற்றிச் சொல்வதிலே எங்களுக்கு ஆட்சேபம் கிடையாது. எங்களுக்குத் தெரிந்துகொள்வதற்காகத்தான் இந்த book—ஐயும் படித்தோம், அதையும்

படித்தோம். கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கின்ற குறிப்புகளை வைத்து நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். அமைச்சருக்குத் தெரியலாம். என்ன நடைபெற்றிருக்கிறது என்று அதிகாரிகள் சொல்லியிருக்கலாம். இதற்காக இந்த நிதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கக்கூடும். எங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் இதைக் கேட்டோம். குறைவான தொகை அல்ல. ரூ.116 கோடி என்பது சாதாரணமானது அல்ல. அது இங்கே எந்த வகையிலே செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்காக, இந்த பதில் உரையிலே இருந்து நாங்கள் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, நீங்கள் சொன்னீர்கள், 12 ஆயிரத்தை நாங்கள் குறைத்தோம், நீங்கள் ஏற்றினீர்கள் என்றெல்லாம் சொன்னீர்கள். அப்படி 50 சதவிகித இட ஒதுக்கீட்டிலிருந்து 65 சதவிகிதமாக நீங்கள் உயர்த்தியதற்குப் பிறகு, அவர்களுக்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் என்று சொன்னால், 2.75 கோடி ரூபாய்தான் அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால் 65 சதவிகிதம் நீங்கள் இடத்தை ஒதுக்கினாலுங்கூட—அவர்கள் 4 இலட்சம் ரூபாய் பெற்றார்களேயானால்—நீங்கள்தான் வழக்கு மன்றத்திற்குச் செல்லப் போகிறீர்கள், அது வேறு விஷயம். 8.48 கோடி ரூபாய் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. ஆகவேதான் விரைந்து இந்தப் பணிகளை ஆற்றவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். நீங்கள் செய்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். விரைந்து செய்வீர்கள் என்ற நம்பிக்கை மற்றவர்களுக்கு இருக்கிறதோ, இல்லையோ அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. செய்து தீர வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு, நாங்கள் செய்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. எங்களை மாற்றிச் சொல்ல முடியாமல்தான் அவர் திணறிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முழுவதும் உங்களை நம்புகிறார்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு அமைச்சர் மாற்றிக்கொண்டாலும் மாற்றிக்கொள்ளலாம், நாங்கள் என்றைக்கும் மாற்றிக்கொள்வதில்லை. ஒரே இடத்திலே இருக்கிறோம். ஆகவே, நாங்கள் மாற்றிக்கொள்கின்றவர்கள் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியலுக்கு உள்ளே போக விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வேண்டாம், வேண்டாம். இதை lighter sense—ல் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: Censor எது, எதற்கு என்று இருக்கிறது. சில வாய்ப்புகள் censor—எதை, எதை censor செய்ய வேண்டும் என்பது பேரவைத் துணைத் தலைவருக்குத் தெரியும். எல்லாவற்றையும் censor செய்துவிட முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Censor அல்ல. ஒரு நகைச்சுவைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னேன், lighter sense.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோலத்தான் நாங்கள் பார்த்தோம். நீங்கள் பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டு வருகிறபோது, தேனி மருத்துவக் கல்லூரியைப் பற்றி இன்றைக்குச் சொல்லியிருக்கிறீர்கள். தேனியில் இருக்கிற மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வருவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 16—12—2004—ல் Medical Council of India—விற்குக் கடிதம் எழுதி, அதற்கான கடிதங்களைப் பெற்று அனுமதியும் பெற்றிருக்கிறார். முழுக்க, முழுக்க இந்த வெற்றிக்கு, தேனியில் உருவாக்கப்பட்டிருக்கிற மருத்துவக் கல்லூரிக்கு முழுப் புகழும் மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 16 நிமிடங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: குறுக்கீடுகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்குக் குறுக்கீடுகள் அதிகம் இல்லை. நீங்கள் பேசினால் அமைச்சர்கள் குறுக்கிடமாட்டார்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: நன்றி, வணக்கம் சொல்லிவிட்டுச் செல்வதைவிட—எதிர்க்கட்சிக்கே இந்த கதி என்று சொன்னால்—அதற்குத்தான் அண்ணா சொன்னதை நான் சொன்னேன். மாண்புமிகு துணைத் தலைவர் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, எலிகளைப்போல குதறிவிடக்கூடாது என்பதற்காகத்தான், அண்ணா அவர்கள் சொன்னதைத்தான் நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அண்ணாவின் ஆட்சியா நடத்திக்கொண்டிருக்கிறீர்கள்? அண்ணாவின் தம்பி என்கிறீர்கள். ஆகவே கொஞ்ச நேரம் எங்களுக்கு...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதற்கு யாராவது நன்றி சொல்லலாம். உரையை சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முழுக்க, முழுக்க இந்த முயற்சிக்கும், வெற்றிக்கும், புகழுக்கும் காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வந்தது அவர்கள்தான். அதிலே ஒன்றும் மாறுபட்ட கருத்து யாருக்கும் கிடையாது. ஆனால், அந்த மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி பெறுவதற்கு டெல்லியில் மத்திய அரசாங்கத்தைப் பார்ப்பதற்குக்கூட அவர்கள் தயாராக இல்லை. ஆகவேதான் அது நின்று போய் இருந்தது. இந்த அரசாங்கம் வந்தவுடன் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் எங்களிடத்திலே அறிவுறுத்திச் சொல்லியதன் விளைவாக நாங்கள் இங்கே இருந்து சென்று, நம்முடைய மத்திய சுகாதாரத் துறை அமைச்சரைப் பார்த்து, நாங்கள் அனுமதி வாங்கி வந்திருக்கிறோம். இந்தப் பணியை அவர்கள் முதலிலேயே செய்திருந்தால், இந்தப் பெருமைகூட அவர்களுக்குக் கிடைத்திருக்கலாம். இந்தப் பெருமையை எங்களுக்கு விட்டுவிட்டு, அவர்கள் கட்டடம் கட்டியதோடு போய்விட்டார்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நானே பேசிக்கொள்கிறேன், கவலைப்படத் தேவையில்லை. இங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இது எந்த அளவுக்குச் சென்றிருக்கிறது என்பது தெரியும். அங்கே இருக்கிற மக்கள் நல்வாழ்வுத் துறை

அமைச்சர், மத்தியில் இருக்கின்றவர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர். எவ்வளவு இதற்கு இடையூறு செய்தார் என்பதும் தெரியும். நம்முடைய அமைச்சர் சென்றதும், அம்மா அவர்கள் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியதும், அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்திலே நாங்கள் வழக்குத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகுதான் அதை ஆய்வு செய்வதற்கே வந்தார்கள் என்பதும் இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை.

அது மட்டுமல்ல, இங்கே இருக்கிற ஒரு மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையிலும், அகில இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தை இப்போது சேலத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். அது முதன்முதலில் இங்கே திருச்சியிலே கொண்டு வரப்பட்டது. அதற்காக நிதிகள் ஒதுக்கினார்கள். என்ன காரணமோ எனக்குத் தெரியவில்லை. சேலத்திலே கொண்டு வருவதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால் ஓர் அமைச்சர், இந்தக் கூட்டணி மந்திரிசபையிலே இருக்கிற ஓர் அமைச்சர் ராஜா என்பவர் அன்றைக்கு மத்தியிலே மக்கள் நல்வாழ்வுத் துறை இணை அமைச்சராக இருந்தார். அவர் இருக்கிறபோது, திருச்சியை மையமாக வைத்து அகில இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தின் ஒரு மையத்தை அங்கே கொண்டு வருகிறபோது, இப்போது அமைச்சராக இருப்பவர் அதை மாற்றியிருக்கிறார். மீண்டும் ஓர் அமைச்சர் மத்தியிலே மாறினால், அது சேலத்திலேயாவது இருக்குமா, இல்லையா என்ற கேள்வியை நான் இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே... (குறுக்கீடு)

முற்பகல் 11—30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில் 6 மாநிலங்களில் Super–speciality மருத்துவமனை, ஒரு மாநிலத்திற்கு ஒன்று என்று 6 மாநிலங்களிலே ஆரம்பிப்பது என்று மத்திய அரசாங்கம் முடிவு எடுத்தது. அப்போது சுகாதாரத் துறை இணை அமைச்சராக இருந்தவர், இன்றைக்கும் அமைச்சராக மத்தியிலே இருக்கின்ற திரு. ராஜா அவர்கள், எந்தெந்த மாநிலங்களில் அமைக்கப் போகிறீர்கள் என்று கேட்டபோது, திருச்சியிலும் வரும் என்று அவர்கள் கேள்விக்குப் பதில் தந்தார்கள். பிறகு, தமிழகத்திற்கு வந்தபோது பத்திரிகையாளர்கள் கேட்டதற்கும்,

திருச்சிக்கு Super speciality மருத்துவமனை, 6 மருத்துவமனைகளிலே ஒன்று வரும் என்ற ஒரு பதிலைத் தந்தார்கள். அதற்குப் பின்னாலே, அந்த ஆட்சி மாற்றத்திற்குப் பின்னாலே, மீண்டும் மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக டாக்டர் அன்புமணி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, மற்ற அந்த 5 மாநிலங்களுக்கும்கூட ஒதுக்கவில்லை. அதோடு நின்று போய்விட்டது அப்படியே. இவர் பொறுப்பேற்ற பிறகு, எந்தெந்த மாநிலங்களிலே அந்த மருத்துவமனையைத் தொடங்கலாம் என்று ஓர் ஆய்வு நடத்தி, ஆய்வு அறிக்கை பெற்று, அதிலே சேலத்திலே தொடங்கலாம் என்று அமைச்சரவைக் கூட்டத்திலே முடிவு செய்யப்பட்டு, *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த அடிப்படையிலேயே சேலத்திலே தொடங்கப்படுகிறதே தவிர, திருச்சியிலே இருந்ததை சேலத்திற்கு ஒன்றும் பறித்து எடுத்துக்கொண்டு வந்துவிடவில்லை. சேலத்திலே உறுதியாக ஒரு Super-speciality மருத்துவமனை உண்டு. *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி அனுமதியைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்த மருத்துவக் கல்லூரி அனுமதிக்காக முன்னாள் அமைச்சர் அவர்கள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த திரு. தளவாய் சுந்தரம் அவர்கள் இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரிடத்தில், மத்திய சுகாதாரத் துறை அமைச்சரை நான் சென்று பார்க்க வேண்டுமென்று ஒரு கோப்பை எழுதி ஒரு மாத காலம் அந்தக் கோப்பு நிலுவையில் இருந்தது. இது ஒன்று. இரண்டாவது, அதற்கான ஏற்பாட்டை, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தவன் நான். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மாநில அமைச்சர் அவர்கள், மத்திய அமைச்சரைச் சந்தித்தார்கள். அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் குழு வந்து, அந்தக் கல்லூரிகளை ஆய்வு செய்தது. அப்படி ஆய்வு செய்கின்றபோது, நம்முடைய தமிழகத்தினுடைய அரசு ஒரு கல்லூரியிலேயிருந்து இன்னொரு கல்லூரிக்குப் பேருந்துகளில் மருத்துவர்களைக் கொண்டு போய் அங்கே நிறுத்தி, ஒரு நாடகத்தை நடத்தியது. அது பல்வேறு பத்திரிகைகளிலேயும் புகைப்படத்தோடு ஆதாரமாக நிரூபிக்கப்பட்ட காரணத்தினால், மத்தியிலேயிருந்து வந்த அந்தக் குழு அதற்கான அனுமதியை மறுத்தது. (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு

(குறுக்கீடுகள்) ஒரேயொரு நிமிஷம். இதுவெல்லாம் உண்மையான செய்தி. அதற்குப் பிறகு, *(குறுக்கீடு)* அதற்குப் பிறகு மறுபடியும் ஒரு குழுவை... *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை, போதும். போதும். நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* அவர் பேசுகிறபோது, இதை அவருடைய கட்சி பேசட்டும். அது பற்றி எனக்குக் கவலை இல்லை. அவருக்கு வாய்ப்பு இருக்கிறது. *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை, தெரியும். திரு. வேல்முருகன், நீங்கள் உட்காருங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அவருடைய கட்சி பேசுகிறபோது பேசட்டும். நான் ஒன்றே ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். தேனி மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையிலே அதற்கு 100 கோடி ரூபாயை ஒதுக்கி, கட்டமைப்பு வசதி, அனைத்து வசதிகளையும் செய்து முடித்ததற்குப் பிறகு, அம்மா அவர்கள் ஆண்டிப்பட்டியிலே போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஒரு முதலமைச்சராக இருக்கிறபோது அதைக் கொண்டு வரக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் காலதாமதத்தை நீட்டித்தார்களே தவிர, அமைச்சர் தளவாய் சுந்தரம் அவர்கள் அன்புமணியைச் சந்தித்தார். இரண்டு நாட்கள் அங்கே உரையாடினார்கள். இருந்தாலும், வேண்டுமென்றே ஒரு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சபைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். *(குறுக்கீடு)* செய்தி இருக்கிறது. அதைத்தான் இன்றைக்குத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். அமைச்சரவைக் கூட்டத்திலே முடிவு செய்யப்பட்டது என்று சொன்னார்கள். திருச்சியிலே வரப் போகிறது என்றுதான் அங்கே முன்னாள் அமைச்சர், மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை இணை அமைச்சர் திரு. ராஜா அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். அதற்கு வேண்டிய நிதியும் ஒதுக்கியாகிவிட்டது. ஆய்வு முடிந்தது. ஆய்வு முடிந்ததற்குப் பிறகு அங்கேயிருந்து ஏன் மாற்றப்பட்டது என்பதுதான் நான் தெரிந்துகொள்ள வேண்டிய பதில்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேபினெட்டிலே எடுத்த முடிவை நாம் ஒன்றும் விமர்சனம் செய்ய முடியாது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, தவறான ஒரு தகவலை அவையிலே பதியக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அப்போது நிதியெல்லாம் ஒதுக்கப்படவில்லை. இப்போதுதான் அந்த 6 இடங்கள் எது, எது என்று முடிவு செய்யப்பட்டு, இப்போதுதான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பணியிடம் காலியாகவுள்ளது. ஏன் என்றால், அப்பல்கலைக்கழகத்திலே துணைவேந்தராக இருந்தவர் தனது பதவிக் காலம் முடிவதற்கு முன்பே ராஜினாமாச் செய்துவிட்டார். ஏனென்றால், அவர் எங்களது ஆட்சிக் காலத்திலே துணைவேந்தராக நியமிக்கப்பட்டவர் என்பதுதான். ஆனால் அப்படிப் பதவிக் காலம் முடிவதற்குமுன் பதவியை ராஜினாமாச் செய்ததற்குப் பிறகு, இந்த இடத்தில் வேறு ஒருவரை இதுநாள் வரையிலும் நியமிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த V.C., அவராகவே ராஜினாமாச் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள்; ஒன்று. ராஜினாமாச் செய்து, 10, 20 தினங்கள்தான் ஆகின்றன. V.C. போடுவதற்கு என்னென்ன நடைமுறைகள் என்று நன்றாகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அந்த முறைப்படி அது நடக்கும் இரண்டாவது, நாங்கள் இப்போது ஒரு 10 நாள் வேலை செய்யாததற்கே குறைப்பட்டுக்கொள்கிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய காலத்தில் போன 5 ஆண்டுகள், 6 Dean-கள் இன்னும் போடப்படவில்லை. அதற்கே நாங்கள் இப்பொழுதுதான் panel ready செய்துகொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கெட்டிக்காரத்தனமாக இங்கே ஒரு பதிலைச் சொல்லிவிட்டார் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார். இருந்தாலுங்கூட, நான் கேட்கிறேன், D.P.H.–ஐ 2½ மாதங்கள் ஆகியும் ஏன் போடவில்லை? நான் கேட்கிறேன். (குறுக்கீடு) 2½ மாதங்கள் ஆகியும்கூட, போடவில்லை.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: இல்லை. இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது எல்லாம் நீங்கள் வைத்துவிட்டுப் போன வேலை. இதையெல்லாம் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். நீங்கள் வைத்துவிட்டுப் போன வேலைகளை நாங்கள் இந்த 2, 3 மாத காலத்தில் செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் அந்த vacancy. 2½ மாத காலம் ஆகிறது. Health Department–ல் இருக்கிற D.P.H.–ஐப் போட முடியவில்லை உங்களால்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் அமைச்சராக இருந்தவர். இது P & A.R. Department–க்குப் போய், இதுபோன்ற உயர் பதவிகளுக்கெல்லாம் சுத்தி வந்துதான் file வரும். கடந்த கால ஆட்சியிலேயே கிட்டத்தட்ட 20, 30 கல்லூரி முதல்வர்களைக்கூட போடாமல் இருந்தது. P & A.R.–க்கே போகவில்லை. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் அந்தக் காலியிடங்களுக்கெல்லாம்கூட மறுபடியும் P & A.R.–ல் report கேட்டு, மறுபடியும் துறையிலிருந்து வாங்கி அதைச் செய்திருக்கிறோம். அதுவும் Vice–Chancellor–களைப் பொறுத்தவரை ஒரு Select Committee போட்டு, அவர்கள் பேப்பர் போட்டு அதைச் செய்வார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இதற்கெல்லாம், எப்படிப் பார்த்தாலும் 2 மாதங்கள், 3 மாதங்கள் process. எந்தக் காலத்திலும் அப்படித்தான் நடக்கும். அதெல்லாம் அமைச்சராக இருந்த உங்களுக்குத் தெரியும். அதனாலே, இந்த அரசைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் இருந்த காலியிடங்களையும், மற்ற இதுபோன்ற பதவிகளையும் நிரப்புவதற்கென — திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் ரொம்ப காலமாக V.C.–யே இல்லாமல் இருந்தது. இந்த அரசு வந்த பிறகுதான் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் V.C. போட்டு இருக்கிறோம். நீங்கள்

விட்டுவிட்டுச் சென்ற, செய்ய முடியாத பணிகளையெல்லாம்கூட முறையோடு நிச்சயமாக இந்த அரசு செய்துகொண்டு இருக்கிறது. செய்யும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am on a point of order.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்னால் ஒரு winch மாதிரி ஓட்டிக்கொண்டிருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தைப் பற்றிச் சொல்கிறார்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: Rope car போடச் சொல்லி, Rope car கூட இல்லை... (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் பேசுகிறபோது, இந்த 2½ மாதத்திலே இங்கே போடவில்லை என்று சொன்னார்கள். கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு 3 ஆண்டுகளாக Registrar-ஐ போடாமல் காலம் கடத்தியவர்கள் இவர்கள் என்று உணர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி. மாண்புமிகு உறுப்பினர்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இது ஒரு பெரிய—நான் பெயர் சொல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 25 நிமிடங்களுக்கு மேல் பேசிவிட்டீர்கள். சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: எங்களுக்குத் தெரியும், Committee போடுவது. Committee-யினுடைய recommendations எல்லாம். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு Vice Chancellor போடவில்லை என்று சொன்னார்கள். இங்கேயிருந்து, இந்த அரசால் பரிந்துரை செய்யப்பட்டது. எங்கே நின்றது என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். ஆளுநர் வரையிலும் சென்றது. எங்கே நின்றிருக்கிறது

என்பதும் நாட்டு மக்களுக்குத் தெரியும். ஆகவே, அதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணைவேந்தர் நியமனங்களில் அரசு பரிந்துரை செய்யவே முடியாது. Select Committee என்று போடுவோம்; அதற்குத்தான் அரசு ஒருவரைச் சொல்லும். அந்த Select Committee, select பண்ணிச் சொல்கிறவரை கவர்னர் நியமிப்பாரே தவிர, Select Committee தான் செய்ய வேண்டுமே தவிர, அரசு, இவர்தான் V.C.-யாக இருக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யவே முடியாது. அதனால், நீங்கள் பரிந்துரை செய்தேன் என்று சொல்வதே தப்பு. Select Committee-க்கு ஒருவரைச் சொல்லலாம். Select Committee-க்குத்தான் அரசு சொல்ல வேண்டும். (குறுக்கீடு) Sorry, Search Committee தான் செய்ய முடியுமே தவிர, V.C.-க்குப் பரிந்துரை செய்ய முடியாது. Search Committee-க்குக்கூட நியமிப்பதற்கான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில்தான், இந்த அரசு வந்ததற்குப் பிறகு அதையெல்லாம் முடித்து, இன்று Vice-Chancellor—துணை வேந்தர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: Search Committee ஒப்புதல் அளிக்காத காரணத்தினால் நின்றிருக்கிறது என்பதை நாங்கள் சுட்டிக்காட்டினோம். நீங்களும் அதைத்தான் சொல்கிறீர்கள்.

இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு 15 நாட்களுக்கு முன்னாலே சிக்கன்குன்யா நோயைப் பற்றிச் சொல்கிறபோது அவர் சொன்னார். சிக்கன்குன்யா நோயைப் பற்றி...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சிக்குன்குன்யா.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அதெல்லாம் தெரியும். அதைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இது கர்நாடக மாநிலம் மற்றும் ஆந்திராவில் இருந்து வந்திருக்கிறது என்று சொன்னார். மனசாட்சியுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இங்கே அமர்ந்துகொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றை அமைச்சர்மூலமாக இந்த மன்றத்தில் தெரிந்துகொள்ள விரும்புவது, இலட்சக்கணக்கான பேர் இதிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கே சில சட்டமன்ற உறுப்பினர்கள்கூட என்னிடத்திலே சொல்கிறபோது சொன்னார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு joint pain என்று சொல்லப்படுகிற, கை, கால் மூட்டு வலிகள் ஏற்படுகிறபோது,

அதனாலே ஏறத்தாழ 15 நாட்கள் அவர்கள் எந்தப் பணிகளும் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல, இதனால் எத்தனையோ பேர் இறந்திருக்கிறார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களைச் சொல்கிறபோது, யாருமே இறக்கவில்லை என்று ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லியிருக்கிறார். நேற்றையதினம் மாலைப் பத்திரிகையிலே படிக்கிறபோதுகூட, இரண்டு பேர் இந்தக் காய்ச்சலின் அடிப்படையிலே இறந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை இதுவரை இவர்களால் ஆய்வு செய்ய முடியவில்லை. என்ன, இது எதனால் வருகிறது இந்த வைரஸ் fever என்பதை இந்தத் துறை தெரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும், பத்திரிகையிலே செய்திகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வந்துகொண்டிருக்கின்றன. அதையும் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—40

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் சொல்லிய அந்தப் பத்திரிகைச் செய்தியைப் பார்த்தவுடனேயே--நாங்கள் பார்ப்பதற்கு முன்பாக எங்களுடைய தலைவர் பார்த்து, உடனடியாக அந்த மருத்துவர் டீம், போலீஸ் அதிகாரிகள், சென்னை மாநகராட்சி அதிகாரிகள் எல்லாம் நேற்றையதினமே போய் ஆய்வு செய்து, அவர்கள் எந்தெந்தத் தனியார் மருத்துவமனையிலே எங்கே சேர்ந்திருக்கிறார்கள் என்பதையும் பார்த்து, அவர்களுடைய case sheet, நோயினுடைய தன்மையை எல்லாம் பார்த்து, எங்கே இறந்தார்கள் என்றெல்லாம் பார்த்து, அதை முடிவு செய்திருக்கிறோம். அதிலே சிக்குன்குன்யா நோய் இல்லை. அதை நான் மட்டும் சொல்லவில்லை. இந்த அரசாங்கம் மக்களைக் காப்பாற்றுவதற்குத்தான் இருக்கிறது. நாங்கள் ஒன்றும் மக்களைப் பலி கொடுப்பதற்காக இல்லை. நாங்கள் நடத்திய (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, ஏதோ எங்களுக்கு வேண்டாத ஆளைப் பூராவும் சாக வைத்துக்கொண்டா இருக்கிறோம்? இல்லை. யாருக்கு எந்த வியாதி வந்தாலும், அவர்களைப் பாதுகாத்து, அவர்களுடைய உடலில் உள்ள நோயைத் தீர்க்க வேண்டிய கடமை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. நீங்களும் சட்டமன்ற உறுப்பினர்கள், பொறுப்பானவர்கள். அதைச் சரியாக ஆய்வு செய்து, இந்த அரசாங்கத்திற்குச் சொல்வீர்கள் என்று சொன்னால், எதிர் நிலையிலே இருந்து வந்தால்கூட, அதைக் கேட்டு

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய தலைவர்தான் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, நீங்கள் சொல்வதிலே எங்களுக்கு வருத்தம் இல்லை. நீங்கள் சரியான முறையிலே, சரியான செய்திகளைச் சொல்வீர்கள் என்று சொன்னால், இது மட்டுமல்ல, எந்த நல்ல காரியங்களை நீங்கள் சொன்னாலும், பொது மக்களுக்கு உபயோகமான காரியங்களைச் சொன்னால், நாங்கள் சென்று செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். இந்த சிக்குன்குன்யாவைப் பொறுத்த அளவிற்கு, இறப்பு இல்லை என்று நான் மட்டும் சொல்லவில்லை; நான்கு மாநில சுகாதார அமைச்சர்களுடைய ஆய்வுக் கூட்டத்திலே அதுதான் முடிவு செய்யப்பட்டது. எனவே, அது இல்லை என்பதை நாங்கள் இன்றைக்கு முடிவாகச் சொல்கிறோம்.

இன்னொன்று, இது 1964—லிலேயே நம்முடைய சென்னையிலே இருந்திருக்கிறது. 1964 ஆம் ஆண்டிலே சென்னையிலே இருந்திருக்கிறது. அதேபோல, மகாராஷ்டிரா மாநிலத்திலே இருந்து வந்திருக்கிறது. ஒரு 40, 50 ஆண்டு காலம் கழித்து இந்த நோய் மறுபடியும் வந்திருக்கிறது. அன்றைக்கே பார்ப்போம் என்று சொன்னால், அதிலே இறப்பு இல்லை என்றுதான் இங்கே குறிப்பு இருக்கிறது. நம்முடைய உலக சுகாதார நிறுவனம் ஒவ்வொரு நோய் வந்தவுடனேயே, அதற்குத் தடுப்பு ஊசிகளைத் தயாரிக்கிற பணியை அந்த நிறுவனம் செய்கிறது. இதிலே இறப்பு இல்லை என்ற காரணத்தினால்தான், அந்தக் காலத்திலேயே இதற்காகத் தனியாக ஒரு ஊசியே தயாரிக்காமல் விட்டிருக்கிறார்கள். அந்தக் கோப்பையெல்லாம் நாங்கள் எடுத்துப் பார்த்து, என்னென்ன மருந்துகள் கொடுக்க வேண்டும் என்று, அதையும் நாங்கள் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறோம். இப்பொழுது mass programme, எல்லா இடங்களிலும் இதற்கு ஒரே வழி, கொசுவை ஒழிப்பது ஒன்றுதான். வேறு வழியே இல்லை. தடுப்பு ஊசி போடுவதற்கு இதற்கு வேலை இல்லை. கொசுவை ஒழிக்கிற பணியிலே இந்த அரசாங்கம் இறங்கும். இறங்கி, பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். அதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களும் அதைப் பொது மக்கள் மத்தியிலே சொல்லி, இந்தப் பணிக்கு அவர்களும் உதவியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இருங்கள், இருங்கள். கொசுவை ஒழிப்பதற்கு ஏதாவது யோசனை இருக்கிறதா? (சிரிப்பு)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொசுவை ஒழிப்பது என்பது, சட்டமன்றத்திற்குள்ளே இருக்கிறதா என்பதை நீங்கள்தான் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும். கொசுவை ஒழிக்கின்ற வேலை உங்கள் கையிலேதான் இருக்கிறது. எங்கள் கையிலே இல்லை. வெளியே இருந்தால் நாங்கள் அதைப் பற்றிப் பேசலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதைப் பொறுத்தவரையிலும் எவ்வளவு பேர் இறந்திருக்கிறார்கள் என்ற பட்டியல் உங்களுக்குத் தெரியுமா? இல்லை என்று நான்கு மாநில சுகாதார அமைச்சர்களும் முடிவு செய்திருக்கிறார்கள், இதனால் இறக்கவில்லை என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், நான் உங்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது, இதை எப்படி நான் உங்களிடத்திலே ஊர்ஜிதம் செய்ய முடியும்? ஒன்று, postmortem செய்ய வேண்டும், அல்லது F.I.R. போட்டு, இதனால் இறந்திருக்கிறார்கள் என்ற பட்டியல் வந்தால் மட்டும்தான், அதை வைத்துக்கொண்டு எங்களால் பேச முடியும். பத்திரிகையிலே வருகிற செய்தி அனைத்தும் தவறான செய்தி என்பதைப்போல அமைச்சர் சித்தரித்திருக்கிறார். அதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: நன்றி நீங்கள் சொல்ல வேண்டியதுதானே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை, நீங்கள்தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் 30 நிமிடம் கொடுத்ததற்கு நீங்கள் எனக்கு நன்றி சொல்ல வேண்டும்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு அமைச்சர் இங்கே பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். அது அவருடைய கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே இருக்கிறது. 9,000 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று சொன்னார்கள். இந்த மருத்துவ முகாம்கள் 9,000–ஐ நீங்கள் எப்படி நடத்தப் போகிறீர்கள்? யாரை வைத்து இவற்றை நடத்தப் போகிறீர்கள்? இப்பொழுதே பார்க்கிறபோது உங்களுக்குத் தெரியும். Primary health centre–லே பார்த்தால், அங்கே மருத்துவரே இல்லை. டாக்டர்கள் கிடையாது. அங்கே பார்க்கிறபோது அவர்களை வைத்துத்தான் இந்த மருத்துவ முகாம் நீங்கள் நடத்தப் போகிறீர்கள். தனியாரை வைத்தா நடத்தப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்களுக்கு நான் பணிவன்போடு சொல்லிக்கொள்வதெல்லாம், போன ஆட்சிக் காலத்திலேயே இந்தத் திட்டத்தை நாங்கள் செய்தோம், செய்திருக்கிறோம். அதே திட்டத்தை இந்த ஆண்டு நாங்கள் செய்யப் போகிறோம். நீங்கள் உங்களுடைய காலத்திலே பணி நியமனத் தடைச் சட்டத்தின்மூலமாக மருத்துவரை நியமிக்கவில்லை. நாங்கள் இன்றைக்கு நியமித்துக்கொண்டிருக்கிறோம். மீதி ஆட்கள் குறித்து என்னுடைய பதிலுரையில் சொல்ல இருக்கிறேன். எல்லா post–களையும், மருத்துவத் தொழில்நுட்பங்களை எல்லாம் நிறைவு செய்யப் போகிறோம். இந்த ஆட்சியிலே ஒரு குறைவில்லாத துறையாக இந்தத் துறையை ஆக்கவிருக்கிறோம். ஆகவே பணிகள் சிறப்பாக நடக்கும்.

முற்பகல் 11–45

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கிறபொழுது 2,500 மருத்துவர்களைப் பணியிலே அமர்த்தினார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: இல்லை, இல்லை. நீங்கள் ஒப்பந்த அடிப்படையிலே, குறைந்த சம்பளத்திற்கு நியமித்திருக்கிறீர்கள். இப்பொழுது இந்த அரசாங்கம், நாங்கள் வந்த பிறகு ஆயிரக்கணக்கிலே மருத்துவர்களை நியமித்திருக்கிறோம். மீதி இருக்கிற vacancy–களையும் நாங்கள் fillup செய்யப் போகிறோம். நீங்கள் போட்ட ஆட்களுக்கும் சம்பளத்தைக் கூட்டுவதை அறிவிப்பிலே அறிவிக்க இருக்கிறேன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, ஒப்பந்த அடிப்படையிலே அப்போது நியமித்திருக்கிறீர்கள் என்று சொல்லுகிறார், அதை ஏற்றுக்கொள்கிறார். ஒருவருமே நியமிக்கப்படவில்லை என்று முதலிலே சொன்னார், பிறகு ஒப்பந்த அடிப்படையிலே இந்தப் பணிகளுக்கு நியமித்திருக்கிறீர்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறார். ஆகவே, அதற்கு நன்றி.

அது மட்டுமல்ல, நீங்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திலே இருக்கிற மருத்துவர்களை வைத்துத்தான் இந்த 9 ஆயிரம் முகாம்களை நடத்தப்

போகிறீர்கள். வேறு யாரை வைத்து நடத்தப் போகிறீர்கள்? வேறு யார் இருக்கிறார்கள்? அவர்களை வைத்து...

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: இல்லை, இல்லை. அங்கே team work. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு team work. அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற தலைமை மருத்துவமனை, வட்டார மருத்துவமனை, அங்கே இருக்கிற specialists எல்லோரையும் வைத்து team work-ஆகத்தான் இதைச் செய்யப் போகிறோமேயொழிய, P.H.C. மட்டுமல்ல, team work-ஆக அந்தப் பணியை ஏற்கெனவே போன ஆட்சியில், எங்களுடைய ஆட்சிக் காலத்திலே செய்திருக்கிறோம். அதே pattern–லே இன்றைக்கு இன்னும் அதைவிட அதிகப்படியாகச் செய்யக்கூடிய வாய்ப்பை இதில் செய்திருக்கிறோம்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைச் செய்கிறபோதே--போன ஆண்டிலே அந்தக் குறைபாடுகள் இருந்திருக்கின்றன. அங்கே, ஆரம்ப சுகாதார நிலையத்திலே இருக்கிற அந்த மருத்துவர்களை வைத்து அந்த முகாம்களை நடத்துகிறபோது, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே முதலிலே மருத்துவர்கள் குறைவு. யாரும் அங்கே போய்த் தங்குவது கிடையாது. மருத்துவர்கள் யார், யாரை எங்கே போஸ்டிங் போட்டாலுங்கூட அங்கே அவர்கள் செல்வதில்லை, இந்த நிலை இருக்கிறது. ஆகவே, அந்த நிலையை மனதிலே வைத்து, இந்த 9 ஆயிரம் முகாம்கள் success ஆக முடியப் போகிறதா என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 30 நிமிடம் ஆகிறது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: என்னங்க அண்ணே?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 30 நிமிடம் ஆகிறது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடித்துவிட்டீர்கள் என்றால் நல்லது. இன்னும் பன்னிரண்டு பேர் பேச வேண்டும். அமைச்சர் வேறு நீண்ட உரையாற்றப் போகிறார்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே தமிழகத்திலேதான்

முதன்முதலாக சென்னை, ஸ்டாலின் மருத்துவமனையில்—ஸ்டான்லி மருத்துவமனையில்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதையே நினைத்துக் கொண்டிருக்கிறார்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மேல் உதடுகள் பிளவு, மற்றும் மேல் அன்னங்கள் பிளவு. எனவே, முதன்முதலில் இந்தக் குறைபாடுகளைச் சரிசெய்கின்ற வகையிலே 5,162 குழந்தைகளுக்கு மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை செய்து, உலக சாதனைகள் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இது ஸ்டான்லி மருத்துவமனையிலே முதன்முதலில் தொடங்கப்பட்டது. இது தொடர்ந்து நடக்குமா என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது Pepsi, Coca cola போன்ற குளிர்பானங்களைப் பொறுத்தவரையிலும் நாடாளுமன்றத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. அதை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் இந்தியா முழுவதும் என்று கேட்கிறபோது, மத்தியிலே சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், 11 மாநிலங்களிலே 57 sample–கள் எடுக்கப்பட்டன, அதிலே தமிழ்நாடும் ஒன்று என்று சொல்லியிருக்கிறார். இப்போது, கேரள அரசு, அதைப்போல, கர்நாடக அரசு அதைத் தடை செய்திருக்கிறது. நம்முடைய தமிழக அரசு அதைத் தடை செய்யுமா என்பதை இந்த நேரத்திலே கேட்டு, இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்திருக்கிற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ராஜன். (குறுக்கீடு) ஏற்கெனவே 30 நிமிடம் எடுத்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) நான் கடைசியில் கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) திரு. ராஜன். (கூச்சல்–குழப்பம்)

திரு. சி.வி. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திற்கு, (குறுக்கீடு) குமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியைத் தந்திட்ட உன்னதத் தலைவர்... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் அப்புறம் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) திரு. ராஜன், ஒரு நிமிடம் இருங்கள். (கூச்சல்—குழப்பம்)

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்கு விளக்கம் மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு எங்களுடைய ஆட்சியில் இருக்கின்றபோது துணைவேந்தர்கள் தேர்ந்தெடுப்பதற்கு Search Committee–க்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் கோப்புகளைப் பார்த்தால் தெரியும். மூன்று பேர்களை நியமிக்க வேண்டும். அரசாங்க உறுப்பினர் ஒருவர், Syndicate உறுப்பினர் ஒருவர், இரண்டு பேரும் நியமிக்கப்பட்டு ** என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** அதை expunge பண்ணுவதற்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) No, No. இல்லை, நீங்கள் சொன்னது ** என்று சொன்னீர்கள். I will not allow such words. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. ** (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) வேண்டாம், வேண்டாம். (குறுக்கீடுகள்)

(முற்பகல் 11–50)

திரு. சி. ஞானசேகரன்: Hon. Deputy Speaker, Sir,...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கோப்பு நாங்கள் வந்த பிறகுதான் வந்து, அதிலே கையெழுத்திட்டு, அந்த Search Committee–க்கு அனுப்பினோம் என்பதுதான் உண்மை. இதற்குப் பதில் சொன்னீர்கள், ரொம்ப நன்றி. திரு. ஞானசேகரன் கேட்டாரே? Registrar நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமே? அதை ஏன் செய்யவில்லை? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை; இல்லை. (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள். அதையெல்லாம் refer செய்து

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேசிவிட்டார். (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் பேசி முடித்த பின்னர் நான் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) பேசுவதற்குக் கடைசியில் வாய்ப்புத் தருகிறேன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியைத் தந்திட்ட உன்னதத் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) வானுயர அய்யன் வள்ளுவருக்குக் குமரி முனையில் 133 அடி உயரத்தில், சுனாமிப் பேரலையால்கூட அசைக்க முடியாத உன்னதமான சிலையைத் தந்திட்ட, அமைத்திட்ட தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜருக்குக் குமரி முனையில் மணிமண்டபம் அமைத்து, அவர் பிறந்த நாளை 'கல்வி வளர்ச்சி நாளாக' அறிவித்து, நடைமுறை செய்திட்ட தனிப் பெருந்தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவுடைமையின் சித்தாந்தப் பெருந்தகையாளர் ஜீவானந்தம் அவர்களுக்கு நாகர்கோவில் நகரில் மணிமண்டபம் அமைத்திட்ட சமத்துவபுரம் கண்ட தலைவர், தனது கழக ஆட்சிக் காலத்தில் எமது நாகர்கோவில் பகுதியில் பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம், கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் என இரண்டு பேருந்து நிலையங்களைத் தந்து உயர்ந்து நிற்கும் உன்னதத் தலைவர், அறிவிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில், குமரி மாவட்டம், குளச்சலில் துறைமுகம் அமைக்கும் திட்டத்திற்கு வித்திட்ட தலைவர், கானல் நீர் என்று சொன்னவர்களுக்கு, அல்ல, தேநீர் இது என்று சொல்லும் அளவிற்கு அரிய திட்டங்களை உள்ளடக்கி நிதிநிலை அறிக்கை தயாரிக்கத் துணையாக இருந்ததோடு மட்டுமல்லாமல், ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றே மாதங்களில் பல திட்டங்களைச் செயல்படுத்தி, முத்தாய்ப்பான மூன்று திட்டங்களுக்கு ஆட்சிப் பொறுப்பையேற்ற அன்றே கையெழுத்திட்டு, நடைமுறைப்படுத்தி, தேர்தல் அறிக்கையில் சொன்னவற்றைச் செயல்படுத்திய சாதனைத் தலைவர், எதிரிகளை மட்டுமின்றி, துரோகிகளையும் ஓட, ஓட விரட்டிய தலைவர், துரோகிகளை எதிர்கொள்ள இவன்தான் பொருத்தமானவன் என்று, மூன்று துரோகிகளைத் தேர்தலின்மூலம் விரட்டியடித்து, உதயசூரியனை 22 ஆண்டுகளுக்குப் பிறகு நாகர்கோவிலில் உதிக்க வைத்த உன்னதத் தலைவர், மாண்புமிகு முதல்வர், என் மேல் என்றும் பாசமுள்ள டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திற்கு ஒரு தலைசிறந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து, அனைத்துத் தரப்பு மக்களாலும் பாராட்டப்பட்டுள்ள தமிழகத்தின் நிதியமைச்சர், கழகத்தின் பொதுச் செயலாளர், என்மீது என்றும் பாசமுள்ள இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கழகப் பொருளாளர், என்னுடைய அன்பிற்குரிய அண்ணன் மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுக்கும் என்னுடைய இதய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த பல ஆண்டுகளாக நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி தி.மு.க.விற்கு ஒதுக்கப்படாமல், கழகத் தோழர்கள் அதிகம் இருந்தும் என்ன செய்வது என்று தவித்துக்கொண்டிருந்த நேரத்தில், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் தளபதியார் அவர்கள், நாகர்கோவில் தொகுதியில் கழகம்தான் நிற்கும் என்ற உறுதியைத் தந்து, சொன்னதைச் செய்யும் தலைவர் கலைஞர் அவர்களின் செல்லப் பிள்ளை, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் இதுவரை எவருமே அறிவித்திடாத சலுகைகளை அறிவித்திட்ட வருங்காலத் தமிழகத்தின் வசந்தம், என்மேல் என்றும் பாசமுள்ள அண்ணன் தளபதியார் அவர்கள் நாகர்கோவிலில் உதயசூரியனை உதிக்கச் செய்து, 14 நிமிட நேரமே தொகுதியில் பேசி, கழகத்தை 14,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து, இந்த மாமன்றத்தில் எனக்குப் பேசிட முகவரி தந்திட்ட வணக்கத்திற்குரிய தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் இதய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

என்னுடைய வெற்றிக்கு அயராது பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும், இந்த மாமன்றத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியை இந்த நேரத்தில் உரித்தாக்கிக் கொண்டு, என்னுடைய முதல் உரையைத் தொடங்குகின்றேன்.

மிக முக்கியமான துறைகளில் ஒன்றான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன் மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால் கடந்த 5 ஆண்டு காலத்தில் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியின் நிருவாகச் சீர்கேடுகளாலும், திறமையின்மையினாலும், நோய் பிடித்த இந்த மக்கள்

நல்வாழ்வுத் துறைக்கு மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களோடு இணைந்து, ஏராளமான நிதியை ஒதுக்கீடு செய்து, குற்றுயிராகக் கிடந்த இந்தத் துறையைத் தலைநிமிர்ந்து எழச் செய்துள்ளார்.

1996 முதல் 2001 வரை நடைபெற்ற கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆரம்பித்து நடைமுறைப்படுத்திய 'வருமுன் காப்போம்' என்ற பெயரிலான சிறப்புப் பெற்ற திட்டத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அ.தி.மு.க சர்க்கார் கிடப்பில் போட்டது. இந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த, நடப்பாண்டிலும், வரும் ஆண்டிலும் 9,000 இலவச மருத்துவ முகாம்கள் நடத்திட ரூ.13.11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை நான் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 11—55

235 அரசு மருத்துவமனைகளில் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டுவதாக நிதிநிலை அறிக்கையில் இனமானப் பேராசிரியர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் மருந்துகள் வாங்குவதற்காக ரூ. 174.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, கோவை மற்றும் வேலூர் ஆகிய மருத்துவமனைகளில் ரூ.23.95 கோடி செலவில் M.R.I ஸ்கேன் மையங்கள் அமைக்கப்படுவதை வரவேற்கும் அதே நேரத்தில், தமிழகத்தின் தென்கோடிப் பகுதியில் உள்ள கன்னியாகுமரி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் அந்த வசதியைச் செய்து தந்திட, தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பொதுவாக, ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கும் பகுதிகளில் மக்கள் தொகை 30,000 இருக்க வேண்டும். ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் தேவைப்படும் அளவிற்கு சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்காத காரணத்தால், இன்றைக்கு 1,25,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நிலையில் சில இடங்களில் இயங்கி வருகிறது. இதனால் கிராமப்புற மக்களுக்குச் சுகாதார வசதி பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, தலைவர் கலைஞர்

அரசு இதைக் கருத்தில் கொண்டு, தமிழகம் முழுவதும் 30,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்கிட வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் இருக்க வேண்டும். ஆனால், சுமார் 12,500 மக்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையம் தற்போது இயங்கி வருகிறது. கடந்த ஐந்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில் இதற்கான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்க விஷயம். கிராம மக்களின் பாசத்திற்குரிய தலைவர் கலைஞர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு, 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அளவில் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துணை சுகாதார நிலையங்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டடங்களில் இன்றைக்கு இயங்கி வருகின்றன. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இந்த அவல நிலை மாற எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. தலைவர் கலைஞரின் பொற்கால ஆட்சியில், அப்பகுதிகளில் உள்ள அரசு நிலங்களில் புதிய கட்டடங்கள் கட்டி, கிராம மக்களுக்கு மருத்துவச் சேவை சிறப்பாகக் கிடைத்திட ஆவன செய்திடுமாறு நான் அன்பாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆம்புலன்ஸ் வசதி செய்யப்பட்டிருந்தாலும்கூட, ஓட்டுநர்கள் இல்லாத அவல நிலையை அ.தி.மு.க. ஆட்சி செய்தது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் அவசர சிகிச்சைகள் சிறப்பாக நடைபெறத் தேவைப்படும் ஓட்டுநர்களை நியமனம் செய்திட நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில், மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 30 படுக்கை வசதிகளுடன் அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆனால், உயிர் காக்கும் இரத்த வசதி இல்லாமல் நோயாளிகள் பல இன்னல்களைச் சந்திக்க நேர்கிறது. ஆகவே, சுகாதார நிலையங்கள் அனைத்திலும் இரத்த வங்கிகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வேலை நியமனத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து நிர்வாகச் சீர்கேடு செய்த நிலைமையை மாற்றி, மருத்துவமனைகளில் தேவைப்படும் இடங்களைப் பூர்த்தி செய்து நடவடிக்கை எடுத்திட நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் பெரும்பாலான டாக்டர்கள், தனியார் மருத்துவமனைகளிலும் பணிபுரிவதோடு, தாங்களும் சொந்தமாக கிளினிக் நடத்துகிறார்கள் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனால், அரசு மருத்துவமனைகளில் அப்படிப்பட்ட மருத்துவர்கள் சரியான நேரத்தில் இருந்து பணியாற்றுவதில்லை. இதனால் ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அரசு இதனைக் கவனத்தில் கொண்டு, தகுந்த சட்டங்கள்மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சிக்குன்குன்யா என்ற நோயினால் பலர் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நோய் தமிழகத்தில் மட்டுமல்லாமல், ஆந்திரா, கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலும் உள்ளது என்பதை அனைவரும் அறிவார்கள். ஆனால்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள்.

திரு. அ. ராஜன்: அவருக்கு 30 நிமிடம் கொடுத்தீர்களே?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் எதிர்க்கட்சியில் இருப்பதனாலே.

திரு. அ. ராஜன்: அதையே தாருங்கள். ஆனால், தமிழகத்தில் இந்த நோயைக் கட்டுப்படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, அதற்காகத் தனி நிதி ஒதுக்கீடு செய்து செயலாற்றியதன்மூலம் இந்த நோய் தமிழகத்தில் வெகுவாகக் குறைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, நான் தமிழக முதல்வர் அவர்களுக்கு மக்களின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல்வேறு தனியார் மருத்துவமனைகளில் ஏராளமான சீர்கேடுகள் நடைபெறுகின்றன என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இவற்றையெல்லாம் அவர்கள் கண்டுகொள்ளாத காரணத்தால், அப்படிப்பட்ட சில மருத்துவமனைகள் வியாபார நோக்கத்தோடு மட்டும் செயல்படுவதாக நான் கருதுகிறேன். சரியான கட்டமைப்பு வசதிகள் இல்லாமலும், தேவையான மருத்துவ சிகிச்சை செய்யாமலும், பணம் ஒன்றே குறிக்கோள் என்ற நிலையிலும் அவர்கள் செயல்படுவதால், அப்படிப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் ஏராளமான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே, இப்படிப்பட்ட மருத்துவமனைகளுக்கு அரசு உரிய நிபுணர் குழுவை அனுப்பி, ஆய்வு செய்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளும் அதே நேரத்தில், புதிய தனியார் மருத்துவமனைகள் ஆரம்பிக்கும்போது, அரசிடம் முறைப்படி அனுமதி பெற்று ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கையில், மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற வகையில் அறிவிப்புச் செய்திருக்கும் அதே நேரத்தில், எங்களது குமரி மாவட்டத்திற்கும் தாங்கள் மருத்துவக் கல்லூரி தந்ததை நன்றிப் பெருக்கோடு இந்த நேரத்தில் நான் எண்ணிப் பார்க்கிறேன். இப்பொழுது கிடப்பில் கிடக்கும் ஆயுர்வேதக் கல்லூரியையும் உடனே கொண்டு வர நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்பச் சுகாதார மையங்களின் பாதுகாப்பிற்குச் சுற்றுச்சுவர் அமைத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், பல்வேறு பகுதிகளில் நாய்கள், பன்றிகள் மற்றும் விஷ ஜந்துக்கள் உள்ளே நுழைந்து, அவற்றின்மூலம் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் அதே நேரத்தில், எல்லாத் துணை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தொலைபேசி வசதி செய்து தந்திடவும் தங்கள்மூலமாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பணிகளுக்கான செவிலியரின் தேவைகள் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, புதிய செவிலியர் பள்ளிகள் மற்றும் கல்லூரி தொடங்க நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அரசு எடுத்துள்ள முயற்சிகளை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். *(மணியடிக்கப்பெற்றது)* அதே நேரத்தில், சில தனியார் மருத்துவமனைகளில் போதிய பயிற்சி இல்லாத தகுதியற்றவர்கள், செவிலியர் என்ற பெயரில் பணியாற்றுவதையும் தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஜெனரேட்டர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்ப சுகாதார நிலையங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் சரிவரக் கவனிக்கப்படவில்லை. தலைவர் கலைஞர் அரசு இதில் கவனம் செலுத்தி, தமிழகத்திலுள்ள 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 8,650 துணை சுகாதார நிலையங்கள் சரியாகச் செயல்பட உரிய நடவடிக்கையை எடுப்பார் என்ற நம்பிக்கை இன்றைக்கு மக்களுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் வாயிலாக நோய்த் தடுப்பு, உடல் நல மேம்பாடு, நோய் களைதல் மற்றும் மறுவாழ்வுப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் செய்யும் அதே நேரத்தில், அங்கு உரிய கருவிகள் இல்லாத நிலை உள்ளது. இதனைப் போக்க, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளான தொடர் குளிர்சாதனக் கருவிகள், சிறு அறுவை சிகிச்சைக்குத் தேவையான கருவிகள், மகப்பேறுச் சாதனங்கள், எக்ஸ்ரே, லேப் வசதிகள், ஸ்கேன் வசதி செய்து கொடுத்திட வேண்டுமென்றும் நான் அன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயிர் காக்கும் மருந்துகள் என்ற போர்வையில், இன்றைக்குப் போலி மருந்துகள் தயாரிக்கப்பட்டு, விலை குறைவு என்ற மாயையில், வெளி மார்க்கெட்டில் உலவுவதைக் கடுமையாகத் தடுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் அதே நேரத்தில், மருந்து மற்றும் மருந்துப் பொருட்கள் தயாரிப்பாளர்கள், தங்கள் மருந்துப் பொருட்களை அரசின் மருந்து ஆய்வுக் கூடத்தில் முறையாகப் பரிசோதனை செய்த பின்புதான் வெளியிடுகின்றார்களா

என்பதில் அரசு தக்க கவனம் செலுத்தியும், அதே நேரத்தில் தரமற்ற மருந்துத் தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனை செய்பவர்கள்மீது அரசு கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிட்டேன். ஆண்டுக்கு சுமார் எட்டு இலட்சம் நபர்கள் காச நோய்க் கிருமியால் இப்பொழுது, புதிதாகத் தாக்கப்படுவதாக ஓர் அறிக்கை கூறுகிறது. காச நோய் கட்டுப்படுத்தப்பட கடந்த அ.தி.மு.க. சர்க்கார் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. குறிப்பாக, குமரி மாவட்டத்தில் அந்த நோயால் பாதிக்கப்பட்டு, அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றவர்கள், கடந்த ஆட்சியாளர்களின் தூண்டுதலின்பேரில் மருத்துவமனையிலிருந்து விரட்டப்பட்டார்கள் என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, நமது அரசு இத்தகைய நோயால் பாதிக்கப்பட்டவர்கள்மீது கனிவாய் நடந்துகொள்ள வேண்டுமென்று நான் அன்பாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ வசதிகள் சரியாகக் கிடைக்கப்பெறாத, குறிப்பாக, ஏழை மற்றும் மலைவாழ் மக்களுக்குக் கூடுதல் மருத்துவச் சேவை வாய்ப்புகள் கிடைக்க அரசு ஆவன செய்யும் அதே நேரத்தில், தமிழ்ப் பண்பாட்டின் ஓர் அங்கமாக விளங்கும் சித்த மருத்துவத்தின் வளர்ச்சியில் அரசு முழுக் கவனம் செலுத்தி, அதன் பெருக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். இதற்கான விழிப்புணர்ச்சியை உருவாக்க வேண்டும். அதேபோல, (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். எனது தொகுதி பற்றித்தான்.

சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, யோகா, இயற்கை மருத்துவம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தும் அதே நேரம், சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஊட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, பிசியோதெரபி மருத்துவத்தை ஊக்குவிக்கும்பொருட்டு, மாநில அளவில் பிசியோதெரபி கவுன்சில் அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, அரசுக் கல்லூரிகளில் பிசியோதெரபி முதுநிலைப் பட்ட மேற்படிப்பு (MPT) உருவாக்கி, ஏழை மக்களுக்குப் பயனடையச் செய்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர், திரு. என்.ஆர். ரங்கராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என்.ஆர். ரங்கராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு என்னுடைய குமரி மாவட்டத்தில்...(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முடிக்க மாட்டார் அய்யா.

திரு. அ. ராஜன்: சார், முடித்துவிட்டேன். நாகர்கோவிலில், இன்றைக்குக் குமரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட பிறகு, எனது தொகுதியில் கோட்டார் மருத்துவமனை இயங்கி வந்துகொண்டிருந்தது. அது இன்றைக்கு மூடிக் கிடக்கிறது. எண்பது ஆண்டுகளுக்கு மேலாக மூடிக் கிடக்கும் அந்த மருத்துவமனையை— நிச்சயமாக எல்லாக் கட்டமைப்பு வசதியும் அங்கேயிருக்கிறது; அதைத் திறந்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா பேருந்து நிலையத்திற்கும், நகராட்சிப் பூங்காவிற்கும் இடையே ஒரு சுரங்கப் பாதை வேண்டுமென்று கேட்டு, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், தமிழகத்தின் வருங்கால வசந்தம், தளபதியார் அவர்கள் அதைச் செய்வதாக என்னுடைய பகுதிக்கு வந்தபோது சொன்னார்கள். இன்றைக்கு அரசாங்கம் சார்பில் அந்தக் கோப்புகள் சென்னைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. தளபதியார் அவர்கள் விரைவில் நடவடிக்கை எடுத்து, செய்து தருவார் என்ற நம்பிக்கையில் நான் உரையாற்றுகிறேன்.

• பிற்பகல் 12—05

என்னுடைய நாகர்கோவில் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சுனாமி வந்து, அன்றைக்குக் கடல் அலையால் தாக்கப்பட்ட மக்கள், இன்றைக்கும் கடல் அலையைக் கண்டு பயந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, என்னுடைய தொகுதியில் தூண்டில் வளைவுகள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) தமிழகத்தில்,, இன்றைக்கு மீனவப் பெருங்குடி மக்கள்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்கிறேன் என்று சொல்லுங்கள்.

திரு. அ. ராஜன்: முடித்துவிட்டேன், ஒரே நிமிடம். கிறிஸ்துவ மீனவப் பெருங்குடி மக்கள், எங்களுடைய மாவட்டத்தில் மட்டும் M.B.C. ஆக இல்லை. எனவே, அவர்களை M.B.C. பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதியில், தெங்கம்புதூர் என்ற பகுதி, நாகர்கோவிலில் உள்ள காவல் நிலையத்திலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. எனவே, தெங்கம்புதூர் பகுதியிலே ஒரு புதிய காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு நம்முடைய கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதெல்லாம், கல்வியில் எங்களுடைய மாவட்டம் சிறந்த மாவட்டம். ஆனால், எங்களுடைய நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில், குமரி மாவட்டத்தில், அரசின் சார்பாக கலைக் கல்லூரியோ அல்லது பொறியியல் கல்லூரியோ அல்லது வேளாண்மைக் கல்லூரியோ இல்லை. எனவே, ஒரு கோடி ரூபாயை எங்களால் கட்டுவதற்கு ஒரு வேளை கஷ்டமாக இருந்தாலுங்கூட, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் வீரபாண்டியார் அவர்கள், எங்களுடைய தொகுதியில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய அளவிற்கு, எங்களுடைய...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என்.ஆர். ரங்கராஜன், நீங்கள் பேசுங்கள்.

திரு. அ. ராஜன்: தொகுதியில் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அன்பிற்குரிய... (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என்.ஆர். ரங்கராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்கள் முடித்தவுடன் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) வாய்ப்புக் கொடுக்கிறேன். திரு. என்.ஆர். ரங்கராஜன் பேசி முடித்தவுடன் கொடுக்கிறேன். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தருகிறேன், தருகிறேன். (குறுக்கீடு) திரு. என்.ஆர். ரங்கராஜன், பேசுங்கள்.

***திரு. என்.ஆர். ரங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறைமீதான இந்த மானியக் கோரிக்கையின்கீழ், காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக என்னைப் பேச அழைத்தமைக்காகத் தங்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் நான தெரிவித்துக்கொள்கின்றேன்.*

பல்வேறு நலத் திட்டங்களையும், பல்வேறு சலுகைகளையும் தமிழக அரசு இன்றைக்கு மக்களுக்கு அளித்துக்கொண்டிருக்கக்கூடிய நேரத்திலே, அத்தனை நிதி நெருக்கடிகள் இருந்தாலுங்கூட, இந்தத் துறைக்காக 1,951.28 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக நான் வரவேற்கின்றேன்.

நாட்டினுடைய முதல் குடிமகனுக்குக் கிடைக்கக்கூடிய அதே மருத்துவம், கடைசிக் குடிமகனுக்கும் கிடைக்க வேண்டுமென்பது அரசினுடைய இலட்சியமாக இருந்தாலுங்கூட, இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு, கடைசிக் குடிமகனுக்கும் ஒரு நியாயமான மருத்துவம் கிடைக்க வேண்டுமென்பதற்காக நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய நல்ல திட்டங்களை எல்லாம் நான் இன்றைக்கு வரவேற்கின்றேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு, கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே, வருமுன் காப்போம் திட்டத்தின்மூலம் கிராமப்புற மக்களுக்கெல்லாம் முகாம் நடத்தி, தக்க சிகிச்சை மற்றும் சுகாதார நலக் கல்வி வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதை நான் வரவேற்கின்றேன். ஏனெனில், இன்றைக்குத் தங்களுக்கெல்லாம் என்ன வியாதி, அதற்கான அறிகுறி என்ன இருக்கிறது என்று தெரியாத அளவிற்குக்கூட கிராமங்களிலே பலவிதமான மக்கள், பல கஷ்டங்களையெல்லாம் அனுபவித்துக்கொண்டிருக்கிற நேரத்திலே, இதுபோன்ற அறிவிப்புகளை

அதேபோன்று, கிராமப்புறங்களிலே நடமாடும் மருத்துவக் குழுவை அனுப்புவது குறித்து தாங்கள் கூறியிருக்கிற நல்ல கருத்துகளையும், திட்டங்களையும் நான் இந்த நேரத்திலே வரவேற்கின்றேன். என்னுடைய கருத்தாகச் சிலவற்றை நான் இந்த நேரத்திலே கூற விரும்புகின்றேன்.

இன்றைக்குப் பல இடங்களிலே தாலுகா மற்றும் தாலுகா அல்லாத அரசு மருத்துவமனைகளிலே எல்லாம் மருத்துவர்கள் குறைவாக உள்ளதாகப் பல இடங்களிலேயிருந்து புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. குறைந்தபட்சம் 5 மருத்துவர்கள் பணியில் இருந்தால்தான் நல்லது என்று அனைவரும் அபிப்பிராயப்படுகிறார்கள். எனவே, 5 மருத்துவர்கள் பணியிலே இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களையெல்லாம் நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இந்த மருத்துவமனைகளிலே என்னென்ன சிகிச்சைகள் செய்யப்பட வேண்டும், என்னென்ன அறுவை சிகிச்சைகள் செய்யப்பட வேண்டும் என்பதையெல்லாம் நீங்கள் நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவதெல்லாம், ஆரம்ப சுகாதார நிலையம் என்று சொல்லக்கூடிய P.H.C. இருக்கின்றதே, அதைப் பொறுத்தவரையிலே, 1960–லே, "BHORE Committee" என்ற ஒரு Committee–யினுடைய பரிந்துரையை வைத்துத்தான் பணியினை நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். ஆனால், இன்றைக்கு நமது அரசால் பல்வேறு முன்னேற்றங்கள் எல்லாம் கொண்டு வரப்பட்ட பின்பு, P.H.C.–யினுடைய பணிகள் என்ன என்பதைப் பொதுச் சுகாதாரத் துறை நிபுணர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழுவினை அமைத்து, என்னென்ன பணிகள் எல்லாம் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் புதிதாக நிர்ணயிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோன்று, இன்றைக்கு P.H.C. இருக்கக்கூடிய பல இடங்களிலே மருத்துவர்கள் இரண்டு பேர் இருக்க வேண்டும். ஆனால், பணியில் இருப்பதில்லை. இருந்தாலுங்கூட, அந்த இடம் காலியாக இருக்கின்றது. எனவே, 3 P.H.C–கள், அதோடு ஒரு தாலுகா மருத்துவமனையைச் சேர்த்து, ஒரு Health Unit ஆக நிர்ணயம் செய்துவிட்டு, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், காலை 8–00 மணியிலேயிருந்து மதியம் 2–00 மணி வரையில் அங்கே பணிபுரிந்துவிட்டு, பின்பு தாலுகா

மருத்துவமனையிலே சுழற்சி முறையிலே பணியாற்ற வேண்டுமென்ற ஓர் உத்தரவை நீங்கள் போடுவீர்களானால், மருத்துவமனைகளுக்கு நல்ல மருத்துவர்களும் கிடைப்பார்கள். அரசுக்கும் அதிகமான செலவுகள் குறையும் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். எனவே இந்த P.H.C.–யினுடைய பணிகளின் தரம் உயர்த்தப்பட வேண்டும். அதற்காக Diploma in Public Health படித்தவர்களிடம் வட்டார ஆரம்ப சுகாதார மையத்தை ஒப்படைக்க வேண்டும். எனவே, அதிகமான கல்லூரிகளிலே அந்த Diploma in Public Health படிப்பதற்கு, அவர்களுக்கு அதிகமான seat—இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

கடந்த கால 1996 ஆட்சியிலே மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு இருந்தபோது, P.H.C.–களையெல்லாம் தனியாரிடம், பெரிய தொழிலதிபர்களிடம் ஒப்படைத்து, அவற்றை maintain செய்ய வேண்டுமென்று அப்போது ஓர் உத்தரவைப் போட்டதாக நான் பழைய மானியக் கோரிக்கைப் புத்தகத்திலே படித்திருந்தேன். ஆனால், அதன் பின்பு வந்த அரசு அதை எடுத்து நடத்தியதா என்பது எனக்குத் தெரியவில்லை. தற்போதும்கூட P.H.C.–களை மீண்டும் நீங்கள் தொழிலதிபர்களிடம் பேசி, ஒவ்வொரு P.H.C.–யைத் தத்தெடுக்கச் சொல்லி, அதற்கு ஆகக்கூடிய செலவுகளை செய்து அவற்றை maintain செய்வதற்கு நீங்கள் ஏற்பாடு செய்வீர்களா என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, தொகுப்பூதியத்திலே இன்றைக்கு அரசு மருத்துவமனைகளிலே பணிபுரியக்கூடிய Technical Assistants, Dark Room Assistants, X–Ray, C.T.Scan M.R.I. Scan Technicians எல்லாம், இன்றைக்குத் தங்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கின்றார்கள். எனவே அவர்களையெல்லாம், அவர்களுடைய சம்பளங்களை வரைமுறை செய்து நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கிராமங்களிலே எல்லா ஊர்களிலுமே Sub–center–கள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கே V.H.N. என்று சொல்லக்கூடிய அந்தச் செவிலியர்கள் எல்லாம் நல்ல குடியிருப்பு இல்லை என்ற ஒரே காரணத்திற்காக யாருமே குடியிருப்பது கிடையாது. பல இடங்களிலே பட்டுக்கோட்டை தொகுதியிலே நான்

சென்றபோதுகூட பார்த்திருக்கின்றேன், அங்கெல்லாம் நர்சுகளே இருப்பது கிடையாது; செவிலியர்கள் இருப்பது கிடையாது. எனவே, அதற்கு ஒரு முடிவு கட்டி, இந்த முறை ஒரு குடியிருப்பைக் கட்டிக் கொடுத்தோ அல்லது அவர்களைக் கண்காணித்தோ, அவர்கள் அந்தச் சுகாதார நிலையத்தில் பணியில் இருக்க வேண்டுமென்ற ஒரு நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும்.

அதேபோன்று, இன்றைக்கு மருத்துவர்களுக்கெல்லாம் கவுன்சலிங் முறை வைத்துப் பணி மாற்றம் செய்வது என்பது நல்ல திட்டமாக இருந்தாலுங்கூட, அதன்மூலமாகப் பல்வேறு இடங்களிலே பார்க்கப் போனோமேயானால், மருத்துவர்கள் எல்லோரும் நல்ல இடங்களுக்கு மாறுதல் வாங்கிக் கொண்டு சென்றுவிடுகிறார்கள். ரொம்ப தூரமாக இருக்கக்கூடிய, ஒதுக்குப்புறமாக இருக்கக்கூடிய இடங்களில் இருக்க முடியவில்லை என்ற ஒரு குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. இதைப் பற்றி நான் விவாதிக்கும்போதுகூட, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கூறும்போது, அவர்களுடைய பகுதியிலேகூட 41 பேர் transfer வாங்கிக்கொண்டு சென்றுவிட்டார்கள், மிகக் சிரமமாக இருக்கிறது என்ற கருத்துகளைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இதேபோன்ற கருத்துகள் பல்வேறு இடங்களிலும் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இன்றைக்கு மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலே சில கருத்துகளை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். M.B.B.S. seat—களைப் பொறுத்தவரையிலே, இன்றைக்குத் தனியார் கல்லூரிகளில் எல்லாம் 25 இலட்சம் ரூபாய், 35 இலட்சம் ரூபாய் என்று அவர்கள் அதற்காகப் பணத்தை வாங்கிக்கொண்டு கொடுக்கிறார்கள் என்று தெரிகிறது. இதை நீங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு, இந்த நன்கொடைகளைக் குறைப்பதற்கு அரசு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்து, சட்டத்தைப் போட்டு, இதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு M.B.B.S. என்று சொன்னால், 35 இலட்சம் ரூபாய், M.D. என்று சொன்னால், Deemed University—யிலே ஒரு கோடி ரூபாய் என்றெல்லாம் சொல்கிறார்கள். எனவே, மிகப் பெரிய இடத்துப் பிள்ளைகள் எல்லாம் படிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதே தவிர, சாதாரண மனிதர்கள் எல்லாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு குறைபாடு இருக்கிறது. எனவே, Deemed University—ஐப் பொறுத்தவரையிலே, எவ்வாறு இன்றைக்கு

Engineering கல்லூரிகளிலே நமது அரசு இட ஒதுக்கீட்டைப் பெற்றிருக்கிறதோ, அதேபோன்று Deemed University—யிலும் ஏன் அரசு இந்த மாதிரி இட ஒதுக்கீட்டைப் பெறக்கூடாது என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இன்றைக்கு நமது மருத்துவக் கல்லூரியிலே இருக்கக்கூடிய M.D., M.S., seat—களையெல்லாம் ஐந்து மடங்கு உயர்த்தி, எல்லாத் தரப்பு மாணவர்களும் பயன் பெறக்கூடிய வகையிலே, ஏழையெளிய மாணவர்களும் படிக்கக்கூடிய வகையிலே நீங்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகின்றேன். கிராமங்களிலே Union Dispensary ஒன்று இருக்கிறது. அதெல்லாம் District Board இருந்த காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. இந்த Union Dispensary—ஐப் பொறுத்தவரையிலே, கடந்த ஆட்சிக் காலத்திலும்கூட இதே மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையிலே பேசும்போதுகூட நான் குறிப்பிட்டிருக்கிறேன். அன்றைக்கு இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதைப் பற்றி நாங்கள் திட்டம் வைத்திருக்கிறோம்; மக்கள் நல்வாழ்வுத் துறையிலே Union Dispensary என்பது, ஒன்று, ஊராட்சி ஒன்றியங்கள்மூலமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. இதை நாங்கள் எடுத்து நடத்தலாம் என்ற ஒரு கருத்துரு இருக்கிறது என்று சொன்னார்கள். Union Dispensary என்பது, மூன்று அல்லது நான்குதான் ஒவ்வொரு தொகுதியிலும் இருந்துகொண்டிருக்கின்றன. தயவுசெய்து மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் அதை நீங்களே எடுத்து P.H.C. ஆகத் தரம் உயர்த்தியோ அல்லது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியோ அதை நீங்கள் சிறப்பாக நடத்த வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை வைத்துக்கொள்கின்றேன். ஏனென்றால், Union Dispensary—க்கு டாக்டர்களே கிடையாது. இப்பொழுது பட்டுக்கோட்டை தொகுதியிலே மூன்றே மூன்று இருக்கின்றன. மூன்றுக்கும் சேர்த்து ஒரே டாக்டர்தான் ஷிஃப்டிலே போய்க்கொண்டிருக்கிறார்கள். எனவே, தயவுசெய்து அதை upgrade பண்ணி, P.H.C. ஆக மாற்றிவிடுங்கள் அல்லது உங்கள் control—இலே எடுத்துக்கொண்டு மருந்துகளும் அளித்து, மருத்துவர்களையும் நியமித்து, செவிலியர்களையும் நியமித்து அதைச் சிறப்பாக நடத்துவதற்கு நீங்கள் ஒரு நல்ல ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

Diabetes என்று சொல்லக்கூடிய சர்க்கரை வியாதியைப் பொறுத்தவரையில், நான் பட்ஜெட் விவாதத்தின்போதுகூடக் குறிப்பிட்டேன். பல இடங்களில் சர்க்கரை நோயாளிகளெல்லாம் தற்பொழுது அவதிப்பட்டுக்கொண்டு, தனியார் மருத்துவமனைக்குத்தான் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சர்க்கரை முற்றிவிட்டால் மயக்கம் வருகிறது. மயக்கம் வந்தால் அவர்கள் அங்குதான் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை. அங்கு சென்று அவர்கள் மருத்துவம் பார்த்துவிட்டு வெளியே வந்து பில்லைப் பார்த்தால் அவர்களுக்கு மீண்டும் மயக்கம் வருகிறது. அந்த அளவிற்கு மிக மோசமாக, பில்லைப் பார்த்தீர்களென்றால், amount அதிக அளவிற்குக் கொடுக்கிறார்கள். இதைச் சாதாரணப்பட்டவர்களெல்லாம் பல இடங்களிலே குறைபாடாகச் சொல்லக்கூடிய காரணத்தினாலே சொல்கிறேன். எனவே, Diabetic என்று சொல்லக்கூடிய சர்க்கரை நோயாளிகளுக்கென்று, ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனையிலும் சிறப்பு சிகிச்சைப் பிரிவு ஒன்றை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்து, அதன்மூலம் அந்த நோயாளிகளுக்கெல்லாம் உதவ வேண்டுமென்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த அளவிலே, மிகப் பாரம்பரியம் மிக்க ஒரு கல்லூரி. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே அது ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் கல்லூரியில் C.T. Scan ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. T.N.M.S. Corporation மூலம் அதற்குப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்தப் பணியாளர்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலே வேலைக்கே வருவது கிடையாது. ஞாயிற்றுக்கிழமைகளில் accident ஆகி வருகிறவர்களோ, serious ஆன நிலையில் வருகிறவர்களோ, அங்கு வந்தால்கூட, அந்தப் பணியாளர்களைக் கூப்பிட்டால், அவர்கள் வருவது கிடையாது என்று, கடந்த வாரம்கூட ஒரு case–லே என்னிடம் பரிந்துரை கேட்டார்கள். கூப்பிட்டுச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் சொல்லியுங்கூட அங்கு யாரும் வரவில்லை. ஞாயிற்றுக்கிழமை அன்றைக்கு அவர்கள் பூட்டிவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். எனவே, அங்கிருக்கக்கூடிய Radiology Department–ல் இருக்கக்கூடிய பணியாளர்களும் அதை உபயோகப்படுத்தலாம், அதற்கான பணத்தை வேண்டுமானால் அவர்களிடம் வசூலித்துக் கொடுத்துவிடலாம் என்ற

ஓர் ஆணையை நீங்கள் போட்டீர்கள் என்று சொன்னால், அங்கு இருக்கக்கூடிய Dean அதை நிச்சயமாகப் பயன்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பு உண்டு. *(மணியடிக்கப்பெற்றது)* எனவே, அதற்கான ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, தஞ்சை மருத்துவக் கல்லூரியிலே கடந்த மாதம் இதயத்தைத் திறந்து, இதய வால்வில் இருக்கக்கூடிய ஓட்டையை அடைக்கக்கூடிய ஒரு surgery–ஐ வெற்றிகரமாக அவர்கள் செய்திருக்கின்றார்கள். அது ஒரு நல்ல முயற்சி. அந்த Doctor–களெல்லாம், பாராட்டப்படக்கூடிய வகையிலே அந்த முயற்சியை எடுத்திருக்கின்றார்கள். எனவே, வருங்காலத்திலும் அதேபோன்ற முயற்சிகள் தொடர வேண்டும். இதய சிகிச்சைகளெல்லாம் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே தொடர வேண்டுமென்பதற்காக நீங்கள் தனி நிதியொதுக்கீடு செய்து கொடுத்து, அதற்கான உபகரணங்களை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தஞ்சையில் இருக்கக்கூடிய இராஜா மிராசுதார் மருத்துவமனை என்கிற, R.M.H. என்று சொல்லக்கூடிய மருத்துவமனையில், தாய்–சேய் நலப் பிரிவில் பிரசவங்கள் அதிகமாக ஆகிக்கொண்டிருக்கின்றன. நிறையப் பேர் அங்குதான் பேறுகாலத்திற்கு வருகின்றார்கள். அந்த இராஜா மிராசுதார் மருத்துவமனை என்பது மிகப் பழைமை வாய்ந்த ஒரு மருத்துவமனை. அங்கே நல்ல கட்டடங்களைக் கட்டி, infrastructure–ஐ நீங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும். நல்ல உபகரணங்களை வாங்கிக் கொடுக்க வேண்டும். அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்கள், செவிலியர்கள் பணியிடங்களை முழுவதுமாக நிரப்பிக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை அன்போடு நான் இந்த நோத்திலே வைக்கிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய பல அரசுப் பொது மருத்துவமனைகளிலே, எங்கே பார்த்தாலும் fans ஓடவில்லை, lights எரியவில்லை என்றெல்லாம் பலவிதமான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. தற்பொழுது Lions Club, Rotary Club போன்ற சேவைச் சங்கங்களெல்லாம் நிறைய இதற்காக உதவ முன்வருகின்றார்கள். எனவே, அவர்களை உட்படுத்திய ஒரு Committee–ஐ அமைத்து, இதுபோனற உதவிகளைப் பெறுவதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். *(குறுக்கீடு)* முடித்துவிடுகிறேன். ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன.

இன்றைக்கு மரியாதைக்குரிய நண்பர்கள் சொல்லியிருக்கிற கோரிக்கைகளில் ஒன்றை மட்டும் சொல்கிறேன். வேலூர் நகரத்தின் மையப் பகுதியில் இருக்கக்கூடிய Pentland Hospital கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும் மூடியிருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மருத்துவமனை முழு அளவிலே மீண்டும் தொடங்கப்படும் என்று அறிவித்துப் பல நாட்கள் ஆகிவிட்டன. எனவே, அந்த மருத்துவமனையை மீண்டும் தொடங்குவதற்கு, முழுவதுமாக staff nurse என்று சொல்லக்கூடிய அந்தச் செவிலியர்களையும், மருத்துவர்களையும் நியமிக்க முயற்சி எடுக்க வேண்டும், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள்.

பட்டுக்கோட்டையில் இருக்கக்கூடிய G.H.—அரசு மருத்துவமனையிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1996–ல் நடைபெற்றபோது, இதய நோய்க்காக மிகப் பெரிய சிகிச்சைப் பிரிவைக் கட்டி, அதிலே air–condition உட்பட எல்லா வசதிகளையும் வைத்திருக்கின்றார்கள். ஆனால், அதற்குப் பின்பு வந்த ஆட்சியிலே அதற்கான மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. இதய சிகிச்சை நிபுணர்கள் நியமிக்கப்படவில்லை. ஐந்தாண்டு காலமாக அந்த இடம் காலியிடமாக இருக்கின்றது. மிகப் பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. இருந்தாலுங்கூட, சிகிச்சை கொடுப்பதற்கு மருத்துவர்கள் கிடையாது. எனவே, அவர்களை நீங்கள் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பட்டுக்கோட்டை மருத்துவமனையிலே கண் டாக்டர் கிடையாது. E.N.T. கிடையாது. முடநீக்கியல்—Ortho கிடையாது. மனநல மருத்துவர் இல்லை. நுண்கதிருக்கு film இல்லை என்று சொல்லி, அதை மூடி வைத்திருக்கிறார்கள். ஒன்றரை வருட காலமாக X–Ray–க்கு film–ஏ கொடுக்கவில்லை. கடந்த ஒன்றரை வருட காலமாக இந்த அவல நிலை நீடித்துக்கொண்டிருக்கின்றது. எனவே, அதில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காச நோய்க்கென்று பட்டுக்கோட்டை மருத்துவமனையிலே ஒரு கட்டடத்தைக் கட்டி, அதிலே முன்பு தனியார் சிகிச்சை கொடுத்துக்கொண்டிருந்தார்கள். என்ன காரணத்தினாலோ அது பூட்டப்பட்டுவிட்டது. அது மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கப்படும் என்று சொல்லியுங்கூட, இன்று வரை அது கொடுக்கப்படவில்லை. அந்தக் கட்டடம் பூட்டப்பட்டு, இன்றைக்கு அதில் பாம்புகள் அடைந்துகொண்டிருக்கின்றன. எனவே, மரியாதைக்குரிய நமது அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தக் கட்டடத்தை நாம் பெற்று,

G.H.–க்கு ஒப்படைத்து, அதை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

125 வருட பழைய கட்டடம் பட்டுக்கோட்டையிலே இருக்கின்றது. அதை இடித்துவிட்டு, புதிய கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஒரேயொரு கோரிக்கை. மதுக்கூரிலே இருக்கக்கூடிய P.H.C. மிக மோசமாகப் பழுதடைந்து, மருத்துவர்கள்கூட உட்கார முடியாத அளவிற்கு மோசமாக இருந்தது. கடந்த ஆட்சிக் காலத்தில் நான் பல முறை, அதை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்திக் கொடுங்கள் என்று கோரிக்கை விடுத்தும், அன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கடைசி ஆண்டிலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு கட்டடத்தை நானும் அதற்குக் கட்டிக் கொடுத்திருக்கின்றேன்.

பிற்பகல் 12–20

எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையிலும், நாங்கள் கேட்டதை எல்லாம் எங்களுக்கு, பட்டுக்கோட்டை தொகுதியைப் பொறுத்தவரையிலே நிறைய காரியங்களைச் செய்து கொடுத்துக்கொண்டிருக்கின்றீர்கள். என்னுடைய கோரிக்கையை ஏற்று, மதுக்கூரிலே இருக்கக்கூடிய அந்த அரசு P.H.C.–ஐ 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக நீங்கள் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த நல்வாய்ப்பினை அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரே ஒரு விஷயம்; தூத்துக்குடியிலே இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரியிலே படித்தவர்களுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். P.G–க்குப் போக வேண்டும் என்றால், இந்த M.B.B.S. certificate–ஐ ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று சொன்னார்கள் என்ற ஒரு குறைபாட்டைச் சொல்லியிருக்கின்றார்கள். அது ஏன் என்பதை மட்டும் மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்து, இதோடு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சேகர்பாபு, நீங்கள் அரை நிமிடத்தில், (குறுக்கீடு) இல்லை, அதற்கு மேலே விடமாட்டேன். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒட்டுமொத்தமாகத் தமிழகத்திலே, ஏதோ ஒரு வகையிலே நோயின் தாக்கம் இருக்கின்றது என்பது நாம் அனைவரும் ஒத்துக்கொள்வது. அது எந்த நோய் என்பது அல்ல; அதைக் கட்டுப்படுத்துவதற்கு, இந்த மக்களோடு விளையாடிக்கொண்டிருக்கின்ற அந்த மர்ம நோயைக் கட்டுப்படுத்துவதற்கு, இந்த அரசானது உரிய சிகிச்சையை அளித்து, அது சிக்குன்குன்யாவோ அல்லது வேறு எந்த நோயோ, இந்த மக்களுடைய அன்றாட வேலைகளை இந்த மக்களுக்கு ஏற்படுகின்ற நோயின் தன்மையால், 15 நாட்கள், 20 நாட்கள் பணிக்குச் செல்லாமல், வேலைவாய்ப்பை இழந்து, உண்ணுகின்ற உணவிற்குக்கூட கஷ்டப்படுகின்ற ஒரு நிலையை உணர்ந்து, உடனடியாக இதற்குண்டான மாற்று மருந்தினைக் கண்டுபிடித்து, அந்த நோயின் தாக்குதலிலிருந்து, அதை சிக்குன்குன்யா என்று நான் பதிவு செய்ய விரும்பவில்லை, ஆனால் இறந்திருப்பது உண்மை. மேலும் உயிர்ப் பலி ஏற்படாமல் தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நீங்கள்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கையின் பதிலுரையிலே அது குறித்தெல்லாம் அமைச்சர் அவர்கள் சொல்லிவிடுவார்கள். (குறுக்கீடு) அமைச்சர் சொல்லிவிடுவார்கள். மாண்புமிகு டாக்டர் நெடுஞ்செழியன்.

***டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் தாயையும், தந்தையையும் வணங்கி, என் கன்னிப் பேச்சினைத் தொடங்குகின்றேன். நீண்ட நெடிய பாரம்பரியம் மிக்க இப்பேரவையில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை நல்கிய தந்தை பெரியாரின் வழித்தோன்றலாக வலம் வரும் சமூக நீதிக் காவலர், தமிழினப் போராளி, எங்கள் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இந்தியத் திருநாட்டில் ஜனாதிபதிக்குக் கொடுக்கப்படுகின்ற மருத்துவ வசதி சாமானிய ஏழைக் குடிமகனுக்கும் கிடைக்க வேண்டும் என்ற மனித நேய உணர்வோடு, அல்லும், பகலும் அயராது உழைத்து வருபவரும், இந்த நாட்டின் தலைவிதியையே மாற்றக்கூடிய மிகப் பெரிய வல்லமை படைத்திட்ட ஊடகங்களான திரை, சின்னத் திரைகளிலே புகைபிடித்தலைக் காட்டக்கூடாது என்று சட்டமியற்றியவரும், அமெரிக்க நாட்டின் மிக உயரிய விருதான லூதர் எல் டெர்ரி என்ற விருதினைப் பெற்றவரும், இளைஞர் படையின் எழுச்சி நாயகனுமான இந்திய நாட்டின் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) உலகெங்கும் வாழுகின்ற 7½ கோடித் தமிழ்

மக்களின் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்திருக்கின்றவரும், இந்தியத் திருநாட்டில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையில், இந்தச் சட்டப் பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டு காலம் உறுப்பினராக இருந்து, பொன் விழாக் கொண்டாட இருக்கின்ற பிறவிப் போராளி, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், சுட்டெரித்த வெயிலையும், சுழன்றடித்த காற்றினையும் பொருட்படுத்தாது, எனது தொகுதி நெடுக வலம் வந்து, பார்த்த மக்கள் அனைவரின் நெஞ்சங்களில் எல்லாம், எனது வெற்றிக்கு உழைத்திட வேண்டிய உத்வேகத்தை ஏற்படுத்திவிட்டு வந்த இளஞ்சூரியன், . எழுஞாயிறு அண்ணன் தளபதி அவர்களுக்கும், இந்தியத் திருநாட்டின் ஈடு இணையில்லாத பொருளாதார மேதை மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்களுக்கும், இந்த அவையிலே எங்களையெல்லாம் வழி நடத்திச் சென்றுகொண்டிருக்கும் ஓய்வறியா உழைப்பாளி, சேவைச் செம்மல், எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட உழவர், உழைப்பாளர் கட்சியினுடைய தலைவர் சொல்லேருழவன் செல்லமுத்து அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாமக்கல் மாவட்டச் செயலாளர் திரு. காந்திசெல்வன் அவர்களுக்கும், இந்தத் தேர்தலிலே என்னை இயக்கிய தி.மு.க. நாமக்கல் மாவட்டத் துணைச் செயலாளர் அன்பிற்குரிய நண்பர் கே.எஸ். மூர்த்தி அவர்களுக்கும், தயாரிப்பாளராக விளங்கிய காங்கிரஸ் பேரியக்கத்தின் நாமக்கல் மாவட்டத் துணைத் தலைவரும், எனது ஆருயிர் நண்பருமான பொன்னிமணி அவர்களுக்கும், வேலூர் அரிமா சங்கத்தினர்கள் அனைவருக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற அத்தனை கட்சிகளின் தலைவர்களுக்கும், செயல் வீரர்களுக்கும், என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற கபிலர்மலை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

● பிற்பகல் 12–25

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, 80 பக்கங்கள் கொண்ட நிதிநிலை அறிக்கையில் 8 பக்கங்களை வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கியிருந்தீர்கள். நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்குத் தலா இரண்டு ஏக்கர் நிலம் தருகிறீர்கள். உழவர் பெருமக்கள் வாங்கியிருந்த ரூ.7 ஆயிரம் கோடி கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். அவர்கள் வாங்கப் போகிற கடனுக்கு 9 விழுக்காடாக இருந்த வட்டியை 7 விழுக்காடாகக் குறைத்திருக்கிறீர்கள். ஏழை

விவசாயத் தொழிலாளர்களின் சமூகத்திற்குப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால், அந்த ஏழை விவசாயி மீண்டும் கடன்காரராக ஆகக் கூடாது. "பசித்தவனுக்கு மீன் கொடுப்பதைவிட அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பதே மேல்" என்ற ஆங்கிலப் பொன்மொழி உண்டு. வீட்டிற்கு மின் இணைப்புக் கேட்டால், உடனே கொடுத்துவிடுகிறீர்கள். வியாபாரத்திற்கு என்றால், உடனே மின் இணைப்புக் கொடுத்துவிடுகிறீர்கள். தொழிற்சாலைக்கு என்றால், உடனே மின் இணைப்புக் கொடுத்துவிடுகிறீர்கள். கல்விச் சாலைக்கு என்றால், உடனே மின் இணைப்புக் கொடுத்துவிடுகிறீர்கள். ஆனால், சேற்றிலே கை வைத்து, நமக்கெல்லாம் சோறு படைக்கின்ற ஏழை உழவன் மின் இணைப்புக் கேட்டால் ஒரு தலைமுறை காத்திருக்கச் சொல்லுகிறீர்கள்; அதாவது 20 வருடங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டுகிறேன். 5 இலட்சத்து 40 ஆயிரம் நபர்கள் விவசாய மின் இணைப்பிற்காகக் காத்துக்கொணடிருக்கிறார்கள். வருடத்திற்கு 40 ஆயிரம் விவசாய மின் இணைப்புத் தருகிறோம். 13 வருடங்களிலே மின் இணைப்பிற்காகக் காத்திருப்பவர்கள் அனைவருக்கும் தந்துவிடுவோம் என்ற கணக்கை மட்டும் சொல்வார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு மின் சக்தித் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களே, என் தந்தை 1987 ஆம் ஆண்டு மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்திருந்தார். இன்று வரை மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. ஆனால், என் தந்தை மறைந்துவிட்டார். இந்த நிலை என்ன காரணத்தால்? ஏழை உழவன் இலவசமாகக் கேட்பதாலா? இந்த உழவர் சமுதாயத்திற்கு மின் கட்டணத்தை மானியமாகக் கொடுக்க வேண்டும் என்பதாலா? எந்த வகையான மின் இணைப்பிற்கும் ஆண்டு உச்சவரம்பு இல்லை. ஆனால், ஏழை விவசாயிக்கு அளிக்கும் மின் இணைப்பிற்கு, ஆண்டிற்கு 40 ஆயிரம் மட்டும் என்ற உச்சவரம்பு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, பிரிட்டிஷ் அரசி இரண்டாம் எலிசபெத் 2003–2004 ஆம் ஆண்டு பெற்ற விவசாய மானியம் 13 இலட்சம் டாலர். இளவரசர் சார்லஸ் பெற்றது 4.8 இலட்சம் டாலர். டென்மார்க் இளவரசர் ஜோகிம் பெற்றது 2.2 இலட்சம் டாலர். அரசக் குடும்பங்கள் மட்டுமல்ல, அமெரிக்கா நாட்டின் மிகப் பெரிய தொழில் அதிபர்கள் டேவிட் ராக் பெல்லர், டெட் ரன்னர் கூட விவசாய மானியம்

பெற்றவர்கள். அமெரிக்காவில் 25 ஆயிரம் பருத்தி விவசாயிகள் நாள் ஒன்றுக்கு 101 இலட்சம் டாலர்கள் மானியமாகப் பெற்றிருக்கிறார்கள். ஏன், ஜப்பானில் உள்ள ஒரு பசு ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு 8 டாலர் மானியத்தைக் கொடுக்கின்றார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, இந்தத் தமிழ்த் திருநாட்டில் மின் சக்தித் துறையின் மொத்த உற்பத்தியை 30 விழுக்காடு பயன்படுத்திக்கொள்பவர்கள் யார் என்று தெரியுமா? உயர் அழுத்த மின் சக்தியைப் பயன்படுத்தும் வெறும் 5 ஆயிரத்து சொச்சம் தொழில் அதிபர்கள் மட்டும்தான். ஆனால் 1 கோடியே 17 இலட்சத்து 48 ஆயிரம் ஏழை உழவர்கள் பயன்படுத்தக்கூடிய மின் சக்தி, இந்த மின் சக்தித் துறையின் மொத்த மின் உற்பத்தியில் வெறும் 11 விழுக்காடு மட்டுமே.

மேலும், விவசாயிக்கு அளிக்கப்படுகின்ற மின்சாரத்திற்கான மானியத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், மின் சக்தித் துறையில் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியின் அளவிற்கும், மொத்தப் பயனாளிகள் பயன்படுத்திக்கொண்டிருக்கும் மின் சக்தியின் அளவிற்கும் இடையில் காணாமல் போகின்ற மின் சக்தியின் அளவுதான் விவசாயிகள் அனைவரும் பயன்படுத்துகிற மின் சக்தியின் அளவு என்பதைச் சுட்டிக்காட்டி, ஏழை விவசாயிகளுக்கு மின் இணைப்பிற்காகக் கொடுக்கப்படும் மானியத்தை ஒரு நிதிச் சுமையாக எடுத்துக்கொள்ளாது, கேட்காதவர்களுக்கும் வாரி, வாரி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, கேட்டுக் கேட்டு, பல ஆண்டுகளாகக் காத்திருக்கும் ஏழை விவசாயிகளுக்குப் போர்க் கால அடிப்படையிலே அனைவருக்கும் மின் இணைப்புத் தர ஆவன செய்யுமாறு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் உரையை முடியுங்கள்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு 35 நிமிடம் தந்திருக்கிறீர்கள். தி.மு.க. உறுப்பினர் அவர்களுக்கு 18 நிமிடங்கள் கொடுத்திருக்கிறீர்கள். தயவுசெய்து, மருத்துவர் என்ற முறையிலே நான் கேட்கிறேன். இனிமேல்தான், மருத்துவத் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டும்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதையெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது. சீக்கிரம் மருத்துவத் துறைக்கு வாருங்கள்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: அடுத்ததாக, தென்னக நதிகளை இணைப்பதற்கு முயற்சிப்பதாகவும், பாடுபடுவோம் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கின்றீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்களால் முடியாதது, நீங்கள் முயலாதது மட்டுமே. காவிரியில் கர்நாடகம், பாலாற்றில் ஆந்திர மாநிலம், பெரியாரில் கேரள மாநிலம் கை வைக்கின்றன. மாற்றார்களிடமிருந்து இந்தத் தமிழ்நாட்டைக் காப்பாற்ற, குறிப்பாகத் தமிழனைக் காப்பாற்ற உங்களை விட்டால் வேறு நாதியில்லை. எனவே, உங்களால் மட்டுமே முடியும் என்ற, தென்னக நதிகளை இணைத்து, நீங்கள் சரித்திரத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப்போல் இடம் பெற வேண்டுமென்று சொல்லி வணங்குகிறேன்.

மருத்துவன் என்ற அடிப்படையில் மருத்துவத் துறை மானியத்திற்கு வருகிறேன். எங்கள் சமூக நீதிக் காவலரும், தமிழ் இனப் போராளியுமான மருத்துவர் அய்யா அவர்களும், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் மாண்புமிகு சின்ன அய்யா அவர்களும், ஓய்வறியா உழைப்பாளி எங்கள் தலைவர் அவர்களும், மருத்துவத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்ததன் அடிப்படையில் சில கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் கருத்தே சொல்ல வரவில்லையா?

டாக்டர் க. நெடுஞ்செழியன்: 1972–77 ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் மிகச் சிறந்த மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சராக விளங்கியவரும், என்னை மருத்துவம் படிக்க அனுமதித்தவரும், எனது தந்தைக்குப் பேராசிரியராக விளங்கியவருமான, இன்றைய நிதித் துறை அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்கள், மருத்துவத் துறைக்கு மொத்த வருவாய்க் கணக்கில், தலைப்புச் செலவினங்களில் 5 விழுக்காடாவது செலவு செய்ய வேண்டும் என்ற World Health Organization வழிகாட்டலின்படி, 1,951 கோடியே 28 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் எண்ணற்ற, பாராட்டப்பட வேண்டிய, நல்ல பல அம்சங்களை எல்லாம் உள்ளடக்கிய மானியக் கோரிக்கையினை முன்வைத்திருக்கிறார்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். ஒரு நாட்டினுடைய மனித வள மேம்பாட்டிற்கு முதல் காரணம் ஆரோக்கியமான நோயற்ற வாழ்வே.

மக்கட்தொகைப் பெருக்கத்தோடு போட்டி போட்டுக்கொண்டு, நோய்களும், நோய்களின் எண்ணிக்கைகளும் பெருகி வருகின்றன. ஆனால், அந்த அளவுக்கு மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. வருடத்திற்கு 1,650 மாணவர்கள்தான் அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 410 மாணவர்களும் மட்டும்தான் சேர்க்கப்படுகிறார்கள். அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளாவில் ஆண்டொன்றுக்கு 3,000 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும். அதிலும் மிக, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் நிறைந்த தருமபுரி மாவட்டத்திற்கு முன்னுரிமை அடிப்படையிலே ஒரு மருத்துவக் கல்லூரி இந்த ஆண்டிலேயே அமைக்கப்பட வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு, அம்மாவட்ட மருத்துவக் கல்லூரிகளிலே அனைத்து வகையான நவீன வசதிகளை உள்ளடக்கிய மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அவசரகதியான உலகில் இதய நோயாலும், சர்க்கரை நோயாலும், சிறுநீரக நோயாலும், புற்று நோயாலும் அல்லல்படுகின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. ஏழை மக்களின் இருதய நோய்க்கு சிகிச்சை என்றால், சென்னைக்கோ, மதுரைக்கோ, கோயம்புத்தூருக்கோ சென்று, 3 மாதம் அல்லது 6 மாதம் காத்திருப்போர் பட்டியலிலே வைக்கப்படுகிறார்கள். புற்று நோய்க்கு சிகிச்சை என்றால், சென்னை அல்லது காஞ்சிபுரத்திலே மட்டும்தான் கிடைக்கின்றது. சிறுநீரகம் பழுது ஏற்பட்டால், அரசுத் துறையில் சிகிச்சை அபூர்வமாக இருக்கிறது.

இந்தியா கிராமங்களிலே வாழ்கிறது என்றார் மகாத்மா காந்தி அவர்கள். கடைக்கோடியிலே வாழ்கின்ற அந்தக் கிராம மக்களுக்கு முழுமையான சுகாதார வசதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர், தேசிய கிராமப்புறச் சுகாதாரத் திட்டத்தின் அடிப்படையிலே, இந்திய கிராமங்கள் அனைத்திலும் அந்தத் திட்டத்தை அமல்படுத்தி, மக்கள் அனைவருக்கும் அந்த சிகிச்சை கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில்

செயலபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் 3 முதல் 5 மணி நேரம்தான் பணி செய்கின்றார்கள். அதற்குப் பிறகு கிராம மக்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பது அரிதாகிறது. அதனால், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் செயல்படுகின்ற அளவுக்கு நிலையை உயர்த்த வேண்டும். அதற்கு, ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்துப் பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதியினைச செய்து தர வேணடும். குறைந்தபட்சம் மகப்பேறு மருத்துவம் பார்கின்ற ANM, FNA போன்றவர்களுக்கான குடியிருப்பினை உடனடியாக அமைத்துத் தர வேண்டும்.

நிலை உயர்த்தப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலே X Ray எடுக்கும் வசதிகள் உள்ளன. ஆனால், அவற்றை இயக்க 1 மாதமே training கொடுக்கப்பட்டவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களால் கண்டிப்பாக அந்த X-Ray machine-களில் எதிர்பார்த்தபடி X-Ray எடுத்துத் தர முடியாது. X-Ray Technician–களாகப் பயிற்சி பெற்றவர்களைப் பணியமர்த்த வேண்டும்.

பல அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாகனங்கள் உள்ளன. ஆனால், ஓட்டுநர்கள் இல்லை. பணியாளர்கள் பற்றாக்குறை பற்றிப் பேசுகின்ற நேரத்திலே முக்கியமான விஷயத்திற்கு வருகிறேன், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களே, இந்த அவையில் சிக்குன்குன்யா காய்ச்சலைப் பற்றிப் பல முறை விவாதிக்கப்பட்டது. இந்த வைரஸ் காய்ச்சல், தேங்கிக் கிடக்கும் நன்னீரில் முட்டையிட்டு இனப் பெருக்கத்தைச் செய்யும் Aedes Egypti என்ற கொசுவினால் உண்டாக்கப்படுகிறது. எனவே, வரும் மழைக் காலத்தில் இந்நோய் மேலும் பாவுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்புகளைக் குறைப்பதற்குக் குறைந்தபட்சம் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 5 மஸ்தூர்களைத் தற்காலிகமாகப் பணியமர்த்தி, 'Abate' என்ற மருந்தினை நன்னீர்த் தேக்கங்களில் தூவுவதற்கு வழிவகை செய்ய வேண்டுகிறேன்.

வட்டாரச் சுகாதார நிலையங்களில் HIV/AIDS சிகிச்சைப் பிரிவில் Lab Technician மற்றும் Counselling... (குறுக்கீடு) மருத்துவத்தைப் பற்றி மருத்துவர் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரே நிமிடம்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: செய்வதற்கும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஆனால் நோயாளிகள் ARVT Treatment–க்காக மாவட்ட மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, வட்டாரச் சுகாதார நிலையங்களிலேயே ARVT Treatment கொடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே பல மருத்துவமனைகள் வட்ட மருத்துவமனை நிலைக்கு உயர்ததப்படும் எனறு அறிவித்தார்கள். ஆனால், வெறும் அறிவிப்பு நிலையிலேயே உள்ளதே தவிர, எநதவித வசதிகளையும் ஏற்படுத்தித் தரவில்லை என்பதுதான் உணமை நிலை. எனவே, ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள வட்ட மருத்துவமனை அனைத்தையும் பல்வேறு சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளுடன், விபத்து மற்றும் அவசர கால சிகிச்சைப் பிரிவுகளை உள்ளடக்கிய மருத்துவமனையாக மாற்ற வேண்டுகிறேன். மேலும், ஒவ்வொரு மருத்துவமனையிலும், சுகாதார நிலையத்திலும் ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழுவினை, நம்முடைய நண்பர் ரங்கராஜன் சொன்னதைப்போல...

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நம்முடைய வேலூரைப் பற்றி மட்டும் சொல்லிவிட்டு முடித்துவிடுங்கள்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: அடுத்தபடியாக, எனது தொகுதித் தேவைகளுக்கு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை முன்பாகவே சொல்லி இருக்கலாம்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: அதுவும் உங்களுடைய ஊரைச் சம்பந்தப்படுத்தியது. அதனால் எனக்கு சிறிது நேரம் அவகாசம் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரே ஒரு நிமிடம் தருகிறேன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: எனது தொகுதி மக்களின் ஜீவாதாரம், இராஜா குமாரபாளையம், பொய்யேரி வாய்ககால் ஆகும். மாண்புமிகு முதல்வர் அவர்களே, தாங்கள் பொதுப் பணித் துறை அமைசசராக

இருந்து தமிழ்நாடு முழுவதும் வலம் வந்தபொழுது, ஒன்றியப் பெருந்தலைவராக இருந்த கபிலர்மலை கந்தசாமி என்றழைக்கப்படும் எனது தந்தையுடன் வாய்க்கால் மற்றும் வாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள நீரேற்றுப் பாசனங்களையெல்லாம், கொட்டுகின்ற மழையினையும் பொருட்படுத்தாது பார்வையிட்டு, "நானும் வந்தேன், மழையும் வந்தது, உங்களுக்குத் தண்ணீரும் வரும்" என்று பேசியது உங்களுக்கு நினைவிருக்கக்கூடும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, அந்த இராஜ கால்வாய், பரமத்தியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி புரிந்த அல்லாள இளைய நாயக்கன் என்ற வேட்டுவ குல மன்னனால் வெட்டப்பட்டது. அக்காலத்தில் அதன் பாசனப் பரப்பு 6 ஆயிரம் ஏக்கர். பின்னர் பல்வேறு காலக்கட்டங்களிலே அரசால் அனுமதிக்கப்பட்ட பாசனப் பரப்பு கூடுதல் 6,000 ஏக்கர்களுக்குக் குறைவில்லாமல் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி சீக்கிரமாக உரையை முடித்துவிடுங்கள்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: ஆனால் அவ்வாய்க்காலின் பாசன மேம்பாட்டிற்கெனக் கடந்த காலங்களில் இதுவரை எந்தப் பணியும் செய்யவில்லை. எனவே, கால்வாய்களின் கரைகளை lining செய்தும், இராஜா காலத்து மதகுகளை மாற்றி, shutter-களுடன்கூடிய மதகுகளை அமைத்தும், pillar-களுடன் இருக்கும் பாலங்களை அகற்றிவிட்டு, pillar-களற்ற பாலங்களாக மாற்றித் தந்து, எங்கள் பகுதி விவசாயிகளின் வாழ்வில் ஒளி ஏற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, கடந்த 29-1-2001-ல் இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே, காவிரியின் குறுக்கே மோகனூருக்கும், வாங்கலுக்கும் இடையே உயர் மட்டப் பாலம் ஒன்று அமைக்கப்படும் என்றும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவித்துள்ளீர்கள். அதனை ஐந்தாம் முறையாக ஆட்சிக் கட்டிலிலே, அரியணையிலே ஏறி இருக்கின்ற நீங்கள் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களே, சோழசிராமணியிலே அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற தடுப்பணையில் வாகனங்கள் செல்லுகின்ற வகையிலே 14 அடி அகலமுள்ள பாதைக்குப் பதிலாக 21 அடி அகலமுள்ள பாதை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

நாமக்கல் மாவட்டத்திலேயே எனது தொகுதியில் இருக்கின்ற பரமத்திவேலூர் அரசுப் பொது மருத்துவமனை மட்டும்தான் இன்னும் வட்ட மருத்துவமனை நிலைக்கு உயர்த்தப்படாமல் இருக்கிறது என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொண்டு, உடனடியாக அனைத்து சிறப்பு மருத்துவப் பிரிவுகளுடன்கூடிய வட்ட மருத்துவமனை நிலைக்குப் பரமத்திவேலூர் மருத்துவமனையை உயர்த்த வேண்டுகிறேன். நான் இந்த அரசு அமைந்த பிறகு கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக, பொது அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவரை நியமிக்கக் கேட்டுக்கொண்டிருக்கிறேன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ஜான் ஜோசப்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: நன்றி, நன்றி, நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, நேரத்தை நான் adjust பண்ணியாக வேண்டும். அவையை நடத்தியாக வேண்டும்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: சர்க்கரை ஆலையைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, வேண்டாம். எழுதிக் கொடுத்துவிடுங்கள். ஜான் ஜோசப். (குறுக்கீடுகள்) ஜான் ஜோசப் (குறுக்கீடுகள்) ஜான் ஜோசப்.

திரு. கு. ஜான் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்று வள்ளுவர் கூறுவார். உலக சுகாதார அமைப்பும், Indian Council of Medical Research-ம் ஒரு அதிர்ச்சித் தகவலை சமீபத்தில் வெளியிட்டுள்ளன. தற்போதைய நிலையே நீடித்தால், 2020 ஆம் ஆண்டு இதய நோய் மற்றும் நீரிழிவு நோயின் தலைநகரமாக இந்தியா மாறும் என்பதுதான் அந்தத் தகவல். நமது மருத்துவத் துறையிலும், வாழ்க்கை முறையிலும் பெரும் மாற்றம் தேவை என்பதையே இது உணர்த்துகிறது. சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க haemodialysis unit ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் குறைந்தபட்சம் இரண்டு தேவைப்படுகின்றன. தமிழகம் முழுவதும் நாளமில்லாச் சுரப்பித் துறையின் சேவை மிகப்

பலவீனமாக உள்ளது. எடுத்துக்காட்டாக, தைராய்டு சோதனையின் result கிடைக்க இரண்டு மாதம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. எல்லா மருத்துவமனைகளிலும் எல்லாவிதமான harmone சோதனைகளும் செய்யப்பட வேண்டும். கருப்பை வாய்ப் புற்று நோய், மார்பகப் புற்று நோய் போன்றவற்றின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தொடக்க நிலையிலேயே இவற்றைக் கண்டறிவதற்காக, pap smear போன்ற எளிமையான சோதனைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடத்தவும், C.T. ஸ்கேன் வசதி எல்லாத் தாலுகா மருத்துவமனைகளிலும் ஏற்படுத்தவும் பணிவாய் வேண்டுகிறேன்.

பிற்பகல் 12—40

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்த நோயாளிகளுக்கு, குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழக்கூடிய நோயாளிகளுக்கு, விலை உயர்ந்த Azathioprine, Cyclosporine ஆகிய மாத்திரைகள் சென்னையில் மட்டுந்தான் வழங்கப்படுகின்றன. 15 தினங்களுக்கு ஒரு முறை அந்த நோயாளி, ஒரு உதவியாளருடன் சென்னைக்கு வர வேண்டியுள்ளது. எனவே, தென் மாவட்டங்களில் ஒரு மையத்தில் இதை வழங்க வேண்டும்.

இரத்த வங்கி உள்ள மருத்துவமனைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், இரத்த தானம், கண் தானம் போன்றவற்றை ஊக்கப்படுத்தவும் அரசு ஏதேனும் திட்டத்தை அறிவிக்க வேண்டும். 'இறக்கும்போது கண்களைத் தாரை வார்த்து, இறந்தாலும் ரசிக்கலாம் உலகைப் பார்த்து' என்றார் ஒரு கவிஞர். மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் சமீபத்தில் ஒரு புள்ளிவிவரத்தைக் கூறியிருக்கிறார். ஆண்டுதோறும் இந்தியாவில் ஒரு இலட்சம் கண்கள் தேவைப்படுகின்றன. ஆனால், தானமாகக் கிடைக்கும் கண்களோ வெறும் 25 ஆயிரம் மட்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் யாவரும் கண் தானம் செய்ய முன்வந்தால் சிறப்பாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு மருத்துவரை உருவாக்க அரசுப் பணம் பல இலட்சம் ரூபாய் செலவாகிறது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 3,000 மருத்துவர்கள் வெளி வருகிறார்கள். நம் வீட்டு நெல்லைச் சாப்பிட்டு, அடுத்த வீட்டில் முட்டையிடும் கோழியைப்போல், இவர்களில் பலரின் சேவை நாட்டுக்குக் கிட்டாமல் போகிறது. ஆகவே, ஒவ்வொரு மருத்துவரும் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் கிராமம் மற்றும் குக்கிராமங்களில் வேலை செய்வதைக் கட்டாயமாக்க வேண்டும்.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்த எண்ணிக்கையில்தான் இப்போதும் மருத்துவர், செவிலியர் உள்ளிட்ட பணியாளர் strength உள்ளது. இதை அதிகப்படுத்துவதுடன், காலியிடங்களையும் நிரப்ப வேண்டும். நிர்வாக அலுவலர், இளநிலை நிர்வாக அலுவலர் காலியிடங்கள் 6 மாதங்கள் நிரப்பப்படாமல் இருந்தால், அவை abolish ஆகும் என்ற விதியை அகற்றவும், கடந்த ஆட்சியில் abolish செய்யப்பட்ட பணியிடங்களுக்கு மீண்டும் புத்துயிரூட்டவும் வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எனது தொகுதிக்குட்பட்ட குழித்துறையில் ஒரு தாலுகா மருத்துவமனை உள்ளது. மருத்துவர், செவிலியர், துப்புரவாளர், technician—கள், தேவைக்கேற்றபடி இல்லை. இம்மருத்துவமனைக்கு 3 மாடிக் கட்டடங்களை அமைக்க ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அவையில் தாக்கல் செய்துள்ள கொள்கை விளக்கக் குறிப்பில், குமரி மாவட்ட மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடங்கள் தருவதாக அறிவித்துள்ளார்கள், அதை வரவேற்கிறோம். அந்த நிதியில் இக்கட்டடத்தையும் இணைக்குமாறு மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தூத்தூர், இடைக்கோடு, பத்துகாணி, குட்டக்குழி போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் manpower மற்றும் கருவிகளின் பற்றாக்குறை உள்ளது. இவற்றைத் தரம் உயர்த்தவும் வேண்டும். மலையோர மக்களுக்குச் சேவை செய்யும் குலசேகரம் அரசு மருத்துவமனையைத் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும், கடலோர மக்களின் தேவையைக் கருத்திற்கொண்டு, கொல்லங்கோட்டில் அரசு மருத்துவமனை நிறுவவும் வேண்டுகிறேன். அருமனை மருத்துவமனையில் 12½ இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டடம் பயனற்றுக் கிடக்கிறது. கோட்டாறு மருத்துவமனையில் கட்டட வசதி இருப்பதால், அதில் அறுவை சிகிச்சை உள்ளிட்ட வசதிகள் கொண்ட இ.எஸ்.ஐ. தலைமை மருத்துவமனை அமைக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதை குமரி மாவட்ட மக்கள் சார்பாக மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். அரசு மருத்துவமனைகளில் ஓமியோ பிரிவுகளைத் தொடங்குவது பற்றியும் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். குமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரிக்குப் பெயர் மட்டுந்தான் இருக்கிறது. Cardiology, Nephrology, Urology, Gastrology, Diabetology, Critical Care Unit போன்ற

பிரிவுகள் எதுவும் கிடையாது. மேற்சொன்ன பிரிவுகளைத் தொடங்கவும், M.R.I. Scan உட்பட நவீனக் கருவிகளை நிறுவவும் ஆவன செய்யுமாறு அரசைப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். தேவைப்படும் மருத்துவர்கள், செவிலியர்கள், கருவிகளை இயக்க Radiologist–கள் உள்ளிட்ட technician–களை sanctioned post–ல் நியமிக்கவும் வேண்டுமென்று பணிவாய்க் கேட்டுக்கொள்கிறேன். இம்மருத்துவக் கல்லூரியில் கடந்த மூன்று வருடங்களாக 12 பெண்கள் உட்பட 52 தினக்கூலிகள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வந்தனர். ஆறு மாதங்கள்தான் ஊதியம் வழங்கப்பட்டது. இரண்டரை வருட ஊதியப் பாக்கியைக் கேட்டதால், வேலையைவிட்டு நீக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் அதிகமான ஊழியர்கள் அங்கே தேவையுள்ள நிலையில், அந்த 52 பேர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து நியமனம் வழங்க வேண்டும்.

பிற்பகல் 12–45

திண்டுக்கல், பேகம்பூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனை மூடப்படுவதைக் கைவிடவும், நாகை தொகுதி, நாகூர் மருத்துவமனையில், பழுதடைந்த அறுவை சிகிச்சை அரங்கைச் சீர்செய்யவும் வேண்டும். திருப்பூரிலுள்ள கோவை மாவட்ட மருத்துவமனைக் கட்டடம் இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளது. எனவே, இம்மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். தொழிலாளர்கள் அதிகமாக வாழும் வியாசர்பாடியில் அரசு புறநகர் மருத்துவமனையை அமைக்க வேண்டும். குடியாத்தம் அரசு மருத்துவமனையில் பிரசவப் பிரிவு உட்பட கட்டடங்கள் மிக மோசமாக உள்ளதால், புதிய கட்டடங்கள் அமைக்கவும், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டார மருத்துவமனையைத் தரம் உயர்த்தவும் ஆவன செய்ய வேண்டும். மதுரை கிழக்குத் தொகுதியில் சின்னக்கண்மாய்ப் பகுதியில் அரசு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கவும், மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவக் கல்லூரிக்காக ஒதுக்கப்பட்ட அண்ணா பேருந்து நிலைய இடத்தைக் கையகப்படுத்திப் பணிகளைத் தொடங்கவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

மருத்துவத் துறையில் நிருவாக ஊழியர்களுக்கும் கவுன்சலிங் முறையில் இட மாறுதலை அமல்படுத்தவும், இதுவரையில் பணி வரன்முறை செய்யப்படாமல் உள்ள நிருவாக ஊழியர்களுக்குப் பணி வரன்முறை செய்யவும் அரசு ஆணையிட வேண்டும். மருத்துவமனைகளில் 16 ஆண்டுகளாக 400–க்கும் மேற்பட்ட பதிலிப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்.

மருத்துவக் கல்லூரிகளில் 2001 வரை Higher Speciality மற்றும் Degree ஆகிய இரண்டையும் ஒரே பிரிவாகக் கொண்டு, ரூ.6,318/– கல்விக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. பின்னர் வந்த அண்ணா தி.மு.க. அரசு, இந்த இரண்டையும் இரண்டாகப் பிரித்து, முறையே ரூ.54,289/–ம், ரூ.34,789/–ம் என கட்டணத்தை அபரிமிதமாக உயர்த்தியது. இவற்றை மீண்டும் ஒரே பிரிவாக மாற்றி, கட்டணத்தைக் கணிசமாகக் குறைக்க வேண்டும்.

1990 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், அரசு அளித்த தொழுநோய் ஆய்வாளர் பயிற்சி முடித்த 52 பேர்களுக்கும் பணி நியமனம் வழங்க வேண்டும். கடந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்ட (மணியடிக்கப்பெற்றது) out–sourcing முறையை ரத்துச் செய்ய வேண்டும். தமிழகத்தில் மருத்துவப் பொறியியல் துறையை உருவாக்கி, பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களை நியமித்தால், அரசு மருத்துவமனைகளில் பழுதாகும் விலையுயர்ந்த கருவிகளை உடனுக்குடன் சரி செய்ய முடியும். தொழுநோய் இல்லங்களில் பணியாற்றும் காவலர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும்.

சென்னை, எழும்பூர் தாய்–சேய் நல மருத்துவமனையில் ரூ.2 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்ட பிரசவம், குறைப் பிரசவம் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகள் ஒன்றரை வருடங்களாகத் திறப்பு விழாவுக்குக் காத்துக் கிடக்கின்றன. துரிதமாகத் திறந்து செயல்பட வைக்க வேண்டும். சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் Septic ward–9, மிக மோசமாகவும், சுகாதாரக் கேட்டின் இருப்பிடமாகவும் உள்ளது. சரி செய்ய வேண்டும். நாய்க் கடி, பாம்புக் கடி மருந்துகள் தட்டுப்பாடு தவிர்க்கப்பட வேண்டும். எல்லா மருத்துவமனைகளிலும் அவை கிடைக்கச் செய்ய வேண்டும். இருதய நோயாளிகளுக்கு, அதிலும் குறிப்பாக, குழந்தைகளுக்கு சீனியாரிட்டி முறையைக் கைவிடவும், இருதய நோயாளிகளுக்கான சிகிச்சை உதவித் தொகையை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தவும், அது காலத்தே கிடைக்கவும், பொருளாதார இலாபம் கருதி, பிற மாநிலத்தின் அரசு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்பவர்களுக்கும் இத்தொகையை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12–50

தமிழ்நாட்டில் மருத்துவத் துறைக்கு மூன்று இயக்குனரகங்கள் இருந்தும், மருத்துவச் சேவை உரிய இலக்கை அடையவில்லை. ஆகவே, குறைபாடுகளைக் கண்டறியவும், அவற்றை நிவர்த்தி செய்வதற்குமான

ஆலோசனைகளைப் பரிந்துரைக்கவும் நிபுணர் குழுவை அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியத்தில், முகையூர் அரசு மருத்துவமனையில் 15 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அண்ணா தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டு, மருத்துவர், செவிலியர் பதவி போடவில்லை. இந்த அரசு நியமனம் செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

***திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மக்களுக்கான ஒரு முக்கியமான மானியக் கோரிக்கையின்மீது இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்ற பழமொழிக்கேற்ப ஒரு நாடு எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டுமானால், அங்கு வாழ்கின்ற மக்கள் நல்ல உடல் நலத்தோடு வாழ வேண்டும். நல்ல உடல் நலத்தோடு, ஆரோக்கியத்தோடு இருக்கின்ற மனிதனால்தான் சிறந்த உழைப்பையும், ஒருங்கிணைந்து சிந்திக்கின்ற ஆற்றலையும் பெற முடியும். அதன்மூலம்தான் பல துறைகளில் வளர்ச்சியும், முன்னேற்றமும் அடைய முடியும். அந்த அடிப்படையில் இந்த அரசு தனி மனித உடல் நலப் பாதுகாப்பு என்ற அடிப்படையில் சிறந்த ஒரு கொள்கைக் குறிப்பை வெளியிட்டிருக்கிறது.

நோய்த் தடுப்பு, நோய்த் தீர்வு மற்றும் உடல் நலம் மேம்படுதல் என்கின்ற அடிப்படையில் இந்தத் திட்டங்கள் இங்கு வகுக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் முழு மனதோடு வரவேற்கின்றேன். அரசு எடுத்திருக்கிற பல நல்ல திட்டங்கள், நல்ல முன் முயற்சி ஆகும். அதே வேளையில் தற்போது உருவாகி இருக்கிற தனியார்மயம் என்ற கொள்கை மருத்துவத் துறையில் வேகமாகப் புகுந்திருக்கிறது. தனியார் மருத்துவக் கல்லூரிகள், தனியார் மருத்துவமனைகள், அவற்றின் செயல்பாடுகளை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிட முடியாது. புதிய, புதிய வசதிகளோடு விளம்பரப்படுத்தப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மக்களுக்கு மகத்தான மருத்துவ வசதிகளைச் செய்து தருவதாக ஒரு தோற்றத்தை உருவாக்கினாலும், அதிலே மக்கள் ஏமாற்றப்படுவதும், அவர்களுடைய பணம் கொள்ளை போவதையும் அரசு தடுத்து நிறுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்த மருத்துவமனைகளால் நடுத்தர மக்கள் பெரிதும் இன்னலுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இறந்தவர்களின் உடலை வைத்துக்கொண்டுகூடப் பேரம் பேசுகிறார்கள். 13–8–2006 ஆம் தேதி இங்கே சென்னையிலே இருக்கின்ற MIOT என்ற ஒரு மருத்துவமனையில் எங்கள் பகுதியைச் சார்ந்த ஒரு நபர் கால் ஒடிந்து அனுமதிக்கப்பட்டிருந்தார். மூன்று operations செய்யப்பட்டு, 14 நாட்களுக்குப் பின்னால் அவர் இறக்கிறார், ஒரு கால் ஒடிந்ததற்காக மட்டுமே. கிட்டத்தட்ட 80 ஆயிரம் ரூபாய் பணம் கட்டியதற்குப் பின்னால், இறந்தவருடைய உடலை வைத்துக்கொண்டு மேலும் 27 ஆயிரம் ரூபாய் கட்டினால்தான் உடலைக் கொடுப்போம் என்று சொன்னார்கள். மிகப் பெரிய போராட்டம் நடத்தி, அதற்குப் பிறகு அந்த body–யை வாங்கி இருக்கிறோம். இப்படிப்பட்ட செயல் தமிழகம் முழுவதும் இருக்கிற தனியார் மருத்துவமனைகளில் நடந்துகொண்டிருக்கிற ஒரு சூழலில், அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இந்த மருத்துவமனைகளின் கட்டுப்பாடற்ற, கண்காணிப்பற்ற செயல்களால் அரசு மருத்துவர்களிடம் ஏற்பட்டிருக்கிற பாதிப்பும், அரசுத் துறை மருத்துவமனைகளில் மக்களுக்காக மருத்துவச் சேவை என்ற கட்டமைப்பையே தகர்க்கிறது. இதை ஒழுங்குபடுத்துவதற்கு அரசு திட்டத்தை வகுக்க வேண்டும். தனியார் மருத்துவக் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் நன்கொடைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

வறுமைக் கோட்டிற்குக் கீழும் மற்றும் நடுத்தர மக்கள் 80 சதவிகிதத்திற்கு மேல் வாழும் தமிழகத்தில் அரசு மருத்துவத் துறையை அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய, மக்களுக்கு முழுமையான மருத்துவ வசதிகள் கிடைக்கிற துறையாக மாற்ற வேண்டியது அவசரத் தேவையாகும். ஆரம்ப சுகாதார நிலையம், வட்ட அளவில் உள்ள சுகாதார மையங்கள் மற்றும் மாவட்ட அளவிலான தலைமை மருத்துவமனைகளிலுள்ள மருத்துவர் முதல் கீழ்நிலையில் வேலை பார்க்கும் பணியாளர்கள் வரை உள்ள காலி இடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். மாவட்டத் தலைநகரங்களிலுள்ள மருத்துவமனைகளை, அரசின் திட்டமான, மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் அனைத்து வசதிகளையும் கொண்டுள்ள மருத்துவமனையாக மாற்ற வேண்டும். அரசுத் துறையில் பணிபுரியும் அனுபவமிக்க மருத்துவர்கள், வருமானம் என்ற அடிப்படையில் தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்வதைத் தடுக்கத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12-55

மத்திய அரசு மருத்துவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் மாநில அரசில் வேலை பார்க்கக்கூடிய மருத்துவர்களுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, மருத்துவக் கல்லூரியில் படித்து முடித்த அனைத்து மருத்துவர்களும் குறிப்பிட்ட ஆண்டு அரசுத் துறையில் வேலை பார்க்க வேண்டுமென்ற சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

கிராமப்புற மருத்துவமனைகளில் வேலை பார்க்கும் மருத்துவர்களுக்குப் பட்ட மேற்படிப்புக்கான படிப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். மருத்துவ மேற்படிப்புக்கான எண்ணிக்கையை அதிகப்படுத்துதல் வேண்டும், மற்றும் மத்திய அரசுக்கு நமது மாநிலத்திலிருந்து மேற்படிப்புக்காக வழங்கக்கூடிய 50 சதவீத quota-வை ரத்துச் செய்ய வேண்டும். முழு வாய்ப்பும் தமிழக மாணவர்களுக்கே கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மருத்துவக் கல்லூரிகளை உருவாக்குகிற நேரத்தில், அங்கே பயிற்றுவிக்கிற பேராசிரியர்கள் கிடைக்காத ஒரு சூழ்நிலையிருக்கிறது. எனவே, மருத்துவப் பேராசிரியர்களை உருவாக்கக்கூடிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

பட்ட மேற்படிப்பில் எட்டு இடங்களுக்குக் குறைவாக உள்ள இடங்களுக்கு இட ஒதுக்கீடு இல்லாத ஒரு நிலை நீடிக்கிறது. அதிலும் சுழற்சியான முறையிலே இட ஒதுக்கீட்டைக் கொண்டு வர வேண்டும்.

அரசு மருத்துவமனையில் இன்றைக்குச் சிறப்பாகச் செயல்படுகிற மருத்துவர்களும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எந்தவிதமான சமூக அங்கீகாரமும் இல்லாத சூழலில் ஜூலை ஒன்றாம் தேதி, 'மருத்துவர்கள் தினத்தன்று' அவர்களுக்கு மாவட்ட, மாநில அளவில் சிறந்த மருத்துவர்களுக்கான விருதுகளை வழங்குவதற்கு நமது முதல்வர் அவர்கள் அறிவிப்புகளை வெளியிட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அரசு மருத்துவமனையில் நான்காம் நிலைப் பணியாளர்களை outsourcing முறையில் தனியார் agency—கள்மூலம் நியமனம் செய்யும் முறையை ஒழிக்க வேண்டும். அரசே பணி நியமனம் செய்ய வேண்டும்.

தமிழகம் முழுவதும் உள்ள பகுதி செவிலியர்கள் தினக்கூலிகளாகக் கடந்த 20 ஆண்டுகளாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்.

1997—ல் பொது மருத்துவத் துறையுடன் தொழுநோய்த் துறை இணைக்கப்பட்டபோது, அரசு ஆணை எண் 320—ன்படி இத்துறையில் பணிபுரியும் தினக்கூலிப் பணியாளர்களையும், 52 பயிற்சி பெற்ற தொழுநோய் ஆய்வாளர்களையும் அரசுப் பணிக்கு எடுக்க வேண்டும் என்று அரசு முடிவு எடுக்க வேண்டும். தற்காலிகப் பணியாளர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்ட 540 மருந்தாளுநர்களைக் கால முறை ஊதியத்திலே கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊராட்சிக்கு ஒரு கிராமச் செவிலியர் என்ற அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டிருந்த நிலையில், கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பணி நியமனம் இல்லாததால், கிராமச் செவிலியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றை உடன் நிரப்ப வேண்டும்.

அதேபோல, இங்கு திருச்சி மருத்துவமனையைத் தரம் உயர்த்துவது பற்றி விவாதம் வந்தது. சேலம் மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் தரத்திற்கு உயர்த்துகிற அந்த வாய்ப்பை திருச்சி மருத்துவமனையையும் சேர்த்து அறிவிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இன்றைக்கு அந்தத் திட்டத்தில், உத்தரப் பிரதேசம், ஆந்திரம் போன்ற மாநிலங்களிலே இரண்டு மருத்துவமனைகளுக்குத் தரம் உயர்த்துகிற வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சேலத்திற்கும், திருச்சிக்கும் அந்த வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும்.

மாண்புமிகு நமது முதல்வர் கலைஞர் அவர்களுடைய முந்தைய ஆட்சியால் போடப்பட்ட அரசாணையின்படி 20 ஆண்டுகளாகப் பணிபுரியும் பகுதிப் பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அனைத்து மருத்துவமனைகளிலும் Physiotherapist பணியாளர்களைப் பணியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுச் சுகாதாரத் துறை, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் ஆண், பெண் அடிப்படைப் பணியாளர்களுக்குக் கல்வித் தகுதியின் அடிப்படையில் சுகாதார ஆய்வாளர் நிலை 2—க்கு, சுகாதார ஆய்வாளர் பயிற்சி அளித்துப் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும்.

அதேபோல, இன்றைக்கு அரசு ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடிய Operation theatre—களில் கிருமிகளை ஒழிப்பதற்கான மருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள். அதிலே வேலை பார்க்கக்கூடிய பணியாளர்கள் எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் அங்கே பணி செய்வதால் அவர்களுக்கு உடல் நலம் சீர்கேடடைகிறது. எனவே, அவர்களுக்குப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேனி மருத்துவக் கல்லூரியில் 200—க்கும் மேற்பட்டவர்கள் contract முறையிலே பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்வற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, சிவகங்கை மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற நிலையில், சிவகங்கை தலைமை மருத்துவமனையில் மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்கெனவே விடுத்திருக்கிறேன். அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதிக்க வேண்டிய அதே நேரத்தில், மாவட்டத் தலைமை மருத்துவமனையில் உடனடியாக Nursing பள்ளியையும் உருவாக்கித் தருவதற்கான நடவடிக்கையையும் எடுக்க வேண்டும்.

பிற்பகல் 1–00

அதேபோல, தலைமை மருத்துவமனையாக இருந்தும், 24 மணி நேரமும் இயங்கக்கூடிய casualty பிரிவு அங்கே இல்லை. அதை உடனடியாகத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தாய்—சேய் நல விடுதியிலே குழந்தைப் பராமரிப்புக்கு என்ற பிரிவு அங்கே இல்லாததால், அங்கே ஏற்படக்கூடிய சிக்கலான சூழ்நிலையில் குழந்தைகளை மதுரையிலே கொண்டு போய்ப் பாதுகாக்கின்ற வகையில் warm—லே வைக்க வேண்டி இருக்கிறது. தாய் சிவகங்கையிலே இருக்கிற மோசமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, குழந்தைகளைப் பராமரிக்கிற ஒரு பிரிவு அங்கே உடனடியாக நிறுவப்பட வேண்டும்.

அதேபோல, சிவகங்கை மாவட்டத்தில் கிட்டத்தட்ட பல்வேறு வட்ட, கிராம அளவிலே இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் 13 மருத்துவப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்பித் தருகிற நிலையில் துணை மருத்துவப் பணிகளிலே இருக்கக்கூடிய ஆய்வாளர், ஆய்வக நுட்பாளர் 6 பேர், எக்ஸ்ரே பிரிவில் 6, Nursing Assistants 22, துப்புரவுப் பணியாளர்கள் 17, சலவைப் பணியாளர்கள் 3, மருத்துவப் பணியாளர்கள் 13, சமையல் அறைப் பணியாளர்கள் 4, அலுவலக உதவியாளர்கள் 5 என்ற அடிப்படையில் அடிப்படைப் பணியாளர்களுடைய காலி இடங்கள் இருப்பதால், அங்கே எந்தவிதமான சுகாதார நடவடிக்கையும், அடிப்படைப் பணியாளர்களுடைய வேலைகளும் நடைபெறவில்லை. அவற்றை நிரப்பித் தர வேண்டும்.

காளையார்கோவிலிலே இருக்கக்கூடிய வட்ட மருத்துவமனையிலே மருத்துவர் நியமிக்கப்பட வேண்டும். இளையான்குடியில் இடிந்த நிலையில் இருக்கக்கூடிய மருத்துவமனைக் கட்டடத்தை உடனடியாக கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரியிலே, தமிழ் வழியிலே படித்துவிட்டு வந்திருக்கக்கூடிய மாணவர்கள். முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மருத்துவப் படிப்பிலே ஆங்கில மொழியால் மிகப் பெரிய சிரமத்திற்கு ஆட்படுகிறார்கள். எனவே, முதலாமாண்டு, இரண்டாமாண்டு எழுத்துத் தேர்வையும், வாய்மொழித் தேர்வையும் தமிழிலே நடத்துவதற்கான ஆணையை நமது முதல்வர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

போதை போன்றவற்றால் இளைஞர்கள் வாழ்வு சீரழிந்துள்ள நிலையில், மாவட்ட மருத்துவமனைகளுடன் இணைந்ததாக, போதை மற்றும் மனநலக் காப்பகத்தையும் உருவாக்கித் தர வேண்டும்.

இந்தியா முழுவதும், உலகம் முழுவதும் உள்ள கொடுமையான நோயான AIDS நோய் தமிழகத்திலும் மிகப் பரவலாகப் பரவியிருக்கிற ஒரு சூழலில், பில் கேட்ஸ் அவர்கள் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியாவில் அந்த நோயை ஒழிப்பதற்காக, ஒரு இலட்சம் கோடி ரூபாயை AIDS ஒழிப்பிற்காக அளித்திருந்தார். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிற்கும் கிட்டத்தட்ட 1,000 கோடி ரூபாய் 20 ஆண்டுகளுக்குச் செலவிடுவதற்காக ஒரு திட்டத்தை அறிவித்து, 2004 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டது. ஆண்டுக்காண்டு 50 கோடி ரூபாய் தவணையிலே அந்தத் திட்டத்தை அமலாக்குவதற்கான நடவடிக்கையை எடுத்திருந்தார்கள். கடந்த அ.தி.மு.க. அரசு நிதியை ஒரு தனியார் நிறுவனத்திற்கு, V.H.S. என்று சொல்லக்கூடிய Voluntary Health Services என்ற, தரமணியிலே இயங்கக்கூடிய அமைப்புக்கு ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் என்ற அடிப்படையில், 2 ஆண்டுகளுக்கு 100 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பணம் முறையற்ற வழியில் செலவிடப்பட்டு, ஊழல் நடந்திருக்கிறது. இந்த நடவடிக்கைக்கு எவ்வளவு ஆதாயம் பெறப்பட்டது என்பதை எல்லாம் தெரிவித்து, அந்த நிறுவனத்திற்கு வழங்கப்படக்கூடிய அந்த நிதியை நிறுத்தி, அரசுத் துறையிலே செலவிடுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. குணசேகரன், சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் நான் ஓர் உறுப்பினராவதற்கும், இங்கு உரையாற்றுவதற்கும் வாய்ப்பளித்த மனித நேயப் பண்பாளர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் எங்கள் ஆருயிர் அண்ணன் திரு. வைகோ அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை [illegible]கரன்) தலைமை]

எனது தொகுதிக்கு வருகை தந்து, எனது வெற்றியை உறுதி செய்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த, இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் ஜனநாயக மக்கள் கூட்டணியின் மாநில, மாவட்ட, நகர, ஒன்றியக் கிளைகள் அமைப்பினுடைய தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், செயல் வீரர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1—05

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அரசியல் சாசனம் ஆக்கித் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களை நினைவுகூர்ந்து, எனை ஈன்ற என் பெற்றோர்களை வணங்கி, அரசியலில் ஆரோக்கியம், இந்த அரங்கத்தில் ஆரோக்கியம், இங்கிருக்கின்ற உறுப்பினர்களின் ஆரோக்கியம் நன்கு இருக்க வேண்டுமென்ற விருப்போடும், வேண்டுதலோடும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான எனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இது எனக்குக் கன்னிப் பேச்சு. என் தொகுதியைப் பற்றிச் சில கோரிக்கைகளைக் கேட்டுக்கொள்கின்றேன். வாசுதேவநல்லூர் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரலில் அமைந்திருக்கின்ற ஒரு தொகுதி. NH—208, தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற ஒரு தொகுதி. இது மேற்குத் தொடர்ச்சி மலையின் சாரலில் அமைந்திருக்கின்றதால், விவசாயிகள் நிறைந்த தொகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கு

மலைப் பிரதேசமாக இருக்கின்ற காரணத்தினால், வன விலங்குகள் அடிக்கடி விவசாயிகளின் பயிர்களை அழிக்கின்றதோடு, விவசாயிகளின் உயிருக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. வனத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததைப்போல், அப்பகுதியில் சூரிய மின் வேலியும், அகழியும் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

மேலும், வாசுதேவநல்லூர் தொகுதியில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்பட்டு அரசின் ஆய்வுக்கு உட்பட்டிருக்கின்ற வாழமலையாறு நீர்த்தேக்கத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

தமிழ்நாடு—கேரள எல்லையில் மேற்குத் தொடர்ச்சி மலை வனப் பகுதியில் அமைந்துள்ள தலை அணைக்கு மேலே அமைந்துள்ளது- செண்பகவல்லி பிரிப்பு அணை. அந்த செண்பகவல்லி பிரிப்பு அணை சிவகிரி ஜமீன்தாரால் 1733—ல் கட்டப்பட்ட அணை. 1965—ல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் உடைப்பு ஏற்பட்டது. இன்று வரை அடைக்கப்படவில்லை. அந்த அணை உடைப்பு அடைக்கப்பட்டால், 10,000—க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் வளம் பெறும். சிவகிரி, சங்கரன்கோவில், சாத்தூர், கோவில்பட்டி போன்ற வட்டங்களிலுள்ள விவசாய நிலங்கள் பயன் பெறும். ஆகவே, தற்போது சென்னை, உயர் நீதிமன்றத்தின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே கேரள அரசு 10 இலட்சம் ரூபாயைக் கணக்கிட்டு, 5 இலட்சம் ரூபாய் தமிழக அரசால் கட்டப்பட்டிருக்கிறது. அது மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது. ஆகவே, அந்த உடைப்பை அடைப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

வாழமலையாறு, களிங்கலாறு, நிஷபநதி, உள்ளாறு போன்ற ஆறுகளில் Check Dams—தடுப்பணைகள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது தொகுதியிலிருக்கின்ற குளங்களையும், கால்வாய்களையும் தூர் வாரிச் சீரமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் புளியங்குடி வனச் சரகத்திலுள்ள வன விலங்குகள், வனத்திலுள்ள மரங்கள், வன மூலிகைகள் மற்றும் வன உடைமைகளைப் பாதுகாத்திட, வனத் துறையினரின் பணியை மேம்படுத்தும் வகையில் நவீனக் கருவிகள், நவீன வாகனங்கள் மற்றும் அறிவியல்பூர்வமான பயிற்சியும் வழங்கி, பொது மக்களின் ஒத்துழைப்புடன் வனத்தைப் பாதுகாத்திட வேண்டுகிறேன.

தமிழகத்தில் எலுமிச்சை உற்பத்தியில் சுமார் 70 சதவீதம் எலுமிச்சை எனது தொகுதியிலுள்ள புளியங்குடி பகுதியில் கிடைக்கின்றது. ஆகவே, வியாபாரத்தில் உலகத் தர அங்கீகாரம் எனது தொகுதிக்குட்பட்ட புளியங்குடி நகருக்குக் கிடைத்திடவும், குளிர்பதனப் பாதுகாப்பு நிலையம் அமைத்திடவும், எலுமிச்சையிலேயிருந்து Citric Acid மற்றும் மருத்துவக் குணம் பொருந்திய மூலப்பொருட்களைத் தயார் செய்வதற்கும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடவும் எலுமிச்சை சார்ந்த தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

எனது தொகுதியிலும், அதன் அருகில் உள்ள கடையநல்லூர், சங்கரன்கோவில் தொகுதிகளிலும் பூ அதிகமாக விளைவதால், விவசாயிகள் பயன் அடையும் வகையில் வாசுதேவநல்லூரை மையமாகக் கொண்டு, சென்ட் தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1—10

கடந்த ஜூலை மாதம் ஏற்பட்ட திடீர் சூறாவளிக் காற்றால், புளியங்குடி, வாசுதேவநல்லூர், சிவகிரி பகுதிகளில் தென்னை, எலுமிச்சை, மா, பலா போன்ற நீண்ட காலப் பயிர்கள் வேரோடு சாய்ந்து, விவசாயப் பெருமக்களுக்கு அதிகமான நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அதற்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் வாசுதேவநல்லூர் தொகுதி இருப்பதாலும், விவசாயத்தையே நம்பி இருப்பதாலும், கால நிலை தவறும்பட்சத்தில் மாற்றுத் தொழிலுக்கு வழியில்லாமல் வாழ வேண்டியுள்ளதாலும், மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட புளியங்குடி நகராட்சிப் பகுதியில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டமும், சங்கரன்கோவில்—புளியங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டமும் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினால் நகருக்குத் தேவையான குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய முடியாமல், குடிநீர்ப் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. எனவே, புளியங்குடி நகராட்சிப் பகுதிக்குத் தனித் திட்டம் ஒன்றினை உருவாக்கி, குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்க வேண்டுகின்றேன். மேலும், பழைய திட்டங்களில் போடப்பட்ட குடிநீர்க் குழாய் இணைப்புகள் பழுது ஏற்பட்டு, சீரான குடிநீர் விநியோகம் இல்லாமையால் மக்கள்

அவதிப்படுகின்றனர். பழைய குழாய்களை மாற்றிப் புதிய குழாய்கள் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் ஒன்றியப் பகுதிகளுக்குத் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்தி, அனைத்துக் கிராமங்களுக்கும் சீராகவும், நிறைவாகவும் குடிநீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விரைவில் உரையை முடியுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: புளியங்குடியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்தி, முழுச் சுகாதாரத் திட்டத்தை வலுப்படுத்த வேண்டுகிறேன்.

தேசிய நெடுஞ்சாலை எண் 7—ஐயும், தேசிய நெடுஞ்சாலை எண் 208—ஐயும் இணைக்கும் மாநில நெடுஞ்சாலையான புளியங்குடி—நாலாட்டின்புதூர் சாலையை, (S.H. 79) இரு வழிச்சாலையாக்க வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் உள்ள புளியங்குடி நகரின் மத்தியில் தேசிய நெடுஞ்சாலை எண் 208 பிரதானச் சாலையாக அமைந்துள்ளது. இந்தச் சாலையில் அடிக்கடி விபத்துக்களும், போக்குவரத்து நெரிசலும் ஏற்படுவதால் பொது மக்களுக்கு இடையூறாக இருக்கிறது. இதைத் தவிர்க்க, புளியங்குடியில் புறவழிச் சாலை அமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டைக்கு அடுத்தபடியாக, புளியங்குடி நகர்ப் பகுதியில் அதிகமான உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இருப்பதால், ஒரு அரசுக் கலைக் கல்லூரி அமைக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதிக்குட்பட்ட புளியங்குடி—சங்கரன்கோவில் மாநில நெடுஞ்சாலையின் மத்தியில் உள்ள முள்ளிக்குளத்தில், பாண்டியக்கோனார் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக ஆக்கித் தர வேண்டுகிறேன். செங்கோட்டையிலிருந்து சிதம்பரத்திற்கு...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர், சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள். அரை second—ல் நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: சுமார் 70,000 மக்களைக் கொண்ட வாசுதேவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை இரண்டாகப் பிரித்து, அரசின் திட்டமான, 30,000 மக்களுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்

வேண்டும் என்ற அடிப்படையில், வாசுதேவநல்லூர் ஒன்றியப் பகுதியில் மையப் பகுதியான தென்மலையில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் விரைவில் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் Super Speciality Centre வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுவாக, தமிழ்நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் Non-Clinical Departments என்று சொல்லக்கூடிய Anatomy, Physiology, Bio-Chemistry, Forensic Medicine போன்ற department-களில் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அதிலும் குறிப்பாக, Anatomy-யைப் பொறுத்த அளவில், 30% ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குறையினைப் போக்கி, அதற்கு ஆவன செய்து, அவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

விலையுயர்ந்த வெளிநாட்டு உபகரணங்கள் வாங்கும்போது, அதற்குரிய Technician-களை நியமிக்க வேண்டும். மருத்துவர்களுக்குத் தகுந்த பயிற்சியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று முக்கியமானது. நிறைய மருத்துவமனைகளில் hiring doctors வாடகைக்கு வந்து, மயக்க மருந்து நிபுணர்களைத் தற்சமயம் நியமித்திருக்கின்றோம். அவர்கள் மாதம் ஒரு முறை கணக்குப் பார்க்கும்போது, சுமார் 40,000 ரூபாய் சம்பளமாகப் பெறுகிறார்கள். அவர்களையே regular மருத்துவர்களாக நியமித்தால், 20,000 ரூபாய்க்கு மருத்துவர்களை நியமிக்கலாம். அதனால், அரசுப் பணம் வீணாவதைத் தவிர்க்கலாம். ஆகவே, தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். அனைத்து மருத்துவமனைகளிலும்—Taluk Hospitals, Non-Taluk Hospitals, District Headquarters Hospital போன்ற மருத்துவமனைகளில் மயக்க மருந்து நிபுணர்களைக் கட்டாயமாக நியமிக்க வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—15

பொதுவாக, நமது அரசு மருத்துவமனைகளில் சுகாதாரச் சீர்கேடு இருக்கிறது. கடந்த மாதம்கூட, மதுரையில் ஒரு பத்திரிகையின் வாயிலாக வந்த செய்தியைப் பார்த்து, மதுரை உயர் நீதிமன்ற நீதிபதி அவர்களே Suo motu வழக்கு--தன்னிச்சை வழக்கு ஒன்று தொடுத்து, அதற்கு ஆணையர் நியமித்து, அந்த ஆணையர் மருத்துவமனையைப் பார்வையிட்டு, அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. ஆகவே, மருத்துவமனைகளைச் சுகாதாரமாக வைத்திருப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம். மருத்துவர்களுக்கு அதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்றும், அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் நான் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில், ரொம்ப அவசரமாக, serious ஆக வருகின்ற case-களை, அந்தச் சட்டத்தை நினைத்து சில மருத்துவர்கள் எடுப்பதில்லை. ஆகவே, குறைந்தபட்சம் அரசு மருத்துவர்களுக்கு அதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அமரர் ஊர்தி. தாலுக்கா அளவிலே ஒரு அமரர் ஊர்தி கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால், அங்கேயிருக்கின்ற Private Hospital அல்லது Government Hospital-ல் ஓர் இறப்பு ஏற்பட்டால், அது வெளியிலே இருக்கின்ற காரணத்தால்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிண ஊர்தி என்று சொல்லுங்கள். எல்லோரும் அமரமூர்த்தியைப் பார்த்துவிட்டார்கள். அதனால்தான் சொல்கிறேன். *(சிரிப்பு)*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: இல்லை, அமரர் ஊர்தி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள். டாக்டர், நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: Kidney Transplantation போன்ற அறுவை சிகிச்சைகளுக்கு ஏழைகளுக்கு முழுத் தொகையையும் மாண்புமிகு முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். வாய்ப்புக் கொடுத்தமைக்கு என் நன்றியைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் விஜயகாந்த். உங்களுக்கு 5 நிமிடங்கள்தான் இன்றைக்கு ஒதுக்க முடிந்தது. ஏனென்றால், நீங்கள் நிறைய மானியக் கோரிக்கைகளில் கலந்துகொண்டீர்கள்.

திரு. விஜயகாந்த்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழ்மைக்கும், நோய்க்கும் ஒரு இணைப்பு உண்டு. அதனாலேதான் ஏழைகளுக்கு அதிகமாக நோய் வரும். அந்த ஏழைகளுக்கு நோய் வரும்பொழுது வருமானம் அவர்களுக்குப் பாதிக்கப்படுகிறது. வருமானம் பாதிக்கப்படும்பொழுது அவர்கள் அதிகமாக நோய்க்குத்தான் செலவிடுகிறார்கள். அதனாலே ஏழைகளுக்குண்டான சிகிச்சைகள் நல்ல முறையில் கிடைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, ஒரு காலத்திலே தர்ம ஆஸ்பத்திரி, தர்ம ஆஸ்பத்திரி என்று எல்லோரும் அரசாங்க ஆஸ்பத்திரியைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். இப்போது அந்த தர்ம ஆஸ்பத்திரி எந்த மாதிரி நிலையில் உள்ளது என்றால், அந்த தர்ம ஆஸ்பத்திரியின் சுவரைப் போய்த் தொட்டாலே உடனே காசு கேட்கிறது. அந்த அளவிற்கு ஊழல் அதிகமாக இருக்கிறது. அங்கே போய் பிரசவ வலியிலே இருக்கிற பெண்களைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், அவர்களுக்குப் படுக்கை வசதி கிடையாது. நோயாளிக்குப் படுக்கை வசதி கிடையாது. தரையிலேதான் படுக்கிறார்கள். கழிப்பிட வசதி கிடையாது. குடிதண்ணீர் வசதி கிடையாது. சுகாதார வசதி கிடையாது. அதே மாதிரி, நோயாளிகளைப் பார்க்க வருகின்ற உறவினர்களை மனிதாபிமான அடிப்படையில் யாருமே பார்ப்பதில்லை என்கிற ஒரு குறை இருக்கிறது. அதே மாதிரி, அரசாங்கமே நோயாளிகளுக்கு மருந்து கொடுக்க வேண்டும். ஆனால், இவர்கள் நோயாளிகளையே மருந்து வாங்கி வரச் சொல்கிறார்கள் என்ற ஒரு குறை இருக்கிறது என்பதை உங்கள் முன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே மாதிரி, என்னுடைய விருத்தாசலம் தொகுதியிலேகூட, அங்குள்ள மக்கள் எல்லோரும் என்ன சொன்னார்கள் என்றால், ஆஸ்பத்திரியிலே இடம் வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கும் நான் உங்களிடம் மனுக் கொடுத்திருக்கிறேன். 2003–ல் ஒரு x-ray machine வந்து, அது அப்படியேதான் இருக்கிறது. இதுவரைக்கும் யாருமே அதில் எடுக்கவில்லை. அதனால் அங்குள்ள ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு நீங்கள் உதவ வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, காலங்காலமாக இன்றைக்குக் கிராமப்புறத்தில் பார்த்தீர்கள் என்று சொன்னால், ஆங்கில மருத்துவத்திலே காசு கொடுத்து மருந்து வாங்க முடியவில்லை என்று, சித்த மருத்துவத்தை எல்லோரும் நம்பிப் போகிறார்கள். அந்த சித்த மருத்துவத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள், மத்திய அரசு சான்றிதழ் கொடுக்காமல். சித்த மருத்துவம் என்பது என்ன என்றால், ஏழை மக்களுக்கு எதுவாகயிருந்தாலும் கொடுங்கள்—அந்த இலையைப் பறித்துச் சாப்பிட்டால்கூட குணமாகும் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு அதிகமாகக் கிராமப்புறங்களிலே இருக்கிறது. அதற்கு உடனடியாகத் தமிழக அரசு தலையிட்டு, மத்திய அரசிடமிருந்து சித்த மருத்துவத்திற்கு உண்டானதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

அதே மாதிரிப் பார்த்தீர்களென்றால், இயற்கை வளங்கள் அப்படியே இருக்கின்றன; ஆனால், மக்கள் தொகை மட்டும் பெருகிக்கொண்டே இருக்கிறது. அந்த மக்கள் தொகையிலே, குறிப்பாகப் பார்த்தீர்களென்றால், பெண்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அதற்குக் காரணம், பெண் சிசுக் கொலை அதிகமாக இந்த நாட்டிலே நடக்கிறது. அந்தப் பெண் சிசுக் கொலைக்கு இந்த அரசு என்ன செய்யும் என்று நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல, பெண் குழந்தைகள் பிறந்தது முதல் திருமணம் ஆகின்ற வரை பல்வேறு கட்டங்களில் இலவசக் கல்வி மற்றும் உதவித் தொகை வழங்கி, பெண்களின் விகிதத்தை உயர்த்தும் நடவடிக்கையில் சீன அரசு, "care for girls"—பெண் பிள்ளைகள் நலத் திட்டம் என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருவதாக அறிகிறேன். அதேபோன்று, குறிப்பாக ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு அரசு உதவி வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சூழலில் அதிகமாகக் கொசு இருக்கிறது. ஆகையினால் கொசுவை ஒழிக்க வேண்டும். கொசுவினால் மலேரியா, சிக்குன்குன்யா போன்ற வியாதிகள் வருகின்றன. ஆனால், காச நோயால் இந்தியாவில் 5 இலட்சம் பேரும், மலேரியாவால் ஒரு இலட்சம் பேரும் இறந்து போய்விடுகிறார்கள் என்று ஒரு குறிப்பு சொல்கிறது. இருந்தாலும், நாம் கொசுவுக்கு அடிக்கிற மருந்து சரிவர இல்லாததனால், கொசுக்கள் என்னவென்றால், எண்ணெய் தேய்த்துக்கொண்டு திரும்ப வெளியே வருவது மாதிரி, திரும்ப வெளியே வந்து நம்மை எல்லாம் பாதிக்கிறது. அதற்குத் தரமான ஒரு கொசு மருந்தை அரசு வழங்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதே மாதிரி, நான் சூட்டிங் போகும்போதும் சரி, சுற்றுப்பயணம் போகும்போதும் சரி பார்த்திருக்கிறேன். சவலைக் குழந்தைகள் அதிகமாக நம் நாட்டில் இருக்கின்றன. இருந்தாலும் தமிழக அரசு, மகப்பேறு காலத்திற்கு முன்னர் 3 மாதத்திற்கும் குழந்தை பிறந்து 3 மாதத்திற்கும், மொத்தம் ஆறு மாதத்திற்கு மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குவோம் என்று சொன்னதை நான் வரவேற்கிறேன். இருந்தாலுங்கூட, கருவுற்ற நாளிலிருந்து அந்த சவலைக் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்திற்காக, அந்த ஏழைக் குடும்பத்திற்கு 3 வருடங்களுக்கு 500 ரூபாய் ஊட்டச் சத்து வழங்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கட்டணம் அதிகமாக இருக்கிறது. அதோடு donation–ம் ரொம்ப அதிகமாக இருக்கிறது என்று எல்லோரும் வருத்தப்படுகிறார்கள், இந்த ஒரு குறை இருக்கிறது. எத்தனையோ வகையிலே கல்வியிலே நீங்கள் சரி பண்ணிக்கொண்டு வருகிறீர்கள். அதே மாதிரி இந்த மருத்துவக் கல்லூரியிலும், தனியார் கல்லூரியிலும் அரசாங்கம் சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ரொம்ப முக்கியமான ஒன்று, மருந்து விலைகள் இன்றைக்கு அதிகமாக ஏறிப் போய்விட்டன. அதிலும், உயிர் காக்கும் மருந்து விலையை நிச்சயமாகக் குறைக்க வேண்டும். அதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு ஆவன செய்யக் கேட்டுக்கொண்டு, நிச்சயமாக மருந்து விலைகளைக் குறைக்க வேண்டும். சாதாரணமாக 10 ரூபாய்க்கு விற்கக்கூடிய மருந்து இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், 100 ரூபாய்க்குப் போய்விட்டது. அதை வாங்குவதற்கு ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் Canada நாட்டில் உள்ளதைப்போல, மருத்துவக் காப்புறுதித் திட்டம்—அதாவது, Universal Health Insurance திட்டத்தை அரசு கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, இலங்கையில் குழந்தைகள் கொல்லப்பட்டதற்கு இங்கே இரங்கல் தீர்மானம் போட்டதை நான் நிச்சயமாக வரவேற்கிறேன். அதேபோன்று, மத்திய அரசுக்கு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய கருத்தைத் தெரிவித்ததற்காக இங்கே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே, இலங்கையில் இருந்து வரும் தமிழ் அகதிகளுக்கும் சிறப்பான மருத்துவம் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இலங்கைத் தமிழர்கள் திரும்பத் திரும்பப் பாதிக்கப்படுவதை தேசிய முற்போக்கு திராவிட கழகம் கண்டிக்கிறது எனக் கூறி அமர்கிறேன் என்பதைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டி. இராமச்சந்திரன். Only 5 minutes.

***திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புது பட்ஜெட்மீதும், 3 மானியக் கோரிக்கைகள்மீதும் பேசத் தாங்கள் வாய்ப்பளிக்க இருந்து நேரம் இல்லாத காரணத்தினால் பேச வாய்ப்பளிக்கவில்லை. ஆகவே, தங்களை மணியடித்து சிரமப்படுத்த நான் விரும்பவில்லை. தாங்கள் 15 மணித்துளிகள் நேரம் ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 5 நிமிடம்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதியிலே சுயேட்சையாகப் போட்டியிட்ட எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்து, இந்த நல்ல வாய்ப்பை எனக்கு நல்கிய தளி சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும், ஐந்தாம் முறையாகத் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி, இன்றைக்குத் தமிழகத்திலே ஒரு சரித்திர சாதனை படைத்துள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கைமீது எனது கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்த தங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் உடல் நலத்தைப் பேணிப் பாதுகாப்பதிலே இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது என்பதற்குச் சிறந்த உதாரணம் என்னவென்றால், கடந்த கால ஆட்சியிலே மருத்துவமனைகளில் காலியாக உள்ள 1,400 மருத்துவர் பணியிடங்களையும், 1,800 செவிலியர் பணியிடங்களையும் இந்த அரசு நிரப்பியிருப்பது என்பது உண்மையிலேயே மக்கள் நலனில் அக்கறை உள்ள அரசு என்பதற்கு இதுவே சிறந்த உதாரணமாகும் என்பதை இந்த நேரத்திலே பதிய வைக்க நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழைக் கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச் சத்து உண்பதற்காகவும், கருவுற்ற காலத்திலே அவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும், மகப்பேறு காலத்திற்கு முன்னர் மூன்று மாதங்களுக்கும், மகப்பேறு காலத்திற்குப் பின்னர் மூன்று மாதங்களுக்கும், மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதம் 6,000 ரூபாய் வழங்கி, இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள தாய்மார்கள் எல்லோரும் போற்றும் வகையிலே இந்த சிறந்த திட்டத்தைக் கொண்டு வந்துள்ள, தாய் உள்ளம் படைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—25

அரசு மருத்துவமனைகளிலே C.T.Scan செய்துகொள்ள வெளிப்புற நோயாளிகளுக்கு ரூ.500 கட்டணமும், உட்புற நோயாளிகளுக்கு ரூ.350–ம் வசூலிக்கப்படுகிறது. அதைப்போல, M.R.I. Scan செய்துகொள்ள 3,500 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆகவே, வறுமைக்

கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழை எளிய மக்களுக்கு இந்தக் கட்டணத்தில் 50 விழுக்காடு குறைத்து வசூலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருச்சி, வேலூர், திருநெல்வேலி, தஞ்சாவூர் போன்ற அரசு மருத்துவமனைகளிலே 23.95 கோடி ரூபாயிலே M.R.I. Scan மையங்கள் அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதேபோல, இப்பொழுது கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களிடம் தனியார் மருத்துவமனைகளிலே M.R.I. Scan செய்துகொள்ள பல்லாயிரம் ரூபாய் வசூலிக்கிறார்கள். ஆகவே, அனைத்து அரசு மாவட்ட மருத்துவமனைகளிலும் M.R.I. Scan நிறுவ இந்த அரசு முன்முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நோத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரிகின்ற மருத்துவர்கள் காலை 8–00 மணி முதல் மாலை 5–00 மணி வரை பணியாற்ற வேண்டுமென்று அரசு கால நிர்ணயம் செய்தும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களிலே 12–00 மணி வரைதான் அரசு மருத்துவர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் இதன்மீது நடவடிக்கை எடுத்து, அவர்கள் 5–00 மணி வரை பணியாற்ற ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மலைப் பகுதிக் கிராமங்களிலுள்ள ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையத்துடன், மருத்துவர் தங்குவதற்கான குடியிருப்புக் கட்டடங்கள் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டும், மருத்துவர்கள் குடியிருப்புகளில் தங்காத காரணத்தால், மக்களின் வரிப் பணத்தால் கட்டப்பட்ட கட்டடங்கள் பழுதடைந்து, பயனற்றுக் கிடக்கின்றன. ஆகவே, மருத்துவர்கள் குடியிருப்புகளில் தங்கி, சிகிச்சையளிக்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அவசர நேரங்களில் நோயாளிகளை மருத்துவமனைக்குக் கொண்டு சேர்க்கும் சேவைக்காக 108 ஆம்புலன்ஸ், அவசர ஊர்திகளை இந்த அரசு வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. கடந்த ஆட்சிக் காலத்திலே அரசு ஊர்திகளுக்கு ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால் அவை அரசு ஆஸ்பத்திரியிலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஆகவே, அந்த அரசு ஊர்திகளுக்கு ஓட்டுநர்களை இந்த அரசு நியமிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தாலுகா அளவிலான வட்டார மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட வேண்டியுள்ளது. அறுவை சிகிச்சைப் பிரிவு, I.C.U.–வில் X-ray மற்றும் C.T.Scan போன்ற கருவிகள் 10 முதல் 12 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்டவை. பழுதடைந்த நிலையில் உள்ளன. பழுது நீக்கம் செய்யும் பணியை அரசு எல்காட் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது; சரியான முறையிலே பழுதுபார்க்கப்படுவதில்லை. அதிநவீன சாதனங்களை வழங்கி, பழுதடைந்துள்ள கட்டடங்களைச் சீரமைத்து, தேவைக்கேற்ப புதிய கட்டடங்களைக் கட்டவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

முப்பதுக்கும் மேற்பட்ட படுக்கைகள் கொண்ட வட்டார மருத்துவமனைகளை இன்றைக்குத் தரம் உயர்த்த வேண்டியுள்ளது. குறிப்பாக, முப்பது படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனைகளிலே இரண்டு மருத்துவர்கள் மட்டும்தான் உள்ளார்கள். குறைந்தபட்சம் ஐந்து மருத்துவர்கள் அந்த மருத்துவமனைகளில் நியமிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மகப்பேறு சிறப்பு மருத்துவர், குழந்தை நல மருத்துவர், அறுவை சிகிச்சை மருத்துவர், மயக்கவியல் மருத்துவர், E.N.T. மருத்துவர் என 5 மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கண் மருத்துவப் பிரிவு, பல் மருத்துவப் பிரிவுகளை வட்டார அளவிலான மருத்துவமனைகளில் ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இதய அறுவை சிகிச்சைக்காக, சென்னை, ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் சென்னை, பொது மருத்துவமனையிலே பதிவு செய்யப்பட்டு, 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள், 2 முதல் 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலைமையிருக்கிறது. அதனால் உயிரிழக்க நேரிடுகிறது. ஆகவே, குழந்தைகள் அறுவை சிகிச்சைக்காகப் பதிவு செய்யத் தனிப் பிரிவை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் குழந்தைகள் பராமரிப்புச் சேவைக்கான கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்புக் கூட்டமைப்பின் survey–யின்படி 50 விழுக்காடு கர்ப்பிணிப் பெண்கள் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டும், 30 விழுக்காடு குழந்தைகள் குறைந்த எடையுடனும் பிறக்கின்றனர்; மூன்றில் இரண்டு பங்கு குழந்தைகள் சத்துணவு இல்லாமல் வாடுகின்றனர்; பிறக்கும் 1,000 குழந்தைகளிலே 57 குழந்தைகள், ஒரு வயது முடியும் முன்பே இறந்துவிடுகின்றனர்; பெண் குழந்தைகளைக் கருவிலேயே அழிக்கும்

கொடிய பழக்கம் இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கிறது; ஒரு குழந்தை ஏதோ ஒரு வகையிலே பார்வையற்று, காது கேளாமல், கை, கால் பாதிக்கப்பட்டு, மன வளர்ச்சி குன்றி, ஊனமாக உள்ளது எனவும் கூறப்படுகிறது. இத்தகைய குறைபாடுகளைப் போக்கும் வகையிலே Danida திட்டத்திலே ரூ. 8 இலட்சம் மதிப்பீட்டில் ஒவ்வொரு ஊராட்சியிலும் தாய்—சேய் நல விடுதி, செவிலியர்கள் 24 மணி நேரமும் பெண்களுக்குப் பிரசவம் பார்க்கவும், அவசர சிகிச்சை மேற்கொள்ளவும் தொடங்கப்பட்டது. ஆனால், பெரும்பாலான தாய்—சேய் நல விடுதிகளிலே செவிலியர்கள் தங்குவதில்லை. பிரசவத்திற்காகவும், அவசர சிகிச்சைக்காகவும் வரும் தாய்மார்கள் உரிய நேரத்திலே சிகிச்சை கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். எனவே, செவிலியர்கள் தாய்—சேய் நல விடுதிகளில் 24 மணி நேரமும் தங்கிப் பணியாற்ற இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே பட்டிதொட்டிகளில் எல்லாம் மருத்துவப் படிப்புப் படிக்காமலே, unqualified போலி மருத்துவர்கள் எல்லாம் தவறான சிகிச்சை செய்வதன் காரணமாக, விலை மதிப்பற்ற உயிர்கள் பறிபோவதைச் செய்தித்தாள்களில் தினந்தோறும் படித்துக் கொண்டிருக்கிறோம். கருக் கலைப்பு, பிரசவம் பார்த்தல் போன்றவற்றிற்குத் தவறான சிகிச்சையளிப்பதால் பலர் உயிரிழக்கின்றனர். எனவே, மனித உயிர்களைக் காப்பாற்ற வேண்டியது அரசின் கடமையாகும். எனவே, போலி டாக்டர்களைக் கண்டறிந்து இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 1—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. இராமச்சந்திரன், உரையை முடியுங்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: தமிழகத்தில் தனியார் செவிலியர் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் வேலை வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. ஆனால், அவர்கள் அனைத்துத் தகுதிகள் இருந்தும், தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே பணிபுரிய வேண்டிய நிலைமை உள்ளது. எனவே, தனியார் செவிலியர் கல்லூரிகளில் பயின்று பட்டம் பெற்ற தகுதியுள்ள செவிலியர்கள் அனைவருக்கும் அரசு மருத்துவமனைகளில் வேலைவாய்ப்பு வழங்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் சிக்குன்குன்யா நோயினால் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பாதிக்கப்பட்டு, பெரிய பீதிக்கு உள்ளாகியுள்ளனர். சிக்குன்குன்யா வைரஸ் கொசுவை ஒழிப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டாலும், மருந்துகள் தெளிக்கப்பட்டாலும், மாத்திரைகள் வழங்கப்பட்டாலும், தொடர்ந்து சிக்குன்குன்யா நோய்க்கு மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஆகவே, போர்க் கால அடிப்படையிலே இந்த அரசு அந்தப் பகுதியிலே ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் தனியாக மருத்துவக் குழுவை அமைத்து, சிக்குன்குன்யா நோயைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள், உரையை முடியுங்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: தொகுதிப் பிரச்சினையை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அமைச்சர் பேச வேண்டியிருக்கிறது.

திரு. டி. இராமச்சந்திரன்: அதேபோல, சில கோரிக்கைகளை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)*

திரு. டி. இராமச்சந்திரன்: தளி சட்டமன்றத் தொகுதி என்பது, தமிழகத்திலேயே ஒரு பெரிய பரப்பளவு கொண்ட, 40 Square Kilo Metre பரப்பளவு கொண்ட, மலைப் பகுதிகளைக் கொண்ட ஒரு தொகுதியாகும். குறிப்பாக, நாடு சுதந்திரம் பெற்று 59 ஆண்டுகள் ஆனாலும், இன்றைக்குக்கூட குறைந்தபட்ச அடிப்படைப் பிரச்சினைகூட இந்தத் தொகுதியிலே நிறைவேற்றப்படாமலே உள்ளது. குறிப்பாக, பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் இன்றைக்கு அங்கே ஓடைத் தண்ணீரைக் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு கிராமங்களுக்கு இன்றைக்கும் சாலை இல்லாமல், மக்கள் இன்றைக்குக் கழுதையிலே பொருட்களை ஏற்றிக்கொண்டு செல்கிறார்கள். பல்வேறு கிராமங்களுக்கு இன்றைக்கும் மின்சார வசதி இல்லாமல் இருக்கிறது. பல்வேறு கிராமங்களுக்கு இன்றைக்கும் சாலை வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

அவர்கள் இத்தகைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு தளி சட்டமன்றத் தொகுதி என்பது மிகவும் பின்தங்கிய தொகுதியாதலால், அந்தப் பகுதியிலே 120 கிலோ மீட்டர் தொலைவில் எந்த ஒரு அரசுக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ இல்லை. ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு அரசுக் கலைக் கல்லூரியையும், பொறியியல் கல்லூரியையும் இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராமச்சந்திரன், மற்றதையெல்லாம் எழுதிக் கொடுங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) Right.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரசியல் பொது வாழ்வில், சுய மரியாதைக்கும், தன்மானத்துக்கும் இழுக்கு வந்து தடுமாறுகின்ற நேரத்தில் தாயாய், தந்தையாய் இருந்து, என்னைத் தத்தெடுத்து, அன்பு காட்டி, அரவணைத்து, இந்த இயக்கத்தின் மாவட்டச் செயலாளராகவும் ஆக்கி, 2001 முதல் 2006 வரையில் சட்டமன்ற உறுப்பினராகவும், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், இன்றைக்கு ஏழாவது முறையாக இந்தச் சட்டமன்றத்திற்கு மீண்டும் வரக்கூடிய வாய்ப்பினை எனக்கு வழங்கியதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு அமைச்சராகவும் இந்த அவையில் அமர வைத்த என்னுடைய தலைவர் மாண்புமிகு தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான நிதியை வழங்கி, பணி சிறக்கப் பேருதவியாக இருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர், இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இயக்கத்தில் என்னை நான் இணைத்துக்கொண்ட காலம் முதல், என் செயல்பாடுகளில் அக்கறையோடும், என் உற்ற சகோதரராகவும், என் வழிகாட்டியாகவும் திகழக்கூடிய, கழகத்தின் தளபதியாக மட்டுமல்ல, தமிழினத்தின் தளபதியாக, நாளைய தமிழ்நாட்டின் நம்பிக்கையாகத் திகழக்கூடிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் இந்தத் துறையில் சிறப்பாகப் பணியாற்றிய அனுபவத்தால் நல்ல ஆலோசனைகள் வழங்கி வரும் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அண்ணன் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழாவது முறையாக மீண்டும் என்னைத் தேர்ந்தெடுத்துச் சட்டமன்ற உறுப்பினராக்கி, சேவை செய்ய வாய்ப்புத் தந்த, என்னுடைய சாத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என் வெற்றிக்காக அரும்பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் மாநில, மாவட்டத் தலைவர்களுக்கும், சாத்தூர் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கும், கட்சித் தோழர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை ஆரம்பித்த நேரத்திலேயிருந்து இப்போது நான் பேசுகிற வரை, இந்தத் துறையிலே எல்லோரும் அக்கறையோடு இருந்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த சண்டை சச்சரவுகூட இன்றைக்கு இல்லை. காரணம், இந்தத் துறையிலே இருக்கிற ஒரு அக்கறை. அக்கறை என்று சொல்வதைவிட, இந்த நாட்டு மக்கள்மீது, நாட்டு மக்களுடைய உயிரின்மீது நமக்கு இருக்கிற அக்கறையின் காரணமாகத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் அமைதியோடு நல்ல பல கருத்துகளை இன்றைக்கு நீங்கள் எங்களுக்குச் சொல்லியிருக்கிறீர்கள். ஒன்பது சட்டமன்ற உறுப்பினர்கள் நல்ல தரமான கருத்துகளை எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் எப்படிச் செயல்பட வேண்டும் என்ற கருத்தையும் எனக்கு வழங்கியிருக்கிறார்கள்.

என்னுடைய தலைவர் கலைஞர் அவர்கள், இந்தத் துறையில் நான் பொறுப்பேற்ற நாளிலிருந்து, ஒவ்வொரு முறையும் எங்களைப் பார்க்கிற நேரத்தில், இந்தத் துறையை நான் உன்னிப்பாகப் பார்க்கிறேன் என்றார். சரியாகச் செயல்படக்கூடிய ஒரு நல்ல தலைவராக, ஒரு வழிகாட்டியாகத் தலைவர் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தத் துறையிலே நாங்கள் எதைக் கேட்டாலும், தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இன்றைக்கு நான் சொல்லப் போகிற அறிவிப்புகள்—ஏறத்தாழ 100 அறிவிப்புகள் வரவிருக்கின்றன. இதையெல்லாம் தலைவர் கலைஞர் வழங்குகிறார் என்று சொன்னால், இந்தத் தமிழின மக்கள்மீது இருக்கிற பாசம். அவர்களுடைய வாழ்விலே வருகிற துயரங்களில் தாம் பங்குகொள்ள வேண்டுமென்ற அந்த உணர்வோடு ஒவ்வொரு நிகழ்விலும் இந்தத் துறையிலே அவர்கள் தன்னை

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2006 ஆகஸ்ட் 17

அர்ப்பணித்திருக்கிறார்கள். ஆகவே, அவருடைய உதவியால், அவருடைய உற்சாகத்தால், இன்றைக்கு இந்தத் துறையிலே நிறைய அறிவிப்புகளை நாங்கள் செய்ய இருக்கிறோம். அறிவிப்புகளைச் செய்வதோடு மட்டுமல்ல, அறிவிப்புகளைச் செய்துவிட்டு நாங்கள் சும்மாயிராமல், அவற்றைச் சரிபார்த்து, அவற்றை விரைவிலே நிறைவேற்றக்கூடிய அளவிற்கு பணிகளை நாங்கள் சிறப்பாகச் செய்வோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

எங்களுடைய முதலமைச்சரைப் பொறுத்தளவிற்கு, நாங்கள் அவரைப் பார்த்து நிரம்பக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாங்கள் அமைச்சர் பெருமக்கள் இரண்டு நாட்கள் காலதாமதமாகக்கூட கோப்புகளிலே கையெழுத்திடுகிறோம். ஆனால், நாங்கள் எங்கள் முதலமைச்சருக்கு அனுப்புகிற கோப்புகள், காலையில் போனால் மாலையில் வந்துவிடுகின்றன, இரவு போனால் காலையில் வந்துவிடுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவரைப் பார்த்து, முதலமைச்சரே ஒரே நாளில் கையெழுத்துப் போடுகிற நேரத்தில், நாங்களும் வேகமாகப் பணியாற்ற வேண்டுமென்ற உணர்வு எங்களுக்கு இருக்கிறது.

அதேபோல், எங்களை வழிநடத்திச் செல்கிற மரியாதைக்குரிய நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இந்தப் பணிகளை, இந்த அறிவிப்புகளைச் செய்கிற நேரத்திலே, அவர்தான் முறையாக அறிவிப்புகளை எப்படிச் செய்யவேண்டுமென்று சொல்லிக் கொடுத்தார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களும், இப்படி அறிக்கையாகத் தொகுத்துக் கொடுங்கள் என்று சொன்னீர்கள். ஆகவே, அதையும் நாங்கள் தொகுத்து வழங்க இருக்கிறோம். தொகுத்து வழங்குவதோடு மட்டுமல்லாமல், வேறு இரண்டு குறிப்புகளையும் நான் கொடுத்திருக்கிறேன்.

இந்தத் துறைக்கு நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு, நான் அமைச்சராக மட்டும் அதைப் பார்க்கவில்லை. ஒன்பதாண்டு காலம் நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர். மருத்துவமனைகளுக்குப் போனால் எனக்கு என்னென்ன பிரச்சினை வந்திருக்கிறது என்பதைச் சரிபார்த்து, அந்த அடிப்படையிலே ஒவ்வொரு காரியத்தையும் நாங்கள் செய்திருக்கிறோம். அதிகாரிகள் சொல்வதை மட்டும் நாங்கள் கேட்கவில்லை. அதைத் தாண்டி, எதைச் செய்தால் பொது மக்களுக்குச் சரியாக இருக்கும் என்பதைச் சரிபார்த்து நான் செய்திருக்கிறேன். இதிலேகூட மாற்றங்கள் பின்னர் வேண்டுமென்று சொன்னால்,

2006 ஆகஸ்ட் 17] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

எதை வேண்டுமானாலும் செய்து, மக்களுக்குச் சரியான வழியிலே இந்தத் துறையை நாங்கள் கொண்டு செல்வோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போன ஆட்சிக் காலத்திலே, பல நல்ல திட்டங்களையெல்லாம் செய்து நின்று போய் இருக்கின்றன. அதற்குக் காரணம், ஓராண்டு காலம் அல்லது ஒன்றரை ஆண்டு காலம் எல்லாம் கோப்புகள் கையெழுத்து இல்லாமல் சும்மா வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நேர் செய்கிற பணியிலே நாங்கள் இறங்கி, அவர்கள் விட்டுப் போன பணிகளையெல்லாம் இன்றைக்கு நாங்கள் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறோம். இன்றைக்கு இந்தத் துறையிலே நாங்கள் புதிய அறிவிப்புகளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்க இருக்கிறோம். அந்த அறிவிப்புகளையும் சரிபார்த்துக்கொண்டு, பின்னாலே இரண்டு குறிப்புப் புத்தகங்களையும்— எந்தெந்த மருத்துவமனைகளை நாங்கள் இந்த ஆண்டு எடுக்கப் போகிறோம் என்று அந்தக் குறிப்புகளையும் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைப் படித்து, அவற்றிலே எது, எது வேண்டுமென்று சொல்கிறீர்களோ, அதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாட்டு சிந்தனைச் சிற்பியும், இந்தியத் திருநாட்டின் வழிகாட்டியுமான டாக்டர் கலைஞர் அவர்களின் ஐந்தாவது முறை பொற்கால ஆட்சி நடைபெறும் இந்த நாளில், எண்ணிலடங்கா நலவாழ்வுத் திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன. இதனால் சுகாதாரக் குறியீடுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள புதிய பல திட்டங்களை அறிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

முந்தைய ஆட்சிக் காலத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணியாளர்கள் நியமனம் தடை செய்யப்பட்டதால் கோடிக்கணக்கில் செலவு செய்து கட்டப்பட்ட மருத்துவமனைகளில் மக்களுக்குச் சேவையளிக்கும் பதவிகள் பல காலியாகவே வைக்கப்பட்டன. அதனால் பல இடங்களில் மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டது. இலட்சக்கணக்கில் செலவு செய்து வாங்கிய உபகரணங்கள் மக்களுக்குப் பயனின்றி உபயோகமற்றுக் கிடக்கின்றன.

கடந்த 2005–06 ஆம் ஆண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 1,652.04 கோடி ரூபாய் ஆகும். நடப்பு 2006–07 ஆம்

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2006 ஆகஸ்ட் 17

ஆண்டில் 1,951.28 கோடி நிதி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ரூபாய் 299.24 கோடி நிதியை இத்துறைக்கு உயர்த்திக் கொடுத்துள்ளார் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—40

இந்த அரசு 13—5—2006 அன்று பதவியேற்றபொழுது, 1,862 மருத்துவர் பணியிடங்கள் இங்கே காலியாக இருந்தன. தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 1,393 மருத்துவர்கள் கடந்த மாதத்தில் நியமனம் செய்யப்பட்டனர். இன்றைய தேதியில் இந்தத் துறையில் 469 பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளன. இவை அனைத்தும் ஒரு மாத காலத்திற்குள் நிரப்பப்படும். இதனால் மருத்துவர் பணியிடம் எந்த மருத்துவமனையிலும் காலியாக இல்லை என்ற நிலை உருவாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டப் பேரவைத் தேர்தல் அறிக்கையில், 'ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட மருத்துவர்கள் அனைவரும் கால முறை ஊதியத்தில் நியமனம் செய்யப்படுவார்கள்' என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி, ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 1,539 மருத்துவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் ஒரு சிறப்புத் தேர்வு நடத்தி, முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர்கள் அனைவரையும் permanent செய்துவிடுகிறோம்; Permanent செய்து, time scale—ல் கொண்டு வந்துவிடுகிறோம்.

''சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்''; இம்மாமன்றத்தில் பேசிய உறுப்பினர்கள் பலரும், அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், பணியாளர் பற்றாக்குறை இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். மருத்துவமனைகளில், மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாராத சுமார் 10,500 பணியிடங்கள் தற்போது காலியாக உள்ளன. இவை அனைத்தும் வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் உடன் நிரப்பப்படும்.

அரசு மருத்துவமனைகளில் 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில், மருந்தாளுனர், Radiographer, இருட்டறை உதவியாளர், ஆய்வக நுட்பனர் மற்றும் உதவியாளர், Physiotherapist போன்ற பல மருத்துவம் சார்ந்த பணியிடங்களில், மாதம் ரூ.2,500/— தொகுப்பூதியத்தில் சுமார் 1,000 பேர் நியமனம் செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் 2 ஆண்டு காலம்

2006 ஆகஸ்ட் 17] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

பணி முடித்தவுடன், கால முறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்திருக்கப்பட வேண்டும். இதுவரை எவரும் முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. இவர்கள் அனைவருக்கும் கால முறை ஊதிய விகிதம் உடன் வழங்கப்படும்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கடந்த 2005 ஆம் ஆண்டில் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட 448 மருந்தாளுனர்களுக்கும் முறையான ஊதிய விகிதம் வழங்கப்படும்.

தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாதம் ரூ.2,500/— தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் 2,636 செவிலியர்களுக்குப் பணிமூப்பின் அடிப்படையில் முறையான ஊதிய விகிதம் வழங்கப்படும்.

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் மற்றும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் 2,540 செவிலியர்களின் தொகுப்பூதியம்—இப்போது ரூ.2,500/—க்குப் பணியாற்றுகிற அந்தச் செவிலியர்களுக்கு இனிமேல் ரூ.2,500/—லிருந்து ரூ.3,500/— ஆக உயர்த்தி வழங்கப்படும். இவர்களில் ஓராண்டுப் பணி முடித்தவர்களுக்கு மாதம் ரூ.4,000/— வழங்கப்படும். இரண்டாண்டுகள் பணி முடித்து, முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யக் காத்திருப்பவர்களுக்கு ரூ.5,000/— தொகுப்பூதியமாக வழங்கப்படும். மருத்துவமனைகளில் அவ்வப்பொழுது ஏற்படும் காலியிடங்களில், மேற்கண்ட திட்டங்களில் பணியாற்றும் செவிலியர்கள் பணிமூப்பு அடிப்படையில் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்படுவார்கள்.

தேனி, வேலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், சென்னை பொது மருத்துவமனை மற்றும் சென்னை குழந்தைகள் மருத்துவமனை ஆகிய இடங்களில் இளநிலை உதவியாளர், சுருக்கெழுத்துத் தட்டச்சர், பண்டகக் காப்பாளர், நூலகப் பணியாளர், பதிவுரு எழுத்தர் போன்ற பல்வேறு பணியிடங்களில் தொகுப்பூதியத்தில பணியாற்றி வரும் 281 பணியாளர்கள் முறையான ஊதிய விகிதத்தில் கொண்டு வரப்படுவர்.

கடந்த ஆட்சியில் அரசு மருத்துவமனைகளில் மருத்துவமனைப் பணியாளர்கள், துப்புரவாளர்கள், ஓட்டுனர்கள், ஆய்வக நுட்பனர் போன்ற 2,635 பணியிடங்கள் புற ஆதார முறையில் (Out-sourcing) தனியார் நிறுவனங்கள்மூலம் நியமிக்கப்பட்டனர். இந்த முறை சரிவரச் செயல்படவில்லை. எனவே, இம்முறையை மாற்றி, நடைமுறைக்கேற்ற புதிய செயல் திட்டம் கொண்டு வரப்படும்.

மருத்துவக் கல்லூரிகள், அதனைச் சார்ந்த மருத்துவமனைகள் அனைத்து மாவட்டங்களிலும் தமிழக மக்களின் தேவைக்கேற்ப பரவலாக இல்லை. இதைக் கருத்தில் கொண்டு, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி அமைத்திட தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. இதனை நிறைவேற்றும்பொருட்டு, நடப்பு நிதியாண்டில் விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும்; மற்ற மாவட்டங்களிலும் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் படிப்படியாகத் தொடங்கப்படும்.

நாள்தோறும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின்மூலம் பயன் பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதற்கேற்ப உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது இன்றியமையாததாக உள்ளது. மேலும், அதனைச் சார்ந்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தங்கும் விடுதிகள் போன்ற உள்கட்டமைப்புகள், பராமரிப்புப் பணிகள் அதிக அளவில் தேவையாக உள்ளன. இதற்கான போதிய நிதியாதாரம் ஒதுக்கீடு செய்வது குறித்து ஒரு சிறப்புத் திட்டம் ஆய்விலே உள்ளது.

மைய அரசின் உதவியோடு ரூ.120 கோடி செலவில், சேலம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, புதுடெல்லி, அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்திற்கு இணையாகத் தரமுயர்த்தப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் முயற்சியால், வளர்ந்து வரும் தேவைக்கேற்ப பொதுச் சுகாதார வசதிகளை மேம்படுத்த, இந்தியப் பொதுச் சுகாதார அறக்கட்டளையின்கீழ், குறுகிய மற்றும் நீண்ட காலப் பயிற்சி வருடத்திற்கு 10 ஆயிரம் பேர்களுக்கு அளிக்கவும், சர்வதேச அளவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும், ரூ.100 கோடி நிதியில் சென்னைக்கு அருகில் சர்வதேசத் தரம் வாய்ந்த பொதுச் சுகாதாரக் கல்வி நிறுவனத்தை மத்திய அரசின் உதவியுடன் தமிழக அரசு அமைக்கும். இதற்காக 50 ஏக்கர் நிலம் தமிழக அரசால் உடனடியாக வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கடந்த கால ஆட்சியில், சென்னை அரசு பொது மருத்துவமனையில் நவீன வசதிகள் கொண்ட பல அடுக்கு மாடிகளுடன்கூடிய கட்டடங்கள் கட்ட ரூ.104 கோடி நிதியொதுக்கி உத்தரவிட்டார்கள். அதேபோல், மதுரை அரசு இராசாசி மருத்துவமனையை மேன்மைமிகு மையமாக மாற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த மருத்துவமனைக்குத் தமிழகத்தின்

தென்பகுதியிலிருந்து சுமார் 10,000 நோயாளிகளுக்கு மேல் தினந்தோறும் சிகிச்சை பெற வருகின்றனர். மேலும், இது தென் மாவட்டங்களுக்கு மிகப் பெரிய பரிந்துரை மருத்துவமனையாகவும் உள்ளது. எனவே, மதுரை அரசு இராசாசி மருத்துவமனையை மேன்மைமிகு மையமாக மாற்ற முடிவெடுத்து, முதற்கட்டமாக நடப்பாண்டில் ரூ. 15 கோடி செலவில் 300 படுக்கை வசதிகள் ஏற்படுத்தித் தரம் உயர்த்தப்படும். இதற்குத் தேவையான 2 ஏக்கர் நிலத்தை மதுரை மாநகராட்சி தர முன்வந்துள்ளது.

பிற்பகல் 1–45

தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 97 பேர் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு தெரிவித்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, காஞ்சிபுரம், அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனையை விரிவுபடுத்தி, மண்டலப் புற்று நோய் மையமாக மேம்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக நடப்பாண்டில் ரூ. 8 கோடிக்கு நவீன உபகரணங்கள் வழங்கப்படும். இரண்டாவது கட்டமாக, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மைய அரசு ரூ. 30 கோடி வழங்க உள்ளது என்பதையும் இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் அடுக்கு மாடிக் கட்டடம் கட்ட ரூ. 5 கோடி ஒதுக்கியுள்ளோம். மேலும் இந்த மருத்துவமனையிலுள்ள கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையத்தினை மேன்மைமிகு மையமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் உள்ள பல்வேறு குறைபாடுகளைத் தெரிவித்தார்கள். அவை களையப்பட வேண்டுமென்றும் தெரிவித்தனர். எனவே, 270 அரசு மருத்துவமனைகளும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துகள் கிடையாது. 1996–2001 ஆம் காலக்கட்டத்தில் அனைத்து அரசு மருத்துவமனைகளையும் தரமுடன் மேம்படுத்துவது குறித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு கனவுத் திட்டத்தை உருவாக்கினார்கள். இதற்கான நிதி ஆதாரத்தை உலக வங்கியிடமிருந்து பெற திட்ட வரைவு ஒன்றைத் தயாரித்து மத்திய அரசிற்கு அனுப்பி ஒப்புதல் பெறத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டம்தான் 'தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்'. இந்தத் திட்டத்தின்கீழ் அனைத்து மருத்துவமனைகளின்

உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ. 212 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 35 மருத்துவமனைகளில் கட்டடப் பணிகள் மேற்கொள்ள அரசாணைகள் வெளியிட்டும், இவற்றைச் செயல்படுத்த முந்தைய அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. நாங்கள் பதவி ஏற்ற பின், அந்தப் பணிகளை எல்லாம் தொடங்கத் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நடப்பாண்டில் மற்ற 24 மாவட்டங்களில் உள்ள 235 மருத்துவமனைகளில் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. கடந்த ஆட்சியில் ஏற்பட்ட காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக ஓய்வு பெற்ற பொறியாளர்கள் மற்றும் கட்டடக் கலை வல்லுனர்கள் ஆகியோரைத் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்து, 8 குழுக்களாக மாநிலம் முழுவதும் மருத்துவமனைக்ளை நேரிடையாகப் பார்வையிட்டு, அவர்கள் தேவையான பணிகளைக் கண்டறிவர். குழுக்கள் மருத்துவமனைகளைப் பார்வையிடும்போது அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகள் பெறப்படும்.

கட்டடப் பணிகள் முடிந்தவுடன், மேம்படுத்தப்படுகிற அனைத்து மருத்துவமனைகளுக்கும் நவீன மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.102 கோடி செலவில் தமிழ்நாடு மருத்துவச் சேவைகள் கழகம்மூலம் வாங்கித் தரப்படும்.

சென்னை, சேத்துப்பட்டு, மார்பு நோய் மருத்துவ நிலையத்தில் உள்ள ஆய்வுக் கூடம் இடைநிலை காச நோய் ஆய்வுக் கூடமாக ரூ. 42 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்படும்.

1996–97 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நான்காம் முறையாகத் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த தருணத்தில், 1996 முதல் 1998 முடிய இரண்டே ஆண்டுகளில் ரூ.51.13 கோடி செலவில் 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும், மீதமுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டடங்கள் கட்டத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியதால்தான் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர சேவை 1999 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியது. அன்று தலைவர் கலைஞர் அவர்களால் விதைக்கப்பட்ட விதைகள்தான் இன்று கனி தரும் மரங்களாக மக்களுக்குப் பயனளிக்கின்றன.

தமிழகத்திலுள்ள 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1,380 ஆரம்ப சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 37–ல் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 34 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் NABARD வங்கி உதவியுடன் ரூ. 6.2 கோடியில் இவ்வாண்டே கட்டப்படும்.

மேலும், மத்திய அரசாங்கத்திடம் 2001 census–படி நமக்கு 130 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 601 துணை சுகாதார நிலையங்களும் நாங்கள் கேட்டிருக்கிறோம். கொள்கை அளவிலே அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வந்தவுடன் அந்த 130–ம் பிரித்து எல்லோருக்கும் கொடுக்கப்படும். மேலும், 15 மாவட்டங்களில் உள்ள 234 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூ.19.43 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் NABARD வங்கி உதவியுடன் இந்த நிதியாண்டில் கட்டித் தரப்படும்.

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் தங்கிப் பணி புரிய குடியிருப்புக் கட்டடங்கள் ரூ.8 கோடி செலவில் NABARD வங்கி உதவியுடன் கட்டப்படும்.

பிற்பகல் 1–50

தமிழகத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் நிதியினைப் பயன்படுத்தி. 30 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் தகுதியுள்ள ஓர் ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக ரூ.21 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

சென்னை, தேனாம்பேட்டை மருத்துவத் துறை இயக்குநரக வளாகத்தில் மருத்துவப் பணிகள் இயக்குநரகத்தின் விரிவாக்கத்திற்காகவும், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட அலுவலகத்திற்காகவும் அனைத்து வசதிகளுடன்கூடிய ஒரு இணைப்புக் கட்டடம் ரூ.7.5 கோடி செலவில் நடப்பாண்டில் கட்டப்படும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் சரியாகச் செயல்பட சிறப்பு மருத்துவர்கள் நியமனம்

செய்யப்படவில்லை. தற்பொழுது கூடுதலாக ஒரு மகப்பேறு மருத்துவர் மற்றும் ஒரு மயக்கவியல் மருத்துவர் நியமனம் செய்யப்பட்டு, சிறப்பாகச் செயல்பட எங்கள் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல் 5 பேர் இருப்பார்கள், P.H.C.—ல்.

தாம்பரம், அரசு நெஞ்சக மருத்துவமனை, எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் ஆசியாவிலேயே ஒரு சிறந்த மையமாக உருவாகியுள்ளது. இதேபோன்ற ஒரு மையத்தை மதுரையில் அமைக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய ஆட்சிக் காலத்தில் மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையில் தகுதி வாய்ந்த இயக்குநரை சுமார் ஓராண்டு காலம் நியமிக்காததால், பல மருந்து நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்படவில்லை. அதன் காரணமாக, சுமார் 100 மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள் தமிழகத்தில் தங்களது தயாரிப்பினை நிறுத்திவிட்டு, பாண்டிச்சேரி, உத்தராஞ்சல், இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு இடம் பெயர்ந்துவிட்டன. இதனால் அரசுக்குப் பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டது. பல தொழிலாளர்கள் வேலைவாய்ப்பையும் இழந்தனர். இந்த அரசு பதவியேற்றவுடன் உடனடியாக இது குறித்துப் பரிசீலனை செய்து, மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரை தகுதியினடிப்படையில் பொறுப்பில் அமர்த்தியது. மேலும், காலியாக இருந்த மருந்து ஆய்வாளர்கள் பணியிடங்களுக்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அரசு அளிக்கும் ஊக்கத்தால், கடந்த மூன்றே மாதங்களில் 23 புதிய தனியார் மருந்துத் தயாரிப்புத் தொழிற்சாலைகள் தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த அரசு மருந்துத் தயாரிப்புத் தொழிலை ஊக்குவிக்கும் விதமாகவும், மறைந்த மாமேதை மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களின் திட்டப்படியும், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்காவில் 40 முதல் 50 வரை பெரிய மற்றும் சிறிய மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களும், 8 முதல் 10 வரை துணை நிறுவனங்களும் தொழில் தொடங்க ஏதுவாக, 250 ஏக்கர் பரப்பளவில் ஒரு 'Pharma Park' அமையப் பெற உள்ளது. இதனால் 2,800 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 6,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும். சுமார் 500

கோடி ரூபாய் அளவில் உற்பத்தி மருந்தை ஏற்றுமதி செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வரும் அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 50 படுக்கை வசதிகள் கொண்ட உள் நோயாளர் பிரிவு ரூ.70.52 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

டாம்ப்கால் தொழிற்சாலை, காஞ்சிபுரம் மாவட்டம், ஆலத்தூரில் 15,000 சதுர அடி பரப்பளவில் ரூ.329.90 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்யப்படும். இப்புதிய தொழிற்சாலை அக்டோபர் 2006 முதல் செயல்படும். மேலும், 0.90 ஏக்கர் பரப்பளவில் மருந்துகள் சேகரிப்பு மற்றும் பகிர்வு மையம் தனியாக அமைக்கப்படும்.

ரூ.1 கோடி செலவில் 7,200 சதுர அடி பரப்பளவில், சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில், டாம்ப்காலின் தலைமை அலுவலகம், மூலிகைத் தாவரக் கன்றுகள் காட்சியகம் மற்றும் விற்பனைக் கூடம் நிறுவப்படும்.

நாளுக்கு நாள் இதய அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. குறிப்பாக, குழந்தை இதய நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஏழைகளுக்கு உயர்ந்தபட்ச சிகிச்சை அளிக்கத் தற்போது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நடைபெற்று வரும் இதய அறுவை சிகிச்சை எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இவை தவிர, தனியார் மருத்துவமனைகளிலும் அரசு உதவியுடன் இதய அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு, காத்திருப்போர் பட்டியல் கணிசமாகக் குறைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பொதுச் சுகாதார வரலாற்றின் புகழ் வாய்ந்த திட்டமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறுத் திட்டத்தைத் தமிழகத்தில் சிறப்புறச் செயல்படுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து தற்போது மகளிர் நலம் காக்கும் திட்டங்கள் மீண்டும் உயிர் பெற்று வருகின்றன. தாய்—சேய் நலத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் அரசு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞரின் அரசுதான் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன். தாய்—சேய் நலம் காக்கப் பின் வரும் சீர்மிகு திட்டங்கள் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்:

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2006 ஆகஸ்ட் 17

பிற்பகல் 1—55

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் தமிழக முதல்வரின் பேறுகால நிதி உதவித் திட்டம், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் அமல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்கள் சத்தான உணவு உண்ணவும், பிரசவ காலத்தில் வருமான இழப்பை ஈடுசெய்யவும், கருவுற்ற 7—வது மாதத்திலிருந்து ஆறு மாத காலத்திற்கு மாதம் ரூபாய் 1,000/— வீதம் ஒவ்வொரு ஏழை கர்ப்பிணிப் பெண்ணிற்கும் ரூபாய் 6,000/— வழங்கப்படும். இதற்கு நடப்பு நிதி ஆண்டில் ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மக்கள் நல்வாழ்வுத் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, எழும்பூர், அரசு மகப்பேறு மருத்துவமனையில் பச்சிளம் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது. குழந்தைகளின் பிறப்பு எடை இரண்டரைக் கிலோவுக்கு மேல் இருக்க வேண்டும். அரைக் கிலோ பிறப்பு எடையுடன் பிறக்கும் குழந்தைகள், முழு வளர்ச்சியடையாத குழந்தைகள்கூட இந்த மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டுக் காப்பாற்றப்படுகின்றனர். இந்தப் பிரிவு மேலும் சிறப்பாகச் செயல்படவும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் ரூபாய் 2.34 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நிகழ்ந்திடும் 11.5 இலட்சம் பிரசவங்களில் சுமார் 2.2 இலட்சம் பிரசவங்கள் 14 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மற்றும் அதனைச் சார்ந்த நிலையங்களில் நிகழ்கின்றன. எனவே, இந்த மருத்துவமனைகளில் உள்ள தாய்—சேய் நலப் பிரிவுகளைத் தரம் உயர்த்தி நவீனப்படுத்தும் நோக்கத்துடன், பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் 14 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் தலா ரூபாய் 50 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 7 கோடி வழங்கப்படும்.

அவசர சிகிச்சை தேவைப்படும் கர்ப்பிணிப் பெண்கள், நோயாளிகள் மற்றும் விபத்தில் சிக்கியவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதில் காலதாமதம் ஏற்படுவதால் பல சமயங்களில் இறப்பு நேரிடுகிறது. இதனைத் தவிர்க்கும் வகையில் இந்த அரசு, ஒரு வட்டாரத்திற்கு ஒரு ஆம்புலன்ஸ் வீதம் 385 வாகனங்களை வழங்கி, அவற்றை வட்டாரத்தின் முக்கியமான இடங்களில் நிறுத்தி வைக்க

2006 ஆகஸ்ட் 17] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு யூனியனுக்கு ஒரு ஆம்புலன்ஸ் வேன். இதில் முதற்கட்டமாக 187 வட்டாரங்களுக்கு தமிழ்நாடு அரசு சுகாதாரத் திட்டத்தின்கீழ் வாகனங்கள் வழங்கப்படும். மீதமுள்ள 198 வட்டாரங்களுக்கும் நடப்பாண்டிலேயே ஆம்புலன்ஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளும் வகையில் இந்த வாகன ஓட்டுநர்களுக்கு cellphone வழங்கப்படும்.

அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் தொலைபேசிமூலம் 24 மணி நேர அவசர மருத்துவச் சேவைக் கட்டுப்பாட்டு மையங்கள் இந்த ஆண்டே அமைக்கப்படும். இனிமேல் phone பண்ணினால் ஆஸ்பத்திரியில் phone—ஐ எடுக்க வேண்டும். அவசர பிரசவ உதவி தேவைப்படுவோர், குழந்தைகளுக்கு உயிர் காக்கும் மேல் சிகிச்சை தேவைப்படுவோர், அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படுவோர், ஆம்புலன்ஸ் வ்ாகனம் தேவைப்படுவோர், மற்றும் இரத்தம் தேவைப்படுவோர் இம்மையத்தை எந்த நேரமும் தொடர்புகொள்ளலாம். இந்த மையங்களைத் தொடர்புகொள்ள கட்டணம் இல்லாத் தொலைபேசி எண்கள் வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்காக 1.76 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 14 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உள்ளிட்ட 66 மருத்துவமனைகள் 24 மணி நேர தீவிர பிரசவ சேவை மையங்களாகச் செயல்படத் தெரிவு செய்யப்பட்டன. ஆனால், இவற்றில் 52 மாவட்ட, மற்றும் வட்ட மருத்துவமனைகளில் போதிய சிறப்பு மருத்துவர்கள் கடந்த ஆட்சியில் நியமிக்கப்படாததால் இம்மையங்கள் முழு அளவில் இயங்கவில்லை. இந்த மருத்துவமனைகளில் மயக்கவியல், மகப்பேறு மற்றும் குழந்தை நல மருத்துவர்கள் 200 பேர் உடனடியாகப் பணியமர்த்தப்படுவார்கள்.

பிரசவ கால அவசரத் தேவைக்கான வசதிகள் மிக எளிதில் கிடைக்கும்வண்ணம் நடப்பாண்டில் மேலும் 32 மருத்துவமனைகள் 24 மணி நேர தீவிர பிரசவ சேவை மையங்களாகத் தரம் உயர்த்தப்படும். இம்மையங்களுக்குத் தேவையான வசதிகள் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களுக்கான மார்பகப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய மாமோகிராம் (Mammogram) என்னும் நவீனக் கருவி சென்னை அரசுப் பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனை ஆகியவற்றில் நடப்பாண்டிலேயே

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2006 ஆகஸ்ட் 17

ரூபாய் 90 இலட்சம் செலவில் நிறுவப்படும். மீதமுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இந்தக் கருவி அடுத்த இரண்டு ஆண்டுகளில் நிறுவப்படும்.

மாவட்ட மருத்துவமனைகளில் சிக்கலான கர்ப்பங்கள், நீரிழிவு நோய், பாம்புக் கடி போன்ற பல்வேறு நோய்களினால் சிறுநீரகம் செயலிழக்கும்பொழுது உயிர் காக்கும் சிகிச்சைக்காக சிறுநீரக டயாலிஸிஸ் (Renal dialysis) என்ற இரத்த சுத்திகரிக்கும் நவீனக் கருவி அவசியத் தேவையாக உள்ளது. எனவே, சிறுநீரக டயாலிஸிஸ் கருவி அனைத்து மாவட்ட மருத்துவமனைகளுக்கும் உடனடியாக வழங்கப்படும். இக்கருவியை இயக்க, மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆலோசனைப்படி 1999 ஆம் ஆண்டில் 3 செவிலியர்கள் பணியமைப்புடன்கூடிய 24 மணி நேர பிரசவ சேவைத் திட்டம் 90 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் கர்ப்ப கால தாய் மரணம் மற்றும் சிசு மரணங்கள் கணிசமாகக் குறைந்தன. இதன் அடிப்படையில், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், கூடுதலாக 600 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 1,800 செவிலியர்களை நியமித்து, இத்திட்டத்தை விரிவுபடுத்தி உள்ளது. தற்போது, மொத்தம் 780 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர பிரசவ சேவைகள் வழங்கப்படுகின்றன என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரை மணி நேரப் பயணத்தில் எந்தவொரு கிராமத்திலிருந்தும் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் அவசர சிகிச்சை பெறும் வகையில், பேறுகால மற்றும் இளஞ்சிசு அவசர சிகிச்சை மையங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைக்கப்படும். அரை மணி நேரத்திலே, ஒரு ஸ்பாட்டிலிருந்து போக வேண்டும்; அது மாதிரி அமைக்கப்படும். இந்த மையங்களில் ஆங்கில முறை சிகிச்சையுடன், இந்திய பாரம்பரிய சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறை மருந்துகளைப் பயன்படுத்தி பேறுகாலச் சிக்கல்களைக் குறைக்கும் முறையும் செயல்படுத்தப்படவுள்ளது. இந்த வசதிகளை அனைத்துப் பகுதி மக்களும் எளிதில் பெறுவதற்கேற்ற வகையில் ஆரம்பக் கட்டமாக

2006 ஆகஸ்ட் 17] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

385 மையங்கள் அமைக்கப்படும். இதற்காக ரூ.54.97 கோடி உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காகவும், நவீன உபகரணங்கள் வாங்குவதற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தாய்மார்கள், குழந்தைகள், முதியோர்கள், நலிவடைந்தோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு, அவர்கள் வசிக்கும் கிராமத்திலேயே மருத்துவ சிகிச்சை அளித்திடும் வகையில், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஒரு மருத்துவக் குழு அமைக்கப்படும். இந்த மருத்துவக் குழு, குறிப்பிட்ட நாளில் முன் பயணத் திட்டப்படி, குறிப்பிட்ட கிராமங்களில் மருத்துவ முகாம்கள் நடத்துவார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் மாதம் ஒரு முகாம் தொடர்ந்து நடத்தப்படும். இந்த ஆண்டு 885 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்தத் திட்டம் மக்கள் பங்கேற்புடன் ரூ.12.13 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் படிப்படியாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அவசர முதலுதவி வேண்டுவோர் கிராமச் சுகாதாரச் செவிலியரை எளிதில் தொடர்புகொண்டு பயனடைய, 8,683 கிராமச் சுகாதாரச் செவிலியர்களுக்கும் cellphone-கள் உடனடியாக வழங்கப்படும். இதற்கென ரூ.2.87 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரசவ உபகரணங்களைக் கிருமி நீக்கம் செய்யவும், பிரசவித்த தாய்மார்களுக்கு வெந்நீர் வழங்கவும் 8,683 துணை சுகாதார நிலையங்களுக்கும் எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்புகள் நடப்பாண்டிலேயே வழங்கப்படும். இதற்காக ரூ.2.6 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கர்ப்ப காலத்தில் சிசுவை ஆணா, பெண்ணா என்று கண்டறிந்து, பெண் சிசுவாக இருந்தால் கருவிலேயே அழிக்கும் கொடிய வழக்கம் சில பகுதிகளில் உள்ளது. இதனைத் தடுப்பதற்கான சட்டம் இருந்தும், சில ஸ்கேன் மையங்களில் பெண் சிசுவைக் கண்டறிந்து தகவல்களைத் தெரிவிக்கின்றனர். இதனால் பெண் சிசுக் கருக்கலைப்பு தொடர்கிறது. இதனைத் தடுக்க, ஸ்கேன் மையங்களில் பயன் பெறுவோரில் எத்தனை பேர் கருக்கலைப்பு செய்தார்கள் என்பதைக் கண்டறிந்து, ஸ்கேன் மையங்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் தடுப்பூசிகள் போடுவதற்காக, ஒரேயொரு முறை மட்டும் பயன்படுத்தத்தக்க ஊசிக் குழல்கள் இந்த

ஆண்டு முதல் ரூ.6 கோடி செலவில் வழங்கப்படும். இதுவரைக்கும் சுடுதண்ணீரை வைத்துத்தான் செய்துகொண்டிருந்தார்கள். இந்தப் பழக்கத்தை மாற்றியிருக்கிறோம். இந்த ஊசிக் குழல்கள் இந்த ஆண்டு முதல் ரூ. 6 கோடி செலவில் வழங்கப்படும். இந்த ஊசிக் குழல்கள் ஒரு முறைக்கு மேல் பயன்படுத்த இயலாத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்மூலம் ஆண்டொண்டிற்கு 13 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்களும், 23 இலட்சம் குழந்தைகளும் பயன் பெறுவார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் வருமுன் காப்போம் என்ற சீரிய மக்கள் நலத் திட்டம் 1999 முதல் 2001 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் பன்முனை இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் சிறப்பு சிகிச்சைத் திட்டமாக அனைத்து மக்களும் பயன் பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 89 வகை நோய்களுக்கு 68 வகை அலோபதி மருந்துகள் மற்றும் 18 வகை சித்த மருந்துகள் வழங்கப்பட்டு, சிறப்பு மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டது. இம்முகாம்களில் ஸ்கேன், இ.சி.ஜி. உள்ளிட்ட பரிசோதனைகள் செய்யப்பட்டன. 8,993 முகாம்கள் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் நடத்தப்பட்டு, 95.5 இலட்சம் பேர் பயனடைந்தார்கள். செங்கோட்டையன் கொஞ்சம் கவனித்துக்கொள்ள வேண்டும். இது செங்கோட்டையனுக்காக சொன்னது; வருமுன் காப்போம் பற்றிச் சொன்னது. ஆனால், கடந்த 5 ஆண்டு ஆட்சியில் வருமுன் காப்போம் திட்டம் கைவிடப்பட்டு, செயல்படுத்தப்படவில்லை. ஒரு ஒன்றியத்திற்கு 30 முகாம்களுக்குப் பதிலாக ஒரு முகாம் மட்டுமே நடத்தப்பட்டது. ஒன்றியத்திலுள்ள அனைத்துப் பகுதி மக்களும் பயன் பெறவில்லை.

தற்போது வருமுன் காப்போம் திட்டம் மீண்டும் புதுப்பொலிவுடன் விரிவுபடுத்தப்பட்டுச் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்மூலம் முதற்கட்டமாக நடப்பாண்டிலும், அடுத்த ஆண்டிலும் ரூ.18.3 கோடி செலவில் 9 ஆயிரம் முகாம்கள் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் நடத்தப்படவுள்ளன. ஒரு மாவட்டத்தில் வாரத்தில் சராசரியாக மூன்று மருத்துவ முகாம்கள் வீதம், 24 மாதங்களில் மாநிலம் முழுவதும் 30 மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு சுமார் 300 முகாம்கள் வீதம் நடத்தப்படும். இந்தத் திட்டம் ஒரு நிரந்தரத் திட்டமாகத் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வருமுன் காப்போம் திட்ட முகாம்களில் சிறப்பு மருத்துவ வல்லுநர் குழுவினரால் மகப்பேறு, குழந்தை நலம், பல் மருத்துவம், கண், காது, மூக்கு, தொண்டை, இருதய நோய் சிகிச்சை, உயர் இரத்த அழுத்த நோய், நீரிழிவு நோய், புற்று நோய் மற்றும் காச நோய் கண்டறிதல் முதலான சேவைகள் அனைத்தும் அளிக்கப்படும். சித்த மற்றும் பிற இந்திய மருத்துவ முறை சிகிச்சைகளும் அளிக்கபபடும். ஸ்கேன் பரிசோதனை, இ.சி.ஜி. மற்றும் 10 வகையான ஆய்வகப் பரிசோதனைகள் நவீனக் கருவிகள் உதவியுடன் செய்யப்படும். செமி ஆட்டோ அனலைசர் என்னும் புதிய நவீன ஆய்வகக் கருவியைப் பயன்படுத்தி, ஆய்வகப் பரிசோதனை முடிவுகள் விரைவில் துல்லியமாகத் தெரிவிக்கப்படும்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் மக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் மருத்துவப் பயனாளிகள் சங்கங்கள் அமைக்கப்படும். இது எல்லோருமே கேட்டுக்கொண்டது. நாம் எல்லோருமே தலையிடுவது மாதிரி. இந்தச் சங்கங்களில் பொது மக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மருத்துவ அலுவலர்கள் முதலானோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். மாதம் ஒரு முறை இச்சங்க உறுப்பினர்கள் மருத்துவமனைச் செயல்பாட்டை ஆய்வு செய்து, குறைகளைக் களைய ஆலோசனை வழங்குவார்கள். மருத்துவமனையின் தேவைகளை நிறைவேற்றவும்—வெளியிலேகூட பெரிய ஆட்களிடம் பணம் வாங்கிக் கொள்ளலாம்—இந்தச் சங்கங்கள் முயற்சிக்கும். அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நடப்பு ஆண்டில் மருத்துவப் பயனாளிகள் நலச் சங்கங்கள் அமைக்கப்படும். மாவட்டத் தலைமை மருத்துவமனைச் சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் இந்த அரசு ரூ.5 இலட்சம் தரும். ரூ.5 இலட்சம் கொடுத்து, கமிட்டி போட்டுவிடும். அதேபோல தாலுகா மருத்துவமனைகளுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தலா ரூ. 1 இலட்சம். அதற்குப் பூராவும் ரூ.1 இலட்சம். Headquarters hospital--க்கு ரூ. 5 இலட்சம். இதற்கு ரூ.1 இலட்சம் வீதம் நிதி உதவி வழங்கப்படும். இந்தச் சங்கங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடர்ந்து கண்காணிப்பதால் தரமான மருத்துவச் சேவைகள் மக்களுக்கு அளிக்கப்படுவது உறுதி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்][2006 ஆகஸ்ட் 17

நோய் கண்டறியும் நவீன எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி தற்போது சென்னை, அரசுப் பொது மருத்துவமனை மற்றும் மதுரை, அரசு இராசாசி மருத்துவமனை ஆகியவற்றில் மட்டுமே உள்ளது. இந்த வசதியை நடப்பாண்டில் ரூ.23.97 கோடி செலவில் திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படுத்தவுள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஞானசேகரன், கைதட்டவில்லையே நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) வேலூர் என்று சொல்லும்போது அவரும் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டும் அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் முதன்முறையாக ரூ.80 இலட்சம் செலவில் நோய் கண்டறியும் நவீன டிஜிட்டல் எக்ஸ்ரே என்ற உபகரணம் நிறுவப்பட உள்ளது.

வருங்காலங்களில் பிற மருத்துவமனைகளுக்கும் எக்ஸ்ரே பிலிம் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு, டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகள் வழங்கப்படும்.

சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் அதிநவீன 64 கூறுகள் சி.டி. ஸ்கேனர் (C.T. Scan) கருவி ரூ.5.5 கோடி செலவில் அமைக்கப்படும். இந்தக் கருவியினால் நோயாளிகளுக்கு வலி ஏற்படாத வகையில் அனைத்து உடல் உறுப்புகளின் நோய்ப் பாதிப்பை 20 வினாடிகளில் மிகத் துல்லியமாகப் பரிசோதனை செய்ய இயலும். இந்த அதிநவீனக் கருவி ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் வகையில் தமிழகத்தில் முதன்முதலாக சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் அமைக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு மருத்துவச் சேவை வரலாற்றில் தமிழகத்தில் முதன்முதலாக சென்னை, அரசுப் பொது மருத்துவமனை மற்றும் மதுரை, அரசு இராசாசி மருத்துவமனை ஆகியவற்றில் சிறுநீரகத்தில் ஏற்படும் கற்களை நீக்க ரூ.3 கோடி செலவில் லித்தோடிரிப்ஸி எனப்படும் கல் உடைக்கிற மெஷின்—மதுரையிலும், சென்னையிலும் மட்டும் 3 கோடி ரூபாய் செலவில் லித்தோடிரிப்ஸி எனப்படும் நவீனக் கருவிகள் நிறுவப்படும்.

சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் தலா ரூ. 2 கோடி செலவில் புற்று நோய்

2006 ஆகஸ்ட் 17] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

மருத்துவத்திற்காக கோபால்ட் சிகிச்சைக் கருவிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, மண்டல அரசு கண் மருத்துவமனையின் சேவைத் தரத்தினை ரூ. 2.5 கோடி செலவில் உயர்த்த, நவீனக் கருவிகள் வாங்க இவ்வரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், விழித்திரை பாதிக்கப்பட்டுள்ள நீரிழிவு நோயாளிகளுக்கு அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் லேசர்—இதுவரைக்கும் லேசர் சிகிச்சையே கிடையாது. கத்தியால்தான் பண்ணிக்கொண்டிருக்கிறோம்—அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் லேசர் சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் உள்ள கண் சிகிச்சை, தோல் நோய் சிகிச்சை, குழந்தைகள் நலம், முடநீக்கியல் மற்றும் சிறுநீரகப் பிரிவுகள் ரூ. 85.94 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

சி.டி. ஸ்கேன் (C.T.Scan) பயன்பாடு அத்தியாவசியத் தேவையாக இருப்பதால், அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் உள்ள சி.டி. ஸ்கேன் மையங்கள்—இப்போது 8 மணி நேரம்தான் வேலை செய்கின்றன—இனிமேல் இந்த சி.டி. ஸ்கேன் மையங்கள் 24 மணி நேரமும் செயல்படும் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாகத் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–10

கிராமப்புற ஏழை எளிய மக்களும் C.T. Scan வசதி எளிதில் பெறும் வகையில் முதற்கட்டமாக 10 அரசு வட்ட மருத்துவமனைகளில் ரூ.12.76 கோடி செலவில் 10 புது hospitals-க்கு இந்த ஆண்டிலேயே 10 C.T. Scan கருவிகள் வழங்கப்படும்.

முந்தைய ஆட்சிக் காலத்தில் விழுப்புரம், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, விருதுநகர், இராமநாதபுரம், நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய ஏழு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் ரூபாய் 21 கோடி செலவில் மண்டல நோய் கண்டறியும் மையங்கள் அமைக்கப்பட்டன. கட்டடங்கள் கட்டி முடித்து இரண்டு ஆண்டுகளாகியும், மேற்கண்ட மையங்கள் செயல்பட எந்த

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2006 ஆகஸ்ட் 17

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த மையங்களுக்காக வாங்கப்பட்ட பெரும்பாலான உபகரணங்கள் பயன்படுத்தப்படாமலேயே இருந்தன. இவற்றைச் செயல்பட வைக்கத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்களுக்கு X-ray, E.C.G., Ultrasound Scan, இரத்தப் பரிசோதனை மற்றும் சிறுநீர்ப் பரிசோதனை ஆகியவை அடங்கிய முழு உடற் பரிசோதனைகள்—Master Health Check-up—இந்த ஆஸ்பத்திரியிலே முழுவதும் Master Health Check-up இந்த மையங்களில் நடைபெறும்.

லேப்ராஸ்கோப்பிக் குடும்ப நல அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை மற்றும் தரத்தை உயர்த்தும் வகையில் அரசு மருத்துவமனைகளுக்கு 66 நவீன லேப்ராஸ்கோப்பிக் கருவிகள் ரூபாய் 1.71 கோடி செலவில் வழங்கப்படும்.

இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழகத்தில் கிராம மக்கள் பயனடையக்கூடிய செமி ஆட்டோ அனலைசர் எனப்படும் நவீன ஆய்வகக் கருவிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 17 கோடி செலவில் வழங்கப்படும். இந்தக் கருவியைப் பயன்படுத்தி இரத்தத்தில் கொழுப்பின் அளவு, சர்க்கரை அளவு மற்றும் சிறுநீரகம், கல்லீரல் முதலிய உறுப்புகளின் செயல்பாடுகளைத் துல்லியமாக அறிய முடியும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 161 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிநவீன பச்சிளம் குழந்தைப் பராமரிப்புக் கருவிகள் ரூபாய் 1.15 கோடி செலவில் UNICEF நிறுவன உதவியுடன் வழங்கப்படும்.

அதிநவீன உயிர் காக்கும் வசதிகளுடன்கூடிய ஆறு ஆம்புலன்ஸ் வாகனங்கள் தீவிர சிகிச்சை தேவைப்படும் தாய்மார்களையும், குழந்தைகளையும் உயர் மருத்துவ வசதி உள்ள மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்ல, நாகப்பட்டினம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு UNICEF மற்றும் ஐக்கிய நாடுகள் குடும்ப நல அமைப்பு நிறுவனங்களின் உதவியுடன் ரூபாய் 90 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துக்கள் நேரிடுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிப்பதன் முக்கியத்துவத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவே, நடப்பு நிதியாண்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள நாமக்கல், தென்காசி, பத்மநாபபுரம், கடலூர், தாம்பரம், வாலாஜாப்பேட்டை, மேலூர் ஆகிய ஏழு

2006 ஆகஸ்ட் 17] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அதிநவீனக் கருவிகளுடன் ரூபாய் 10.5 கோடி செலவில்—ஒன்றுக்கு 1½ கோடி—அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பல் சிகிச்சைக்காக நோயாளிகள் அதிகம் பேர் வருகின்றனர். கிராமப்புற ஏழை எளிய மக்களுக்குப் பல் சிகிச்சை எளிதில் கிடைக்கும்வண்ணம், அரசு வட்ட மருத்துவமனைகள் அனைத்திலும் பல் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. எனவே, பல் சிகிச்சை வசதி இல்லாத 52 வட்ட மருத்துவமனைகளுக்கும், 8 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் பல் மருத்துவர்களை நியமித்து, பல் மருத்துவ சிகிச்சைக்கான உபகரணங்கள் வழங்கி, நடப்பு ஆண்டிலேயே பல் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

இந்திய மருத்துவ முறை சிகிச்சைகளை சென்னை மாநகரத்தில் விரிவுபடுத்துவதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, சென்னையிலுள்ள ஏழு மருத்துவமனைகளில் சித்த மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் ரூபாய் 96.59 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களிலுள்ள 10 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படும் சித்த மருத்துவப் பிரிவுகள் ரூபாய் 1 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

தமிழ்நாட்டில் 3.2 இலட்சம் பேர் எய்ட்ஸ் மற்றும் எச்.ஐ.வி.-யுடன் வாழ்வதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 62,570 பேர் எய்ட்ஸ் நோயாளிகள் எனக் கண்டறியப்பட்டுள்ளனர். எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் உரிய சிகிச்சை கிடைக்கவும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்கவும் இந்த அரசு பின்வரும் திட்டங்களை நடப்பு ஆண்டில் மேற்கொள்ளவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:

தற்போது தமிழ்நாட்டில் 6 இரத்தப் பகுப்பு மையங்கள் உள்ளன. எய்ட்ஸ் test-க்காக நடப்பு ஆண்டில் மேலும் 5 இரத்தப் பகுப்பு மையங்கள் தூத்துக்குடி, செங்கல்பட்டு, கன்னியாகுமரி, திருச்சி மற்றும் சேலம் ஆகிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூபாய் 1.6 கோடி செலவில் அமைக்கப்படும்.

மலைப் பிரதேசம் மற்றும் தொலைதூரக் கிராமங்களில் வாழும் மக்கள் பயன் பெறும் வகையில் 24 மணி நேர இரத்த வங்கி சேவை அளிக்க, கூடலூர், கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைகளில் ரூபாய் 36 இலட்சம் செலவில் இரத்த வங்கிகள் அமைக்கப்படும்.

எய்ட்ஸ் நோயினால் தாய், தந்தையை இழந்து, ஆதரவற்றவர்களாக இருக்கும் குழந்தைகள் மற்றும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரைப் பராமரிக்க சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள அனைத்து எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்மூலம் ஊட்டச் சத்து வழங்கப்படும். தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கத் தற்போது 15 கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் (A.R.T. centres) உள்ளன. இப்போது 15 இடங்களில்தான் மருந்து கொடுக்கிறோம். அதை மாற்றி, நோயாளிகள் மருந்து பெறுவதில் உள்ள சிரமத்தைக் குறைக்கும்பொருட்டு, 5 கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள், தருமபுரி, விருதுநகர், விழுப்புரம், கரூர் மற்றும் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைகளில் ரூ.1.76 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

பிற்பகல் 2—15

எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான நோயாளிகளின் தொற்று நிலைமையைக் கண்டறிய தற்போது ஆறு சி.டி.4 (CD.4) கருவிகள் உள்ளன. நோயாளிகள் சி.டி.4 (CD.4) செல்களின் எண்ணிக்கையை அறிய நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மேலும் இரண்டு சி.டி.4 (CD.4) கருவிகள் ரூ.2.38 கோடி செலவில் வழங்கப்பட உள்ளன.

தற்போது எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொடர்பான திட்டப் பணிகளைச் செயல்படுத்த மாவட்ட அளவில் அலுவலர் எவருமில்லை. UNICEF நிறுவனத்தின் உதவியோடு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு திட்ட அலுவலர் வீதம் 30 திட்ட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

தற்போது 14 அரசு மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பில் 889 இடங்கள் உள்ளன. இவற்றில் 50 விழுக்காடு இடங்கள் அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு வழங்கப்படுகின்றன.

மீதியுள்ள 445 இடங்கள் மட்டுமே தமிழகத்தில் உள்ள மாணவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் மருத்துவப் பட்டப் படிப்பு முடித்து வரும் மாணவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் இது குறைவாக இருப்பதால், மாணவர்கள் உயர் கல்வி கற்பது கடினமாக உள்ளது. எனவே, 219 மருத்துவப் பட்ட மேற்படிப்பு இடங்கள் 73 வகைப் படிப்புகளில்— அதாவது, M.D., M.S. இந்த முறை 219 இடங்களை அதிகரிக்க மைய அரசின் இசைவு கோரப்பட்டுள்ளது. மைய அரசின் இசைவு வந்தவுடன், வரும் கல்வியாண்டிலேயே இந்த இடங்கள் அதிகப்படுத்தப்படும்.

டி.என்.பி. (Diplomate in National Board) என்று சொல்லக்கூடியது, அது equal to P.G. M.D., M.S.–க்கு equal அது. மருத்துவப் பட்ட மேற்படிப்பு, மருத்துவ முதுநிலைப் படிப்பிற்குச் சமமான ஒன்றாகும். எனவே, 411 மருத்துவர்கள் இந்தப் பட்ட மேற்படிப்பைப் படிக்கும்வண்ணம், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் இத்திட்டம் வரும் கல்வியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும். இப்படி வந்தது என்றால், 5 வருடத்தில் P.G. post எல்லா மருத்துவமனைகளுக்கும் கிடைக்கும். ஒரு வருடத்தில் ஏறத்தாழ 600 பேர் வந்தால், 5 வருடத்திற்குள் 3,000 பேர் வந்தால், எல்லா Government hospital–களிலும் P.G. post வந்துவிடும்.

அரசு செவிலியர் கல்லூரிகள், சென்னை மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரிகளில் உள்ளன. இக்கல்லூரிகளிலுள்ள மொத்த பி.எஸ்சி. (நர்சிங்) இடங்கள் 50. இந்த இடங்கள் 50–லிருந்து 100 ஆக உயர்த்தப்படும்.

பெண்களின் வேலைவாய்ப்பைக் கருத்தில் கொண்டு, இவ்வரசு ஊரகப் பகுதிகளில் புதிய செவிலியர் கல்லூரிகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கும். தனியார்களும் செவிலியர் கல்லூரிகள் தொடங்க ஊக்குவிக்கப்படும்.

செவிலியர் கல்லூரிகள் மற்றும் செவிலியர் பள்ளிகளில் மாணவியர் தங்கும் விடுதிகள் மற்றும் இதர கட்டட வசதிகள் ரூ.5 கோடி செலவில் செய்து தரப்படும்.

செவிலியர் கல்லூரிகளில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. தற்போது எம்.எஸ்சி. செவிலியர் படிப்பிற்கு அரசு சென்னை மருத்துவக் கல்லூரியில் 8 இடங்கள்தான் உள்ளன. இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு இந்த இடங்களின் எண்ணிக்கை 8–லிருந்து 100 ஆக அதிகரிக்கப்படும். இந்த எம்.எஸ்சி. படித்தால்தான், பி.எஸ்சி. (நர்சிங்)

சொல்லிக் கொடுக்க முடியும். ஆகவே, அந்த எம்.எஸ்சி. (நர்சிங்) சீட் 8—லிருந்து 100 ஆக அதிகரிக்கப்படும். மேலும், மதுரை மருத்துவக் கல்லூரியில் 50 எம்.எஸ்சி. (செவிலியர்) பட்ட மேற்படிப்பு தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் உள்ள செவிலியர் பள்ளி, செவிலியர் கல்லூரியாக ரூ.1.5 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

மருத்துவத் துறையில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், மருத்துவ ஆய்வக நுட்பனர், இ.சி.ஜி. நுட்பனர், எலும்பு முறிவு நுட்பனர், மயக்கவியல் நுட்பனர், அறுவை அரங்க நுட்பனர், அவசரக் கவனிப்பு நுட்பனர், டயாலிஸிஸ் நுட்பனர் போன்ற மருத்துவம் சார்ந்த சான்றிதழ் படிப்புகளைப் படிக்க ஏதுவாகத் தற்போது அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் உள்ள இடங்கள் 2,700; அவை 5,000 ஆக உயர்த்தப்படும்.

மதுரை, திருமங்கலத்தில் உள்ள அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரியில் அடுத்த கல்வியாண்டு முதல் ஓமியோபதி மருத்துவ முறையில் 3 பிரிவுகளில் பட்ட மேற்படிப்பு தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

சென்னையில் உள்ள அரசு யோகா மற்றும் இயற்கை முறைக் கல்லூரியின் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை 10—லிருந்து அடுத்த கல்வியாண்டு முதல் 20 ஆக உயர்த்தப்படும்.

இந்திய மருத்துவம், யோகா மற்றும் இயற்கை மருத்துவ முறைகளில் சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலும், பாளையங்கோட்டை, அரசு சித்தா மருத்துவக் கல்லூரியிலும் பஞ்சகர்மா, தொக்கனம் முதலிய சிகிச்சை முறைகளை உள்ளடக்கிய ஓராண்டுப் பயிற்சி சான்றிதழ் படிப்பு, வரும் கல்வியாண்டில் ரூ.14 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பல்திறன் கொண்ட மருந்தாளுநர்களை உருவாக்கும் நோக்கில், ஒருங்கிணைந்த 2 ஆண்டு மருந்தாளுநர் பட்டயப் படிப்பு வரும் கல்வியாண்டு முதல் சென்னையிலும், பாளையங்கோட்டையிலும் ரூ.18 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

குடும்ப நலத் திட்டத்தில் ஆண்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும்பொருட்டு, அனைத்து மாவட்டங்களிலும் தழும்பில்லா நவீன ஆண் கருத்தடை சிகிச்சை முகாம்கள் நடப்பாண்டில் ரூ.2.09 கோடி செலவில் நடத்தப்படும்.

இரத்த சோகை, புற்று நோய், காச நோய் முதலிய நோய்கள் பற்றி மகளிர் சுய உதவிக் குழுவினருக்குப் பயிற்சி அளித்து, அவர்கள் மூலமாக சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மேலும், கருவிலேயே ஆண் குழந்தையா அல்லது பெண் குழந்தையா என்று கண்டறிந்து, பெண் கருவைக் கலைப்பதைத் தடுக்கும் சட்டம் பற்றியும், பெண் சிசுப் பாதுகாப்பு பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2—20

நீரிழிவு, இதய நோய்கள் மற்றும் உயர் இரத்த அழுத்த நோய் மிக அதிகமான அளவில் காணப்படுகின்றன. இது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பயிற்சி அளிக்கவும், நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சைக்கு வருவதை ஊக்குவிக்கவும் ரூ.15.11 கோடி தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்படும்.

மனநல நோயாளிகளுக்கு மனிதநேயத்துடன் அனைத்து வசதிகளுடன்கூடிய தரமான சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இதன்படி, சென்னை, ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம், செங்கல்பட்டு, திருநெல்வேலி, மதுரை ஆகிய 6 அரசு மருத்துவமனைகளில் ரூ.2.92 கோடி செலவில் மனநல சிகிச்சைப் பிரிவுகளைத் தரம் உயர்த்தும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மனநல சிகிச்சைப் பிரிவைத் தரம் உயர்த்துவதற்கு ரூ.48 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள மனநல மருத்துவமனை ரூ.2.69 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.

தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் பரிட்சார்த்த முறையில், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள 11 அரசு மருத்துவமனைகளில் மருத்துவக் கழிவுகள் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தப்பட்டு அழிக்கப்படுகின்றன. பிளாஸ்டிக் பூராவும் அழிக்க முடியாமல் இப்போது எல்லா hospital—களிலும் குவிந்து போய்க் கிடக்கின்றன. இத்திட்டம் சிறப்பான முறையில் செயல்படுவதால், நடப்பாண்டில் 270 அரசு மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இதற்காக 5 ஆண்டுகளுக்கு ரூ.32.71 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் மருந்துகளைத் தர ஆய்வு செய்வதற்காக சென்னையிலுள்ள மருந்தாய்வகமும், உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின்கீழ் உணவுப் பொருட்களைப் பரிசோதனை செய்வதற்காக,

கிண்டி, தஞ்சாவூர் மற்றும் பாளையங்கோட்டையிலுள்ள உணவுப் பொருள் ஆய்வகங்களும் ரூ.20 கோடி செலவில் மேம்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது பயிற்சி பெற்ற உணவு ஆய்வாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. எனவே, உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தைச் செவ்வனே செயல்படுத்திட 3 மாத கால உணவு ஆய்வர் பயிற்சி ரூ.22 இலட்சம் செலவில் உலக வங்கி நிதியுதவியுடன் அளிக்கப்படும்.

அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகம்மூலமாக மருந்துகள் வழங்குவதற்காகத் தற்போது அரசு ரூ.170 கோடி ஒதுக்கியுள்ளது. கடந்த ஆண்டைவிட மருந்துக்காக இந்த ஆண்டு ரூ.33.25 கோடி இது அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சேவைகளின் தரம் உயர்வதற்கும், மருத்துவ நிருவாக முறையைக் கண்காணிப்பதற்கும், சிறப்புக் கண்காணிப்பு விழிப்புக் குழு (Special Monitoring and Vigilance Cell) உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தவறுகள் நடக்கின்றனவா என்பதை நமக்குத் தெரிவிக்கவும், அதிகாரிகள் பார்ப்பதற்கு வசதியாகவும் இதையும் நாங்கள் ஏற்படுத்துகிறோம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் தமிழகமெங்கும் ஏராளமானோர் கண் பார்வை பெற்றுப் பயனடைந்துள்ளனர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. கண் மருத்துவ வசதியை மேம்படுத்தும் நோக்குடன், கண் சிகிச்சை உபகரணங்கள் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கும், இதர அரசு மருத்துவமனைகளுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் ரூ.1.98 கோடி செலவில் நடப்பாண்டில் வழங்கப்படும். பள்ளி மாணவர்களுக்கு வாழ்வொளித் திட்டத்தின்கீழ் கண் பார்வைக் குறைபாடுகள் கண்டறியப்பட்டு, அனைவருக்கும் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும். கண் தானம் வழங்குதல் முனைப்புடன் ஊக்குவிக்கப்படும். நீரிழிவு நோயின் காரணமாக ஏற்படும் கண் பார்வைக் கோளாறுகளுக்கு லேசர் சிகிச்சை அளிக்கும் வசதிகள் பரவலாக்கப்படும்.

தமிழகத்தில் ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டம் ரூ.25 கோடி செலவில் கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், தட்டம்மை, டெங்கு, காலரா, லெப்டோஸ்பைரோசிஸ், காமாலை போன்ற நோய்களின் நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் உடனுக்குடன் அறியப்பட்டு, தடுப்பு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படும். ஆனால், முன்பு பெயரளவிற்குக்கூட இத்திட்டம் எவ்வித முன்னேற்றமும் அடையாமல் கிடப்பில் போடப்பட்டது. இவ்வரசு பதவியேற்றவுடன் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இத்திட்டம் முழு அளவில் செயல்படுத்தப்படுகிறது. சென்னை, பொதுச் சுகாதாரத் துறை இயக்குநரகத்திலும், மாவட்டங்களிலும் நோய்க் கண்காணிப்புப் பணி மற்றும் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த மாவட்ட அலுவலர்களுடன் நேரடியாக உரையாட, வீடியோ கான்ஃபரன்சிங் சிஸ்டம் தொடங்கப்பட்டுள்ளது என்பதையும், மேலும், இத்திட்டம் முழுவீச்சுடன் செயல்படுத்தப்படும் என்பதையும் இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியிலே இருக்கின்ற தலைவர்கள், மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்கள், அருமை நண்பர் திரு. கோ.க. மணி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள், திரு. சிவபுண்ணியம் அவர்கள் மற்றும் எங்களுடைய அமைச்சர்கள் —Food Minister, Backward Classes Minister என எல்லோரும் அவரவர்கள் தொகுதிகளில் என்னென்ன வேண்டுமென்று கேட்டிருக்கின்றனர். எல்லாவற்றையும் நாங்கள் செய்து கொடுக்க முடியும். அதற்குரிய பணம் இருக்கிறது. நீங்கள் அந்தந்த மாவட்டத்திலே, தொகுதியில் இரண்டு மருத்துவமனைகள் இருந்தால், எந்த மருத்துவமனையை உடனே எடுக்க வேண்டும்; இரண்டு இருந்தால், ஒன்று இந்த வருடம்; அடுத்த ஒன்று அடுத்த வருடம். நீங்கள் செய்ய வேண்டியது, சட்டமன்ற உறுப்பினர்கள், எந்தெந்த மருத்துவமனையை இந்த ஆண்டிலே தங்களுக்கு எடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்களோ, அந்தப் பணிகளை நாங்கள் இந்த ஆண்டே தொடங்குகிறோம். அப்படிச் செய்கிற நேரத்திலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து ஆலோசித்து, அங்கே என்னென்ன தேவை என்பதை எல்லாம் புரிந்து, எவை நியாயமாக வேண்டுமோ, அந்தப் பணிகளையும் நாங்கள் நிச்சயமாகச் செய்து கொடுப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–25

கலைஞரின் தம்பிகள் நாங்கள். அவர் எப்படி நினைக்கிறாரோ, அதை அப்படியே செய்யக்கூடியவர்கள் நாங்கள். உங்களுக்குப் பணி

செய்வோம். அது மட்டுமல்ல, அந்தச் சுகாதார மையங்கள் வருகின்ற நேரத்திலும் உங்களுடைய தேவைகள்--நியாயமாகவே எந்தெந்த இடங்களுக்குத் தேவை என்று நினைக்கின்றீர்களோ—மொத்தமாக ஆளுக்கு மூன்று, நான்கு எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள்—அப்படி இல்லாமல், யார், யாருக்கு அந்தப் பகுதியிலே தேவை என்று எழுதிக் கொடுக்கிறீர்களோ, அதை மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி வந்தவுடன் சரியான முறையிலே எல்லாத் தொகுதிக்கும் பிரித்துக் கொடுத்து, எல்லா மக்களும் சரியான முறையிலே சுகாதாரத்தைப் பயன்படுத்தக்கூடிய அளவில், நிச்சயமாக வருங்காலத்திலே ஏற்படுத்திக் கொடுப்போம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொரு மருத்துவமனைக்கு நாங்கள் போகின்ற நேரத்திலே பார்த்தோம் என்று சொன்னால், ஆள் பற்றாக்குறை என்கிற காரணத்தால், சுகாதாரம் இல்லை, மருத்துவர்கள் இல்லை, ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள், மருத்துவமனைகளில் மருத்துவர்கள் முதல் கீழே இருக்கிற sweeper வரை—கீழே இருக்கிற துப்புரவுப் பணியாளர்கள் வரை, எல்லோரையும் நியமிக்கச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, நிறைவான ஒரு சுகாதாரத் துறையாக, நிறைவான ஒரு மருத்துவமனையாக, இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இப்போது சென்னை, G.H.–லே, 200 beds–க்குரிய room பூட்டியே கிடக்கிறது; அதையெல்லாம் சரி பண்ணச் சொல்லியாகிவிட்டது. இனிமேல் தனியார் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியதில்லை. எல்லோரும் உடம்பு சரியில்லை என்றால்—G.H.–க்குப் போய், பழைய மாதிரி எல்லோரும் G.H.–க்குச் செல்லக்கூடிய அளவுக்கு—நோய் வரக்கூடாது, அது வேறு பிரச்சினை—வந்தால், அரசு மருத்துவமனையிலே நீங்கள் எல்லாம் வைத்தியம் செய்யக்கூடிய அளவுக்கு நாங்கள் சுகாதாரத்தோடு இந்தத் துறையை நிர்வாகம் செய்வோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் நான் படித்து இருக்கிறேன். ஏறத்தாழ 400 வெட்டுத் தீர்மானங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சரி பார்த்து, நிச்சயமாக உங்களுடைய வேண்டுகோளை எல்லாம், இந்த அரசாங்கத்தால் எது, எதைச் செய்ய முடியுமோ, அதையெல்லாம் செய்து கொடுப்போம் என்று சொல்லிக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறு சாதனைகளை இங்கே அமைச்சர் அவர்கள் படித்து இருக்கிறார்கள். இரண்டு கேள்விகள். அதில் எல்லாம் கேட்க வேண்டிய அவசியம் இருக்காது. நிறையக் கேட்க வேண்டும், நேரமில்லை. ஒன்று, 24 மணி நேரமும் ஆம்புலன்ஸ்கள் இயக்கப்படும் என்று சொல்லி இருக்கின்றீர்கள். அதற்குத் தேவையான எரிபொருளை நீங்கள் தந்திருக்கிறீர்களா? முதல் கேள்வி. இரண்டாவதாக, இங்கே மற்றொரு கேள்வி, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே புதிதாக மருத்துவர்களை நியமிக்கிறபோது ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்படவில்லை என்று சொன்னால், எந்த மருத்துவரும் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே ஒரு மாத காலம், 2 மாத காலத்திற்குப் பிறகு அவர்கள் அங்கேயிருந்து மாறுதல் செய்வதற்குத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஏதாவது காலவரையறை உருவாக்கப்படுமா? அப்படி உருவாக்கப்படவில்லை என்று சொன்னால், எப்பொழுதுமே ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருத்துவர் பணியிடங்கள் காலியாகத்தான் இருக்குமே தவிர, எந்தச் சேவையும் நம்மால் செய்ய முடியாது. இதற்கு அரசு ஏதாவது திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

அதற்கு மேலே, விழுப்புரம் மருத்துவக் கல்லூரி ஒன்றைக் கொண்டு வர வேண்டும் இந்த ஆண்டிலே, நடப்பாண்டிலேயே என்று சொன்னீர்கள். அதற்கு உங்களால் ஜூன் மாதத்திலேயே மனுத் தாக்கல் செய்யப்பட்டுவிட்டதா? அதற்கு வேண்டிய, அதற்குரிய அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும் நான் இந்த அவையின்மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்புலன்ஸ் வண்டி, N.G.O.–க்கள்மூலமாக நாங்கள் அதை நடத்தப் போகிறோம், ஒரு வட்டாரத்திற்கு ஒன்று. அவர்களுக்கு maintenance செலவாக நாங்களும் 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம். அதுபோக, கிலோ மீட்டருக்கு, குறைந்தபட்ச, minimum rate fix பண்ணிக் கொடுத்து, அவர்களை அங்கே நடத்தச் சொல்லி இருக்கிறோம். மொத்தம் 385. எல்லாப் பஞ்சாயத்து

யூனியன்களிலும் அதைக் கொடுக்கிறோம். அதேபோல இறந்தவர்களுக்குப் பயன்படுத்தக்கூடிய அமரர் ஊர்தியும் கொடுக்கிறோம். எல்லா இடங்களிலும் கொடுக்கிறோம். எல்லா மாவட்டங்களிலும், எல்லா இடங்களிலும் வரவிருக்கிறது.

அதேபோல, மாறுதல் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் சொன்னார். Vacancy இருந்தால்தான் அந்தந்த ஊரைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள் எல்லோரும். எல்லா டாக்டர்களும் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இப்போது எல்லா vacancy–யும் நிறைவு ஆக்கப்பட்டுவிட்டால் யாரும் எங்கேயும் போக முடியாது. அங்கங்கே அவன், அவன் உட்கார்ந்துதான் ஆக வேண்டும். ஆகவே, நாங்கள் எல்லா டாக்டர் post–களையும் விரைவிலே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக நாங்கள் அதை நிறைவு செய்கிற நேரத்தில், அந்த மாறுதல் பிரச்சினை வராது. குறிப்பாக, நீங்கள் சொல்கிற யோசனை, ஒரு வருடத்தில், இரண்டு வருடத்தில் இருக்கும் என்று சொல்கிறீர்கள். அது போன ஆட்சிக் காலத்திலும் சரி, எந்த ஆட்சிக் காலத்திலும், பல நேரங்களிலே அது கிளம்பி இருக்கிறது. இனிமேல் அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாமல் மருத்துவர்களும் அந்தந்த இடத்திலே பணியாற்றக்கூடிய அளவிற்கு நிச்சயமாகச் செய்வோம்.

விழுப்புரம் மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த அளவிற்கு, வேண்டிய நடவடிக்கைகளை நானும், சம்பந்தப்பட்ட எங்களுடைய அமைச்சர் பொன்முடி அவர்களும் சேர்ந்து இடங்களைத் தேர்வு செய்து—முதலிலே இடத்தைத் தேர்வு பண்ண வேண்டியிருக்கிறது. இடம் fix பண்ணிவிட்டோம். (குறுக்கீடு) இல்லை, இடம் எல்லாம் fix பண்ணியாகிவிட்டது. இடம் fix பண்ணி நாங்கள் கொடுக்கப் போகிறோம். அது எந்தத் தேதிக்குள் கொடுக்கப் போகிறோம், எப்போது, எந்த norms என்று சொல்லி எல்லாவற்றையும் செய்து, நீங்கள் எதிர்பார்ப்பதைவிட வேகமாகச் செய்து கொடுத்து, அடுத்த Assembly–யிலே நீங்கள் சொல்லும்போது என்னைப் பாராட்டுகிற அளவிற்கு நிச்சயமாக இந்த அரசு நடக்கும் என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

பிற்பகல் 2–30

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் எல்லோரையும் பிரமிக்க வைக்கக்கூடிய அளவிற்கு, மருத்துவத் துறையில் பல நல்ல நவீனக் கருவிகளை வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அருமையான திட்டங்களை இங்கே முன்மொழிந்த நமது தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதே சமயத்தில், திண்டுக்கல் உள்ளிட்ட பல மாவட்டத் தலைநகரங்களில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைகளில் மிகச் சிறிய கருவிகளான 500mA X–ray, Doppler Scan, இதுபோன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கவனிப்பது, இந்தக் கருவிகள் இயக்கப்படுகின்றனவா என்பதைக் கவனிப்பது, இன்னும் குறிப்பாகச் சொன்னால், அரசு மருத்துவமனைகளில் நிர்வாகச் சீர்கேடு என்பது மிகப் பெரிய நோயாக இருக்கிறது. நீங்கள் 24 மணி நேரம் scan கொடுக்கிறீர்கள். அதற்கான அலுவலர்களையும் கொடுக்கிறீர்கள். ஆனால், அந்த scan–கள் பழுதுபட்டுவிடுகின்றன என்ற பதில்தான் நிர்வாகங்களிடமிருந்து வருகிறது. ஆகவே, இந்த நோயைத் தீர்ப்பதற்கு, உரிய நிர்வாகக் கண்காணிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து செலுத்த வேண்டும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே என்னுடைய அறிவிப்பிலே சொன்னபடி, அந்த கமிட்டி வந்த பிறகு நீங்கள் மாதம் ஒரு முறை கூடி, உங்களுக்கு என்னென்ன தேவைகள், என்னென்ன சரியாக இல்லை என்பதையெல்லாம் அரசாங்கத்திற்குச் சொல்லக்கூடிய வாய்ப்பை உண்டாக்க வேண்டும் என்று சொல்லித்தான், அந்த கமிட்டியை நாங்கள் உண்டாக்கியிருக்கிறோம். போன ஆட்சியிலே பார்த்தோம் என்று சொன்னால், நிறைய இடங்களில் X–ray machine–ஐப் பார்த்தோம் என்று சொன்னால், 23 இடங்களில் அந்த packing–ஐயே உடைக்காமல் வைத்திருக்கிறார்கள். நாங்கள் ஒவ்வொரு இடத்திற்குப் போய்ப் பார்த்தபோது X–ray machine, 23 கருவிகள் packing நிலையிலேயே இருந்தன. ஆகவே, இப்படிப்பட்ட குறைபாடுகள் நிறைய உள்ளன. அவற்றையெல்லாம் சீர் செய்யக்கூடிய

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்][2006 ஆகஸ்ட் 1

முயற்சியிலே இந்த அரசாங்கம் இறங்கி இருக்கிறது என்பதையும் நா தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி 2–31 ஆகிறது. (குறுக்கீடு) ச வேல்முருகன், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கே மிக முக்கியமான துறையான சுகாதாரத் துறையில் 100 அற்புதமா அறிவிப்புகளை இந்த நாட்டு மக்களுக்கு வழங்கியதற்காக மாண்புமி தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கின்றேன். அதே வேளையில், MRI Scan–ஐ இன்றைக்கு தனியார் மருத்துவமனைகள், தனியாக அங்கங்கே தொடங்கி, வெறு 3,000 ரூபாய்க்கு MRI Scan தனியார் மருத்துவமனைகளில் எடுக்கின் ஒரு சூழல் வந்திருக்கிறது. அதே மாதிரி CT Scan இன்றைக்கு 500 ரூபாயி தனியார் மருத்துவமனைகளிலும் குறைந்த கட்டணங்களிே எடுப்பதற்கான வாய்ப்பு வந்திருக்கிறது. ஆதனால், மாண்புமிகு நம்முடை சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஏழையெளிய மக்களுடை வாட்டத்தைப் போக்குகின்ற வகையில், தனியார் துறையிலே 3,000 ரூபாய்க்கு எடுக்கின்றபோது, நம்முடைய அரசும் அதே அள 3,500 தொகை என்றிருப்பதைப் பாதியாகக் குறைப்பதற்குத் தகுந் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்க வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமி பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்த கருத்தை ஏற்றுக்கொண்டு, அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போ வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. வெட்டு தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன் திரு. கோவை தங்கம்.

2006 ஆகஸ்ட் 17]

திரு. கோவை தங்கம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ்.இராமன், இருக்கையில் இல்லை.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ராம சுப்புராம்.

திரு. ராம. சுப்புராம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராம. சுப்புராம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

திரு. கே.வீ. ராமநாதன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

திரு. கே.எல். இளவழகன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு.க. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

திரு. கோ. எதிரொலி மணியன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜி. லதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து, இருக்கையில் இல்லை.

திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. தண்டபாணி.

திரு. மா. தண்டபாணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. குமரகுரு, இருக்கையில் இல்லை.

திரு. இரா. குமரகுரு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

திரு. பெ. கண்ணன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

திரு. பி. பலராமன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. வரதராஜன்.

திரு. ரா. வரதராஜன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரா. வரதராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. இராம்பிரபு.

திரு. இரா. இராம்பிரபு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. இராம்பிரபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. தங்கமணி.

திரு. பி. தங்கமணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி செல்வி ராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு.

திரு. இரா. துரைக்கண்ணு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. செந்தமிழன்.

திரு. ஞா. செந்தமிழன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

திரு. கே. மகேந்திரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை.

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மா. ராஜசேகரன்.

திரு. மா. ராஜசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. ராஜசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

திரு. ந. கணபதி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ந. கணபதி அவர்களுடைய வட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில ல்லை.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் ர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் ருதப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பி. பத்மாவதி வர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் ரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. ாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. நெடுஞ்செழியன் வர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் ரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. காவேரி அவர்களுடைய வட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பறப்படுகிறது. திருமதி எஸ். தேன்மொழி.

திருமதி எஸ். தேன்மொழி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எஸ். தேன்மொழி வர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் ரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் ல்லை.

திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

திரு. ஆர். ஞானதாஸ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

திரு. சொ. கருப்பசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஆர். பிரேமா.

திருமதி ஆர். பிரேமா: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஆர். பிரேமா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ராணி வெங்கடேசன், இருக்கையில் இல்லை.

திருமதி ராணி வெங்கடேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

திரு. க. இராஜேந்திரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. தாமோதரன்.

திரு. செ. தாமோதரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1865,42,42,000/-, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.85,85,71,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-8-2006) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

61. மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006—2007. (தமிழ், ஆங்கிலம்).

62. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2006—2007. (தமிழ், ஆங்கிலம்).

63. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 25 வரை).

****

இணைப்பு

(102 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

அத்தியாயம்–1

முன்னுரை

1.1. "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

எனும் அய்யன் திருவள்ளுவரின் குறள்நெறிக் கோட்பாட்டின்படி, டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையைச் செவ்வனே நடத்திச் செல்கிறது. தமிழக அரசு, உடல் நலம் கொண்ட மக்களை உருவாக்குவதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டுள்ளது. அதற்காக இவ்வரசு, மாநிலத்தின் எளிதில் அணுக முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும், அவர்களின் வீட்டின் அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவக் கவனிப்பு வசதிகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது. மருத்துவத் துறையில் விரைவாக ஏற்பட்டு வரும் தொழில்நுட்ப வளர்ச்சியினைப் பயன்படுத்தி, உயர்தர மருத்துவ வசதிகளை அளிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வரசு, சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும், நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்பு மற்றும் உடல் நலம் மேம்படும் மருத்துவ வசதிகளை அளித்து வருகிறது.

1.2. இவ்வரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அதிக அக்கறை காட்டி வருவதை, துறை எடுத்து வரும் பின்வரும் நடவடிக்கைகளின்மூலம் அறியலாம்:–

- தற்போது தமிழகத்தில் 12 மாவட்டங்களில் 14 அரசு மருத்துவக் கல்லூரிகள் மக்களுக்கு மேம்பட்ட சிறப்பு மருத்துவச் சேவை வழங்க வேண்டி இயங்கி வருகின்றன. மருத்துவக் கல்லூரி இல்லாத ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையில் படிப்படியாகத் தமிழகத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்படும். அதன் முதற்கட்டமாக, விழுப்புரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும்.

- கிராமப் பகுதிகளில் உள்ள மாணவ, மாணவியர் விரைவாக வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கேற்ற வழிவகைகளை உருவாக்கித் தரும் நோக்கத்துடன், ஊரகப் பகுதிகளில் பல் மருத்துவக் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள் மற்றும் உடல் இயக்க மருத்துவக் கல்லூரிகள் அமைத்திடத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

- "வருமுன் காப்போம் திட்டம்" விரைவில் மீண்டும் புதுப்பொலிவுடன் கொண்டு வரப்பட்டு, செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், கிராமப்புற மக்களுக்கும், நகர்ப்புற மக்களுக்கும் ஒருங்கிணைந்த மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுக்குத் தக்க சிகிச்சையும், சுகாதாரக் கல்வியும் வழங்கப்படும். மருத்துவ முகாம்கள் ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு 5,000 மக்கள் தொகை கொண்ட துணை சுகாதார நிலையப் பகுதிகளில் நடத்தப்படும். இம்முகாம்கள் நகர்ப்புறங்களிலும் நடத்தப்படும். இம்முகாம்களில், மருத்துவ வல்லுநர்கள், மக்களிடத்தில் தொற்றும் மற்றும் பிறரிடம் தொற்றா நோய்கள் உள்ளனவா என்பதைப் பரிசோதனையின்மூலம் கண்டறிவர். சிறிய நோய்களுக்கு சிகிச்சையும் அளிப்பர். இரத்தம், சிறுநீர்ப் பரிசோதனை போன்ற அனைத்துப் பரிசோதனைகள், செமி ஆட்டோ அனலைசர் போன்ற நவீன பரிசோதனைக் கருவிகள்மூலம் செய்யப்படும். கருவுற்ற தாய்மார்களுக்கு அல்ட்ராசோனோகிராம்மூலம் சிறப்புப் பரிசோதனை செய்யப்படும். நடப்பாண்டிலும், வரும் ஆண்டிலும் 9,000 இலவச மருத்துவ முகாம்கள் மாநிலமெங்கும் நடத்தப்படும். மேல் சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்படுவோரும், தொடர் சிகிச்சை தேவைப்படுவோரும், பரிந்துரைக்கப்படும் அரசு மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுக் கவனிக்கப்படுவர். நோய் குறித்த அனைத்துத் தகவல்களும் கணினிமூலம் தொகுக்கப்பட்டு, பல்வேறு சுகாதாரத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

- இரத்தத்தில் உள்ள சிகப்பணுக்களின் சரியான அளவைக் கண்டறிவதுதான், இரத்த சோகை நோய் காணப்படும் மக்களிடம் இந்நோயினைக் குறைப்பதில் எடுக்க வேண்டிய முதற்கட்ட நடவடிக்கையாகும். தொடர் பரிசோதனைமூலம் இரத்த சிகப்பணுக்களின் அளவைக் கண்டறிவதனால் மட்டுமே சிகிச்சையின் பலனைக் கண்காணிக்க முடியும். ஆனால் சரியான இரத்த சிகப்பணுக்களின் எண்ணிக்கையைக் கண்டறியும் வசதி, தொற்றா நோய்களான நீரிழிவு நோய், மஞ்சள் காமாலை ஆகியவற்றை முன்கூட்டியே கண்டறியும் வசதி, பிறரிடம் இரத்தத்தில் உள்ள கொழுப்புச் சத்தினைக் கண்டறியும் வசதி ஆகியவற்றிற்குத் தேவைப்படும் ஆய்வகக் கருவிகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் இல்லை. செமி ஆட்டோ அனலைசர் என்ற நவீன கருவிமூலம் எல்லாவிதமான இரத்தப் பரிசோதனைகளையும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் குறைந்த செலவில் செய்ய முடியும், இந்தப் பரிசோதனை முடிவுகள் தரமானவையாகவும், மிகச் சரியானவையாகவும் இருக்கும். மேற்படி கருவியின்மூலம் நீரிழிவு போன்ற நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே கண்காணிப்பதன்மூலம், மேல் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்படும். நோயாளிகள் அரசு மருத்துவமனைகளுக்குச் செல்வதும் குறையும். மேற்படி கருவிகள், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒன்று வீதம், தேவைப்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.17 கோடி செலவில் வழங்கப்படும். இக்கருவிமூலம், தாய்மார்கள், வளர் இளம் பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே இரத்த சோகை சம்பந்தப்பட்ட குறைபாடுகளை மருத்துவர்கள் கண்டறிந்து, குணப்படுத்த வழிவகுக்கும்.

- வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள கருவுற்ற பெண்களின் இரத்த சோகையினைத் தடுப்பதற்கான ஊட்டச் சத்து உணவுக்காகவும், பேறுகாலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும், குறைந்த எடையுள்ள குழந்தைப் பிறப்பினைத் தவிர்க்கவும், மகப்பேறுக்கு முன் மூன்று மாதங்களுக்கும், மகப்பேறுக்குப் பின் மூன்று மாதங்களுக்கும் பண உதவி வழங்கும்பொருட்டு சிறப்பு நலத் திட்டம் ஒன்று ரூ.100.00 கோடி செலவில் விரைவில் தொடங்கப்படும். இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.6,000/- நல உதவியாக ஒரு கருவுற்ற தாய்க்கு அளிக்கப்படும். இந்தச் சலுகை உயிருடன் பிறக்கும் இரண்டு குழந்தைகளுக்கு அளிக்கப்படும்.

- அரசு மருத்துவமனைகளின் மருத்துவச் சேவையின் தரத்தினை மேம்படுத்தவும், அவற்றினைக் கண்காணிக்கவும் சிறப்புக் கண்காணிப்பு விழிப்புக் குழுக்கள் விரைவில் அமைக்கப்படும்.

- எச்.ஐ.வி. நோய் உள்ளதா என்பதைக் கண்டறியும் பரிசோதனை அனைத்து மாவட்ட, வட்ட மருத்துவமனைகளிலும், ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நடத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- அரசு மருத்துவமனைகளிலுள்ள காலியிடங்கள் அனைத்தையும் கால முறை ஊதிய அடிப்படையில் நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1,393 மருத்துவர்கள் மற்றும் 1,800 செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதுவரை ஒப்பந்த மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வந்த 1,539 மருத்துவர்கள் மற்றும் 5,260 செவிலியர்கள் கால முறை ஊதியத்தின்கீழ் கொண்டு வரப்படுவர்.

1.3. மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு 2006–07 ஆம் ஆண்டுக்கு ரூ.1951.28 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விவரம் வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

கோரிக்கை	திட்டத்தில் சேராதது	திட்டப் பணிகள்			
		மாநிலத் திட்டம்	மைய அரசு பொறுப்பு ஏற்பவை	மைய மற்றும் மாநில அரசுகள் பொறுப்பு ஏற்பவை	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
19. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1252.02	469.82	223.84	5.00	698.66

(ரூபாய் கோடியில்)

மானியக் கோரிக்கை	திட்டப் பணிகள் மற்றும் திட்டத்தில் சேராதது	கூட்டுக: திருப்பி வசூலிப்பவை	மொத்தம்
(1)	(2)	(3)	(4)
19. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1950.68	0.60	1951.28

இந்த ஒதுக்கீட்டில், வருவாய்க் கணக்கில் ரூ.1865.42 கோடியும், மூலதனக் கணக்கில் ரூ.85.86 கோடியும் அடங்கும். வருவாய்க் கணக்கில் உள்ள ஒதுக்கீடு, 2006–2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வரவு–செலவுத் திட்டத்திற்கான மொத்த வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.39,860 கோடியில் 4.68 சதவீதம் ஆகும்.

1.4. மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் 2006–07 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டில் இயக்ககம்வாரியான நிதி ஒதுக்கீடு வருமாறு:-

ரூபாய் இலட்சத்தில்)

1.	தலைமைச் செயலகம்	387.91
2.	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்	31,824.95
3.	மருத்துவக் கல்வி இயக்ககம்	63,583.11
4.	பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம்	57,064.42
5.	குடும்ப நல இயக்ககம்	6,625.54
6.	மருந்துக் கட்டுப்பாட்டு இயக்ககம்	516.57
7.	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்	6,886.82
8.	தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை	995.55
9.	பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்ட இயக்ககம்	10,004.89
10.	தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்	17,238.37
	மொத்தம்	1,95,128.13

[2006 ஆகஸ்ட் 17

குறிப்பு:

(அ) மேற்சொன்ன நிதி ஒதுக்கீட்டுடன், பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்படும் மருத்துவம் சார்ந்த கட்டடப் பணிகள் வகையில் ரூ.136.93 கோடி மானியக் கோரிக்கை எண் 39-ன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மாநில தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளுக்காக மானியக் கோரிக்கை எண் 32-தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு என்பதன்கீழ் ரூ.93.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.5. புதிய திட்டங்கள் (பகுதி-II) 2006-2007:

2006-2007 ஆம் ஆண்டில் 35 புதிய திட்டங்களை (பகுதி-II திட்டங்களை) ரூ.1,182.42 இலட்சம் மொத்தச் செலவில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இயக்ககவாரியான விவரங்கள் கீழே தரப்படுகின்றன:

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	இயக்ககம்	திட்டங்களின் எண்ணிக்கை	இறுதி நிலைச் செலவு	2006-2007-ல் செலவு
1.	மருத்துவக் கல்வி இயக்ககம்	16	809.42	477.29
2.	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்	2	109.12	109.04
3.	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்	6	122.75	77.00
4.	பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம்	5	94.38	92.38
5.	குடும்ப நல இயக்ககம்	2	40.00	40.00
6.	மருந்துக் கட்டுப்பாட்டு இயக்ககம்	3	3.25	3.25
7.	தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை	1	3.50	3.50
	மொத்தம்	35	1,182.42	802.46

1.6. உத்தேசிக்கப்பட்ட புதிய திட்டப் பணிகள் மற்றும் இயக்ககங்களின் பணிகள் அடுத்து வரும் அத்தியாயங்களில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

2006 ஆகஸ்ட் 17]

அத்தியாயம்-2

மருத்துவக் கல்வி

2.1. மருத்துவக் கல்வி இயக்ககம் ஜூலை மாதம் 1966 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்ககத்தின் முதன்மை நோக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

(1) மருத்துவக் கல்வியை மேம்படுத்துதல்.

(2) மருத்துவக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகளை நிர்வகித்தல்.

(3) மருத்துவம் மற்றும் செவிலியர் படிப்புகளுக்கான சேர்க்கைக்காகத் தேர்வுக் குழுவைச் சீரிய முறையில் கண்காணித்தல்.

2.2. மருத்துவ நிலையங்கள்:

மாநிலத்தில் தற்போது 14 மருத்துவக் கல்லூரிகளும், 1 பல் மருத்துவக் கல்லூரியும், 2 இயன்முறை மருத்துவக் கல்லூரிகளும், 2 செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளும் அரசின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இந்த இயக்ககத்தின்கீழ் இயங்கும் 44 மருத்துவமனைகளில் உள்ள ஒட்டுமொத்தப் படுக்கை வசதிகளின் எண்ணிக்கை 22,426. நாளொன்றுக்குப் பயன் பெறும் உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகளின் சராசரி எண்ணிக்கை முறையே 20,925 மற்றும் 68,908 ஆகும். மருத்துவக் கல்வியானது, இம்மாநிலத்தில் அரசு மற்றும் தனியார் நிலையங்களின்மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பான விவரங்கள் அட்டவணை 1 மற்றும் 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன:

அட்டவணை 1: அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள இடங்களின் எண்ணிக்கை

(அ) பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பில் உள்ள இடங்களின் விவரம்:

படிப்பின் பெயர்	மொத்த இடங்கள்
எம்.பி.பி.எஸ்.	1,645
பி.டி.எஸ்.	100
பி.எஸ்ஸி. (செவிலியர்)	50
இயன்முறை மருத்துவம்	50
மருந்தாக்கியல்	106
செவிலியர் பட்டயம்	1,795

(ஆ) பட்ட மேற்படிப்பில் உள்ள சிறப்புப் படிப்பு மற்றும் அவற்றிற்கான இடங்கள் விவரம்:

பாடத் திட்டம்	சிறப்புப் படிப்பு எண்ணிக்கை	மொத்தச் சேர்க்கை இடங்கள்
பட்ட மேற்படிப்பு	23	429
பட்டய மேற்படிப்பு	15	460
எம்.டி.எஸ்.	7	36
உயர் சிறப்பு மேற்படிப்பு	14	69
எம்.பார்மஸி	4	32
எம்.எஸ்ஸி. (செவிலியர்)	4	8

அட்டவணை 2: தனியார் துறையில் இயங்கும் சுய நிதி மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த நிறுவனங்களின் விவரம்

கல்லூரிகள்	மொத்தக் கல்லூரிகள்	மொத்த இடங்கள்
ஐ.ஆர்.டி. பெருந்துறை (தமிழ்நாடு அரசு நிறுவனம்)	1	60
மருத்துவக் கல்லூரிகள்—எம்.பி.பி.எஸ்.	3	350
பல் மருத்துவக் கல்லூரிகள்	7	520
மருந்தாக்கியல் கல்லூரிகள்	32	1,735
இயன்முறை மருத்துவம் (இளநிலை)	35	1,725
செவிலியர் (பட்டப் படிப்பு)	39	1,905
தொழில் வழி சிகிச்சை—பட்டப் படிப்பு	4	200
பட்டய மருந்தாக்கியலிலிருந்து பட்டமருந்தாக்கியல் படிப்பு — (பிற்சேர்க்கை 10 சதவீதம்)	28	152

2.3. தேர்வு முறை:

மருத்துவம்/பல் மருத்துவம்/செவிலியர்/இயன்முறை மருத்துவம்/ தொழில்வழி மருத்துவம்/ மருந்தாக்கியல் ஆகிய பட்டப் படிப்புகளுக்கு மருத்துவக் கல்வி இயக்குநரின் தலைமையிலான தேர்வுக் குழு ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கப்படும். இந்தத் தேர்வுக் குழு, அரசின் கொள்கைக்கிணங்க ஒற்றைச் சாளர முறையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்பு, முதுநிலை பல் மருத்துவம், உயர் சிறப்பு மேற்படிப்பு ஆகிய இடங்களுக்குப் பொது நுழைவுத் தேர்வினைத் தொடர்ந்து கலந்தாய்வுமுலம் தேர்வுக் குழுவால் இட ஒதுக்கீட்டினைப் பின்பற்றி மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். பட்டயப் படிப்பு (செவிலியர்)இடங்களுக்கும் மதிப்பெண் அடிப்படையில் ('+2' மதிப்பெண்) மற்றும் கலந்தாய்வுமூலம் தேர்வுக் குழுவால் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

2.4. தேனி மருத்துவக் கல்லூரி, தேனி:

2006–2007 ஆம் கல்வியாண்டில் இருந்து, தேனி மருத்துவக் கல்லூரியில் 100 மாணவர்களின் சேர்க்கைக்கு மாநில அரசு, மைய அரசிடமிருந்து அனுமதி பெற்றுள்ளதன்படி மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றுள்ளது.

2.5. புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள்:

அரசானது மருத்துவக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்க முடிவெடுத்துள்ளது. அதன்படி, முதல் கட்டமாக விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் விரைவில் தொடங்கப்படும்.

2.6. புதிய பல், செவிலியர் மற்றும் இயன்முறை மருத்துவக் கல்லூரிகள்:

கிராமப்புற மாணவர்கள் விரைவாக வேலைவாய்ப்பு வசதிகளைப் பெறும்பொருட்டு, அரசால் ஊரகப் பகுதிகளில் புதிய பல், செவிலியர் மற்றும் இயன்முறை மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 17

2.7. மருத்துவம் சார்ந்த படிப்புகள் (Para-Medical Course) தொடங்குதல்:

2.7.1. தற்போது 10 புதிய மருத்துவம் சார்ந்த படிப்பு (ஓராண்டு) மற்றும் டி.எம்.எல்.டி படிப்பு (2 ஆண்டு) ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள 14 அரசு மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது உள்ள 2,700 இடங்களை 5,000 இடங்களாக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது.

2.7.2. தற்போது அரசுக் கல்லூரிகளில் வசதியுள்ள மாணவர்கள் மட்டுமே படிப்பதற்கு வாய்ப்பு உள்ள "சுய நிதிப் பாடப் பிரிவுகள்" பொது வகையாக மாற்றப்பட்டு மற்றப் பாடப் பிரிவுகளைப்போலவே கட்டணமும் நிர்ணயிக்கப்படும்.

2.7.3. தற்சமயம் அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள பட்ட மேற்படிப்புக்கான கட்டணம் மிக அதிகமாக உள்ளது. இதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.7.4. அரசியல் சட்டத்தின் 93-வது திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்து சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் நீங்கலாக மற்ற அரசு உதவி பெறாத அனைத்து தனியார் சுய நிதிக் கல்வி நிறுவனங்களில், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு ஊன்றுகோலாக விளங்கிடும் இட ஒதுக்கீட்டிற்கு வழிவகை செய்ய மிக விரைவில் மாநில அரசால் சட்டம் இயற்றப்படும்.

2.7.5. பி.ஏ. இனாம்தார் வழக்கில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, சுய நிதிக் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர முறையில் இடங்களை ஒப்புவிக்கும்படிக் கேட்கக்கூடாது. இதனால், தானாக முன்வந்து ஒற்றைச் சாளர முறையில் இடங்களை ஒப்புவிக்க சுய நிதிக் கல்லூரிகள் மனமின்றி உள்ளன. சுய நிதி மருத்துவம்/பல்/மருத்துவம் சார்ந்த கல்லூரிகளின் கூட்டமைப்பினருடன் நடந்த ஒப்பந்தப் பேச்சு வார்த்தையில், தானாக முன்வந்து ஒற்றைச் சாளர முறையில் கீழ்க்காணும் அளவில் இடங்களை ஒப்புவிக்க சம்மதிக்கப்பட்டுள்ளது:—

	அரசு	தனியார்
சிறுபான்மையினரல்லாத கல்லூரிகள்	65 சதவீதம்	35 சதவீதம்
சிறுபான்மையினக் கல்லூரிகள்	50 சதவீதம்	50 சதவீதம்

2006 ஆகஸ்ட் 17]

2.8. அரசு மருத்துவக் கல்லூரிகள்/மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் டி.என்.பி. படிப்புப் பிரிவு:

2.8.1. தேசிய தேர்வுக் குழுமம், புது தில்லியால் நடத்தப்படும் டி.என்.பி. தேர்வானது பட்ட மேற்படிப்புக்குச் சமமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசு டி.என்.பி. படிப்புப் பிரிவை கீழ்க்காணும் வகையில் அரசு மருத்துவக் கல்லூரிகள்/மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் துவங்க முடிவு செய்துள்ளது:—

(i) 14 அரசு மருத்துவக் கல்லூரிகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு டி.என்.பி. படிப்புப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது:—

	படிப்புப் பிரிவின் எண்ணிக்கை	இடங்களின் எண்ணிக்கை
மருத்துவம் அல்லாத சிறப்புப் பிரிவு	64	128
மருத்துவ சிறப்புப் பிரிவு	103	202
உயர் சிறப்புப் பிரிவு (மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை)	41	81
மொத்தம்	208	411

(ii) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகளின்கீழ் உள்ள 29 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 151 இடங்கள் டி.என்.பி. படிப்புப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

2.8.2. இது குறித்த தேவையான கருத்துருக்கள் புது தில்லியில் உள்ள தேசிய தேர்வுக் குழுமத்திற்கு அனுப்பப்படும்.

2.9. அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள பட்ட மேற்படிப்பு இடங்களை அதிகரித்தல்:

2.9.1. தற்போது பட்ட மேற்படிப்பு – பட்டம்/பட்டயம்/உயர் சிறப்புப் பிரிவு/எம்.டி.எஸ். படிப்புப் பிரிவுகளுக்கான இடங்கள், மாநிலத்தில் அரசுப் பணியில் உள்ளவர் மற்றும் அரசுப் பணியில் இல்லாத மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கைக்குப் போதுமானதாக இல்லை. இளம் மருத்துவர்களுக்கு உயர் கல்வி கற்க வாய்ப்பு அளிக்கும்பொருட்டு,

10 அரசு மருத்துவக் கல்லூரிகளில் புதிய பட்ட மேற்படிப்பு படிப்புகளைத் தொடங்கவும், தற்சமயம் இருக்கும் இடங்களை கீழ்க்காணும் வகையில் அதிகரிக்கவும், அரசால் மைய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது:—

1. புதிய படிப்புப் பிரிவுகள் 187 இடங்கள்

2. அதிகரிக்கும் இடங்கள் 32 இடங்கள்

2.9.2. மேற்காணும் படிப்புப் பிரிவுகள் தொடங்க மாநில அரசால் ரூ.1.46 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2.10. முதுநிலை மருத்துவ பட்டப் படிப்பில் தமிழ்நாட்டுக் கல்லூரி பட்டதாரிகளும், தமிழ்நாட்டில் பணிபுரியும் மருத்துவர்களும் மட்டுமே 100 விழுக்காடு அளவிற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதோடு, இட ஒதுக்கீடும் பாதுகாக்கப்படுகின்ற வகையில் உரிய நடவடிக்கைகளை எடுத்தல்:

2.10.1. தற்சமயம் 15 சதவீத மருத்துவ/பல் மருத்துவ இடங்களும், பட்ட மேற்படிப்பில் மொத்தம் 50 சதவீத இடங்களும் அகில இந்திய பங்கு ஒதுக்கீட்டின்கீழ் மைய அரசிற்கு அளிக்கப்படுகிறது. தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை இவ்வாறு ஒப்பளிக்கப்படும் பங்கு ஒதுக்கீட்டின் எண்ணிக்கையை விடக் குறைவாக உள்ளது.

2.10.2. அரசின் இட ஒதுக்கீட்டு முறையைப் பாதுகாக்கவும், 100 சதவீத இடங்களை மருத்துவ/பல் மருத்துவ மற்றும் பட்ட மேற்படிப்பு இடங்களுக்குக் கிடைக்கச் செய்யவும் சட்டக் கருத்துப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

2.11. இந்தியாவில் சிறந்த மருத்துவச் சேவைகளை வழங்குவதில் தமிழகம் முதன்மை பெறும் வகையில், சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை, டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தினைப்போல உயர் மருத்துவ ஆய்வு மையமாக உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்:

இந்தியாவில் பிரதம மந்திரி ஸ்வஸ்தயா சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ் அகில இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தினைப்போல,

சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையினை உயர் மருத்துவ ஆய்வு மையமாக உயர்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மைய ஆய்வுக் குழு உறுப்பினர்கள் ஆய்வு செய்துள்ளனர்.

2.12. அரசு மகப்பேறு மகளிர் நோயியல் நிலையம் மற்றும் தாய்–சேய் நல மருத்துவமனை, சென்னை:

இந்த மருத்துவமனை மேம்பாட்டிற்காகக் கருவிகள் வாங்க ரூ.191.74 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது, 100 கே.வி.ஏ. மின்னாக்கி, மருத்துவ எரிவாயுக் குழாய் மற்றும் புதிய கட்டடத்தில் சரிவுப் பாதை அமைப்பதற்கு ரூ.43.20 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் மின்னாக்கி பராமரிப்பு மற்றும் உயிர் வேதியியல் பிரிவு உபகரணங்கள் பராமரிப்பு ஆகியவற்றிற்காக தொடர் செலவினமாக ரூ.0.79 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2.13. அனைத்து அரசு மருத்துவமனைகளில் செய்யப்படும் சேவையின் தரம் உயர்வதற்கும், மருத்துவ நிருவாக முறையைக் கண்காணிப்பதற்கும் சிறப்புக் கண்காணிப்பு விழிப்புக் குழுவினை (Special Monitoring Vigilance Cell) உருவாக்குதல்:

அரசு மருத்துவமனைகளின் சேவையின் தரத்தினை உயர்த்துவதற்கும், மருத்துவ நிருவாக முறையைக் கண்காணிப்பதற்கும் சிறப்புக் கண்காணிப்பு விழிப்புக் குழு விரைவில் அமைக்கப்படும்.

2.14. புற்று நோய்க் கட்டுப்பாடு திட்டம்:

கீழ்க்காணும் மருத்துவமனைகளில் புற்று நோய் சிகிச்சை அளிக்கும்பொருட்டு கோபால்ட் தெரபி கருவி நிறுவப்பட்டு, புற்று நோய் உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது:—

1. அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை

2. அரசினர் மகளிர் நோயியல் நிலையம் மற்றும் தாய் சேய் நல மருத்துவமனை, சென்னை.

3. அரசு பொது மருத்துவமனை, சென்னை

4. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை

5. அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.

[2006 ஆகஸ்ட் 17

6. அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.

7. அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை

8. அரசு கோயம்புத்தூர் மருத்துவமனை, கோயம்புத்தூர்.

9. அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனை, காஞ்சிபுரம்.

2.15. மெமோகிராபி கருவிப் பிரிவு:

கீழ்க்காணும் மருத்துவமனைகளில் மெமோகிராபி கருவி (மார்பகப் புற்று நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் கருவி) நிறுவப்பட்டுள்ளது:-

1. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்

2. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்

3. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி

4. வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர்

2.16. மனநல மருத்துவம்:

சென்னை, அரசு மனநலக் காப்பகம் வலுப்படுத்தப்பட்டு, அதன் செயல் திறன் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையத்தில் தற்போது உள்ள படுக்கை எண்ணிக்கை 1,800. சராசரியாக ஒரு நாளைக்கு 1,151 உள்நோயாளிகளும், 328 வெளிநோயாளிகளும் சிகிச்சை பெறுகிறார்கள். தற்போது போதைக்கு அடிமையானோரைக் குணப்படுத்த, 8 போதைக்கு அடிமையானோரைக் குணப்படுத்தும் நிலையங்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இயங்கி வருகின்றன.

2.17. குருதி வங்கி:

மருத்துவக் கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டில் இயங்கும் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த அரசு மருத்துவமனைகளில் 22 குருதி வங்கிகள் அரசு உரிமம் பெற்று செயல்பட்டு வருகின்றன.

2006 ஆகஸ்ட் 17]

2.18. நோய்த் தடுப்பு கிங் மருந்து நிலையம்:

கிண்டியிலுள்ள நோய்த் தடுப்பு கிங் மருந்து நிலையம், நாட்டிலுள்ள தலைசிறந்த ஆய்வு நிலையங்களில் ஒன்றாகும். இந்த நிலையத்தில் தடுப்பு ஊசி மருந்துகள் மற்றும் ஊநீர் தயாரிக்கப்படுகின்றன. இது ஒரு கற்பிக்கும் மற்றும் ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. இந்த நிலையத்தின் நுண்ணுயிரியல் நஞ்சாய்வு பிரிவு, இந்திய அரசாங்கத்தாலும், உலகச் சுகாதார நிறுவனத்தாலும், தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கான தேசிய இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு ஆய்வகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 691.

2.19. அரசு கண் நோய் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அரசு கண் மருத்துவமனை, சென்னை:

அரசு கண் நோய் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அரசு கண் மருத்துவமனைக்கு உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கி வலுப்படுத்திட ரூ.2.54 கோடி நிதி அரசு ஒப்பளித்துள்ளது.

2.20. சென்னை அரசு பொது மருத்துவமனை, பெர்னார்ட் கதிரியக்க நிறுவனம்:

சென்னை அரசு பொது மருத்துவமனையின் பெர்னார்ட் கதிரியக்க நிறுவனத்திற்கு ரூ.2.70 கோடி நிதியில் உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்படவுள்ளன.

2.21. சென்னை அரசு பொது மருத்துவமனை, சென்னை:

சென்னை அரசு பொது மருத்துவமனையில் அதிநவீன 64 Slice C.T. scanner ரூ.5.50 கோடி செலவில் தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்தால் நிறுவப்படும்.

2.22. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்:

2.22.1. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் 1988 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டது. மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி, மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த மேற்படிப்புக்கான கல்வித் தரத்தை உன்னத நிலைக்கு உயர்த்துவது இதன் நோக்கமாகும்.

2.22.2. தற்போது இம்மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ், குருதி ஏற்ற மருத்துவத் துறை, பாடத் திட்ட மேம்பாட்டுத் துறை, கொள்ளை நோயியல் துறை, சோதனை மருத்துவத் துறை, தொலைத் தொடர்பு நுண் மின் நூலகம் ஆகியவை இயங்கி வருகின்றன.

2.23. 2006–2007 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

1. சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆசிரியர் பிரிவுக் கட்டடத் தொகுதி, நிருவாகக் கட்டடத் தொகுதி, விரிவுரைக் கூடம், நூலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டடம் ரூ. 500.00 இலட்சம் மொத்தச் செலவில் கட்டுதல்.

2. சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலுள்ள நோய் எதிர்ப்பாற்றல் மருத்துவத் துறையில் மாற்று அறுவை சிகிச்சைக்கான திசு மையம் ரூ. 9.40 இலட்சம் மொத்தச் செலவில் ஏற்படுத்துதல்.

3. புதிதாகக் கட்டப்பட்ட சென்னை, ஈஞ்சம்பாக்கம் அரசினர் புறநகர் மருத்துவமனைக்கு சாதனங்கள் ரூ.20.00 இலட்சம் மொத்தச் செலவில் வாங்குதல்.

4. சென்னை, அரசு பொது மருத்துவமனையில் கதிரியக்க சிகிச்சைப் பிரிவிலுள்ள பழைய கோபால்ட் 60 ஃபோனக்ஸ் சி 86 எந்திரத்தின் உள்ளீட்டு வேதியியல் பொருட்களைப் புதிய கதிரியக்க மூலம் ரூ.40.48 இலட்சம் மொத்தச் செலவில் மாற்றுதல்.

5. சென்னை, மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் மருத்துவ நிலையம் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனையிலுள்ள நாளமில்லாச் சுரப்பியல் துறைக்கு சாதனங்கள் ரூ.20.00 இலட்சம் மொத்தச் செலவில் வாங்குதல்.

6. சென்னை, குழந்தை நல மருத்துவ நிலையம் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையிலுள்ள நுண்ணுயிரியல் துறையை ரூ.7.05 இலட்சம் மொத்தச் செலவில் மேம்படுத்துதல்.

7. சென்னை, சேத்துப்பட்டு, அரசு நெஞ்சக நோய் மருத்துவ நிறுவனத்தில் தற்போதுள்ள புதிய கட்டடத்தில் இரண்டாம் தளம் ரூ.18.75 இலட்சம் மொத்தச் செலவில் கட்டுதல்.

8. தாம்பரம், அரசு நெஞ்சக நோய் மருத்துவ நிறுவனத்தை மேம்படுத்துவதற்கு சாதனங்கள் ரூ.18.00 இலட்சம் மொத்தச் செலவில் வாங்குதல்.

9. சென்னை, அண்ணா நகர் அரசு புறநகர் மருத்துவமனையை மேம்படுத்துவதற்கு மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா சாதனங்கள் ரூ.51.50 இலட்சம் மொத்தச் செலவில் வாங்குதல்.

10. மதுரை மருத்துவக் கல்லூரியில் மகளிருக்கான தங்கும் விடுதி ரூ.38.30 இலட்சம் மொத்தச் செலவில் கட்டுதல்.

11. சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலுள்ள கண் நோய் சிகிச்சை மருத்துவத் துறைக்கு சாதனங்கள் ரூ.10.00 இலட்சம் மொத்தச் செலவில் வாங்குதல்.

12. சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையின் தோல் மருத்துவத் துறைக்கு சாதனங்கள் ரூ.3.08 இலட்சம் மொத்தச் செலவில் வாங்குதல்.

13. சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையின் குழந்தை மருத்துவத் துறையைத் தரம் உயர்த்த ரூ.27.73 இலட்சம் மொத்தச் செலவில் உபகரணங்கள் வாங்குதல்.

14. சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்ள முடநீக்கியல் மருத்துவத் துறைக்கு சாதனங்கள் ரூ.19.13 இலட்சம் மொத்தச் செலவில் வாங்குதல்.

15. சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்ள சிறுநீரகவியல் மருத்துவத் துறைக்கு சாதனங்கள் ரூ.11.00 இலட்சம் மொத்தச் செலவில் வாங்குதல்.

16. சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்ள சிறுநீரக அறுவை சிகிச்சைத் துறைக்கு சாதனங்கள் ரூ.15.00 இலட்சம் மொத்தச் செலவில் வாங்குதல்.

[2006 ஆகஸ்ட் 17

அத்தியாயம்–3

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்

3.1. முன்னுரை:

3.1.1. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மருத்துவச் சேவை குறித்த அனைத்துத் திட்டங்களையும் திட்டமிட்டு, 29 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 155 வட்டத் தலைமை மருத்துவமனைகள், 80 வட்டம் சாரா மருத்துவமனைகள், 12 மருந்தகங்கள், 11 நடமாடும் மருத்துவப் பிரிவுகள், 7 தாய் சேய் நல மருத்துவமனைகள், 2 காச நோய் மருத்துவமனைகள், 2 காச நோய் மையங்கள், 7 தொழுநோய் மருத்துவமனைகள் வாயிலாக மருத்துவச் சேவைப் பணிகளைப் பொது மக்களுக்கு வழங்கும் பொறுப்பு வகிக்கிறார். மனித உள்ளுறுப்புகளை மாற்றுவதை முறைப்படுத்தும் சட்டம், தனியார் மருத்துவமனைகளை முறைப்படுத்தல் சட்டம், பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்பம் குறித்த சட்டம், தனியார் மருத்துவமனைகளை அங்கீகரித்தல், மாவட்ட மனநலத் திட்டம் முதலிய பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தையும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் கவனித்து வருகிறார்.

3.1.2. இம்மாநிலத்தில் மொத்தமுள்ள 30 வருவாய் மாவட்டங்களில், சென்னை மாவட்டம் நீங்கலாக உள்ள 29 வருவாய் மாவட்டங்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நல இணை இயக்குநர்கள் அல்லது மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நலத் துணை இயக்குநர்கள் மேற்பார்வையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

3.1.3. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துணை இயக்குநர் (காச நோய்), காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கவனித்து வருகிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துணை இயக்குநர் (தொழுநோய்), தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தினைக் கவனித்து வருகிறார். தொழுநோய்க் களப் பணியாளர்களைப் பொதுச் சுகாதாரப் பணியில் ஈடுபடுத்தவும், சுகாதார ஆய்வாளர்களை தொழுநோய்த் தடுப்புப் பணியில் ஈடுபடுத்தவும், தொழுநோய் ஒழிப்புத் திட்டம், ஏற்கெனவே பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

2006 ஆகஸ்ட் 17]

3.1.4. முக்கிய சிறப்பு சிகிச்சைகளான மருத்துவம், அறுவை சிகிச்சை, மகப்பேறு சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பால்வினை நோய் சிகிச்சை, எலும்பு முறிவு அறுவை சிகிச்சை, மயக்க மருத்துவம், குழந்தை நலம், பல் நோய் சிகிச்சை, மனநல சிகிச்சை, ஆய்வகப் பணி, தொழுநோய் சிகிச்சை, காச நோய் சிகிச்சை, நீரிழிவு நோய் சிகிச்சை, இதய நோய் சிகிச்சை ஆகியவை இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்மூலமாக அளிக்கப்பட்டு, சேவைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

3.1.5. முதுநிலைக் குடிமை மருத்துவர் நிலையில் சிறப்பு மருத்துவ வல்லுநர்கள் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் உள்ளனர். விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க, விபத்து மற்றும் அவசர சிகிச்சை வசதிகளும் மற்றும் விபத்து மற்றும் தலைக் காய சிகிச்சைகளுக்கான தனிப் பிரிவும் செயல்பட்டு வருகிறது. மகப்பேறு, குழந்தை நலம் மற்றும் குடும்ப நலப் பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றன.

3.1.6. கண் பார்வை இழப்பைத் தடுத்தல், மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம் போன்ற பிற மருத்துவத் திட்டங்கள் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறையின் வாயிலாக ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3.2. ஒப்பந்த அடிப்படையில் செவிலியர் பணி நியமனம்:

பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் மகப்பேறு மருத்துவத்தை மேம்படுத்த, 24 மணி நேரமும் செயல்படும் வகையில், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தலா 3 செவிலியர்கள் வீதம் 600 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மொத்தம் 1,800 செவிலியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யத் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. 1,800 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 5,260 செவிலியர்களைக் கால முறை ஊதியத்தின்கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2006 ஆகஸ்ட் 1

3.3. முன் நிர்ணயம் மற்றும் பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியு தொழில்நுட்பம் (பாலினத் தெரிவு செய்வதைத் தடுத்தல் சட்டம், 1994:

பாதகமான ஆண், பெண் விகிதாச்சாரத்தைக் கட்டுப்படுத்தவு
பெண் சிசுக் கொலையைத் தடுக்கவும், பிறப்பிற்கு முன் கருவி
தன்மையறியும் தொழில்நுட்ப (பாலினத் தெரிவு செய்வதை
தடுத்தல்)சட்டம், 1994, இம்மாநிலத்தில் திறம்படச் செயல்படுத்தப்படுகிறது
மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வட்ட அளவிலு
ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்கீ
இதுவரை 2,911 ஸ்கேன் மையங்கள் பதிவு செய்யப்பட்டு, கருவி
பாலினத்தை அறிவதைத் தடுக்கக் கண்காணிப்பு நடவடிக்கைக
மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை சட்டமீறல்களில் ஈடுபட்ட 95 ஸ்கே
மையங்கள் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, 70 ஸ்கேன் மையங்கள்மீ
வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 48 வழக்குகளில் தீர்ப்புக
வழங்கப்பட்டுள்ளன. 22 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன
25 வழக்குகள் பதிவு செய்யப்படவுள்ளன.

3.4. மாவட்ட மனநலத் திட்டம்:

3.4.1. மனநலம் பேணுவது, நாம் வாழும் சமூகத்தில் முக்கியமான
அம்சமாகும். மாவட்ட மனநலத் திட்டம், குறிப்பாகக் கிராமப்புற
பகுதிகளில் சிறப்பான மனநலச் சேவைகள் அளிக்கும்பொருட்டு
திருச்சி, மதுரை, இராமநாதபுரம், தேனி மற்றும் கன்னியாகுமரி ஆகி
மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மன நோயா
பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு உரிய மனந
சிகிச்சைகளை வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

3.4.2. இத்திட்டத்தின்கீழ், நடமாடும் மாவட்ட மனநலக் குழு ஒன்
அமைக்கப்பட்டு உள்ளது. இக்குழுவில் இடம் பெற்றுள்ள மனந
மருத்துவர் மற்றும் மருத்துவம் சாராப் பணியாளர்கள், மாவட்டங்களி
பல்வேறு இடங்களுக்கும் சென்று மனநல நோயாளிகளை இன
கண்டு, அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகள் அளித்
வருகின்றனர். மேலும் நோயின் தன்மைக்கேற்ப மனநல நோயா
பாதிக்கப்பட்டவர்கள், அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்
சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றனர். இத்திட்டத்தின்கீ
மனநல நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது குறித்து மருத்துவர்கள்
செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு
பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

2006 ஆகஸ்ட் 17]

3.4.3. தகவல் தொடர்பு கல்விப் பிரச்சார நடவடிக்கைகள்மூலம் மக்களிடையே மன நோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் மாவட்ட மனநலத் திட்டத்தின்கீழ் இந்நோய்க்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்த விழிப்புணர்வு ஆகியவை ஏற்படுத்தப்படுகின்றன.

3.4.4. இத்திட்டத்தின்கீழ் மதுரை மற்றும் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைகளில் 10 படுக்கைகள் கொண்ட தனிப் பிரிவு ஒன்று மனநல நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம், தற்போது ஈரோடு, தருமபுரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, செயல்படுத்தப்படும் நிலையில் உள்ளது.

3.4.5. மாவட்ட மனநலத் திட்டத்தின் கட்டுப்பாட்டு மற்றும் கண்காணிப்பு அலுவலராக, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் உள்ளார். செயல்படுத்தும் அலுவலர்களாக இயக்குநர், மனநலக் காப்பகம் மற்றும் திட்ட மாவட்டத்தைச் சார்ந்த மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.

3.4.6. மாவட்டங்களில் இத்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

3.5. காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்:

3.5.1. இந்தியாவில், ஓராண்டுக்கு சுமார் 18 இலட்சம் பேர் காச நோய்க் கிருமிகளால் புதிதாகத் தாக்கப்படுகின்றனர். இவர்களில் பாதிப் பேர் தொற்று நோய் கொண்டவர்கள். நேரடியாகக் கண்காணிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கும் சுருக்கு முறை உத்தியினை (DOTS) வெற்றிகரமாகச் செயல்படுத்துவதன்மூலம் இந்நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

3.5.2. தமிழகத்தில் 8 காச நோய் மருத்துவமனைகள் உள்ளன. அவற்றில் 2, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் கட்டுப்பாட்டிலும், 4, மருத்துவக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டிலும், 2, தனியார் துறையிலும் உள்ளன. காச நோயால் மிக மோசமாகப்

பாதிக்கப்பட்டு, ஆபத்தான நிலையில் உள்ள காச நோயாளிகளுக்காக மட்டும் 3,091 படுக்கைகள் தமிழகத்தில் உள்ளன. மற்ற நோயாளிகள் தங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள சிகிச்சை மையங்களில் 'டாட்ஸ்' (DOTS) மூலம் சிகிச்சை பெற்று வருகின்றனர். இத்திருத்தியமைக்கப்பட்ட காச நோய்த் திட்டத்தை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த மாநில அளவில் கூடுதல் இயக்குநர் நிலையில் மாநில காச நோய் அலுவலர் உள்ளார். மாவட்ட அளவில் துணை இயக்குநர் இத்திட்டத்தின் மேலாளராகச் செயல்பட்டு வருகின்றார்.

3.5.3. மாவட்ட ஆட்சித் தலைவர்களின்கீழ் இயங்கும் மாவட்ட காச நோய் சங்கங்களின் மருந்து மற்றும் நிறுவனச் செலவு முழுவதையும் உலக வங்கியின் உதவியுடன் மைய அரசு ஏற்கிறது. மாநிலத்தில் அனைத்து மாவட்ட காச நோய் மையங்கள் மற்றும் காச நோய் மருத்துவமனைகளுக்கான செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்கிறது.

3.5.4. 140 காச நோய்ப் பிரிவுகள் (5 இலட்சம் மக்கள் தொகைக்கு ஒன்று), 776 நுண்ணோக்கி மையங்கள் (1 இலட்சம் மக்கள் தொகைக்கு ஒன்று), 11,000 'டாட்ஸ்' மையங்கள்மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காச நோய்த் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகள், தனியார் மருத்துவர்கள், இரயில்வே மருத்துவமனைகள், துறைமுக மருத்துவமனைகள், இராணுவ மருத்துவமனைகள் ஆகியவற்றுடன் நல்ல தொடர்புடன் செயல்பட்டு வருகின்றன. 2005-2006 ஆம் ஆண்டில், 6.5 இலட்சம் நபர்களுக்கு சளிப் பரிசோதனை செய்யப்பட்டு, சுமார் 91,720 நோயாளிகளுக்குக் காச நோய் இருப்பது கண்டறியப்பட்டது. இவர்களில், 36,066 புதிய காசநோயாளிகள் சளிப் பரிசோதனைமூலம் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களில் 86 விழுக்காடு நோயாளிகள் பூரணமாகக் குணப்படுத்தப்பட்டுள்ளனர். இந்திய அரசால் கொடுக்கப்பட்ட அளவீடுகள் மற்றும் இலக்குகளை எய்தி இத்திட்டம் சாதனை புரிந்துள்ளது.

தமிழ்நாட்டில் திருத்தியமைக்கப்பட்ட காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்

வருடம்	சளிப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட நுரையீரல் காச நோயாளிகள்			புதிதாகப் பரிசோதிக்கப்பட்ட காச நோயாளிகளில் சளியில் கிருமியுள்ளவர்கள்			சளிப் பரிசோதனை மூலம் கண்டு பிடிக்கப்பட்ட புதிய காச நோயாளிகள் குணமடைந்த விகிதம்	
	இலக்கு	சாதனை	விழுக்காடு	இலக்கு	சாதனை	விழுக்காடு	இலக்கு	சாதனை
2000-2001	3,08,880	3,84,506	124%	30,890	24,533	79%	85%	37%
2001-2002	3,10,550	3,80,747	123%	31,055	23,589	76%	85%	81%
2002-2003	3,10,550	3,76,037	121%	31,055	24,346	78%	85%	84%
2003-2004	3,10,550	5,96,367	192%	31,055	36,104	116%	85%	88%
2004-2005	4,86,024	6,32,533	130%	48,602	39,562	81%	85%	89%
2005-2006	4,86,024	6,50,123	134%	48,602	36,066	74%	85%	86%

3.6 தமிழ்நாடு மாநில நோயாளர் நிதி உதவி அமைப்பு:

தமிழக அரசு ரூ.15.00 கோடி சுழலும் நிதியினைக் கொண்டு தமிழ்நாடு மாநில நோயாளர் நிதி உதவி அமைப்பினை நிறுவியது. இந்த அமைப்பிற்கு மைய மற்றும் மாநில அரசுகள் 2:1 என்ற விகித அடிப்படையில் நிதியுதவி செய்து வருகின்றன. தமிழ்நாடு மாநில நோயாளர் நிதி உதவி அமைப்பின் செயல்பாடுகள், அரசுச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அவர்களைத் தலைவராகவும், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரை உறுப்பினர்-செயலராகவும் கொண்ட செயற்குழுவின்மூலம் நிருவகிக்கப்படுகிறது. குறிப்பிட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நோயாளிகள் செய்துகொள்ளும் உயிர் காக்கும் அறுவை சிகிச்சைகளில், திறந்த நிலை இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று, மண்டை ஓடு திறப்பு, இடுப்பெலும்பு மாற்று, தண்டுவட அறுவை சிகிச்சைகள் போன்ற குறிப்பிட்ட சில வகை அறுவை சிகிச்சைகளுக்கு மாவட்ட ஆட்சியர்கள்மூலமாக இந்த அமைப்பு நிதியுதவி அளிக்கிறது.

[2006 ஆகஸ்ட் 17

3.7 விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு வலுப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல்:

3.7.1. தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சை அளிப்பதற்காக ஒவ்வொரு 50 கி.மீ. இடைவெளியில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை உருவாக்க தமிழக அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

3.7.2. அதன் அடிப்படையில், தேசிய நெடுஞ்சாலைகளில் அமையப் பெற்றுள்ள விழுப்புரம், ஓமலூர், பெரம்பலூர் ஆகிய 3 அரசு மருத்துவமனைகளில் உள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் மானியத் தொகையாக ரூ.398.00 இலட்சம் மைய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

3.8 ஒருங்கிணைந்த அவசர மகப்பேறு சிகிச்சை மற்றும் மைய சிசு கவனிப்பு மையங்களை வலுப்படுத்துதல்:

தமிழக அரசு, மாவட்டம் மற்றும் வட்ட மருத்துவமனைகளில் உள்ள 51 ஒருங்கிணைந்த அவசர மகப்பேறு சிகிச்சை மற்றும் சிசு கவனிப்பு மையங்களில் மகளிர் நோயியல் (ம) மகப்பேறு மருத்துவர் மற்றும் மயக்க மருந்து மருத்துவர் பணியிடங்கள் அடங்கிய 200 சிறப்பு மருத்துவ ஆலோசகர் பணியிடங்களை ரூ.12 கோடி செலவில் உருவாக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

3.9 2006–2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:

1 காரியாப்பட்டி, மணல்மேல்குடி ஆகிய இரண்டு அரசு வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் ரூ.0.18 இலட்சம் செலவில் தொலைபேசி வசதிகள் செய்து கொடுத்தல்.

2. ராதாபுரம், ஒட்டப் பிடாரம், ஒரத்தநாடு, பாபநாசம், தேன்கனிக்கோட்டை, பரமத்திவேலூர், கீரனூர், காட்டுமன்னார்கோயில், குடவாசல், இராமேஸ்வரம், திருவாடனை, வேடசந்தூர் மற்றும் எடப்பாடி ஆகிய 13 அரசு வட்டத் தலைமை மருத்துவமனைகளில் ரூ.108.94 இலட்சம் செலவில் பல் சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்குதல்.

3. தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள தாம்பரம், வாலாஜா, மேலூர், பத்மநாபபுரம், தென்காசி, கடலூர் மற்றும் நாமக்கல் ஆகிய 7 அரசு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ரூ.10.50 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்.

2006 ஆகஸ்ட் 17]

அத்தியாயம்–4

தமிழ்நாடு மாநில கண் பார்வை இழப்பு தடுப்புச் சங்கம்

4.1. பார்வை இழப்பு என்பது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள பெரும் பிரச்சினையாகும். ஜூலைத் திங்கள் 1972 ஆம் ஆண்டிலேயே, டாக்டர் கலைஞர் அவர்கள் இலவச கண் சிகிச்சை முகாம் திட்டத்தைச் செயல்படுத்தி, மாநிலம் முழுவதும் முகாம்கள் நடத்தியதன்மூலம், கண்புரை நோயினால் பார்வை இழப்போருக்கு மருத்துவ வசதி அளிக்கப்பட்டு, கண்புரை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு, இலவசக் கண்ணாடியும் வழங்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட தேசிய கண்ணொளி இழப்புத் தடுப்புத் திட்டம், உலக வங்கி உதவி பெறும் கண்புரை நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டு, 30–6–2002 வரை செயல்படுத்தப்பட்டது. அதன் பின் இத்திட்டம், 100 சதவீத மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.2. 2007 ஆம் ஆண்டிற்குள் கண் பார்வையற்றவர்கள் எண்ணிக்கையினை 0.8 சதவீதம் என்ற அளவில் குறைப்பதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் மாவட்ட அளவில் திட்டமிடுதல், செயலாக்கம், வரன்முறைப்படுத்துதல் போன்றவற்றிற்காக தமிழ்நாடு மாநில பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம் தனி நிறுவனமாக 1–4–1996 முதல் நிறுவப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைச் செயலாளர் தலைவராகவும், திட்ட இயக்குநர் நிருவாகச் செயலாளராகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் கண் பார்வை இழப்பினைக் கட்டுப்படுத்தும் வகையில், மாவட்ட ஆட்சியாளர் தலைமையின்கீழ் கண் பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் முக்கியச் செயல்பாடு, கண்புரை நீக்கி, விழி உள்ளாடி (IOL) பொருத்துதல் ஆகும். அதற்கென சகல வசதிகளும் நிறைந்த கண் சிகிச்சைப் பிரிவு மற்றும் இருட்டறை கட்டிக் கொடுத்தல், தேவையான உபகரணங்கள் அளித்தல் போன்றவை கடந்த 30–6–2002 வரை செயலாக்கப்பட்டு, இன்று வரை உபயோகத்தில் உள்ளன. பார்வை இழப்பு, குறிப்பாகக் கண்புரையினால் வரும் பார்வை இழப்பு தடுப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது.

4.3. மைய அரசின் நிதி உதவியினைக் கொண்டு, கடந்த நான்கு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் விவரம் பின்வருமாறு:

செயல்பாடு	2002-03	2003-04	2004-05	2005-06
கண்புரை அறுவை சிகிச்சை இலக்கு	4,00,000	4,20,000	4,40,000	4,80,000
சாதனை	3,71,559	4,33,600	4,85,963	4,94,188
ஐ.ஓ.எல். பொருத்தப்பட்டோர்	3,58,832	4,21,896	4,74,223	4,84,056
பள்ளிச் சிறார்களுக்குக் கண் பரிசோதனை செய்தல் பரிசோதனை செய்யப்பட்டோர்	13,07,716	22,85,098	30,55,985	25,85,663
குறைபாடு காணப்பட்டோர்	50,956	1,39,942	94,233	42,381
இலவசக் கண்ணாடி வழங்கப்பட்டோர்	21,220	39,560	43,722	43,130
கண் தானம் கண் சேகரிப்பு	-	4,754	4,981	6,920

4.4. நடப்பு ஆண்டில் (2006-2007) கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன:—

(அ) கண்புரை அறுவை சிகிச்சையில் 90 சதவிகிதத்திற்கு மேல் விழி உள்ளாடி (IOL) பொருத்துதல்.

(ஆ) பள்ளிச் சிறார்களுக்குக் கண் பரிசோதனை செய்து, குறைகளைக் களைதல், மற்றும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசக் கண்ணாடி வழங்குதல்.

(இ) கருவிழி மாற்று அறுவை சிகிச்சைக்காக கண் தானம்மூலம் கண்களைச் சேகரித்தல்.

(ஈ) நவீன முறையில் கண்புரை அறுவை சிகிச்சை செய்யவும், இதர சிறப்பு வழிமுறைகளைப் பின்பற்றவும் கண் மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(உ) தன்னார்வ நிறுவன மருத்துவமனைகளில் பல்வேறு வகைகளில் உதவிகளை வழங்கி கண் பாதுகாப்புச் சேவையினை மேம்படுத்த வழிவகுத்தல்.

(ஊ) கண் சேமிப்பு வங்கிகளை மேம்படுத்துதல், கண் தானம் பெறும் நிலையங்களை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், சென்னையில் சர்வதேச அரிமா சங்க உதவியுடன் அனைத்து வசதிகள் அடங்கிய கண் சேமிப்பு வங்கி, எழும்பூரில் மண்டல கண் மருத்துவமனையினுள் இயங்கி வருகிறது. கண் மருத்துவ முதுநிலைப் பட்டப் படிப்பு அமைந்திருக்கும் மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிகளில் கண் சேமிப்பு வங்கிகள் நிறுவப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

4.5. மத்திய அரசு 2006-2007 ஆம் நிதியாண்டில் கீழ்க்காணும் செயல்பாடுகளுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	செயல்பாடுகள்	2006-2007 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு
1	கண் மருத்துவர் மற்றும் கண் பரிசோதனை உதவியாளர் போன்ற தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான ஊதியத்தை வழங்கல்	242.00
2	பார்வையிழந்த சிறார்க்குப் பார்வையினை மீட்டுத் தரவும், அதைத் தவிர ஏனைய கண் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் தரத்தினை மேம்படுத்தவும், தக்க உபகரணங்களை வழங்குதல்	
	(அ) மண்டல கண் மருத்துவமனை மற்றும் கல்லூரிகளுக்கு நவீன உபகரணங்களை வழங்குதல்:—	
	1. ஏற்கெனவே செயல்படும் மண்டல கண் மருத்துவமனை	30.00
	2. புதிதாக உருவாகும் மண்டல கண் மருத்துவமனை	50.00
	3. மருத்துவக் கல்லூரிகள்	30.00
	(ஆ) மாவட்ட மருத்துவமனை மற்றும் வட்டார மருத்துவமனைகள்:—	
	1. மாவட்ட மருத்துவமனை	12.00
	2. வட்டார மருத்துவமனை	3.00

[2006 ஆகஸ்ட் 17

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	செயல்பாடுகள்	2006–2007 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு
3	அரசு/தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு கண் சேமிப்பு வங்கியின் தரத்தை உயர்த்தவும், தேவையான உபகரணங்களை வாங்கிக்கொள்ளவும் தொடராச் செலவினமாக நிதியுதவி வழங்குதல்	10.00
4	தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மருத்துவமனையிலோ அல்லது கண் சிகிச்சை முகாம்களிலோ இலவசமாக செய்யப்படும் கண்புரை அறுவை சிகிச்சை ஒன்றுக்கு, தொடர் மானிய நிதியாக ரூ.750/– வீதம் வழங்குதல். கண் அறுவை சிகிச்சை தேவைப்படுவோரைக் கண்டறிந்து, அவர்களை அரசு மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்வதற்கு, அறுவை சிகிச்சை பெறும் நபர் ஒருவருக்கு ரூ.175/– வீதம் நிதியுதவியினை ஊராட்சிகளுக்கு வழங்குதல்	977.00
5	கண் பாதுகாப்பு மையங்களை வலுப்படுத்தவும், விரிவுபடுத்தவும், மைய அரசும், தன்னார்வத் தொண்டு நிறுவனமும் 1:1 என்ற விகிதத்தில் செலவினைப் பகிர்ந்துகொள்கின்றன. இதற்காக மைய அரசின் பங்களிப்பாக, தொடரா மானியமாக அதிகபட்சம் ரூ.25 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. இம்மையத்திற்குத் தேவையான கருவிகளை வாங்கிக்கொள்ளவும், கண் சிகிச்சைப் பிரிவு மற்றும் அறுவை அரங்கம் கட்டிக்கொள்ளவும், தேவையான மேசை, நாற்காலி போன்ற தளவாடங்களை வாங்கிக்கொள்ளவும், நோயாளிகளின் போக்குவரத்துக்காக வாகனம் வாங்கிக்கொள்வதற்கும் இந்த மானியத் தொகை வழங்கப்படும்.	50.00

4.6. மைய அரசின் நிதி உதவியைக் கொண்டு, மாநில அரசு, கண் பார்வையற்றவர்களின் எண்ணிக்கையினை 0.8 சதவீதம் என்ற அளவில் ஏற்கெனவே குறைத்துவிட்டது.

2006 ஆகஸ்ட் 17]

அத்தியாயம்–5

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து

5.1. பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இம்மாநிலம் முழுவதும் உள்ள 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 8,683 துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றின்மூலம் ஆரம்ப சுகாதாரப் பணிகளை அளித்து வருகிறது. அனைத்து தேசிய சுகாதாரத் திட்டங்களும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

5.2. ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு:

தமிழகத்தில் மொத்தமுள்ள 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 385 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களாகவும், 1,032 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8,683 துணை சுகாதார நிலையங்கள் ஆகியவை நோய்த் தடுப்பு, உடல் நல மேம்பாடு மற்றும் நோய் களைதல் ஆகிய பணிகளை மக்களுக்கு அளிக்கின்றன. பெரும்பாலான வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில், அவசரச் சிகிச்சை வசதிகள், கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் கண்புரை நோய் கண்டறிதல் போன்ற வசதிகள் உள்ளன. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2005–06 ஆம் ஆண்டில் 628.67 இலட்சம் புறநோயாளிகளுக்கும், 3.82 இலட்சம் உள்நோயாளிகளுக்கும் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

5.3. ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரத்தை உயர்த்துதல்:

மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வட்டம், வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவை இல்லாத ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவ நிலையம் அமைத்துக் கொடுப்பது இவ்வரசின் கொள்கை ஆகும். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள், நவீன கருவிகளான அல்ட்ராசோனாகிராம், இ.சி.ஜி., ஊடுகதிர் இயந்திர சாதனப் பிரிவு, ஆய்வகப் பரிசோதனை வசதிகள் மற்றும் நோயாளர் ஊர்தி போன்ற வசதிகள் கொண்டதாக இருக்கும். இதுவரை 106 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள்

கொண்ட மருத்துவ நிலையங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. இந்த மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறம்படச் செயல்பட, 93 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் 186 ஒப்பந்த மருத்துவ அலுவலர் பணியிடங்களும், 186 செவிலியர் பணியிடங்களும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1,539 ஒப்பந்த மருத்துவ ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்த மருத்துவ அலுவலர்களைக் கால முறை ஊதியத்தின்கீழ்க் கொண்டு வர அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. இதுவரை 1,393 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதம் காலியாக உள்ள 196 மருத்துவ அலுவலர் பணியிடங்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் காத்திருப்போர் பட்டியலைக் கொண்டு விரைவில் நிரப்பப்படும்.

5.4. 24 மணி நேரமும் பிரசவங்கள் பார்ப்பதற்கான வசதியும், அவசர கால முதலுதவி வசதியும், 780 ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவாக்கம்:

மூன்று செவிலியர்களைக் கொண்டு 24 மணி நேரமும் பிரசவம் பார்க்கும் திட்டம், 1999 ஆம் ஆண்டில் 90 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சோதனை முறையில் ஏற்படுத்தப்பட்டு, மேலும் 90 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2005 ஆம் ஆண்டில் விரிவாக்கம் செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் 600 ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

5.5. ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுதல்:

தற்பொழுது 1,371 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 9 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 37 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்டப்பட வேண்டும். 1996-97-ல் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.18 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டன. 1997-98-ல் மேலும் 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.33.13 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டன. மீதமுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டும் நடவடிக்கைகள் NABARD வங்கி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.6. ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி:

மொத்தமுள்ள 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 1,389 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்ட நிதியுதவியுடன், எஞ்சியுள்ள

28 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி நடப்பாண்டில் செய்யப்படவுள்ளது.

5.7. துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுதல்:

மொத்தமுள்ள 8,683 துணை சுகாதார நிலையங்களில் 6,510 துணை சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 2,173 துணை சுகாதார நிலையங்களில் கட்டடம் கட்டப்பட வேண்டியுள்ளது. 2,173 துணை சுகாதார நிலையங்களில், 234 துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட, NABARD வங்கிக் கடன் கோரப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,939 துணை சுகாதார நிலையங்களுக்கும் NABARD வங்கிக் கடனுதவியுடன் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

5.8. தடுப்பூசித் திட்டம்:

பெரியம்மை நோய் ஒழிக்கப்பட்ட பிறகு, குழந்தைகளைப் பாதிக்கும் தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னி, தட்டம்மை, இளம்பிள்ளை வாதம் மற்றும் காச நோய் ஆகிய ஆறு நோய்களைத் தடுப்பதற்காக, விரிவாக்கப்பட்ட தடுப்பூசித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் புதிதாகப் பிறக்கும் சுமார் 12 இலட்சம் குழந்தைகள் தடுப்பூசி மருந்துகள்மூலம் மேற்கண்ட நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்றனர். மேலும் சுமார் 13 இலட்சம் கருவுற்ற தாய்மார்கள் இரணஜன்னி நோயிலிருந்தும் பாதுகாப்புப் பெறுகின்றனர். நல்ல முறையில் தடுப்பூசித் திட்டம் செயல்படுத்தப்பட்டதனால் நடப்புக் காலத்தில் தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னி மற்றும் இளம்பிள்ளை வாதம் ஆகிய நோய்களின் தாக்கம் ஓரிரு நிகழ்வுகளைத் தவிர முற்றிலுமாகக் குறைந்துவிட்டது. தீவிரக் கண்காணிப்புப் பணிமூலம் தட்டம்மையால் பாதிக்கப்படும் குழந்தைகள் கண்டறியப்படுகின்றனர். மேலும் இந்நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தட்டம்மை நோயினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருகிறது.

5.9. போலியோ சிறப்பு முகாம்:

போலியோ நோயை அறவே ஒழிக்க 1995-96 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 1995-96 முதல் 2006-07 வரை 12 சுற்றுகள்

[2006 ஆகஸ்ட் 17

நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்கள்மூலம் ஒவ்வொரு சுற்றிலும் 5 வயதிற்குட்பட்ட சுமார் 65 இலட்சம் முதல் 75 இலட்சம் குழந்தைகளுக்குக் கூடுதல் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. 21-5-2006 அன்று கடைசியாக நடத்தப்பட்ட முகாமின்போது, 5 வயதிற்குட்பட்ட 72 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். மேலும், கடந்த பிப்ரவரி 2004 முதல் தமிழ்நாட்டில் எந்தக் குழந்தையும் போலியோ நோயினால் பாதிக்கப்படவில்லை.

5.10. மஞ்சள் காமாலை தடுப்புத் திட்டம்:

சென்னை நகரில் உள்ள குழந்தைகளுக்கும், விருதுநகர், இராமநாதபுரம், மதுரை மற்றும் உதகமண்டலம் ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை நோய்த் தடுப்பு மருந்து அளிக்கும் திட்டம் சோதனை முறையில் 2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சுமார் 3.75 இலட்சம் குழந்தைகள் இதுவரை பயனடைந்துள்ளார்கள். மைய அரசின் உதவியுடன் மேலும் இத்திட்டம் படிப்படியாக இதர மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5.11. எம்.எம்.ஆர். மற்றும் ரூபெல்லா தடுப்பு மருந்துத் திட்டம்:

ரூபெல்லா வைரஸினால் பிறவி ஊனத்துடன் குழந்தைகள் பிறக்கின்றனர். இதனைத் தடுப்பதற்கு வளர் இளம் பெண்களுக்கு ரூபெல்லா தடுப்பூசியும், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு எம்.எம்.ஆர். தடுப்பூசியும், அன்னா கிராமம் (கடலூர் மாவட்டம்) ஜெயங்கொண்டம் (பெரம்பலூர் மாவட்டம்), ஆண்டிப்பட்டி (தேனி மாவட்டம்), கீழ்பெண்ணத்தூர் (திருவண்ணாமலை மாவட்டம்), அணைக்கட்டு (வேலூர் மாவட்டம்) ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டங்களில் சோதனை முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2 முதல் 5 வயதிற்குட்பட்ட 24,919 குழந்தைகளும் 10–லிருந்து 15 வயதிற்குட்பட்ட 22,390 வளர் இளம் பெண்களும் மேற்கண்ட தடுப்பூசிகளால் பயனடைந்துள்ளனர். எம்.எம்.ஆர். மற்றும் ரூபெல்லா தடுப்பு மருந்துத் திட்டம் மைய அரசு உதவியுடன் படிப்படியாக எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2006 ஆகஸ்ட் 17]

5.12. தாய்–சேய் நலப் பணிகள்:

5.12.1. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அதனைச் சார்ந்த துணை சுகாதார நிலையங்கள்மூலமாக தாய்-சேய் நலப் பணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையமும், மலைப் பகுதிகளில் 3,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையமும் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. கருவுற்ற தாய்மார்களைப் பதிவு செய்தல், கருவுற்ற தாய்மார்களைப் பரிசோதித்தல், இரணஜன்னி நோய் ஏற்படாமல் தடுக்கத் தடுப்பூசி போடுதல், பேறுகாலப் பராமரிப்பு மற்றும் பேறுகாலப் பின் பராமரிப்பு அளித்தல் போன்ற பணிகள் வழங்கப்படுகின்றன.

5.12.2. ஊரகம் மற்றும் நகரங்களுக்கு மருந்துப் பெட்டி A மற்றும் B வழங்கப்பட்டுள்ளன. இரும்பு மாத்திரைகள் (சிறியது மற்றும் பெரியது) உப்பு நீர் கரைசல் பொட்டலங்கள், வைட்டமின் A திரவம் மற்றும் தாய்-சேய் நலப் பணிகளுக்குத் தேவையான மருந்துகள் இந்தப் பெட்டிகள்மூலம் வழங்கப்படுகின்றன. மருத்துவமனையில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கையை உயர்த்திட ரூ.190 இலட்சம் செலவில் தரம் வாய்ந்த 1,910 லேபர் போர்டுகள் துணை சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வளர் இளம் பெண்களிடம் காணப்படும் இரத்த சோகை நோயைக் கட்டுப்படுத்திட ஒவ்வொரு வாரமும் வியாழன்தோறும் இரும்புச் சத்து மாத்திரை (பெரியது) 53 இலட்சம் வளர் இளம் பெண்களுக்கு வழங்கப்படுகிறது. இம்மாநிலத்தில் 95.6 சதவீதப் பிரசவங்கள் மருத்துவமனையில் நிகழ்கின்றன. தேர்ச்சி பெற்ற பணியாளர்கள்மூலம் 99.8 சதவீதப் பிரசவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.13. கருவுற்ற பெண்களுக்கான சிறப்புத் திட்டம்:

வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் குடும்பங்களில் கர்ப்ப காலத்தில் ஏற்படக்கூடிய பண இழப்பு, சத்துக் குறைவினால் ஏற்படக்கூடிய இரத்த சோகை மற்றும் அதனால் ஏற்படக்கூடிய எடைக் குறைவுப் பிரசவத்தைத் தடுத்திட ரூ.100 கோடி செலவில் இத்தாய்மார்களுக்குப் பிரசவத்திற்கு 3 மாதங்களுக்கு முன்பும், 3 மாதங்களுக்கு பின்னரும் மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம், ஆக மொத்தம் ரூ.6,000/- பண உதவி வழங்கப்பட உள்ளது.

5.14. பள்ளிக் குழந்தைகள் நலத் திட்டம்:

இத்திட்டத்தின்மூலம் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களிடையே காணப்படும் நோய்களை முன்னரே கண்டறிந்து, அதனால் அவர்களின் கல்வி மற்றும் உடல் நலம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. இருதயம், கண் மற்றும் பல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் இம்முகாமில் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வியாழக்கிழமையும் பள்ளிச் சுகாதார நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் மேல் சிகிச்சை நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு சிறப்பு மருத்துவக் கவனிப்பு தேவைப்படும் மாணவர்கள் மேல் மருத்துவம் மற்றும் தொடர் சிகிச்சைக்காக உயர் மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இத்திட்டத்தினைச் செவ்வனே செயல்படுத்திடவும், ஒருங்கிணைக்கவும் ஒவ்வொரு பள்ளியிலும் இரு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொதுவாக மாணவர்களிடையே காணப்படும் நோய்களைக் கண்டறிந்து, அதனை மருத்துவரிடம் எடுத்துச் சொல்லத் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2005-06 ஆம் ஆண்டில் 54.50 இலட்சம் மாணவர்கள் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர். 46,528 மாணவர்கள் மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

5.15. தொற்று நோய்க் கட்டுப்பாடு:

வயிற்றுப் போக்கு, வாந்தி பேதி போன்ற நோய்கள் தண்ணீர்மூலமாகப் பாவும் நோய்களாகும். 2005-06 ஆம் ஆண்டில் 54,225 குடிநீர் நிலையங்கள் கிருமிநாசினிகள்மூலம் சுத்தம் செய்யப்பட்டுள்ளன. வாந்தி பேதியினால் உண்டாகும் உடல் நீர் வறட்சியை ஈடு செய்ய வாய் வழியாகத் தரப்படும் உப்பு நீர்க் கரைசல் பொட்டலங்களை உபயோகிக்கும் முறை மற்றும் உப்பு நீர்க் கரைசல் தயாரிக்கும் முறை பற்றிய செயல் விளக்கம் மக்களுக்குப் பொதுச் சுகாதாரக் களப் பணியாளர்களால் போதிக்கப்பட்டு வருகிறது.

5.16. தொழிற்சாலை மற்றும் நலவியல்:

5.16.1. குடிநீரின் தூய்மைக் கேட்டினைக் கண்காணித்துத் தொற்று நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த ஏதுவாக, சென்னை மற்றும் கோயம்புத்தூரில் நீர்ப் பகுப்பாய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீரின் தூய்மைக் கேட்டினைக் கண்டறிந்து களைய நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இப்பகுப்பாய்வுக் கூடங்கள், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும்

கழிவுகளைப் பரிசோதனை செய்யவும், தொழிற்சாலை மற்றும் சுற்றுப்புறத் தூய்மைக் கேட்டைக் கட்டுப்படுத்தத் தேவையான கள ஆய்வுகள் மேற்கொள்ளவும், மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு உதவி புரிந்து வருகின்றன.

5.16.2. தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் காற்றின் தரத்தை மதிப்பீடு செய்யவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2005 ஆம் ஆண்டில் 25,490 நீர் மாதிரிகள் இந்த ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொது மக்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யப்பட்டுள்ளது.

5.17. உணவுக் கலப்படத் தடுப்பு:

தமிழ்நாடு முழுவதும் உணவுக் கலப்படத் தடைச் சட்டம், 1954 மற்றும் அதன் விதிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. 2005-06-ல் 3,641 உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்ததில், 421 உணவு மாதிரிகள் கலப்படம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. தொடரப்பட்ட 33 வழக்குகளில் 9 வழக்குகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதில் 3 வழக்குகளுக்கு அபராதமும், 6 வழக்குகளுக்கு அபராதத்துடன்கூடிய தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

5.18. பிறப்பு, இறப்புப் புள்ளிவிவரங்கள்:

5.18.1. பிறப்பு, இறப்பு பதிவு மாநிலம் முழுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இயக்குநர், பொதுச் சுகாதாரத் துறை மாநிலத்தின் முதன்மை பிறப்பு, இறப்பு பதிவாளர் ஆவார். 1-1-2000 முதல் பிறப்பு, இறப்பு பதிவு திருத்தியமைக்கப்பட்டு, தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவுகள் 2000-ன்படி செயலாக்கப்பட்டு வருகிறது. பிறப்பு, இறப்பு பதிவு தொடர்பான அனைத்து அலுவலர்களுக்கும் இத்திருத்தியமைக்கப்பட்ட பிறப்பு, இறப்பு விதிமுறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

5.18.2. பிறப்பு பதிவு பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு இலவச பிறப்புச் சான்றிதழ் வழங்கும் முகாம் 14-11-2003 முதல் நடத்தப்பட்டு, அதில் இதுவரை சுமார் 44.42 இலட்சம் பிறப்புச் சான்றிதழ்கள் இலவசமாக 10 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முக்கிய வீதங்கள் (மாதிரிப் பதிவுத் திட்டம் 2004–ன்படி)

தமிழகத்தில் பிறப்பு வீதம்	:	17.1/1,000 நபர்களுக்கு
இறப்பு வீதம்	:	7.5/1,000 நபர்களுக்கு
சிசு மரண வீதம்	:	41/1,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம்	:	0.9/1,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு

5.19. மலேரியா:

கடந்த 10 ஆண்டுகளில் மாநிலத்தில் மலேரியா நோய் நிகழ்வுகள் வெகுவாகக் குறைந்துள்ளன. இருப்பினும், நகர்ப்புறங்களிலும், முக்கியமாகச் சென்னையிலும், இராமநாதபுரம், பரமக்குடி, நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி சுகாதார மாவட்டங்களைச் சார்ந்த கடற்கரையை ஒட்டியுள்ள கிராமப்புறங்களிலும், மற்றும் தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் சுகாதார மாவட்டங்களைச் சார்ந்த ஆற்றோரக் கிராமங்களிலும் பெருமளவில் மலேரியா தாக்கம் உள்ளது. நோய் நிகழ்வுகளைக் கண்டறிந்து, தக்க தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

5.20. யானைக்கால் நோய்:

1957 முதல் தமிழ்நாட்டில் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. யானைக்கால் நோய்த் தடுப்பு நடவடிக்கை 43 நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றில் 25 கட்டுப்பாட்டு நிலையங்களும், 44 இரவு நேர மருத்துவமனைகள் மற்றும் 42 யானைக்கால் மற்றும் மலேரியா மருத்துவமனைகளும் இயங்கி வருகின்றன. மேலும் இந்நோய் அதிகமாக உள்ள பகுதிகளைக் கண்டறிய ஓர் ஆய்வகப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. யானைக்கால் நோய் நிகழ்வுகள் அதிகமாகக் காணப்படும் மாவட்டங்களில் D.E.C. மாத்திரைகள் வழங்கும் ஒட்டுமொத்த சிகிச்சைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

5,21. மூளைக் காய்ச்சல்:

5.21.1. கடந்த சில ஆண்டுகளாக மூளைக் காய்ச்சல் நோய் முக்கிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக உருவாகியுள்ளது. விழுப்புரம், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, கடலூர், திருவண்ணாமலை மற்றும் மதுரை சுகாதார மாவட்டங்களில் இந்நோய் நிகழ்வுகள் உள்ளன. கடலூர், விழுப்புரம் மற்றும் பெரம்பலூரில் உள்ள மூளைக் காய்ச்சல் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவும், சென்னையிலுள்ள வழிகாட்டும் பிரிவும் இந்நோயைப் பரப்பும் பூச்சித் தடுப்பு, பூச்சியியல் ஆய்வுகளை மேற்கொள்கின்றன. பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள சில தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பகுதிகளில் மூளைக் காய்ச்சல் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூளைக் காய்ச்சல் தடுப்பு ஊசித் திட்டம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

5.21.2. சந்தேகத்திற்குரிய மூளைக் காய்ச்சல் நிகழ்வுப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குப் புகை மருந்து அடிக்கும் பணியும் நடைபெறுகின்றது. நோயைக் கண்டறிந்து, அதனை உறுதி செய்யும்பொருட்டு, ஓசூரில் உள்ள நோய் பரப்பும் உயிரினக் கட்டுப்பாட்டு நிறுவனத்திற்கும், மதுரை மருத்துவ கல்லூரிக்கும் மூளைக் காய்ச்சல் இரத்த மாதிரிகள் அனுப்பப்படுகின்றன.

5.22. நோய் பரப்பும் உயிரினக் கட்டுப்பாட்டு நிறுவனம், ஓசூர்:

தீவிர பிளேக் நோய்க் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஓசூரில் நோய்ப் பரப்பிகள் கட்டுப்பாட்டு மையம் நிறுவப்பட்டு, தலைமையகமாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு பல்வேறுவிதமான பயிற்சிகள், பயிலரங்குகள், கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இந்நிறுவனத்தில் ஓராண்டு பொதுச் சுகாதார பூச்சியியல் முதுநிலைப் பட்டயப் படிப்பும், ஆய்வக உதவியாளர்களுக்கும், களப் பணியாளர்களுக்கும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

5.23. லெப்டோஸ்பைரோசிஸ் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்:

லெப்டோஸ்பைரோசிஸ் நோய் தற்சமயம் தமிழகத்தில் பரவி வரும் ஒரு புது நோய் என்பதால், நோய் கண்டறியும் முறை மற்றும் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டிய உடனடிச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, உடன் நோய் கண்டறியும் சாதனம், லெப்டோஸ்பைரோசிஸ் பரவியுள்ள மாவட்டங்களுக்கு

அளிக்கப்பட்டுள்ளது. 7 லெப்டோ சிகிச்சை மையங்களும் மதுரை மற்றும் திருவள்ளூர் மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2006 ஆம் ஆண்டு 587 நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.

5.24. டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டுத் திட்டம்:

நாகர்கோவில், வேலூர், தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள வட்ட/மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 12 டெங்கு சிகிச்சை நிலையங்கள் தொடங்குவதற்கான அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மலேரியா அற்ற சென்னைத் திட்டத்தின்கீழ், சென்னை நகரில் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த, சிறப்புத் தகவல் தொடர்பு கல்வி நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

5.25. பறவைக் காய்ச்சல்:

மகாராஷ்டிரா மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் நோய் தோன்றியுள்ளதாக ஊடகங்கள் வாயிலாகச் செய்திகள் வந்தவுடன், தமிழகப் பொதுச் சுகாதாரத் துறை தீவிரத் தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டது. அதன்படி, கோழிப் பண்ணைகள் அதிகமாக உள்ள நாமக்கல், சேலம் மாவட்டங்களில் நோய்க் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. கிராமங்களிலும், மருத்துவமனைகளிலும், சிகிச்சைக்காக வரக்கூடிய நோயாளிகளின் அறிகுறிகள் கண்காணிக்கப்பட்டன. கோழிப் பண்ணைகளின் உரிமையாளர்களிடையே கூட்டங்கள் நடத்தி, கோழிகளின் கழிவுகளை அறிவியல்ரீதியாக அப்புறப்படுத்துதலுக்கும், கிருமிநாசினிகளைத் தெளித்து கோழிப் பண்ணைகளிலிருந்து தொற்று நோய் பரவாமல் தடுப்பதற்கும், கோழிப் பண்ணைகளில் பணிபுரிபவர்களுக்கு இந்த நோய் ஏற்படாமல் தடுப்பதற்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. 2005–06 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எவரும் இந்நோயினால் பாதிக்கப்படவில்லை.

5.26. சிக்குன்குன்யா:

5.26.1. சிக்குன்குன்யா, வைரசால் ஏற்படக்கூடிய நோயாகும். இந்நோய் ஏடிஸ் என்னும் ஒருவகைக் கொசுக்கள் கடிப்பதன்மூலம் ஒரு மனிதனிடமிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவுகிறது. இந்நோயைப் பரப்பக்கூடிய கொசுக்கள் பானை, ஆட்டுக்கல், டயர், சிமென்ட் தொட்டி, டிரம் மற்றும் தேவையற்றுத் தூக்கியெறியப்பட்டுள்ள

பொருட்களில் தேங்கியிருக்கும் நீரில் உற்பத்தியாகின்றன. சிக்குன்குன்யா காய்ச்சல் தமிழ்நாட்டின் வேலூர் மாவட்டத்தின் எல்லையோரக் கிராமங்களில் மார்ச் 2006 முதல் காணப்பட்டு வந்தது. இக்காய்ச்சல் அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து பரவியுள்ளதாகத் தெரிய வந்தது. தமிழ்நாட்டில் இக்காய்ச்சல் 40 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் ஏற்பட்டுள்ளது. ஆரம்ப காலமான இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் சுமார் 200-300 பேர் ஒவ்வொரு நாளும் பாதிக்கப்பட்டிருந்தனர். பின்னர் இக்காய்ச்சல் மற்ற மாவட்டங்களுக்குப் பரவி ஜூன் மாதம் 2-வது வாரத்தில் 1,000 பேர் ஒவ்வொரு நாளும் பாதிக்கப்பட்டு வந்தனர். ஜூலை 3-வது வாரத்தில் ஒவ்வொரு நாளும் 250 பேர் பாதிக்கப்பட்ட நிலை ஏற்பட்டது. தற்போது சிக்குன்குன்யா காய்ச்சல் கணிசமாக மாநிலத்தில் குறைந்து வருகிறது. ஆண், பெண் இருபாலரும் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளைக் காட்டிலும் பெரியவர்களே பெரும்பாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து சுமார் 589 இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு, பூனாவில் உள்ள தேசிய நுண்ணுயிரியல் ஆராய்ச்சி நிலையத்திற்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. இதில் 85 நபர்களுக்கு சிக்குன்குன்யா நோய் இருப்பதாக உறுதி செய்யப்பட்டது. இக்காய்ச்சல் மேலும் படிப்படியாகக் குறைந்து வரும் நிலையில் தற்சமயம் தமிழகத்தில் 26 மாவட்டங்கள், 24 நகராட்சிகள் மற்றும் 2 மாநகராட்சிகளில் 49,102 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இக்காய்ச்சலினால் இதுவரை இறப்பு ஏதும் ஏற்படவில்லை.

5.26.2. 22–6–2006 அன்று உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சிக்குன்குன்யா நோயைக் கட்டுப்படுத்த அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் அனைத்துத் துறைகளுடனும் ஒருங்கிணைந்து தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

5.26.3. 30–7–2006 அன்று பெங்களூரில் தென் மாநிலங்களின் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்களின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிக்குன்குன்யா நோய்த் தடுப்பு பற்றி விவாதிக்கப்பட்டு, மாநிலங்கள் ஒருங்கிணைந்து செயல்பட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

5.26.4. சிக்குன்குன்யா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்காக மைய அரசிடமிருந்து நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

(அ) மாநில அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:

- துணை இயக்குநர் (நலப் பணிகள்) அவர்களுக்கும், மாவட்ட பூச்சியியல் வல்லுநர்களுக்கும் மாநில அளவில் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, தடுப்பு நடவடிக்கை மற்றும் நோய்க் கட்டுப்பாட்டுப் பணி பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.
- மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களால் பத்திரிகைத் துறைக்குச் செய்தி அளிக்கப்பட்டு மக்கள் எவரும் இந்நோயினால் பீதி அடைய வேண்டாம் என்று வலியுறுத்தப்பட்டது. சுகாதாரத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் செய்தியாளர்களுக்கு விரிவாகத் தெரிவிக்கப்பட்டது.
- மத்திய அரசு வழங்கிய தொகையிலிருந்து ரூபாய் 46 இலட்சம், கலந்தாய்வுக் கூட்டம், பயிற்சி, சுகாதாரக் கல்வி, விழிப்புணர்வு முகாம்கள் ஆகியவற்றை நடத்த மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது.
- ரூ.2.85 கோடிக்கு மாவட்டத் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அவர்களுக்கு வழங்கப்பட்டு, அவசரத் தேவைக்கேற்ப சிக்குன்குன்யா நோய்க்கு மருந்துகள் வாங்க ஆவன செய்யப்பட்டது.
- புகை மருந்து அடிக்கும் பணிகளுக்காக ரூ.3 இலட்சம் மாவட்டங்களுக்கு அளிக்கப்பட்டது.
- புகை மருந்து அடிக்கும் பணிகளுக்காகவும், கொசுப் புழு அழிப்புப் பணிக்காகவும், கூடுதல் எரிபொருள் செலவிற்காகவும் மேலும் ரூ.2.85 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கொசு முட்டை அழிப்பு மற்றும் பூச்சி ஒழிப்பு மருந்துகள் மாவட்டங்களுக்கு, தேவைக்கேற்ப வழங்கப்பட்டு உள்ளது.
- தலைமையகத்திலிருந்து இணை இயக்குநர்கள் மாவட்டங்களுக்கு மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டு, இந்நோய் பற்றிய விவரத்தினை அறிந்து, அதற்கேற்ப தக்க அறிவுரை அளிக்கும்படியும், மாவட்ட ஆட்சியரைக் கலந்தாலோசித்து தடுப்புப் பணி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

- மாநில அளவில் நோய்க் கட்டுப்பாட்டு அறை ஒன்று அமைக்கப்பட்டு, நோயின் தற்சமைய நிலைமையை அறிந்து, உடனுக்குடன் மாவட்டங்களுக்குத் தக்க அறிவுரை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மாவட்ட அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:

- மாவட்ட ஆட்சியர்கள் அனைத்துத் துறையினரையும் ஒருங்கிணைத்துக் கூட்டம் நடத்தி, நோய்க் கட்டுப்பாட்டு முறையினையும், இந்நோய் பரவக் காரணமான கொசு உற்பத்தியைத் தடுக்கும் பணியைச் செய்யும் முறையினைப் பற்றி விளக்கிக் கூறி, அத்துறையினரின் ஒத்துழைப்பினை அளிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வப்போது மாவட்ட ஆட்சியர்கள் பத்திரிகையாளர்களுக்கு சிக்குன்குன்யா நோய் பற்றிய செய்தியை அளித்து, மக்கள் பீதி அடைய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர்.
- பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர், தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு கொசு ஒழிப்புப் பணிக்காக அவர்கள் சேவையும், ஒத்துழைப்பும் நாடப்பட்டது.
- துரிதச் செயல்பாட்டுக் குழு மாவட்ட அளவில் நெருக்கடி நிலையைச் சமாளிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையம் வாரியாக மருத்துவக் குழு, காய்ச்சல் ஏற்படும்போது கிராமங்களுக்குச் சென்று உடனடி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இக்குழு காய்ச்சல் கண்டவர்களுக்கு மாத்திரை, மருந்துகள் வழங்குவதுடன், தேவைப்பட்டவர்கள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு மேல் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.
- நோய் அதிகமாகப் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளை அறிந்து, அவை 6 நாள் பணிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் சுகாதாரப் பணியாளர்கள் குறிப்பிட்ட கிராமத்திற்குச் சென்று கொசு ஒழிப்புப் பணி செய்தும், நோய் கண்டறிந்தும் சிறப்புப் பணி செய்து வருகின்றனர். இதனால் அனைத்துக் கிராமங்களும் வாரம் ஒரு முறை கண்காணிக்கப்பட்டு கொசு ஒழிப்புப் பணி செய்யப்பட்டு, நோயின் தாக்கம் வெகுவாகக் குறைக்கப்பட்டு வருகிறது.

5.27. ஒருங்கிணைந்த தீவிர நோய்க் கண்காணிப்புத் திட்டம்:

5.27.1. நோய்க் கண்காணிப்புப் பணியானது, நோய் நிகழ்வுகள் நேரும்போது அவற்றைக் கட்டுப்படுத்தவும், பரவாமல் தடுக்கவும், அந்நோய்களின் தாக்கம் மற்றும் நோய் பரவும் தன்மையைப் பற்றிய புள்ளிவிவரங்களைச் சீரிய முறையில் சேகரிப்பதே இக்கண்காணிப்பின் முக்கியப் பணியாகும். இத்தகைய நோய்கள் பரவாமல் தடுக்கவும், அப்பணியைச் செய்யத் திட்டமிடுதல், நோய் பற்றிய விவரங்களை ஆய்வு செய்தல் போன்ற பணிகளுக்கு இத்தகைய புள்ளிவிவரங்கள் அத்தியாவசியமாக இருக்கின்றன. மைய அரசின் நிதி ஆதாரத்தோடு தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புப் பணித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கமானது, தற்போதுள்ள பல்வேறு திட்டங்களில் சேகரிக்கப்படும் புள்ளிவிவரங்களை ஒருங்கிணைப்பது, தொற்று மற்றும் பிறரிடம் தொற்றாத நோய்களைக் கண்காணிப்பது மற்றும் அரசுக்கும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதாகும்.

5.27.2. வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போதுள்ள ஆய்வக வசதிகளையும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் உள்ள ஆய்வக வசதிகள் மற்றும் மாநில அளவில் உள்ள ஆய்வக வசதிகளையும் மேம்படுத்துவதன்மூலம் இத்திட்டத்தினை மாநில, மாவட்ட மற்றும் புறநகர்ப் பகுதிகளில் சிறப்பாகச் செயலாக்கப்பட உள்ளது. (எல்.1, எல்.2 மற்றும் எல்.3 ஆய்வகங்கள்). துரிதத் தகவல் பரிமாற்றங்களுக்காக மாநிலம் முழுவதும் நவீன தகவல் தொடர்பு சாதனங்களான கணினி மற்றும் பேக்ஸ் போன்ற சாதனங்களை அமைத்தல், உடனடிச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஆய்வகப் பணியாளர்களின் தொழில்நுட்பத் தரத்தை உயர்த்தும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

5.27.3. பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இணை இயக்குநர் (கொள்ளை நோய்) அவர்கள் இத்திட்டத்தின் மாநிலக் கண்காணிப்பு அதிகாரியாவார். 29 வருவாய் மாவட்டங்களில் உள்ள சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர்கள், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னையில் உள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் அங்கமான தேசிய கொள்ளை நோய் நிறுவனத்தில் ஆறு தொகுதிகளில் 99 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி

அளிக்கப்பட்டுள்ளது. 29-3-2006 அன்று செயற்கைக் கோள் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் கிண்டி கிங் நிலையத்தில் உள்ள ஆய்வகம் மாநில ஆய்வகமாக நிறுவப்பட்டுள்ளது.

5.27.4. 2006-07 ஆம் ஆண்டில் ரூ.72.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்திற்கு மாவட்டக் கண்காணிப்பு மையங்களின்கீழ் வரும் எல்.1 மற்றும் எல்.2 ஆய்வகங்களுக்கு உபகரணங்கள் வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது.

5.27.5. ஜூன் 2006-ல், 29 மாவட்ட நோய்க் கண்காணிப்புப் பிரிவுகளுக்கு, ஒருங்கிணைந்த தீவிர நோய்க் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகளுக்காக ரூ.386.2 இலட்சம் நிதி மறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.19.88 இலட்சம் மாநிலக் கண்காணிப்பு மையத்திற்கும், எல்.3 ஆய்வகத்திற்கும் நிதி மறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.28. தேசிய தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்:

தமிழகத்தில் 1954-55 ஆம் ஆண்டு முதல் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் தொடங்கப்பட்டு தற்பொழுது பொதுச் சுகாதாரத் துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டில் தொழுநோய் நிகழ்வுகள் 10,000 மக்கட்தொகைக்கு 118 என்ற விகிதத்தில் இருந்தது. தற்பொழுது 0.60 என்ற விகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

5.29. அயோடின் சத்துக் குறைவினால் ஏற்படும் உடல் நலக் குறையைக் கட்டுப்படுத்தும் தேசியத் திட்டம்:

5.29.1. தமிழ்நாட்டில் அயோடின் சத்துக் குறைவினால் ஏற்படும் உடல் நலக் குறையைக் கட்டுப்படுத்தும் தேசியத் திட்டம் 1991 முதல் செயல்பட்டு வருகின்றது. 1-7-1994 முதல் மாநில அயோடின் பற்றாக்குறை நோய்த் தடுப்புத் திட்டப் பிரிவு இயங்கி வருகிறது. அயோடின் பற்றாக்குறையினால் ஏற்படும் நோய்கள் உள்ள மாவட்டங்களைக் கண்டுபிடித்து, அயோடின் சத்துக் குறைபாட்டு நோய்களைத் தடுக்க, சமையல் உப்பில் அயோடின் கலந்து விநியோகிக்கவும், உட்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகளை, தகவல் - கல்வி தொடர்புமூலம் மேற்கொள்வதே திட்டத்தின் நோக்கமாகும்.

[2006 ஆகஸ்ட் 17

5.29.2. அயோடின் சத்தற்ற உப்பினை, உணவுப் பொருட்களில் பயன்படுத்துவதைத் தடுக்க ஓர் அறிவிக்கை, உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது. உப்பில் அயோடின் சத்தின் அளவு மற்றும் உபயோகத்தினைக் கண்டறியவும், உப்பு வியாபாரிகளிடமும், வீடுகளிலும், உப்பு மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன.

5.30. பல் மருத்துவ முன்னோடித் திட்டம்:

பல் மருத்துவ முன்னோடித் திட்டம், சேலம், தேனி, தருமபுரி, நாமக்கல், கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கல் ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு, இதுவரை 25,542 நபர்கள் பயனடைந்துள்ளனர். தற்பொழுது, இத்திட்டம் மேலும் நான்கு மாவட்டங்களில் உள்ள 8 ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

5.31. வருமுன் காப்போம் திட்டம்:

கிராமப்புற மக்களுக்கும், நகர்ப்புற மக்களுக்கும் வருமுன் காப்போம் திட்டம்மூலம் உடல் பரிசோதனை செய்து, தக்க சிகிச்சை மற்றும் சுகாதார நலக் கல்வி வழங்கப்படும். இம்முகாம்கள் ஒவ்வொரு 5,000 மக்கள் தொகை கொண்ட துணை சுகாதார நிலையப் பகுதிகளில் ஒவ்வொரு வாரமும் நடத்தப்படும். இது தவிர, நகர்ப் பகுதிகளுக்கும் இம்முகாம்கள் நடத்தப்படும். சிறப்பு மருத்துவர்கள்மூலம் தொற்று மற்றும் பிறரிடம் தொற்றாத நோய் உள்ளவர்களுக்கும் பரிசோதனை செய்யப்படும். மேலும் சிறு நோய்களுக்கான சிகிச்சையும் அளிக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும், வாரத்திற்கு மூன்று முகாம்கள் நடத்தப்படவுள்ளன. அனைத்துப் பரிசோதனைகளும், குறிப்பாக இரத்தம், சிறுநீர் போன்றவற்றிற்கு அதி நவீன பரிசோதனைக் கருவிகள் உபயோகப்படுத்தப்படும். (உதாரணமாக செமி ஆட்டோ அனைலைசர் உபயோகப்படுத்தப்படும்). அனைத்து கர்ப்பிணிகளுக்கும் அல்ட்ராசோனோகிராம்மூலம் சிறப்புப் பரிசோதனை செய்யப்படும். நடப்பு ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் 9,000 முகாம்கள் நடத்தப்பட உள்ளன. முகாம் நேரம்: காலை 8-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை. பரிந்துரை மற்றும் தொடர் சிகிச்சைகள் குறிப்பிட்ட நிலையங்களில் நடத்தப்படும். நோயின் விவர அறிக்கைகள் கணினி மூலம் பதிவு செய்யப்பட்டு, பல்வேறு சுகாதாரத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

2006 ஆகஸ்ட் 17]

5.32. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உள்ள ஆய்வுக் கூட வசதிகளை மேம்படுத்துதல்:

ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் பிறரிடம் தொற்றா நோய்கள் ஏற்படுவது அதிகரித்து வருகிறது. நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயுள்ளோர் பொதுச் சுகாதார நிலையங்களுக்கு அதிக அளவில் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்களுக்கென, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடர்ச்சியாக சிறப்பு சிகிச்சை மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சில சமயங்களில், இந்நோயாளிகள் இரத்தப் பரிசோதனைக்காக அருகிலுள்ள பரிந்துரை மையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்தப் பரிசோதனைக்காக ஆய்வுக் கூட வசதிகளை ஏற்படுத்துவது, இந்நோயாளிகளுக்கு ஏற்படும் சிரமத்தினைக் குறைக்க உதவும். எனவே, இரத்தப் பரிசோதனை செய்வதற்காக, செமி ஆட்டோ அனலைஸர் கருவிகளை, தேவைப்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஊரகப் பகுதிகளில் ஆய்வுக் கூடப் பணிகளின் தரம் மேம்படும்.

5.33. மருத்துவம் (ம) மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் பயிற்சித் திட்டம்:

எழும்பூர், மதுரை மற்றும் காந்திகிராமத்தில் உள்ள சுகாதாரம் (ம) குடும்ப நலப் பயிற்சி மையங்களிலும், மனித வள மேம்பாட்டு நிறுவனம், சேலம் (ம) விழுப்புரத்திலும், பொதுச் சுகாதார மண்டலப் பயிற்சி மையம், திருவரங்குளத்திலும் இப்புத்தறிவுப் பயிற்சி நடத்தப்படுகிறது.

5.34. பயிற்சி நிலையங்கள்:

5.34.1. பூந்தமல்லியில் அமைந்துள்ள பொதுச் சுகாதார நிலையம், சென்னை எழும்பூர், மதுரை மற்றும் காந்திகிராமம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள சுகாதாரப் பயிற்சி மையங்கள், விழுப்புரம் மற்றும் சேலத்தில் அமைந்துள்ள சுகாதார மனித வள மேம்பாட்டு நிறுவனம் ஆகிய 6 மண்டலப் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. ஓசூரில் அமைந்துள்ள நோய் பரப்பும் உயிரினக் கட்டுப்பாட்டு நிறுவனம் சிறப்பு பயிற்சி மற்றும் மனித இன, விலங்கு இன நோய்ப் பரிவர்த்தனக் கட்டுப்பாட்டு ஆராய்ச்சி மையமாகவும் திகழ்கிறது. பொதுச் சுகாதாரத் துறையில் பணிபுரியும் சுகாதார ஆய்வாளர்களுக்கு (ஆண்) பணியிடைப் பயிற்சி, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த திருவரங்குளத்தில் அமைந்துள்ள மண்டல பொதுச் சுகாதாரப் பயிற்சி நிலையத்தில் ஒவ்வோர் ஆண்டும் நடைபெற்று வருகிறது.

5.34.2. 2006 07 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பயிற்சிகள் நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது:

1. பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டப் பயிற்சி
2. கிராம சுகாதார செவிலியர்களுக்கு எச்.ஐ.வி/எய்ட்ஸ் பயிற்சி
3. கணினிப் பயிற்சி
4. சுகாதார ஆய்வாளர்கள் நிலை 1(பி) பிரிவிற்குப் பணியிடைப் பயிற்சி
5. கள சுகாதாரப் பயிற்சியாளர்கள் அனைவருக்கும், அவர்களது தேவைக்கேற்ப பணியிடைப் பயிற்சி

5.34.3. மைய அரசு ரூ.100 கோடி செலவில் சென்னை அருகே உலகத் தரம் வாய்ந்த பொதுச் சுகாதாரப் பள்ளி ஒன்றினை அமைத்திட முன்வந்துள்ளது.

5.35. 2006-2007 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

1. ரூ.27.18 இலட்சம் செலவில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான மாதிரி பல் மருத்துவ சிகிச்சைத் திட்டம்.
2. நிலையுயர்த்தப்பட்ட 106 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.21.20 இலட்சம் செலவில் ஃபாக் மாஸ்டர் வழங்குதல்.
3. 20 சுகாதாரப் பிரிவு மாவட்டங்களுக்கு ரூ.12.00 இலட்சம் செலவில் 20 டிஜிட்டல் ஒளி நகலிகளை வாங்குதல்.
4. தேசிய கிராமப்புற நல்வாழ்வுப் பணித் திட்ட நடவடிக்கைகளுக்காகப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தில் உள்ள திட்டமிடல் பிரிவை ரூ.4.00 இலட்சம் செலவில் கணினிமயமாக்குதல்.
5. 500 சுகாதாரத் துணை மையங்களுக்கு மின் இணைப்பு வசதிகள் ரூ.30.00 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.

அத்தியாயம்-6

குடும்ப நலத் திட்டம்

6.1. தமிழ்நாட்டில் தாய்-சேய் நலத்தை மேம்படுத்துவதன்மூலம் மக்கள் தொகைப் பெருக்கத்தை நிலைநிறுத்தும்பொருட்டு குடும்ப நலத் திட்டம் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினர்களின் முனைப்பான ஒத்துழைப்புடன் மக்கள் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு, "சமுதாயத் தேவைகளின் மதிப்பீட்டு முறையில்" முன்னோடி மாநிலமாகச் செயல்பட்டு, இந்தியாவின் மற்ற மாநிலங்கள் அத்திட்டத்தைக் கடைப்பிடிக்க வழிகோலியது. நல்ல திடமான, சமூக மற்றும் அரசியல் குறிக்கோள்களுடன், நல்ல நிர்வாகப் பின்னணியும் சேர்ந்து, தமிழ்நாட்டின் குடும்ப நலச் சாதனைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

6.2. மக்கள் தொகையியல் அளவீடுகள்:

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6.24 கோடியாகும். தமிழ்நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 11.72 விழுக்காடாக அமைந்து, கேரளா மாநிலத்திற்கு அடுத்து, தமிழ்நாடு இந்திய நாட்டில் இரண்டாவது இடத்தில் உள்ளது. தமிழ்நாடு, இந்தியாவில் ஆறாவது பெரிய மக்கள் தொகை கொண்ட மாநிலமாகும். தமிழக மக்கள் தொகை எண்ணிக்கை நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 6 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டின் மக்கள் தொகை 2006 ஆம் ஆண்டு 6.5 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டின் மத்திய அரசின் மாதிரிப் பதிவு முறைப்படி தமிழக மக்கள் தொகையியல் கீழ்க்கண்டவாறு அமைகிறது:

வ.எண்	குறியீடுகள்	நடப்பு நிலை
1.	பிறப்பு விகிதம்	17.1/1000 மக்கள் தொகைக்கு
2.	இறப்பு விகிதம்	7.5/1000 மக்கள் தொகைக்கு
3.	சிசு மரண விகிதம்	41/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
4.	மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம் (2005)*	0.9/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
5.	இயற்கையான வளர்ச்சி விகிதம்	0.96 சதவீதம்

* தமிழ்நாட்டில் இறந்த மகப்பேறு தாய்மார்களின் எண்ணிக்கையை வைத்துக் கணக்கிடப்பட்டது.

6.3. இலக்குகள்:

2007 ஆம் ஆண்டிற்குள் (பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்) அடைய நிர்ணயிக்கப்பட்ட மக்கள் தொகையியல் இலக்குகள் பின்வருமாறு:

வ. எண்	குறியீடுகள்	இலக்கு
1.	சிசு மரண விகிதம்	28/1000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு
2.	பிறப்பு விகிதம்	15/1000 மக்கள் தொகைக்கு
3.	தாய்மார்கள் இறப்பு விகிதம்	0.6/1000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு
4.	மொத்த கருவுறு விகிதம்	1.7
5.	தம்பதியர் காப்பு விகிதம்	65 சதவீதம்
6.	உயர் பிறப்பு வரிசைக் குறைப்பு	10 சதவீதம்
7.	கருத்தடை முறையில் ஆண்களின் பங்கு	10 சதவீதம்

6.4. குடும்ப நல மையங்கள்:

தமிழ்நாட்டில் தாய்-சேய் மற்றும் குடும்ப நலத் திட்டம் கீழ்க்கண்ட பணி மையங்கள்மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

வரிசை எண்	மையங்களின் பெயர்	எண்ணிக்கை
1	துணை சுகாதார நிலையங்கள்	8,683
2	ஆரம்ப சுகாதார நிலையங்கள்	1,417
3	பேறுகாலப் பின் கவனிப்பு மையங்கள்	114
4	நகர்ப்புற குடும்ப நல மையங்கள்	104
5	நகர நல்வாழ்வு மையங்கள்	193
6	கிராமப்புற குடும்ப நல மையங்கள்	382
7	அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்கள்	1,513
8	தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்	27

6.5. குடும்ப நலத் திட்டச் செயல் திறன்:

6.5.1. 2005–2006 ஆம் ஆண்டு குடும்ப நலத் திட்டம்மூலம் அடைந்த செயல் திறன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

வ.எண்	திட்டம்	எதிர்பார்க்கப் பட்ட சாதனை (2005–06)	செய்த சாதனை விவரம் (2005–06)	விழுக்காடு
1	அறுவை சிகிச்சை	4,50,000	3,80,028	84
2	கருத்தடை வளையம்	4,50,000	3,94,076	88
3	வாய் வழி மாத்திரை உட்கொள்வோர்	2,24,000	1,36,776	61
4	ஆணுறை உபயோகிப்போர்	3,75,000	2,02,097	54
5	கருக்கலைப்பு	1,50,000	96,333	46

6.5.2. பல்வேறு வகையான மருத்துவ நிலையங்களில் 2005-06 ஆம் ஆண்டு நடைபெற்ற அறுவை சிகிச்சைகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	நிறுவனங்கள்	சாதனை
1.	அரசு மருத்துவமனைகள்	58.9 %
2.	தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்	6.1%
3.	அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள்	25.6%
4.	உள்ளாட்சி அமைப்பு மருத்துவ மனைகள்	4.2%
5.	அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகள்	5.2%

6.6. குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முக்கிய அம்சங்களாகக் கருதப்படும் பகுதிகள்:

(அ) தமிழ்நாட்டில் நடக்கும் 11.5 இலட்சம் பிறப்புகளில் 17.8 விழுக்காடு (2004) (2.03 இலட்சம் பிறப்புகள்) உயர் வரிசைப் பிறப்புகளாகும். 2007 ஆம் ஆண்டில் அடைய வேண்டிய குறிக்கோள்களுக்கு இந்த உயர் வரிசைப் பிறப்புகள் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டும்.

[2006 ஆகஸ்ட் 17

(ஆ) மாதிரிப் பதிவு முறைப்படி சிசு மரண விகிதம், ஆயிரம் உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு 41 (2004) என்ற எண்ணிக்கையில் உள்ளது. அதில் 75 சதவிகித சிசுக்கள் ஒரு மாதத்திற்குள் இறந்து விடுகின்றன. ஒரு மாதத்திற்குள் குழந்தைகள் இறப்பதைக் கட்டுப்படுத்தினால் சிசு மரணத்தை, ஆயிரம் பிறப்புகளுக்கு 28 என்ற எண்ணிக்கையில் கட்டுப்படுத்த முடியும்.

(இ) தேசிய அளவில் நடைபெற்ற இரண்டாவது குடும்ப நலக் கணக்கெடுப்பின்படி, 1998-99-ல் 57 சதவிகிதத் தாய்மார்களும், 69 சதவிகித சிசுக்களும் ஏதேனும் ஒரு வகை இரத்த சோகை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர். பிரசவ நேர மரணத்திற்கும், பிறந்த ஒரு மாதத்திற்குள் நிகழும் சிசு மரணத்திற்கும் முக்கிய மறைமுகக் காரணமாக இருப்பது இரத்த சோகை நோயாகும். மேலும், மொத்தக் கருவுறு விகிதத்திற்கும் (1.9) விரும்பப்படும் குடும்ப அளவிற்கும் (1.7) இடைவெளி உள்ளது. உயர் பிறப்பு வரிசையைக் குறைப்பதனாலும் (17.8%) குடும்ப நலச் சேவைகள் மக்களை முழுமையாகச் சென்றடையச் செய்வதாலும் (13%), இந்த இடைவெளியைக் குறைக்கலாம். மொத்தக் கருவுறு விகிதத்திற்கும், விரும்பப்படும் குடும்ப அளவிற்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க, கீழ்க்கண்ட அணுகுமுறைகள் பின்பற்றப்படும்:

1. கிராமவாரியாக உயர் பிறப்பு வரிசையிலுள்ள தாய்மார்களைக் கண்டறிந்து, அவர்களைக் குடும்ப நல முறைகளை ஏற்றுக்கொள்ளச் செய்தல்.

2. 342 ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள அறுவை சிகிச்சை அரங்குகளில், தற்பொழுது 214 அறுவை சிகிச்சை அரங்குகள் செயல்படுகின்றன. படிப்படியாக எஞ்சியுள்ள 128 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உள்ள குடும்ப நல அறுவை சிகிச்சை அரங்குகள் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. தற்சமயம் 1,513 அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் குடும்ப நலச் செயல்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் அதிக அளவில் தனியார் மருத்துவமனைகள் அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2006 ஆகஸ்ட் 17]

4. தகுதி வாய்ந்த தம்பதியர்களுக்குக் குடும்ப நலச் சேவைகளை வழங்குவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், மகளிர் மன்றம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அரசு சாராத அமைப்புகள் ஈடுபடுத்தப்படும்.

6.7. மாநில மக்கள் தொகை ஆணையம்:

குடும்ப நலம் மற்றும் தாய்-சேய் நலத் திட்டப் பணிகளை மேற்பார்வை மற்றும் ஆய்வு செய்து, தக்க அறிவுரை வழங்கவும், திட்டமிடப்பட்டுள்ள இலக்குகளை அடையவும் மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய தலைமையில் மாநில மக்கள் தொகை ஆணையம் அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

6.8. 2006–2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:

1. பேறுகாலப் பின் கவனிப்பு மையம் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள தாய்மார்களுக்குத் துணிகள், புடவைகள், தலையணை மற்றும் படுக்கை விரிப்புகள் ரூ.30.00 இலட்சம் செலவில் வழங்குதல்.

2. பேறுகாலப் பின் கவனிப்பு மையம் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.10.00 இலட்சம் செலவில் பாயில்ஸ் கருவி, நோய்த் தொற்று நீக்கிக் கருவிகள் மற்றும் கொள்கலன் போன்ற இன்றியமையாத கருவிகள் வாங்கி வழங்குதல்.

3. இரு துளை லேப்ரோஸ்கோப் கருவிகள் ரூ.1.71 கோடி செலவில் 66 மருத்துவமனைகளுக்கு வாங்கி வழங்குதல்.

[2006 ஆகஸ்ட் 1'

அத்தியாயம்–7

மருந்துக் கட்டுப்பாட்டு நிருவாகம்

7.1. மருந்துகள், அழகு சாதனப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி விநியோகம், விற்பனை ஆகியவற்றை ஒழுங்குபடுத்த கீழ்க்காணும் சட்ட விதிமுறைகளைச் செயல்படுத்தும் தலையாய பணியினை மருந்துக் கட்டுப்பாட்டு நிருவாகம் மேற்கொண்டு வருகிறது:

1. 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் மற்றும் 1945 ஆம் ஆண்டு விதிகள்.

2. 1995 ஆம் ஆண்டு மருந்துகள் விலைக் கட்டுப்பாட்டு ஆணை.

3. 1954 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம்.

மேலும், இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மன மயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தின்படி நடக்க அதிகாரம் பெற்றவர்கள். ஆங்கில முறை, ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஹோமியோபதி மருந்துகள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரித்து, விற்பனை செய்யத் தேவையான உரிமங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளை மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் மேற்கொள்கிறார். மைய உரிமம் வழங்கும் குழுமத்துடன் இணைந்து, தமிழ்நாட்டில் இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு உரிமம் வழங்கும் பணியினையும் இவர் ஆற்றுகிறார்.

7.2. நடமாடும் புலனாய்வுக் குழு மற்றும் சட்டம், புலனாய்வுப் பிரிவுகளின் பணிகள்:

போலி மருந்து மற்றும் தரமற்ற மருந்துகள் குறித்து தென் மாவட்டங்களிலிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கைகள் எடுக்க, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு நடமாடும் புலனாய்வுக் குழுவும், சென்னையிலிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க இயக்குநர் அலுவலகத்தில் ஒரு புலனாய்வுக் குழுவும் செயல்படுகின்றன. இது தவிர, சென்னையிலுள்ள புலனாய்வுப் பிரிவு, சட்டம் தொடர்பான பணிகளையும், சிறப்பு ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

2006 ஆகஸ்ட் 17]

7.3. மருந்து ஆய்வுக் கூடம்:

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ், முழுத் திறன் கொண்ட ஒரு மருந்து ஆய்வுக் கூடம் இயங்கி வருகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், உற்பத்தி நிறுவனங்கள், மொத்த மற்றும் சில்லரை விற்பனை நிலையங்கள் ஆகிய இடங்களிலிருந்து (ஊசிமூலம் செலுத்தும் மருந்துத் தயாரிப்பு நீங்கலாக) மருந்து ஆய்வாளர்களால் சோதனைக்காக எடுக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் இந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன. கிண்டியிலுள்ள நோய்த்தடுப்பு கிங் மருந்து நிலையத்தில் ஊசிமூலம் செலுத்தும் மருந்துகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

7.4. 2005–2006 ஆம் ஆண்டின் சாதனைகள்:

1–4–2005 முதல் 31–3–2006 வரையிலான காலங்களில் மொத்தம் 151 தற்ற வழக்குகள் தொடர ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவற்றில் கீழ்க்கண்ட நிறுவனங்கள்மீது முக்கிய விதிகள் மீறல் குறித்து குற்ற வழக்குத் தொடர ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டது:

1. 8 நிறுவனங்கள்மீது போலி மருந்துகள் தயாரித்ததற்காக 13 குற்ற வழக்குகளும், மற்றும் கலப்பட மருந்து தயாரித்ததற்காக 2 நிறுவனங்களின்மீது குற்ற வழக்குகளும் தொடர ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டது.

2. 2 நிறுவனங்கள்மீது தவறான வியாபாரக் குறியிட்ட மருந்துகள் (Misbranded Drugs) தயாரித்ததற்காகக் குற்ற வழக்குத் தொடர ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

3. மருந்து (மற்றும்) மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டத்தின்கீழ் 5 குற்ற வழக்குகள் தொடர ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

4. தரமற்ற மருந்துகள் தயாரித்ததற்காக சில நிறுவனங்கள்மீது 12 குற்ற வழக்குகள் தொடர ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

5. மருந்து உரிமம் இல்லாமல் மருந்துத் தயாரிப்பு/விற்பனை செய்ததற்காக 14 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

6. மேலும் 6 வெவ்வேறு மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள் தயாரித்த 9 போலி மருந்துகள் இத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டு, இந்நிறுவனங்களுக்கு எதிராக மருந்து மற்றும் அழகு சாதனச் சட்டம், 1940-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. உலக சுகாதார நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து நவம்பர் 2005 மற்றும் மார்ச் 2006 மாதங்களில் மருந்து ஆய்வாளர்கள் மற்றும் முதுநிலை மருந்து ஆய்வாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களின்மூலம் மருந்துகளின் தயாரிப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டினை அறியும் பயிற்சித் திட்டம் அளிக்கப்பட்டது.

8. மாநிலத்தில் உள்ள 13 மருந்துக் கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் மண்டல அலுவலகங்களிலும் கணினி நிறுவப்பட்டுள்ளது.

9. மருந்துக் கட்டுப்பாட்டு நிருவாகத் துறைக்கென தரை மற்றும் முதல் தளம் கொண்ட புதிய துணைக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

10. புறநகரிலுள்ள அனைத்து மருந்துக் கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கும் நகல் எடுக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளது.

11. மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகப் பயன்பாட்டிற்காகப் பார்வைக் குறிப்பு நூல்கள் வாங்கப்பட்டுள்ளன.

7.5. 2006-2007 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்:

1. விற்பனை நிறுவனங்கள், உற்பத்தி நிலையங்கள்/குருதி வங்கிகள்/அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் குறைந்தபட்சம் 27,600 ஆய்வுகள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. குறைந்தபட்சம் 4,000 மருந்து மாதிரிகளை அங்காடிகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களிலிருந்து எடுத்து, அதன் தரத்தினை ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. நவீன தொழில்நுட்பங்களின்மூலம் மருந்துகள் தயாரிப்பதற்கும், மருந்துகளின் தரத்தினை அறியவும் மருந்து ஆய்வாளர்கள் மற்றும் முதுநிலை மருந்து ஆய்வாளர்களுக்கு ஒரு பயிற்சி நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் மருந்தியல் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

7.6. 2006-2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:

1. மருந்துக் கட்டுப்பாட்டு நிருவாகத் துறையின் பயன்பாட்டிற்காக ரூ.1.65 இலட்சம் செலவில் கணினி மற்றும் துணைக் கருவிகள் வாங்குதல்.

2. நிருவாக அலுவலகப் பயன்பாட்டிற்காக ரூ.0.60 இலட்சம் செலவில் நகல் எடுக்கும் கருவி வாங்குதல்.

3. மருந்துக் கட்டுப்பாட்டு நிருவாகத் துறையின் பயன்பாட்டிற்காக ரூ.1.00 இலட்சம் செலவில் பார்வை நூல்கள் வாங்குதல்.

[2006 ஆகஸ்ட் 17

அத்தியாயம்–8

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

8.1.1. இந்திய மருத்துவ முறைகளின் வளர்ச்சியிலும், மேம்பாட்டிலும் முழு வசதி வாய்ப்புகளை உருவாக்கி, அவற்றின் ஆற்றல் வளத்தையும், செயல் திறனையும் முழுமையாகப் பயன்படுத்தி, அவற்றின் பண்டைய பெருமையை நிலைநாட்டுவதில் தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி முறைகள் ஒரு பல்நோக்கு அணுகுமுறையுடன் முக்கிய நீரோட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டு, வளர்ச்சிக்கான நோக்கங்களை அடையவும், இம்மருத்துவ முறைகளின் பரந்துபட்ட ஆதாரங்களை இலாபகரமான முறையில் பயன்படுத்திக் கொள்ளவும், எளிமையாகக் கிடைக்கவும், எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும், குறைந்த செலவில் தரமான சிகிச்சையை அளித்து சுகாதாரப் பாதுகாபபின் பயன்களை மேம்படுத்தும் நோக்கிலும் உரிய வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன. சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா, இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றை அலோபதி மருத்துவ சிகிச்சைக்குத் துணையாக அல்லது நல்ல மாற்று வழியாக உருவாக்கி, மக்களுக்குப் பெருமளவில் மருத்துவ சிகிச்சை அளிப்பதும், சுகாதாரப் பணியில் மக்கள் அவரவர் விரும்பும் மருத்துவ சிகிச்சையைப் பெற்றிட வேண்டிய வாய்ப்புகளை உருவாக்கித் தருவதும் மாநில அரசின் குறிக்கோளாகும்.

8.1.2. இந்திய முறை மருத்துவமும், நவீன முறை மருத்துவமும் ஒன்றுக்கொன்று பரிமாற்றம் செய்துகொள்ளப்படமுடியும். தமிழ்நாடு அரசு ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஒரு இந்திய முறை மருத்துவப் பயிற்சி பெற்ற மருத்துவரைப் படிப்படியாக நியமித்திட எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. நடப்பாண்டிலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவப் பிரிவு தொடங்கப்பட உள்ளது. இதையும் சேர்த்து 2006-07 ஆம் ஆண்டில் இந்திய முறை மருத்துவப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் 451 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிவர்.

8.2. கல்வி:

8.2.1. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி முறைகளின் முறையான வளர்ச்சிக்காக, மத்திய கழகங்கள் குறைந்தபட்சக் கல்வித் தரத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பல்வேறு கல்வி விதிமுறைகளை வகுத்துள்ளன. இந்திய மருத்துவ முறையில் கல்வி மற்றும் பயிற்சி

2006 ஆகஸ்ட் 17]

வசதிகள் இரு வகைகளில் அமைந்துள்ளன. ஒன்று, அரசு தாமாகவே முன்வந்து இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவது. இன்னொன்று, தேவையான தர அளவுகளைக் கொண்டுள்ள தனியார் கல்லூரிகளைச் செயல்பட அனுமதிப்பது. இந்திய மருத்துவ முறைப் பட்டப் படிப்பில், ஆண்டொன்றிற்கு அரசுக் கல்லூரிகளில் 236 மாணவர்களும், தனியார் கல்லூரிகளில் 790 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பட்ட மேற்படிப்புக் கல்வியானது அரசு மருத்துவக் கல்லூரிகளில் மட்டுமே நடத்தப்படுகிறது. இதில் ஆண்டுக்கு 80 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இந்திய மருத்துவ முறைக் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது:-

கல்வி நிறுவனங்கள்	சித்தா	ஆயுர்வேதா	யுனானி	ஓமியோபதி	யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	மொத்தம்
பட்டப் படிப்பு:						
அரசுக் கல்லூரி	150	–	26	50	10	236
தனியார் கல்லூரி	90	150	–	400	150	790
பட்ட மேற்படிப்பு:						
அரசுக் கல்லூரி	80	–	–	–	–	80
தனியார் கல்லூரி	–	–	–	–	–	–

8.2.2. மேலும் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஒன்றை 2007-08 ஆம் கல்வி ஆண்டு முதல் தொடங்கி நடத்திட உரிய அங்கீகாரம் பெறுவதற்காக, அரசு அவசர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மத்திய அரசு நிதியுதவியுடன், சென்னை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியும், மதுரை, திருமங்கலம் அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியும் தலா ரூ.300.00 இலட்சம் செலவில் மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்பட்டு, மாநிலத்தின் மாதிரிக் கல்லூரிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 17

8.3. மருத்துவ ஆராய்ச்சி:

இந்திய மருத்துவ முறைகள் பல நூற்றாண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும் அவற்றுள் சில சிகிச்சை முறைகள், பயிற்சி முறைகள் மற்றும் மருந்துகள் ஆகியன தற்போதைய காலத்திலும், அதே முறைமையில் சற்றும் மாறாமல் பின்பற்றக்கூடியதாய் அமைந்துள்ளன. இத்துறையில் உயர் ஆராய்ச்சி வசதிகள் போதுமான அளவுக்கு இல்லாமையால், இத்துறை ஆராய்ச்சி நோக்கில் வளர்ந்த பிற நிறுவனங்களுடன் கூட்டாகச் செயல்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வகையில் இந்திய மருத்துவத் துறையும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் இணைந்து செயல்படக் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளன.

8.4. தரப்படுத்தல்:

பல்வேறு மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மூலிகை மருந்துகளின் தரம் குறையாமல் பாதுகாப்பது இந்திய மருத்துவத்திற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது. இந்திய மருத்துவ முறை மருந்துகள் மலிவான விலையில், பாதுகாப்பான செயல் திறன் கொண்டதாக மக்களுக்குக் கிடைப்பதற்கு, மத்திய அரசு வழங்கிய நிதியினைக் கொண்டு. மாநில மருந்துசெய் நிலையங்கள் ரூ.130.00 இலட்சம் செலவினத்தில் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. டாம்ப்காலுடன் இணைந்துள்ள மருந்துசெய் நிலையமும் நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. அதேபோல, சென்னையிலுள்ள மாநில மருந்துகள் ஆய்வுக் கூடத்திற்குத் தேவையான கருவிகள் வாங்கப்பட்டு, இந்திய முறை மருந்துகளைத் தர நிர்ணயம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்திய மருத்துவ முறை மருந்துகளின் தரப்பாடு உறுதியளிக்கப்படும்.

8.5. மருத்துவ சிகிச்சை:

தற்சமயம் மாநிலத்தில், உள்நோயாளிகளுக்காக 965 படுக்கை வசதிகளுடன், 801 மருத்துவப் பிரிவுகள் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைகளின்கீழ் மருத்துவச் சேவை புரிந்து வருகின்றன. இதை மேலும் மேம்படுத்திப் பரவலாக்கும் வகையில் ரூ.555.00 இலட்சம் செலவில் 17 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் ரூ.1,510.00 இலட்சம் செலவில் 151 வட்ட மருத்துவமனைகளிலும் சிறப்பு மருத்துவப் பிரிவுகளை (Speciality clinics) மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தி வருகிறது.

2006 ஆகஸ்ட் 17]

8.6. தேசிய சித்த மருத்துவ நிறுவனம்:

தேசிய சித்த மருத்துவ நிறுவன உருவாக்கத்தில் தமிழ்நாடு அரசு ஒரு முக்கியப் பங்கை வகித்துள்ளது. மாநில மற்றும் மத்திய அரசின் கூட்டு முயற்சியாக தேசிய சித்த மருத்துவ நிறுவனம், சென்னை தாம்பரத்தில் நிறுவப்பட்டுள்ளது. சித்த மருத்துவத்தில் முதுநிலைப் பட்டக் கல்வியை வழங்குவதோடு, நோயாளிகளுக்கு சித்த மருத்துவ சிகிச்சை அளிப்பதையும் இநத நிறுவனம் தனது நோக்கமாகக கொண்டுள்ளது. இந்நிறுவனம் சித்த மருத்துவத்தின் அறிவியல் மற்றும் கலை சார்ந்த உண்மைகளை வெளிப்படுத்தவும், சித்த மருத்துவத்தைப் பரப்புவதற்கும் உறுதி பூண்டுள்ளது.

8.7. டாம்ப்கால்:

டாம்ப்கால் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50.00 இலட்சமாகும், மற்றும் இதன் தற்போதைய செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.20.75 இலட்சமாகும். டாம்ப்கால் 2002-2003 ஆம் ஆண்டு ரூ.93.55 இலட்சமும், 2003-2004 ஆம் ஆண்டு ரூ.110.88 இலட்சமும், 2004-2005 ஆம் ஆண்டு ரூ.85.02 இலட்சமும் இலாபம் ஈட்டியுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் புதிய சாதனை அளவாக (தணிக்கை செய்யப்படாதது) ரூ.1,053.08 இலட்சம் அளவிற்கு வியாபாரம் நடைபெற்றதில் நிகர இலாபமாக ரூ.169.79 இலட்சம் வரிக்குப் பிறகு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் தனது ஆதாயப் பங்கை அரசிற்கு அளித்து வருகிறது. முந்தைய ஆண்டினைப்போல, 2004-2005 ஆம் ஆண்டிற்கும் இந்நிறுவனம் தனது 20 விழுக்காடு ஆதாயப் பங்கான ரூ.4.15 இலட்சத்தை அரசிற்கு அளித்துள்ளது.

8.8. 2006–2007 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

1. 22 மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் அலுவலகங்களுக்கு ரூ.0.55 இலட்சம் செலவில் தொலைபேசி வசதி இணைப்புகள் வழங்குதல்.

2. 5 மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்களுக்கும், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இணை இயக்குநருக்கும் ரூ.4.20 இலட்சம் செலவில் வாடகை வண்டிகளை வழங்குதல்.

[2006 ஆகஸ்ட் 17

3. 25 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.90.00 இலட்சம் செலவில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகளைத் தொடங்குதல்.

4. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் அலுவலகத்திற்கு ரூ.5.00 இலட்சம் செலவில் கணினிகள் வழங்குதல்.

5. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவமனையில் ரூ.3.00 இலட்சம் செலவில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரங்களை ஆவணப்படுத்துதல் (Clinical Documentation).

6. தற்போதுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையோடு இணைந்த மருந்து ஆய்வுக் கூடத்தை ரூ.20.00 இலட்சம் செலவில் அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி மற்றும் அரசினர் யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவியர்களுக்கான விடுதியாக மாற்றுதல்.

2006 ஆகஸ்ட் 17]

அத்தியாயம்–9

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

9.1. தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மருத்துவச் சேவையை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.482.49 கோடி ஆகும். இத்திட்டம் ஜனவரி 2005 முதல் மார்ச் 2010 வரை செயல்படும். இத்திட்டத்தின் முதல் கட்டம் தமிழ்நாட்டில் உள்ள தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய ஐந்து மாவட்டங்களில் 2005 ஜனவரி முதல் 2006 ஜூன் வரை செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஜூலை 2006 தொடங்கி டிசம்பர் 2007 முடிய அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் பின்வரும் முக்கியமான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

9.2. கருவுற்ற தாய்மார்கள் மற்றும் சிசுக்களின் மரண விகிதத்தைக் குறைத்தல்:

கருவுற்ற தாய்மார்களின் இறப்பு குறித்த ஆய்வில் மருத்துவமனையில் உரிய வசதிகள் இல்லாத காரணத்தால் பலர் இறப்புக்குள்ளாகின்றனர் எனத் தெரிய வந்துள்ளது. கருவுற்ற தாய்மார்கள் மற்றும் சிசுக்களின் மரண விகிதத்தை விரைவாகக் குறைக்கும் வகையில் தமிழக அரசு CEMONC எனப்படும் 'அவசர தாய்-சேய் மருத்துவ சிகிச்சை மையங்களை' முதன்முறையாக ஏற்படுத்தியுள்ளது. மகப்பேறு மருத்துவர்கள், குழந்தை மருத்துவர்கள் மற்றும் மயக்க மருத்துவர்கள் ஆகியோர் 24 மணி நேரமும் சேவை செய்யும் வகையில் இம்மையங்கள் இயங்குகின்றன. ஒவ்வொரு மையத்திலும் எல்லா வசதிகளுடன்கூடிய மகப்பேறு அறை, அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் இரத்த வங்கி ஆகியவை உள்ளன. தமிழக அரசு முதல் கட்டமாக 66 மருத்துவமனைகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. இம்மருத்துவமனைகளுக்குத் தேவையான கூடுதல் கட்டடங்கள், மருத்துவக் கருவிகள் மற்றும் பணியாளர்களை தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் வழங்கி வருகிறது. இந்த மருத்துவமனைகளில் 200 சிறப்பு மருத்துவர்களைப் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 200 செவிலியர் பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டு, அவை நிரப்பப்பட்டுள்ளன. ரூ.12.50 கோடி மதிப்பு மிக்க மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 17

இத்திட்டத்தின்மூலம் கீழ்க்கண்ட முன்னேற்றம் அடையப் பட்டுள்ளது:

(i) இந்த மருத்துவமனைகளில் மகப்பேறு முன்னைவிட அதிகமான எண்ணிக்கையில் நடைபெறுகின்றது.

(ii) சிசேரியன் அறுவை சிகிச்சைகள் அதிகமாக நடைபெற்றுள்ளன.

(iii) அதிகமான தாய்மார்களுக்கு ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிறப்பு மருத்துவச் சேவை மேலும் 32 மருத்துவமனைகளுக்கு நடப்பு ஆண்டில் விரிவுபடுத்தப்படும்.

9.3. அவசர ஆம்புலன்ஸ் ஊர்திச் சேவை:

கருவுற்ற தாய்மார்களின் இறப்புகளை ஆய்வு செய்ததில், அவர்கள் அவசரக் காலத்தில் மருத்துவமனையை உரிய நேரத்திற்குள் சென்றடைவதில் தாமதம் ஏற்படுவதால் இறந்து போகின்றனர் எனத் தெரிய வந்துள்ளது. இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் தமிழக அரசு ஆம்புலன்ஸ் ஊர்திச் சேவையைக் கிராமப்புறங்களில் வழங்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 187 ஆம்புலன்ஸ் ஊர்திகள் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். அவசர நோயாளிகள் மற்றும் கருவுற்ற தாய்மார்கள் உடனடியாக மருத்துவமனைக்குச் செல்வதற்கு ஏதுவாக அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். 2006-2007 ஆம் ஆண்டில் மேலும் 198 ஆம்புலன்ஸ் ஊர்திகள் இதர 14 மாவட்டங்களுக்குக் கொடுக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும். 2006-2007-க்குள் தமிழகத்திலுள்ள 385 வட்டாரங்களிலும் இச்சேவை செயல்படுத்தப்படும். மேற்கூறிய இரு நடவடிக்கைகளும் கருவுற்ற தாய்மார்கள் மற்றும் சிசுக்களின் மரண விகிதத்தைக் குறைப்பதில் பெரும் பங்கு வகிக்கும்.

9.4. மருத்துவமனைகளை மேம்படுத்துதல்:

இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 35 மருத்துவமனைகளுக்குத் தேவையான கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடங்கள் கட்டி முடிவடையும் தருவாயில், மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்கள்

2006 ஆகஸ்ட் 17]

வழங்கப்படும். இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், 24 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் மற்றும் அவற்றின்கீழ் இயங்கும் 211 இதர மருத்துவமனைகள் ஆகியவற்றின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மருத்துவமனைகளுக்கு ரூ.172 கோடி செலவில் தேவையான புதிய கட்டடங்கள் கட்டப்படும். மருத்துவமனைக் கருவிகள் மற்றும் தளவாடங்கள் ரூ.70 கோடி செலவில் வழங்கப்படும்.

9.5. பழங்குடி மக்களின் சுகாதார மேம்பாடு:

2001 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினரின் எண்ணிக்கை 6.24 இலட்சம் ஆகும். இது மொத்த மக்கள் தொகையில் 1.03 சதவிகிதம் ஆகும். இவர்களில் 88 சதவிகிதம் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் ஏழை, எளிய மக்கள் ஆவர். தமிழக அரசு சிறந்த முறையில் மருத்துவச் சேவைகளை ஏற்படுத்தியும்கூட, பழங்குடியினரில் பெரும்பாலோர் பல காரணங்களால் அடிப்படை மருத்துவச் சேவை பெறுவதில் சிரமப்படுகின்றனர். நெடுந்தொலைவிலும், மற்றும் சென்றடைய சிரமப்பட வேண்டிய பகுதியிலும் வாழும் பழங்குடி மக்களின் மருத்துவச் சேவைக்காக முதல் கட்டத்தில் 12 இடங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஓர் ஆய்வு நுட்புநர் அடங்கிய நடமாடும் மருத்துவக் குழு பழங்குடியினர் வாழும் கிராமங்களுக்கு வாரத்தின் குறிப்பிட்ட நாளில் சென்று சேவை செய்யும்.

9.6. மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கான ஆலோசனை மையங்கள்:

மருத்துவமனைகளுக்கு வருகை தரும் ஏழை நோயாளிகளுக்குத் தகுந்த ஆலோசனை வழங்கும் வகையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மையங்களில் பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு மருத்துவர் குறிப்பு மற்றும் ஆய்வக அறிக்கை பற்றிய விளக்கங்களைக் கூறி வழி நடத்துவர். இவ்வாலோசகர்கள் தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள்மூலம் பணியமர்வு செய்யப்பட்டுக் கண்காணிக்கப்படுவர். 167 மருத்துவமனைகளில் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்படும்.

[2006 ஆகஸ்ட் 17

9.7. மருத்துவமனைகளின் செயல்பாடுகளின் தகவல் சேகரிப்பு:

மருத்துவமனைகளின் மேலாண்மைத் தகவல் சேகரிப்புத் திட்டம் கணினிமயமாக்கப்பட்டு வலைத்தளத்தில் இணைக்கப்பட்டு 29 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும், 241 இதர மருத்துவமனைகளிலும் தொடங்கப்பட்டு, மருத்துவமனை நிகழ்வுகள் ஆய்வு செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ் அலுவலர்கள் வருகை, அவர்களின் செயல்பாடுகள், மருத்துவமனைகளுக்கான செலவினங்கள், மருத்துவக் கருவிகளின் பயன்பாடுகள், மருந்துகளின் இருப்பு மற்றும் மருத்துவமனைக் கழிவுகளை அகற்றுதல் போன்ற தகவல்கள் சேகரிக்கப்படும். இதன்மூலம் மருத்துவமனைகளில் அவ்வப்போது ஏற்படும் குறைபாடுகளை உடனே கண்டறிந்து நடவடிக்கை எடுக்க முடியும். கணினி வழியாக நோயாளிகளின் மருத்துவக் குறிப்பை எடுக்கும் வகையிலும் திட்டமிடப்பட்டுள்ளது.

9.8. மருத்துவமனைக் கழிவுகளை அகற்றுதல் மற்றும் அழித்தல்:

தமிழகத்தில் சுகாதாரத் துறையின்கீழ் இயங்கும் அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் மருத்துவமனைக் கழிவுகளை சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்தி, அவற்றை அழிப்பதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவமனைக் கழிவுகளை அப்புறப்படுத்தி அழிப்பதற்கான நடைமுறை விதிகளின்படி கழிவுகளை முறைப்படி பிரித்தெடுத்து, பின்னர் சேமித்து வைத்து, அதனை இறுதியாக அப்புறப்படுத்தும் மையத்திற்கு அனுப்பி வைக்கும் முறையை எல்லா மருத்துவமனைகளும் கையாள வேண்டும். இத்திட்டம் தற்சமயம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் (2006-2007) மீதம் உள்ள 27 மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

9.9. மனித வள மேம்பாடு:

மருத்துவமனைகளில் தரப்படும் சேவையின் தரம், அங்கு பணியாற்றும் அனைத்துத் தரப்பு ஊழியரின் சிகிச்சைத் திறன் மற்றும் நிருவாகத் திறமையைச் சார்ந்து இருக்கும். ஆகையால் மருத்துவமனை சேவையை மேம்படுத்த, அதில் பணியாற்றும் ஊழியருக்குத் தொடர்ந்து சிகிச்சை மற்றும் நிருவாகத் திறனை மேன்மேலும் வளப்படுத்தும் வகையில் பயிற்சி தர வேண்டும். குறிப்பாக, மருத்துவ சிகிச்சையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பயிற்சியை ஊழியர்களுக்கு

2006 ஆகஸ்ட் 17]

அளிப்பதே பயிற்சியின் தலையாய நோக்கமாகும். இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், தலைமை மருத்துவ அலுவலர்கள் மற்றும் நிருவாகப் பொறுப்பில் உள்ள மருத்துவர்கள் ஆகியோருக்குச் சிறந்த முறையில் நிருவாகப் பயிற்சி அளித்து, அதன்மூலம் மருத்துவமனைகளின் செயல்பாடுகள் மேம்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

9.10. மருத்துவமனைகளின் தரத்தை மேம்படுத்துதல்:

அரசு மருத்துவமனைகளில் அளிக்கப்படும் சேவையைத் தரம் பிரித்துக் கணிக்கவும், அளவிடவும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் சில முக்கிய அளவீடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. பெரிய மருத்துவமனைகளை, சேவையின் தரத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யும் முறையை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு மருத்துவமனைகளைத் தரத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யும் முறையையும் அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

9.11. கருப்பை வாய்ப் புற்று நோய் கட்டுப்படுத்துதல்:

தமிழகத்தில் கருப்பை வாய்ப் புற்று நோய் பரவலாகக் காணப்படுகிறது. புற்று நோய் வருவதற்கான முந்தைய நிலையில் பொதுவாக எந்தவிதமான அறிகுறியும் இல்லாததால், புற்று நோயாக உருவெடுத்து முற்றிய நிலையில் மட்டுமே பெண்கள் சிகிச்சை மேற்கொள்ள வருகின்றனர். ஆனால் புற்று நோய் வருவதற்கான முந்தைய நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சையை உடனே அளித்தால், 100 சதவிகிதம் குணப்படுத்த முடியும். ஆகையால் இந்நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது மிக முக்கியமாகும். தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் தேனி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் இனி வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் 30 முதல் 60 வயதிற்குட்பட்ட பெண்களின் கருப்பை வாய்ப் புற்று நோய்க்கான அறிகுறியை ஆய்வின்மூலம் கண்டறியும் முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். கருப்பை வாய்ப் புற்று நோய் கண்டறியும் திட்டத்தினை 30-60 வயதுக்குட்பட்ட பெருந்தொகையிலான பெண்களுக்காகச் செயல்படுத்துவதன்மூலம் கிடைக்கும் அனுபவம் அரசுக்கு மிக்கபயன் அளிக்கும். இவ்வனுபவங்களின் அடிப்படையில் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும்.

[2006 ஆகஸ்ட் 17

அத்தியாயம்–10

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்

10.1. தமிழ்நாட்டில் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம், கட்டம்-II (அ) பேறுகாலத் தாய்மார்களின் இறப்பு விகிதம் குறைத்தல், (ஆ) சிசு இறப்பு விகிதத்தைக் குறைத்தல், (இ) மொத்தக் கருத்தரிப்பு விகிதத்தைக் குறைத்தல், (ஈ) இனப்பெருக்கப் பாதைத் தொற்று நோய் மற்றும் பால்வினைத் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல், (உ) வளர் இளம் பெண்களின் நலனைப் பராமரித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறியீடுகளை மாநில அளவில் ஒட்டுமொத்தமாக மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மண்டல அளவில் நிலவும் வேறுபாடுகளைக் களைந்து, மாநிலத்தின் எல்லாப் பகுதிகளும் சமமான வளர்ச்சி பெறவும் இத்திட்டம் உதவி புரியும். தமிழ்நாட்டில், இந்தச் சுகாதார நோக்கங்களைச் செயல்படுத்த, பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம், கட்டம்-II, ரூ.426 கோடி செலவில் 2005-2006 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்குத் தொடங்கப்பட்டது. மைய அரசால் இத்திட்டத்திற்காக 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூ.74 கோடி ஒதுக்கப்பட்டு, ரூ.72.34 கோடி விடுவிக்கப்பட்டது. மைய அரசால் விடுவிக்கப்பட்ட தொகையில் ரூ.52.48 கோடி 2005-2006 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ.106.56 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

10.2. பின்வரும் சேவைகள் 2006 – 2007 முதல் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது:

10.2.1. பேறுகால அவசர சிகிச்சை மற்றும் இளஞ்சிசு கவனிப்புக்கான 24 மணி நேர அடிப்படை சுகாதார சேவைகளை வழங்குதல்:

(1) 7.5 கிலோ மீட்டர் தூரத்திற்குள் அடிப்படை அவசரப் பேறுகால மற்றும் இளஞ்சிசு கவனிப்பு மையங்கள் 24 மணி நேரமும் செயல்படும்.

780 ஆரம்பு சுகாதார நிலையங்களில், மூன்று செவிலியர்கள் கொண்ட 24 மணி நேர பிரசவ சேவைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன், இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மருத்துவமனைகளில் நடைபெற்ற

2006 ஆகஸ்ட் 17]

சாதாரணப் பிரசவங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெற ஆரம்பித்த அதே வேளையில் கிராம மக்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே தரமான மருத்துவச் சேவைகள் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையும், சிறப்பு சிகிச்சையும் அளிப்பதில் அதிகக் கவனம் செலுத்தவும் முடிகிறது. 24 மணி நேர அடிப்படை அவசரப் பேறுகால மற்றும் இளஞ்சிசு கவனிப்பு மையங்கள்மூலமாக மகப்பேறு, இளஞ்சிசு புராமரிப்பு மற்றும் முதலுதவிச் சேவைகளின் தரம் உயர்த்தப்படும். பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் முதலாம் கட்டத்தில் இதனை அறிமுகப்படுத்தியதால், தாய் மரண விகிதம் 36 விழுக்காடு குறைந்தது. பாம்புக் கடி, தேள் கடி போன்ற ஆபத்தான நிலையில் வரும் நோயாளிகளுக்கும், அவசரப் பேறுகால மற்றும் இளஞ்சிசு கவனிப்புக்கும் இத்தகைய சேவைகளை வழங்க ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன. இச்சேவைகள் 7.5 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்கும்படியாக இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். 2006-07-ல், 385 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அடிப்படை அவசரப் பேறுகால இளஞ்சிசு கவனிப்பு மையங்களாகச் செயல்படும். இதற்கென ரூ.54.97 கோடி செலவிடப்படும்.

(2) அவசர பேறுகாலப் பணிகளுக்கு தனியார் மயக்கவியல் மருத்துவர்கள் மற்றும் மகப்பேறு மருத்துவர்களின் சேவையைப் பயன்படுத்துதல்:

தாய்மார்கள் இறப்புக் காரணங்களை ஆய்வு செய்ததில், 2001-02 ஆம் ஆண்டிற்கு முன் அவசரப் பேறுகாலப் பராமரிப்புப் பணிகள் மருத்துவமனைகளில் சரியான நேரத்தில் கிடைக்காத காரணத்தினால் 30 சதவிகித இறப்புகள் நேர்ந்தது தெரிய வந்துள்ளது. மேலும் 30 சதவிகித தாய் மரணங்கள் மருத்துவ நிபுணர்கள் தேவைக்காக ஒரு மருத்துவமனையிலிருந்து மற்றொரு மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்படும்பொழுது நேர்ந்தன. பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் மதிப்பூதிய அடிப்படையில் தனியார் மயக்கவியல் மற்றும் பேறுசார் மருத்துவர்களைப் பயன்படுத்தி அவசரப் பேறுகால சிகிச்சையளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் 2005 ஆம் ஆண்டில் தாய்மார்கள் இறப்பு விகிதம் 36 சதவிகிதம் குறைந்தது மட்டுமல்லாமல், இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் நடைபெறும் அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை 70 சதவிகிதம் அதிகரித்தது. மேற்கூறிய காரணங்களினால்

[2006 ஆகஸ்ட் 17

இத்திட்டம் பேறுசார் குழந்தை நலத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திலும் தொடரப்பட உள்ளது.

(3) அவசர கால மருத்துவ ஊர்திச் சேவையை அனைத்து வட்டாரங்களிலும் படிப்படியாகச் செயற்படுத்துதல்:

தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் தொலைபேசி மற்றும் நவீன முதலுதவி வசதிகளுடன்கூடிய அவசர கால மருத்துவ ஊர்திகள் (ஆம்புலன்ஸ்) 15 மாவட்டங்களில் உள்ள 187 வட்டாரங்களில் 2006-07 ஆம் ஆண்டில் வழங்கப்படவுள்ளது. இத்தகைய அவசர ஊர்திச் சேவை பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டப் பேறுகால அவசரச் சேவைகளுக்கும், மற்ற அவசர மருத்துவச் சேவைகளுக்கும் பயன்படுத்தப்படும். வட்டாரங்களில் முக்கியமான இடங்களில் இத்தகைய ஊர்திகள் நிறுத்தி வைக்கப்படும். மற்ற மாவட்டங்களில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், கட்டம்-2-ன்கீழ் அவசர கால ஊர்திச் சேவை அளிக்கப்படும். அதுவரை ஏற்கெனவே உள்ள ஊர்திகளின் மூலம் இந்தச் சேவை வழங்கப்படும்.

(4) அனைத்து மாவட்டங்களிலும் 24 மணி நேர மருத்துவம் மற்றும் மேல் சிகிச்சைப் பரிந்துரைக் கட்டுப்பாட்டு அறைகளை ஏற்படுத்துதல்:

பொது மக்கள் அவசர கால ஊர்திகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் 24 மணி நேர மருத்துவம் மற்றும் மேல் சிகிச்சைப் பரிந்துரைக் கட்டுப்பாட்டு அறைகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாட்டு அறைகள் தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம், முதல் நிலை, இரண்டாம் நிலைச் சேவைகள் அளிக்கும் வட்டம், மாவட்டம், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு மருத்துவமனைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் அமைக்கப்படும். அவசர கால ஊர்திச் சேவை தேவைப்படும் மக்கள் மருத்துவக் கட்டுப்பாட்டு அறையைத் தொலைபேசி இணைப்புமூலம் தொடர்புகொள்ளலாம். கட்டுப்பாட்டு மையம் உடனடியாக அவசர நிலை நோயாளிகளை அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யும். அதே சமயம் இந்தக் கட்டுப்பாட்டு மையம் நோயாளிக்கு உடனடியாக சிகிச்சையளிக்க முன்னேற்பாட்டுடன் இருக்க, குறிப்பிட்ட மருத்துவமனைக்கும் தகவல் அளிக்கும். விருப்பமான மருத்துவமனையை மக்களே தேர்ந்தெடுக்கலாம். இதன்படி இந்தக் கட்டுப்பாட்டு மையம் பரிந்துரைக் கட்டுப்பாட்டு அறையாகச் செயல்படும். பொது மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில், அல்லது அவசர

006 ஆகஸ்ட் 17]

நாயாளிக்குப் பயன்படும் வகையில் இந்தக் கட்டுப்பாட்டறை ருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள் மற்றும் இரத்த தானம் செய்பவர்கள் ற்றிய விவரங்களைக் கொண்டிருக்கும். பொது மக்கள் தொலைபேசி ணைப்புமூலமாக மருத்துவ மற்றும் பரிந்துரைக் கட்டுப்பாட்டறையைத் தாடர்புகொள்ள ஏதுவாக 24 மணி நேரமும் இயங்கும். நான்கு இலக்கக் ட்டணம் இல்லாத உதவும் தொலைபேசி எண் இந்திய அரசிடம் ருந்து பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

0.2.2. சமுதாயத்திற்கு மருத்துவச் சேவைகளை வீட்டிற்கு அருகிலேயே கிடைக்கச் செய்தல்:

) கிராமப்புறங்களில் நடமாடும் மருத்துவக் குழு சுகாதார சேவை அளித்தல்:

கிராமப்புறங்களில் முறைப்படுத்தப்பட்ட நடமாடும் மருத்துவக் குழு லமாக சுகாதார சேவை அளிக்கும் திட்டத்தின்மூலமாக வருமுன் ாப்போம் திட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டு ழுவதும் குறிப்பிட்ட தினத்தில் கிராமங்களுக்குச் சென்று மருத்துவச் சவை அளிக்கத் திட்டம் வகுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 885 ரம்ப சுகாதார நிலையங்களில், அர்ப்பணிப்பு மனப்பான்மை உடைய ருத்துவர் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களைக் கொண்ட ருத்துவக் குழு அமைக்கப்படும். ஆய்வகச் சேவையுடன்கூடிய மருத்துவச் சவைப் பணிகளைக் கிராம மக்கள் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் த்திட்டத்தின் ஆண்டு அட்டவணை முன்கூட்டியே தெரிவிக்கப்படும். டமாடும் மருத்துவக் குழு கிராமங்களுக்குச் செல்வதன்மூலம் அனைத்துப் பறுசார் சுகாதார சேவைகள் மக்களின் வீட்டின் அருகிலேயே கிடைக்கப் பறும். இத்திட்டத்தின்மூலமாக முதியோர்கள், ஊனமுற்றோர், பண்கள் மற்றும் புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் அனைவரும் பெரிதும் யன் பெறுவார்கள். மருத்துவர் தலைமையில் உள்ள குழு ராமப்புறங்களில் பின்வரும் சேவைகளை அளிக்க உள்ளது:

1. சிறு நோய்களுக்கான சிகிச்சைகள் அளித்தல்
2. கர்ப்ப காலக் கவனிப்பு
3. பேறுகாலப் பின் கவனிப்புச் சேவை, இளஞ்சிசுக்களுக்கான சிகிச்சை மற்றும் கவனிப்பு
4. குடும்ப நலச் சேவை
5. இனப்பெருக்கப் பாதைத் தொற்று நோய்கள் மற்றும் பால்வினை நோய்களுக்கு சிகிச்சை அளித்தல்.

[2006 ஆகஸ்ட் 17

6. நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோய் சிகிச்சை
7. காச நோய், தொழுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை
8. ஆய்வகப் பணிகள்
9. ஊட்டச் சத்து ஆலோசனை
10. சுகாதாரக் கல்வி
11. குடிநீர், துப்புரவு, சுகாதாரம் சம்பந்தமாக உள்ள பிரச்சனைகளைக் கண்டறிந்து, மக்களுடன் இணைந்து சரி செய்தல்.

(2) கிராமப்புறங்களில் மருத்துவச் சேவையளிக்கும் திட்டத்தில் பல் மருத்துவச் சேவை கொண்டு வருதல்:

அரசுப் பணியிலுள்ள பல் மருத்துவர்கள் இருக்கும் இடங்களில், அவர்களையும் கிராமப்புற மருத்துவச் சேவையளிக்கும் திட்டத்தில் ஈடுபடுத்தி, மக்களுக்கு நீண்ட நாட்களாகத் தேவைப்படும் இச்சேவையை உள்ளூரிலேயே கிடைக்கும்படிச் செய்தல்.

10.2.3. பொதுச் சுகாதார சேவையைப் பலப்படுத்துதல்:

(1) குடும்ப நல மையம்:

குடும்ப நல மையம் 385 அவசரப் பேறுகால மற்றும் இளஞ்சிசுக்களுக்கான அடிப்படை சிகிச்சை மையங்களில் ஏற்படுத்தப்பட உள்ளது. இந்தக் குடும்ப நல மையங்கள் வாரந்தோறும் திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் செயல்படும். இந்த மருத்துவச் சேவை மையங்களில் ஆய்வகப் பணிகள், பால்வினைத் தொற்றுநோய்/இனப்பெருக்கப் பாதைத் தொற்று நோய்களைக் கண்டறிந்து சிகிச்சையளித்தல், தன்னார்வக் கலந்தாலோசனைகள் மற்றும் எச்.ஐ.வி. நோய்களுக்கான பரிசோதனைகள் ஆகியவை அளிக்கப்படும். தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்துடன் இணைந்து இந்த மையங்கள் செயல்படும்.

(2) ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வகப் பணிகளைப் பலப்படுத்துதல்:

நவீன ஆய்வக உபகரணங்கள் அளிப்பதன்மூலம் ஆய்வகப் பணிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பலப்படுத்தப்படும். தேவையின் அடிப்படையில், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செமி ஆட்டோ அனலைசர் எனும் நவீன ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட உள்ளன.

2006 ஆகஸ்ட் 17]

(3) தடையில்லாமல் அறுவை அரங்குகள் செயல்பட உறுதி செய்தல்:

ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள அறுவை அரங்குகளின் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்காக, பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் குடும்ப நல அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளும் 217 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் அறுவை அரங்கு சில்லறைச் செலவினமாக மாதம் ரூ.1,000/- வழங்கப்படும்.

(4) இந்திய மருத்துவ முறை சிகிச்சை வசதிகளைப் பரவலாக்குதல்:

பாரம்பரியமிக்க இந்திய மருத்துவ முறைகள் மக்களிடையே இன்றும் புகழ் பெற்றுள்ளன. இந்திய முறை மருந்துகளைப் பயன்படுத்துதலுக்குப் புத்துயிர் அளித்து நடைமுறைப்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தின்மூலம் தற்பொழுதும் இந்த முறை மருத்துவத்தை விரும்பியேற்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் சுகாதாரத் துறையைச் சேர்ந்த பெண் சுகாதாரக் களப் பணியாளர்களுக்கு இந்த வகை மருந்துகளைப் பயன்படுத்தும் முறைமை பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. துணை சுகாதார மையங்களுக்கு 50 வகை இந்திய முறை மருந்துகளடங்கிய மருத்துவப் பெட்டிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதில் இரத்த சோகை, மகப்பேறு மற்றும் குழந்தை நல சிகிச்சைக்கு இந்திய முறை மருந்துகளை உபயோகப்படுத்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கென 2006-07 ஆம் ஆண்டிற்கு ரூ.24.31 கோடி நிதி ஒதுக்கப்படவுள்ளது.

(5) பேறுகாலத்தில் பிரசவ அறையில் பெண் உறவினர் அல்லது தோழி உடனிருக்க அனுமதித்தல்:

விரும்பும் உறவினர் அல்லது பெண் தோழியைப் பிரசவ அறையில் உடனிருக்க அனுமதிப்பதால் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு ஆதரவும், மன உறுதியும் கிடைக்கிறது.

(6) கட்டமைப்பு-கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் வசதியை மேம்படுத்துதல்:

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களின் வசதிகள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அமைப்புரீதியான நடவடிக்கைகள்மூலம் அவற்றின் வசதிகள் மேம்படுத்தப்படும். அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களையும், துணை சுகாதார நிலையங்களையும் தூய்மையாகவும், சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பசுமையாகவும் வைத்திருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 17

(7) ஆண்டு முழுவதும் எல்லா இரத்த வகைகளும் அனைத்து இரத்த வங்கிகளிலும் கிடைக்கச் செய்தல்:

இரத்த வங்கிகளில் எல்லா இரத்த வகைகளும் தயார் நிலையில் இருப்பது பல உயிர்களைக் காப்பாற்ற உதவியாக இருக்கும். தற்பொழுது சில முக்கிய தினங்களில் மட்டும் இரத்தம் சேகரிக்கப்படுகிறது. செஞ்சிலுவைச் சங்கம், அரசு இரத்த வங்கிகள், பொது மக்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து இந்த இரத்த தான முகாம்களைத் தொடர்ந்து நடத்தினால் எல்லா இரத்த வகைகளும் இரத்த வங்கிகளில் கிடைக்கும். இரத்த தானம் அளிக்க விரும்புபவர்களின் பட்டியல் பகுதி வாரியாகத் தயாரிக்கப்பட்டு, இணையதளத்தில் வெளியிடப்படும். மேலும் இந்தப் பட்டியல் அவசர கால மருத்துவக் கட்டுப்பாட்டு அறையிலும் இருக்கும். இதன்மூலம் அவசரத் தேவைக்கு உடனடியாக இரத்த தானம் பெற வழி செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த 2006-07 ஆம் ஆண்டிற்கான உத்தேசச் செலவினம் ரூ.13.44 இலட்சம் ஆகும். 24 மணி நேர மகப்பேறு சேவைகள், அடிப்படை அவசரப் பேறுகாலம் மற்றும் இளஞ்சிசு கவனிப்பு மையச் சேவைகள், மருத்துவ வசதியுடன்கூடிய அவசர கால ஊர்தி மற்றும் மதிப்பூதிய அடிப்படையில் தனியார் பேறுகால மருத்துவர் மற்றும் மயக்க மருத்துவர்களை அவசர அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்துவதன் மூலம் சுகாதார சேவைகள் மேம்படுத்தப்படுகின்றன.

10.2.4. நலிவடைந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள்:

விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலமாகவோ அல்லது சேவைகளை எளிதில் கிடைக்கச் செய்வதன்மூல்மாகவோ மட்டும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பெண்களின் சுகாதாரத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வது கடினம். கீழ்க்கண்ட திட்டங்களின்மூலம் தாய்மார்களின் ஊட்டச் சத்து நிலை மற்றும் உடல் நலம் மேம்படுத்தப்படும்:

(1) நிலையங்களில் நடக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பெண்களின் பிரசவங்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்:

நகர்ப்புறங்களில் வாழும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு மருத்துவமனைகளில் நடக்கும் பிரசவத்திற்கு ரூ.600/-ம், வீட்டில் நடக்கும் பிரசவங்களுக்கு ரூ.500/-ம், கிராமப்புறங்களில் வாழும் வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு மருத்துவமனைகளில் நடக்கும் பிரசவத்திற்கு ரூ.700/-ம், வீட்டில் நடக்கும் பிரசவங்களுக்கு ரூ.500/-ம் மைய அரசின் ஜனனி சுரக்ஷா யோஜனா

2006 ஆகஸ்ட் 17]

திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த 2006-07 ஆம் ஆண்டிற்கான உத்தேசச் செலவினம் ரூ.14.50 கோடி ஆகும்.

(2) ஏழை கருவுற்ற பெண்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த உதவுதல்:

மைய அரசின் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின்மூலம் வழங்கப்படும் தொகை தவிர, ஏழை கருவுற்ற பெண்கள் ஆரோக்கியமான உணவு உண்ணவும், பிரசவ காலக் கட்டத்தில் வருமான இழப்பைத் தடுக்கவும், கருவுற்ற 7 ஆம் மாதம் முதல் ஆறு மாத காலத்திற்கு ரூ.1,000/- வீதம் வழங்கப்பட உள்ளது (பிரசவத்திற்கு முன் 3 மாதம், பிரசவித்த பின் 3 மாதம்). இத்திட்டம் முற்றிலும் தமிழக அரசின் உதவியுடன் செயல்பட உள்ளது. இத்திட்டத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செயயப்பட்டுள்ளது.

10.2.5. ஆண்-பெண் விகிதத்தை மேம்படுத்துதல்:

ஸ்கேன் மையத் தணிக்கை:

கருவிலிருக்கும் குழந்தையை ஆணா, பெண்ணா எனக் கண்டறிந்து, பெண் கருவைக் கருக்கலைப்புச் செய்வதைத் தடுப்பதற்காகத் தமிழகம் முழுவதும் ஸ்கேன் மையங்களில் தணிக்கை மேற்கொள்ளப்படும். இந்த ஸ்கேன் மையங்கள் ஆய்வு செய்யப்பட்டு, உண்மை அறியப்பட்டு, தவறு செய்யும் ஸ்கேன் மையங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ந்து இந்தத் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் கருக்கொலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த 2006-07 ஆம் ஆண்டிற்கான உத்தேசச் செலவினம் ரூ.59 இலட்சம் ஆகும்.

10.2.6. சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல்:

(1) அளிக்கப்படும் சேவைகளின் பட்டியலை வெளியிடுதல்:

ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அடிப்படை அவசரப் பேறுகாலம் மற்றும் இளஞ்சிசு கவனிப்பு மையங்கள் ஆகியவற்றில் அளிக்கப்படும் சேவைகள் என்னென்ன என்பது பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும். இதன்மூலம் பொது மக்கள் மருத்துவ வசதிகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும், மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் பொறுப்புடன் செயலாற்றவும் முடியும்.

(2) சேவைத் தரத்தை மேம்படுத்துதல்:

இந்திய பொதுச் சுகாதார சேவைத் தரத்திற்கு இணையாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் தரமான நலச் சேவைகளை அளித்தல்.

(3) அவசர சிகிச்சைகளுக்கான மூல வரைவுகள் தயாரித்தல்:

அனைத்து மையங்களிலும் சீரான அவசர சிகிச்சை சேவை கிடைக்க மூல வரைவுகள் தயாரிக்கப்பட்டு, விநியோகிக்கப்படும்.

(4) திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்:

நவீன தொலைத் தொடர்பு வசதிகளைப் பயன்படுத்தி திட்டத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்து, பகுப்பாய்வு செய்தல்.

10.2.7. கிராமங்களில் உள்ள, குறிப்பாக அதிகக் கவனம் செலுத்த வேண்டிய பிரிவினர்களின் சுகாதாரத் தேவைகளை இணைந்து தீர்வு காணுதல்:

பாதுகாப்பான குடிநீர் வழங்குதல், சுற்றுப்புறச் சுகாதாரம், சத்துணவு போன்ற அடிப்படைச் சேவைகள் பொது மக்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்வது அரசின் பொறுப்பாக இருந்தாலும், சரிசமமான, சிக்கனமான, ஆற்றல் வாய்ந்த உயர்ந்த தரத்துடன் எளிதில் கிடைக்கக்கூடிய இந்தச் சேவைகள் மக்களின் ஒத்துழைப்பு இல்லாமலும், சுகாதார சேவையை நாடும் மனப்பான்மையை ஏற்படுத்தாமலும் சிறந்த தரத்தை அடைவது கடினமாகும். நமது சுகாதாரம் நம் கையில் உள்ளது. சுகாதாரத் தரத்தை மேம்படுத்த இணைந்து செயலாற்றுவது மிகவும் அவசியம்.

(1) சுகாதார சேவைகளை நாடுதல் – நடத்தை மாற்றல் தொடர்பு கல்வி:

சுகாதாரத் தரத்தை மேம்படுத்த, சம்பந்தப்பட்ட பிரிவினர், பொது மக்கள், கிராம சுகாதாரக் குழுக்கள் மற்றும் பஞ்சாயத்து இணைந்து செயல்படுவது இன்றியமையாததாகும். தகவல், கல்வி, தகவல் தொடர்புச் சேவைகளும், பயிற்சியும் ஒன்றாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்படுவதனால் சமூகத்தினரிடையே சுகாதார சேவைகளை நாடுவதில் முன்னேற்றமும், நடத்தை மாற்றமும் ஏற்படும். இதன்மூலம் பொது மக்களுக்குச் சுகாதார சேவைகள் எளிதில் சென்றடையும். இச் செயல்பாடுகளின்மூலம் சுகாதாரப் பணியாளர்களும், சமுதாயத்தினரும்

இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. ஏனெனில், இந்த இரு பிரிவினரும் இணைந்து செயல்பட்டால்தான் சுகாதார நிலையை மேம்படுத்தவும், சுகாதாரத் துறையில் மாநிலத்தின் குறிக்கோளை அடையவும் முடியும்.

(2) அனைத்துத் துணை சுகாதார நிலையங்களிலும் கிராம சுகாதாரக் குழுக்களை ஏற்படுத்துதல்:

இந்தக் குழுவின் பங்கேற்புடன் அனைத்துச் சுகாதார சேவைகளும் திட்டமிட்டு, செயல்படுத்தப்படும்.

(3) மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவப் பயனாளிகள் நலச் சேவை குழு (ரோகி கல்யாண் சமிதி) ஏற்படுத்துதல்:

இந்தக் குழுவில் பிற உறுப்பினர்களுடன் கிராம சுகாதாரக் குழு உறுப்பினர்களும் இருப்பார்கள். இக்குழு, நோயாளிகள் தரமான சேவையைப் பெற வழிவகை செய்யும். இது மட்டுமல்லாமல், இக் குழு திறம்படச் சேவைகள் செய்வதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும். சுகாதார நிலையங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவும், கழிவுகளை அகற்றவும் உதவி புரியும்.

(4) மாவட்ட சுகாதார நலச் சங்கம்:

மாவட்ட சுகாதார நலச் சங்கம் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற சுகாதாரத் திட்டங்கள் மற்றும் குடும்ப நல சேவைகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதற்கு இச்சங்கம் பொறுப்பாகும். மேலும் மாவட்ட நலத் திட்டங்களை வகுப்பதற்கும், பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து பணிபுரியவும், சுகாதாரக் குறிக்கோள்களை அடையவும் முனைப்புடன் செயல்படும்.

(5) மாநில சுகாதார நலச் சங்கம்

இந்தச் சங்கம் மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் தவிர பிற சுகாதாரச் சங்கங்களை இணைத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சங்கம் மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான அனைத்துச் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் திட்டங்களில் உள்ள வாய்ப்புகளை ஒருங்கிணைப்பதன்மூலம் மேம்படுத்தப்பட்ட சுகாதார நலச் சேவைகள் மக்களுக்கு எளிதில் கிடைக்க வழி செய்கிறது.

[2006 ஆகஸ்ட் 17

அத்தியாயம்–11

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம்

11.1. தமிழ்நாட்டில் எச்.ஐ.வி./எய்ட்ஸ்–ன் நிலை:

1986 ஆம் ஆண்டு இந்தியாவில், தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக எச்.ஐ.வி. தொற்று கண்டறியப்பட்டது. தமிழ்நாடு அரசு மிகுந்த கவனத்துடனும், முன்னெச்சரிக்கையுடனும், எச்.ஐ.வி./எய்ட்ஸை எதிர்நோக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்தது. தமிழ்நாட்டில் 3.4 இலட்சம் மக்கள் எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்வதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 62,570 பேர் எய்ட்ஸ் நோயாளிகள் எனக் கண்டறியப்பட்டுள்ளனர். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பிலும், எச்.ஐ.வி-யால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பும், ஆதரவும் தருவது உள்ளிட்ட பல்முனை அணுகுமுறைகளைப் பின்பற்றி வந்துள்ளது. தமிழ்நாடு அரசு தற்போது நடைமுறையில் உள்ள சுகாதார நலத் திட்டங்களின் ஓர் அங்கமாக எச்.ஐ.வி./எய்ட்ஸ் திட்டங்களையும் ஒருங்கிணைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

11.2. எச்.ஐ.வி. தொற்றின் தற்போதைய நிலை:

11.2.1. எச்.ஐ.வி. தொற்றின் நிலையைக் கணக்கிட கருவுற்ற தாய்மார்கள், பால்வினை நோய் உள்ளோர், ஊசிமூலம் போதைப் பொருட்கள் பயன்படுத்துவோர், ஓரினச் சேர்க்கையாளர்கள், பெண் பாலியல் தொழிலாளர்கள், காச நோயாளிகள் ஆகியோரிடையே ஆண்டுதோறும் கண்காணிப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது. இந்தக் கணக்கெடுப்புமூலம் எச்.ஐ.வி. தொற்றின் நிலை, அது பரவியுள்ள விதம் குறித்த விவரங்கள் அறியப்படுகின்றன. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் தனது திட்டங்களை மேற்கொள்ளவும், செயல்படுத்தவும இந்தத் தகவல்கள் அவசியத் தேவையாயுள்ளன.

11.2.2. 2005 ஆம் ஆண்டு ஜூலை முதல் செப்டம்பர் வரை தமிழ்நாடு முழுவதும் 96 இடங்களில் இந்தக் கணக்கெடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பில் எச்.ஐ.வி. தொற்று நிலை கருவுற்ற தாய்மார்களிடையே 2001-ல் 1.13 சதவிகிதம் அளவில் உச்சமாக இருந்ததையும், 2005-ல் இது 0.5 சதவிகிதமாகக் குறைந்துள்ளதையும் கீழ்க்காணும் வரைபடம் எடுத்துக் காட்டுகிறது:

2006 ஆகஸ்ட் 17]

தமிழ்நாட்டில் கருவுற்ற தாய்மார்களிடையே எச்.ஐ.வி. தொற்று நிலை (ஆண்டுவாரியான சதவீதம்)



பிற குழுவினரிடையே எச்.ஐ.வி. பரவியுள்ள நிலை

வ. எண்	குழுக்கள்	பரவியுள்ள அளவு %
1.	பால்வினை நோயாளிகள்	9.20
2.	ஊசிமூலம் போதைப் பொருட்கள் பயன்படுத்துவோர்	18.00
3.	ஓரினச் சேர்க்கையாளர்கள்	6.20
4.	பெண் பாலியல் தொழிலாளர்கள்	4.80
5.	காச நோயாளிகள்	6.29

[2006 ஆகஸ்ட் 17

11.3. எச்.ஐ.வி./எய்ட்ஸ்–ஐ எதிர்கொள்வதில் தமிழ்நாட்டின் செயல்பாடுகள்:

எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு மிக விரிவான திட்டங்களை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் அத்தகைய திட்டங்கள் பின்வருவன:-

1. தடுப்பு நடவடிக்கைகள்
2. மருத்துவச் சேவைகள்
3. பாதுகாப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள்
4. ஆற்றல் மேம்பாட்டு நடவடிக்கைகள்

11.3.1. தடுப்பு நடவடிக்கைகள்:

எச்.ஐ.வி./எய்ட்ஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் சிறந்த முறை, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். சிறந்த தடுப்பு நடவடிக்கைத் திட்டமானது, எச்.ஐ.வி. தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதுடன், எதிர்காலத்தில் சுகாதார நிலையங்களின் சுமையினைக் குறைக்கவும் வழிவகுக்கிறது. எச்.ஐ.வி. தொற்று பரவுவதைத் தடுக்க, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது:

1. ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனைச் சேவைகள்
2. அதிக ஆபத்தை விளைவிக்கும் நடத்தை உடையோருக்கான இலக்கு சார்ந்த குறுக்கீட்டுத் திட்டங்கள்
3. ஆணுறைப் பயன்பாட்டை ஊக்குவித்தல்
4. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
5. பாதுகாப்பான இரத்தம் கிடைக்கச் செய்தல்
6. இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
   (அ) பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம்
   (ஆ) பள்ளி செல்லா இளைஞர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம்
   (இ) செஞ்சுருள் சங்கத் திட்டம்
7. [illegible] விழிப்புணர்வுத் திட்டம்

2006 ஆகஸ்ட் 17]

11.3.1.1. ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனைச் சேவைகள்:

ஆற்றுப்படுத்துதல் மற்றும் இரத்தப் பரிசோதனை செய்ய ஓரே இடத்தில் அனைத்துச் சேவைகளும் கிடைக்குமாறு ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைந்த சேவைமூலம், பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்கு எச்.ஐ.வி/எய்ட்ஸ் பரவுவதைத் தடுத்தல், தன்னார்வ ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களை நிறுவுதல், பாதுகாப்பான இரத்தம் கிடைக்கச் செய்தல், பாலியல் தொற்று சிகிச்சை, கூட்டு மருந்து சிகிச்சை, எச்.ஐ.வி. மற்றும் காச நோய் சிகிச்சை ஆகிய அனைத்தும் ஒரே கூரையின்கீழ் கிடைக்கிறது. கருவுற்ற தாய்மார்களுக்கு ஒரே இடத்திலேயே பல்வேறு பரிசோதனைகளும் செய்துகொள்ளும் முறை பின்பற்றப்படுகிறது. பொது மக்கள், எச்.ஐ.வி./எய்ட்ஸ் குறித்த தங்களது நிலையைத் தெரிந்துகொண்டு பாதுகாத்துக்கொள்ளவும், அரவணைப்பு மற்றும் ஆதரவுச் சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ளவும் ஊக்குவிக்கப் படுகிறார்கள். எச்.ஐ.வி. சம்பந்தமான அனைத்துச் சேவைகளையும் தொடர்ச்சியான முறையில் பெற நுழைவாயிலே இந்த ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் ஆகும். பொது மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள் கிடைக்கும் வகையில் 655 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், மாநகராட்சி சுகாதார மையங்கள், சமுதாய மருத்துவமனைகள் மற்றும் 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மேலும் 75 புதிய ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் 41 நகராட்சி மருத்துவமனைகளிலும், 6 தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும், 16 தனியார் மருத்துவமனைகளிலும், 7 இரயில் நிலையங்களிலும், 5 பேருந்து நிலையங்களிலும் அமைக்கப்படும். பொது மக்களுக்குச் சிறந்த சேவை கிடைப்பதற்காக, தமிழ்நாட்டில் தர உறுதித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிலிருந்து சென்னை மருத்துவக் கல்லூரியின் துணையுடன் தர உறுதித் திட்டம் ஆண்டுதோறும் 2 முறை செயல்படுத்தப்படும். எல்லா மருத்துவக் கல்லூரிகளும் இத்திட்டத்தில் இணைந்து செயல்படும். இந்தத் தர உறுதித் திட்டத்தின்கீழ் சுகாதாரத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க 14.97 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 17

11.3.1.2. அதிக ஆபத்தை விளைவிக்கும் நடத்தை உடையோருக்கான இலக்கு சார்ந்த குறுக்கீட்டுத் திட்டங்கள்:

எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகும் அதிக ஆபத்தை விளைவிக்கும் நடத்தை உடையோர் பலியாகாமல் தவிர்க்கவும், அவர்கள் பிறருக்குத் தொற்றைப் பரப்பாமல் தடுக்கவும் செய்வதே இத்திட்டத்தின் நோக்கம். எச்.ஐ.வி. தொற்றுக்கு எளிதில் ஆளாகக்கூடிய சூழலில் உள்ளவர்களுக்கு உதவி புரிய தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சமுதாய அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. மக்களிடையே எச்.ஐ.வி./எய்ட்ஸைப் பரப்பும் நிலையில் உள்ள பெண் பாலியல் தொழிலாளர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள், ஊசிமூலம் போதை மருந்து பயன்படுத்துவோர் ஆகியோருக்காக 22 மாவட்டங்களில், 53 இலக்கு சார்ந்த குறுக்கீட்டுத் திட்டங்களை தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் இலக்கு சார்ந்த குறுக்கீட்டுத் திட்டங்கள், 2005–2006

வ. எண்	அதிக ஆபத்தை விளைவிக்கும் நடத்தை உடையோர்	திட்டங்களின் எண்ணிக்கை
அடிப்படைக் குழுக்கள்		
1.	பாலியல் தொழிலாளர்கள்	11
2.	ஓரினச் சேர்க்கையாளர்கள்	3
3.	ஊசிமூலம் போதை மருந்து பயன்படுத்துவோர்	1
இடைக் குழுக்கள்		
4.	ஓட்டுநர்கள்	10
5.	புலம் பெயரும் தொழிலாளர்கள்	12
6.	தொழிற்சாலைப் பணியாளர்கள்	12
7.	கைதிகள்	2
8.	பழங்குடியினர்	2
	மொத்தம்	53

2006 ஆகஸ்ட் 17]

11.3.1.3. ஆணுறைப் பயன்பாட்டை ஊக்குவித்தல்:

அரசு சுகாதார நிலையங்கள், பால்வினை நோய் சிகிச்சை மையங்கள், அரசு சாரா நிறுவனங்கள், சமுதாய அமைப்புகள் ஆகியவைமூலம் எச்.ஐ.வி./எய்ட்ஸிற்கு எளிதாக ஆளாகக்கூடிய சூழலில் உள்ளோர் மற்றும் அவர்கள்மூலம் தொற்றுக்கு ஆளாகக்கூடிய மக்களுக்கு ஆணுறைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அரசு சாரா அமைப்புகள், சமுதாய அமைப்புகள் மற்றும் 28.000 நியாய விலைக் கடைகள்மூலம் ஆணுறைகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

11.3.1.4. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்:

எச்.ஐ.வி. தொற்று பற்றிய விவரங்களை அறிந்து, தங்களை வலுப்படுத்திக்கொள்ளவும், அந்நோயிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மிக இன்றியமையாதவை. எச்.ஐ.வி./எய்ட்ஸ் பரவுவதைத் தடுக்கும் ஒரே சமுதாயத் தடுப்பு மருந்து விழிப்புணர்வாகும். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்புச் செயல்பாடுகள் வாயிலாக, சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரிடமும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, தேவையான நடத்தை மாற்றத்தை சமுதாயத்தில் உருவாக்கி, எய்ட்ஸில்லாத தமிழகம் காணத் திட்டமிட்டு முழு வீச்சுடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு உத்திகள், சமுதாயத்திலுள்ள அனைத்துத் தரப்பினருக்கும், அதாவது மகளிர் குழுக்கள், அதிக ஆபத்தை விளைவிக்கும் நடத்தை உடையோர், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்குச் சரியான முறையில் சென்றடையும் விதத்தில் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு அணுகுமுறைகள் உயர் கல்வி நிலையங்களில் உள்ள இளைஞர்களுக்கும், பள்ளி சாரா இளைஞர்களுக்கும், பள்ளி செல்லும் வளர் இளம் பருவத்தினருக்கும் எனத் தனித் திட்டங்களை வகுத்து, அதில் அதிகக் கவனமும் செலுத்தி வருகிறது. பொதுவான அறிவுறுத்தலை விடுத்து, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரிடையேயும் நேர்முகமாகச் செய்திகளை எடுத்துச் சொல்லவும், அவர்கள் நடத்தையில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வரவும், எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்பவர்களைப் பற்றியுள்ள தவறான கருத்துகளையும், வெறுப்புணர்வையும், தயக்கங்களையும் களையவும்,

[2006 ஆகஸ்ட் 17

சமுதாயத்தில் அவர்களுக்கான மனித உரிமையைக் காப்பாற்றவும் செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு செய்தி, கல்வி மற்றும் மக்கள் தகவல் தொடர்புச் செயல்பாடுகளுக்காக 4.00 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

11.3.1.5. பாதுகாப்பான இரத்தம் கிடைக்கச் செய்தல்:

எச்.ஐ.வி. தொற்று, இரத்தம் மற்றும் இரத்தக் கூறுகளின் வழியே 2 சதவிகிதம் பரவுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இரத்த சம்பந்தமான தொற்று பரவாமல் இருப்பதற்கான ஒரே வழி, 24 மணி நேரமும், பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பான இரத்தம் கிடைக்க வழி செய்வதேயாகும். தமிழ்நாடு அரசு அனைவருக்கும் பாதுகாப்பான இரத்தம் கிடைக்க, கீழ்க்கண்ட வழிமுறைகளை வகுத்துள்ளது:-

(அ) தன்னார்வ இரத்த தானத்தை அதிகப்படுத்துதல்:- இந்த ஆண்டு, கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்வேறு விழிப்புணர்வு முகாம்களை வழியாகவும் தன்னார்வ இரத்த தானத்தை அதிகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) மாநிலம் முழுவதும் 24 மணி நேர இரத்த வங்கிகளை அமைக்கும் திட்டம்:- தமிழ்நாட்டில் தற்போது 84 அரசு இரத்த வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு ஏற்கெனவே உள்ள 32 இரத்த சேமிப்பு மையங்களுடன் கூடுதலாக 20 இரத்த சேமிப்பு மையங்களை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) ஒருங்கிணைந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலை உறுதிப்படுத்துதல்:- அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் எல்லா மருத்துவமனைகளிலும் உள்ள மருத்துவப் பணியாளர்களுக்கு எச்.ஐ.வி. தொற்றிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கும் வண்ணம் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள எல்லா சுகாதார நிலையங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் அங்கீகரித்த பயிற்சித் திட்டத்தின் அடிப்படையில் அனைத்து மருத்துவமனைகளிலும் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நடத்தப்படும்.

11.3.1.6. இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்:

யூ.என்.எய்ட்ஸின் மதிப்பீட்டின்படி, புதிய எச்.ஐ.வி. தொற்று 15 வயதிலிருந்து 24 வயதுள்ளோருக்குப் பரவும் வாய்ப்பு 50 சதவிகிதமாக உயர்ந்துள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. சரியான தகவலும், நோய்

)06 ஆகஸ்ட் 17]

ற்றிய தகுந்த விளக்கங்களும் தெரிய வராததால்தான், இளைஞர்கள்
|திக ஆபத்தான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, நோய்த் தொற்றுக்கு
|ளாகும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ்
்டுப்பாட்டுச் சங்கம் இளைஞர்களுக்குச் சரியான தகவல்களை அளித்து,
ங்களைத் தாங்களே நோய்த் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள,
ளைஞர்களுக்காக 3 திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

ு) பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம்:

அனைத்து அரசுப் பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் - பெறாத
யர்நிலை, மேல்நிலை மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பயிலும்
மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ்
ற்றிய விழிப்புணர்வு ஊட்டும் வகையில், பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித்
ட்டம், ஆசிரியர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம்மூலம்
)97 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. வளர் இளம்
ருவத்தினரிடையே எச்.ஐ.வி./எய்ட்ஸ், பால்வினை நோய்கள் பற்றிய
|றிவை மேம்படுத்துதல், தன்னம்பிக்கையை அவர்களிடையே
ளர்த்தல், பாலியல் குறித்த ஆரோக்கியமான அணுகுமுறையை
மம்படுத்துதல் மற்றும் எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழ்வோருடன்
|ன்புடனும், ஆதரவுடனும் இருக்கச் செய்தல் போன்றவையே இந்தத்
ட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தின்மூலம்
மிழகத்தில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் 2 ஆசிரியர்கள், 2
ன்மாதிரிக் கல்வியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப்
யிற்சி அளிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு, 9,244 பள்ளிகளில்
|த்திட்டம் செயல்படுத்தப்பட்டு, அனைத்து ஆசிரியர் பயிற்சி
றுவனத்தைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு (58 முதல் நிலை ஆதார
ல்லுநர்கள், 380 ஆதார வல்லுநர்கள்) பயிற்சி அளிக்கப்பட்டது.
மிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் கடந்த ஆண்டு
ற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில், குழந்தைகளையும்
சன்றடையுமாறு பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம் இவ்வாண்டு
மலும் விரிவுபடுத்தப்படும். இந்த ஆண்டு இதற்காக ரூ.5 கோடி
துக்கப்பட்டுள்ளது.

ு) பள்ளி செல்லாத இளைஞர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம்:

பள்ளிகளில் முறைப்படி பயில முடியாத இளைஞர்களின்
லனுக்காக, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் சிறப்புத்
ட்டமொன்றைச் செயல்படுத்தி வருகின்றது. 2005-2006 ஆம் ஆண்டில்,
ாநில ஆதார மையம் மற்றும் மாவட்ட அறிவொளி இயக்கத்தின்

[2006 ஆகஸ்ட் 17

தொடர் கல்விப் பணியாளர்களுடன் இணைந்து 6 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும், இந்த ஆண்டு புதுக்கோட்டை, விருதுநகர், சிவகங்கை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், நாமக்கல், நீலகிரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 11 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

(இ) செஞ்சுருள் சங்கத் திட்டம்:

உயர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கான தன்னார்வத் திட்டமாக, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், செஞ்சுருள் சங்கங்களை அமைக்கும் பணியினைத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் உயர் கல்வித் துறை, இளைஞர் மேம்பாடு மற்றும் விளையாட்டுத் துறை, தொழிற்கல்வித் துறை மற்றும் ஐக்கிய அமெரிக்க நாட்டின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கல்லூரி மாணவர்களிடையே எச்.ஐ.வி./எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவதும், பாலியல் குறித்த அறிவை அதிகப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். மாணவர்களின் ஆற்றலை வளர்ப்பதன்மூலம் அவர்களது உளவியல்-சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், எச்.ஐ.வி./எய்ட்ஸ், பாலியல் தொற்று பற்றிய விரிவான, சரியான அறிவை அளித்தல், இவை குறித்து மற்றவர்களுக்குக் கல்வி அளிக்கப் பயிற்சியளித்தல் ஆகியவை இத்திட்டத்தின் பிற நோக்கங்களாகும். 461 கலை-அறிவியல் கல்லூரிகளிலும், 70 பொறியியல் கல்லூரிகளிலும், 150 தொழிற்கல்வி நிறுவனங்களிலுமாக மொத்தம் 681 செஞ்சுருள் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு அனைத்து சட்டக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள் மற்றும் ஏற்கெனவே இடம் பெறாத பொறியியல் மற்றும் கலை-அறிவியல் கல்லூரிகளிலுமாக, 1,000 செஞ்சுருள் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

11.3.1.7. கிராமப்புற மகளிருக்கான விழிப்புணர்வுத் திட்டம்:

கிராமப்புறத்தைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பாலியல் தொற்று குறித்த அறிவை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் மகளிர் குழுக்களுக்கான இலக்குக் குறுக்கீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. கிராமப்புற ஏழைப் பெண்கள் எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றித் தெரிந்துகொண்டு, எச்.ஐ.வி தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

2006 ஆகஸ்ட் 17]

வகையில், அவர்களது அறிவையும், ஆற்றலையும் மேம்படுத்துவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

11.3.2. மருத்துவச் சேவைகள்:

எச்.ஐ.வி. தடுப்பு மற்றும் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளானவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் மருத்துவச் சேவைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தற்போது தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் கீழ்க்காணும் மருத்துவச் சேவைகளை மேற்கொண்டுள்ளது:-

1. பால்வினை நோய் சிகிச்சைகள்
2. சந்தர்ப்பவாத நோய்களுக்கான சிகிச்சைகள்
3. கூட்டு மருந்து சிகிச்சைகள் (ஏ.ஆர்.டி.)
4. எச்.ஐ.வி.-காச நோய் இணைத் தொற்று சிகிச்சைகள்

11.3.2.1. பால்வினை நோய் சிகிச்சைகள்:

பால்வினை நோய் தொற்றுக்கான சிகிச்சை மையங்கள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் பால்வினை நோய்த் தொற்று உள்ளோருக்கு இலவசமாகப் பரிசோதனை, சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், இந்த மையங்களுக்கு மருந்துகள், உபகரணங்கள், கட்டுமான வசதிகள் மற்றும் செய்தி, கல்வி-தகவல் தொடர்புப் பொருள்கள் போன்றவற்றை அளித்து வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் 100 பால்வினை நோய்த் தொற்று சிகிச்சை மையங்களுக்கு உள்கட்டமைப்புகள், மனித வளம் (மருத்துவர்கள் மற்றும் ஆற்றுப்படுத்துநர்கள்) மற்றும் மருந்துகள் ஆகியவற்றை வழங்கத் திட்டமிட்டுள்ளது. மேலும், இவ்வாண்டு இந்த 100 மையங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் 5,000 தனியார் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார் பணியாளர்களுக்கும் பால்வினை நோய் சிகிச்சைக்கான சிறப்புப் பயிற்சி, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தால் அளிக்கப்படும். பால்வினை நோய் சிகிச்சை

மையங்களின் மேம்பாட்டுப் பணிகளுக்காகத் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் ரூ.205 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

11.3.2.2. சந்தர்ப்பவாத நோய்களுக்கான சிகிச்சைகள்:

எச்.ஐ.வி. தொற்றுள்ளோர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால், அவர்களைச் சந்தர்ப்பவாத நோய்கள் எளிதாகத் தொற்றுகின்றன. இந்த நோயாளிகளுக்குச் சரியான நேரத்தில் அளிக்கப்படும் முறையான சிகிச்சை, அவர்களது ஆரோக்கியத்தை வலுப்படுத்தும். இவர்களுக்கான சிகிச்சை வசதிகள் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களிலும் அளிக்கப்படுகின்றன.

11.3.2.3. கூட்டு மருந்து சிகிச்சைகள் (Anti Retroviral Therapy):

கூட்டு மருந்து சிகிச்சை எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழும் நோயாளிகளின் வாழ்நாளை நீட்டிப்பதுடன், அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகின்றன. கூட்டு மருந்து சிகிச்சையின் நோக்கம், உடலில் உள்ள எச்.ஐ.வி. கிருமிகளின் அளவைக் குறைத்து, அதன்மூலம் சந்தர்ப்பவாத நோய்கள் தொற்றிக்கொள்ளும் வாய்ப்பைக் குறைப்பதாகும். இதனால், எச்.ஐ.வி.-யுடன் வாழும் மக்கள் பிற நோய்களின் தொற்றுக்கு ஆளாவதும், மரணமடைவதும் குறைக்கப்படுகிறது. தற்போது, 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், தாம்பரத்திலுள்ள அரசு நெஞ்சக மருத்துவமனையிலும், நாமக்கல் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையிலும், சென்னை மகப்பேறு மருத்துவமனையிலும், தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவமனையிலும், ஆக மொத்தம் 15 கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில், எச்.ஐ.வி./ எய்ட்ஸ்-உடன் வாழும் கூட்டு மருந்து சிகிச்சை தேவைப்படும் மக்களுக்குக் கூட்டு மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. தற்போது, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் இந்தக் கூட்டு மருந்து சிகிச்சையைப் பெற்று வருகிறார்கள்.

11.3.2.4. எச்.ஐ.வி.–காச நோய் இணைத் தொற்று சிகிச்சைகள்:

எச்.ஐ.வி. தொற்று உள்ளவர்களை அதிக அளவில் பாதிப்பது காச நோயாகும். எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோர்களில் சுமார் மூன்றில் ஒரு

பங்கு மக்களுக்குக் காச நோய் உள்ளது. எச்.ஐ.வி.-காச நோய் இணைத் தொற்று சிகிச்சைமூலம் எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழும் மக்கள் காச நோய்க்கு ஆளாவதைக் குறைக்கவும், காச நோயாளிகளுக்கு எச்.ஐ.வி. பரவுவதைக் குறைக்கவும் முடிகிறது. எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் ஆர்.என்.டி.சி.பி. ஒருங்கிணைந்த திட்டத்தின்மூலம் நேரடிக் கண்காணிப்பு மருத்துவ சிகிச்சை (DOTs) வழங்கப்படுகிறது. இத்தகைய 60 எச்.ஐ.வி.-காச நோய் இணைத் தொற்று சிகிச்சை மற்றும் பரிசோதனை மையங்களின் மேம்பாட்டிற்காக எய்ட்ஸ்-காச நோய் - மலேரியாவுக்கான உலகளாவிய நிதியம் - சுற்று-3 திட்டத்தின்கீழ், 2.20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், எச்.ஐ.வி.-காச நோய் இணைத் தொற்று மருத்துவ சிகிச்சை மற்றும் பரிசோதனைச் சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், எச்.ஐ.வி.-காசநோய் இணைத் தொற்று மற்றும் ஆர்.என்.டி.சி.பி. ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு அவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் பயிற்சிகளை அளிக்கத் திட்டமிட்டுள்ளது. தற்போது 2,000 எச்.ஐ.வி.-காச நோய் இணைத் தொற்று நோயாளிகள் நேரடிக் கண்காணிப்பு மருத்துவ சிகிச்சை (DOTs) பெற்று வருகின்றனர்.

11.3.3. பாதுகாப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள்:

எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழும் மக்களுக்காக ஒருங்கிணைந்த பாதுகாப்பு மற்றும் ஆதரவுச் சேவைகளை அளிக்க, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் பல்முனைக் குறுக்கீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இச்சேவைகள் ஒருவர் எச்.ஐ.வி. கிருமியால் தாக்கப்பட்டுள்ளார் என்று முதன்முதலாகத் தெரியவரும் கட்டத்திலேயே, அதாவது, ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களிலேயே ஆரம்பிக்கப்படுகின்றன. இத்தகைய தொடர் பராமரிப்புச் சேவைகள், மருத்துவமனைகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிற சேவை நிறுவனங்களின்மூலம் அளிக்கப்பட்டு வருகின்றன.

11.3.3.1. சமூக நல மையங்கள்:

சமூக நல மையங்கள் வெளிப்புற, உட்புற நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகளையும், எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழும் மக்களுக்கான குறுகிய காலத் தங்கும் வசதியுடன்கூடிய மருத்துவ சிகிச்சையையும் அளிக்கின்றன. தமிழகத்தில் 27 சமூக நல மையங்கள்

[2006 ஆகஸ்ட் 17

அரசு சாரா நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இரண்டு காச நோய் நிலையங்கள் மற்றும் ஒரு தொழுநோய் சிகிச்சை மையமும் சமூக நல மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதற்காக 2006-2007 ஆம் ஆண்டில் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் 3.3 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

11.3.3.2. எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோர்க்கான நலவாழ்வு மையங்கள்:

எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழ்வோருக்கு உளவியல் மற்றும் சமூகரீதியான ஆதரவு அளிக்கும் வகையில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழ்வோர் நலச் சங்கங்களுடன் இணைந்து, எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோருக்கான நலவாழ்வு மையங்களைத் தொடங்கியுள்ளது. இம்மையங்கள் எச்.ஐ.வி./எய்ட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு அவர்களின் உடல்நலம் குறித்த செய்திகளையும், வழிகாட்டுதலையும் அளிக்கின்றது. இத்தகைய நல வாழ்வு மையங்கள் ஆறு ஏற்படுத்தப்பட்டு எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழ்வோர் நலச் சங்கங்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய திட்டத்திற்கென, இந்த ஆண்டு (2006-2007) தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் 31.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

11.3.3.3. எச்.ஐ.வி./எய்ட்ஸ்–உடன் வாழும் மக்களின் சிறப்பான ஈடுபாடு:

எச்.ஐ.வி./எய்ட்ஸ் குறித்த முக்கிய முடிவுகளையும், திட்டங்களையும் வடிவமைப்பதிலும், வரைமுறைப்படுத்துவதிலும், எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழும் மக்களின் பங்கு முக்கியமானது என்பதை உணர்ந்து, தமிழ்நாடு அரசு எச்.ஐ.வி./எய்ட்ஸ் - உடன் வாழும் மக்களின் பங்களிப்பை மேம்படுத்தும் வகையில், அவர்களுக்குத் தேவையான செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் ஆதரவு கோரும் பணிகளை மேற்கொள்ளும். இதற்காக தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் ரூ.50 இலட்சத்தை இந்த ஆண்டு ஒதுக்கியுள்ளது.

11.3.3.4. ஆற்றல் மேம்பாட்டு நடவடிக்கைகள்:

எச்.ஐ.வி./எய்ட்ஸ் திட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ள சுகாதார நலப் பணியாளர்களின் ஆற்றலை மேம்படுத்துதல் மிக முக்கியமான ஒன்றாகும்.

2006 ஆகஸ்ட் 17]

எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழும் மக்கள் முறையான, மேம்பட்ட, சிறப்பான சிகிச்சை பெற மருத்துவப் பணியாளர்களின் ஆற்றல் மேம்பட்டு வரும் வகையில், அவர்கள் பயிற்சி பெறுவது மிக முக்கியம். இதற்காகத் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம், மருத்துவக் கல்வி இயக்குநரகம், பொதுச் சுகாதார இயக்குநரகம் ஆகியவற்றின் சுகாதார நலப் பணியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் வகையில் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அரசு மருத்துவப் பணியாளர்களைப்போலவே, தனியார் மருத்துவப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பது மிக முக்கியமாகும் என்பதை உணர்ந்து, இந்த ஆண்டு, அரசு மற்றும் தனியார் மருத்துவப் பணியாளர்களுக்கு ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சி மிகச் சிறப்பான முறையில் அளிக்கப்படும். இந்தப் பயிற்சிகளுக்காக, தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

11.4. 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு:

எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பு, கட்டுப்பாடு, ஆதரவு மற்றும் நலப் பணிகள், மருத்துவ சிகிச்சை சேவைகள் மற்றும் இதரப் பணிகளுக்கென தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெற்று வருகின்றது. இதற்காக உலக வங்கி நிதி உதவியிலிருந்து, தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் 3,382.43 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களின் செயல்பாட்டிற்கென எய்ட்ஸ்-காச நோய் மற்றும் மலேரியா தடுப்புக்கான உலகளாவிய நிதியம் - இரண்டாம் சுற்றிலிருந்து 20 கோடி ரூபாயும், மூன்றாம் சுற்றிலிருந்து 2.20 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்புப் பணிகளைச் சிறப்பான முறையில் செயல்படுத்த, 15 கோடி ரூபாய் அளிக்க தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது.

[2006 ஆகஸ்ட் 17

அத்தியாயம்–12

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

12.1. அமைப்பு:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், 1956 ஆம் ஆண்டுக்கான கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 1-7-1994 அன்று நிறுவப்பட்டது. இந்தக் கழகம் கடந்த பன்னிரண்டு ஆண்டு காலத்தில் நல்ல முறையில் செயலாற்றி வளர்ச்சி கண்டுள்ளது. இது ஒரு ஐ.எஸ்.ஓ. 9001:2000 சான்று பெற்ற நிறுவனமாகும். இக்கழகம் அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகளைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்யும் பணி மட்டுமின்றி, கால்நடை மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளையும் கொள்முதல் செய்து சேமித்து வழங்கி வருகிறது. மேலும், விலை உயர்ந்த மருத்துவக் கருவிகளையும் பல்வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கி வருகிறது. தவிர, கட்டண சிகிச்சைப் பிரிவு நடத்துதல் மற்றும் மருத்துவமனைகளில் மருத்துவக் கருவிகளைப் பராமரிக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளது.

12.2. செயல்பாடுகள்:

(அ) மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்கள் கொள்முதல்:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் தரமான மருந்துப் பொருட்கள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களைக் கொள்முதல் செய்து, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் விநியோகிப்பதைக் கண்காணித்து வருகிறது.

(ஆ) கால்நடைகளுக்கான மருந்துப் பொருட்கள் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகித்தல்:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் தரமான மருந்து, இரசாயனப் பொருட்கள் மற்றும் திரவ நைட்ரஜன் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, கால்நடைத் துறையின்கீழ் இயங்கி வரும் அரசு மருத்துவமனைகளுக்கும் இக்கழகத்தின் மருந்துக் கிடங்கிலிருந்து விநியோகித்து வருகிறது. ஒவ்வொரு மருத்துவ நிலையத்திற்கும், அதன் துறையால் நிதி ஒதுக்கப்பட்டு, வரவு-செலவுப் புத்தகம்மூலம் அதனுடன் இணைக்கப்பட்ட மருந்துக் கிடங்கிலிருந்து மருந்துகள், அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும் தையல் பொருட்களை வழங்கி வருகிறது.

2006 ஆகஸ்ட் 17]

(இ) நோய்க்குறி அறிதல்:

இக்கழகம் தனது பணியான மருந்துகளைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்வது மட்டுமல்லாமல், பொது மக்களுக்காகக் குறைந்த கட்டணத்தில் நோய்க்குறி அறியும் வசதியையும் செய்துள்ளது. மேலும் இக்கழகம் 2 எம்.ஆர்.ஐ. கருவிகளை, அதாவது, ஒன்றை அரசு பொது மருத்துவமனை சென்னையிலும், மற்றொன்றை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலும் நிறுவி, அதன்மூலம் பொது மக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் ஸ்கேன் வசதியைச் செய்து வருகிறது. இக்கழகம் 40 சி.டி. ஸ்கேன்களை 37 அரசு மருத்துவமனைகளில் நிறுவி, பராமரித்து வருவதோடு, ஒரு மாவட்ட மருத்துவமனைக்கு ஒரு சி.டி. ஸ்கேன் என்று நிறுவி, பொது மக்களுக்குச் சேவை செய்து வருகின்றது. மேலும் தமிழக அரசு புதிய எம்.ஆர்.ஐ. கருவிகளை வாங்கி, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், தலா ஒரு கருவியை நிறுவுவதற்கு இந்தக் கழகத்திற்குத் தற்போது அனுமதியளித்துள்ளது.

(ஈ) கல்லீரல், கணையம், பித்த நீர்ப் பை, குடல் சார்ந்த ரத்தக் கசிவுப் பிரிவு, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை-1:

ஐ.எஸ்.ஓ. 9001 தரச் சான்றிதழ் பெற்ற கல்லீரல், கணையம், பித்த நீர்ப் பை, குடல் சார்ந்த ரத்தக் கசிவுப் பிரிவு மையத்தை சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் இரைப்பைக் குடல் சார்ந்த அறுவை சிகிச்சைத் துறையின்கீழ், ஒரு தனிப்பட்ட பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், இதன் உள்கட்டமைப்புக்குத் தேவையான அனைத்தும், இதன் வருவாய்மூலம் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் அளிக்கப்படுகிறது.

(உ) மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவமனை, சென்னை-8:

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணத்தில், மகளிர் மற்றும் மகப்பேறு குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8-ல் மகப்பேறு கட்டணப் பிரிவை இக்கழகம் 19-2-2003 முதல் நிறுவி, பராமரித்து வருகிறது.

(ஊ) அரசு கஸ்தூரிபா காந்தி மகளிர் மருத்துவமனை, சென்னை-5:

அரசு வழிகாட்டலின் பேரில், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கஸ்தூரிபா காந்தி மகளிர் மருத்துவமனையில் சிறப்பு வகுப்பு மகப்பேறு கட்டணப் பிரிவை நிறுவி, அப்பிரிவு 3-5-2004 முதல் இயங்கி வருகிறது.

[2006 ஆகஸ்ட் 17

(எ) முழு உடற்பரிசோதனைத் திட்டம்:

அரசு பொது மருத்துவமனையில் முழு உடற்பரிசோதனைத் திட்டமும், அதன் நிதிக் கட்டுப்பாடும் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்கீழ் 1-4-2001 முதல் கொண்டு வரப்பட்டு, சென்னை, அரசு பொது மருத்துவமனையில் இத்திட்டம் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் மிகவும் சீரிய முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

(ஏ) பல்வேறு அரசு மருத்துவமனை/மருத்துவ நிறுவனங்களில் உள்ள மருத்துவக் கருவிகளைப் பராமரித்தல்:

அரசு வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், அனைத்து மருத்துவமனைகளிலும் உள்ள மருத்துவக் கருவிகள் மற்றும் சாதனங்களைப் பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளது. மருத்துவக் கல்வி இயக்ககம் மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளின் மருத்துவக் கருவிகளை இக்கழகம் பராமரித்து வருகிறது.

(ஐ) மருந்துக் கிடங்குகள் கட்டுமானப் பணி:

அ) தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 23 மாவட்டங்களில் மாவட்ட மருந்துச் சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியுள்ளது.

ஆ) தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், சிவகங்கை மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இக்கழகம் ரூபாய் 105.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவகங்கை மாவட்டத்தில் மருந்துக் கிடங்கு கட்டும் பணியினைத் தொடங்கியிருக்கின்றது. இப்பணியானது டிசம்பர் 2006-க்கு முன்பே முடிக்கப்படும்.

இ) மேலும், இக்கழகமானது தேனி மாவட்டத்தில் சுமார் ரூபாய் 104.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மருந்துக் கிடங்கைக் கட்டி வருகிறது. இப்பணி வரும் ஜனவரி 2007-ல் முடிவடையும்.

ஈ) புதிதாகத் தொடங்கப்பட்ட மாவட்டங்களான நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், திருவள்ளூர், கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில், தலா ஒரு மருந்துக் கிடங்கைக் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஒ) கொள்முதல் மைய விலைப் பட்டியல் நிர்ணயம்:

2004-2005 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் பகிரங்க ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில், அரசு மருத்துவமனைகளின்

2006 ஆகஸ்ட் 17]

20 துறைகளுக்குத் தேவையான 5,700 மருத்துவச் சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் 1-4-2005 - 31-3-2007 ஆண்டுக்கான கொள்முதல் மைய விலைப் பட்டியல் நிர்ணயம் செய்யும் பணியினை மேற்கொண்டுள்ளது. அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, விலை நிர்ணயம் செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து, அந்தந்த மருத்துவமனைகள்/நிலையங்களின் நிதிநிலைக்கேற்ப நேரடியாகக் கொள்முதல் செய்துகொள்ளலாம்.

(ஓ) மருத்துவக் கருவிகள் கொள்முதல் மற்றும் விநியோகம்:

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான நவீனமான மற்றும் விலை உயர்ந்த மருத்துவக் கருவிகளை அரசின் ஆணைக்கேற்ப தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. மேலும், உலக வங்கியின் உதவி பெறும் "தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்திற்குத்" தேவையான உபகரணங்களை, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது.

(ஔ) ஆலோசனைப் பணிகள்:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மருந்தாளுமை மற்றும் மருந்துக் கிடங்குகள் இந்தியாவிலேயே முன்மாதிரியாகத் திகழ்கின்றன. பல மாநிலங்கள் இக்கழகத்தின் செயல்பாட்டைப் பின்பற்றி வருகின்றன. இக்கழகம் ஆந்திரா மற்றும் இராஜஸ்தான் அரசுகளின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு ஆலோசனை வழங்கி, செயல்படுத்தியும் உள்ளது.

12.3. மருந்துகள் கொள்முதல்:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தமிழ்நாட்டின் அரசு மருத்துவமனைகளுக்கு 277 மருந்துகள், 71 அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் 103 அறுவை தையல் கருவிகளைச் சிறந்த நிறுவனங்களிடமிருந்து திறந்தவெளி ஒப்பந்தம்மூலம் கொள்முதல் செய்கிறது. இதுபோலவே, இக்கழகம் 129 மருந்துகள், இரசாயனப் பொருட்கள் மற்றும் திரவ நைட்ராஜன் ஆகியவற்றைக் கால்நடைத் துறைக்காகக் கொள்முதல் செய்கிறது. மேலும் இக்கழகம், மருத்துவக் கிடங்குகளின் தேவைக்கேற்பவும், மருந்துகளின் தேவைப் பட்டியலுக்கேற்பவும் கொள்முதல் ஆணைகளை வழங்கி, கணினிமூலம் விநியோகத்தைக் கண்காணித்து வருகிறது.

12.4. தரக் கட்டுப்பாடு:

இக்கழகத்தால் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் மருந்துப் பொருட்கள் தரக் கட்டுப்பாட்டுத் துறையில் பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, பகிரங்க ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்து வழங்கப்படுகிறது. தயாரிப்பாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் மருந்திலிருந்து மாதிரி எடுத்து, பரிசோதனைக் கூடங்களுக்கு அனுப்பி, பகுப்பாய்வு செய்து, தரப் பரிசோதனை பெற்ற பிறகே மருந்துகள் அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

12.5. விநியோகம்:

ஒவ்வொரு அரசு மருத்துவ நிலையத்திற்கும் அதன் துறையால் நிதி ஒதுக்கப்பட்டு வரவு-செலவுப் புத்தகம்மூலம் அதனுடன் இணைக்கப்பட்ட மருந்துக் கிடங்கிலிருந்து மருந்துகள், அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் தையல் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு மருத்துவமனைகளுக்குத் தடையில்லாமல் மருந்துகள் கிடைப்பதற்காக, இக்கழகம் ஒவ்வொரு மருந்துக் கிடங்கிலும் 3 மாதக் கையிருப்பை எப்போதும் சேமித்து வைப்பதை நடைமுறைப்படுத்தி வருகிறது.

12.6. இணையதளம்:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கான இணையதளத்தை (www.tnhealth.org) இயக்கிச் செயல்படுத்தி வருகிறது. தினமும் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை உடனுக்குடன் பொது மக்களின் நோய்க் குறைபாடுகளைக் களைய, ஒவ்வொரு துறையிலும் சிறந்த மருத்துவர்களைக் கொண்டு இணையதளத்தின்மூலம் ஆலோசனை வழங்கி வருகிறது.

12.7. இதர நடவடிக்கைகள்:

அ) தேசிய ஊரக நலத் திட்டத்தின் கீழ், மற்ற மாநில அரசுகள் விரும்பினால், அம்மாநிலங்களுக்கு மருந்துகளைக் கொள்முதல் செய்து தரவும், ஆலோசனைகளை வழங்கவும் தமிழக அரசு தமிழ்நாடு மருத்துவப்

பணிகள் கழகத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இதுபோல, எய்ட்ஸ் ஆய்வுக் கலப் பெட்டிகள் கொள்முதல் செய்து, இந்திய அரசின் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்திற்கு வழங்குவதற்குத் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்குத் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இதுகாறும், அஸ்ஸாம் மற்றும் மேகாலயா மாநிலங்கள், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலமாக தேசிய ஊரக நலத் திட்டத்திற்குத் தேவையான மருந்துகளைக் கொள்முதல் செய்ய ஒப்புக்கொண்டுள்ளன.

ஆ) உலக வங்கியின் உதவி பெறும் தமிழ்நாடு சுகாதார நலத் திட்டத்திற்கும், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் தேவையான உபகரணங்களைக் கொள்முதல் செய்து வருகிறது. எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனத்திற்குத் தேவையான சோதனைக் குப்பிகள், இரத்த வங்கிக் கருவிகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்து விநியோகிக்கும் பணியையும் இக்கழகம் செய்து வருகிறது.

இ) மேலும், இக்கழகம் தமிழ்நாடு மின் வாரிய மருந்தகங்கள், பேரூராட்சி மற்றும் மாநகராட்சி மருந்தகங்களுக்கும், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள், சிறைத் துறை மற்றும் காவல் துறை மருத்துவமனைகளுக்கும், அரசு அனாதை இல்லங்கள், அரசு மறுவாழ்வு மையங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கால்நடை நிலையங்கள், போக்குவரத்துக் கழக மருந்தகங்கள் ஆகியவற்றிற்கும் சேவை செய்து வருகிறது.

அத்தியாயம்–13

தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை

13.1.1. தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை, 1981 ஆம் ஆண்டிலிருந்து தனி இயக்ககமாகச் செயல்பட்டு வருகிறது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள பழுதாகும் ஊர்திகளின் எண்ணிக்கையைக் குறைவாக வைத்திருப்பதே இத்துறையின் நோக்கமாகும்.

13.1.2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து இயக்ககங்களைச் சேர்ந்த, மொத்தம் 2,662 ஊர்திகள் இத்துறையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

13.2. செயல்பாடுகள்:

13.2.1. தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத் துறையின்கீழ், 7 மண்டலப் பணிமனைகள் உள்ளன. இவை, சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இவைத் தவிர, 9 மாவட்டத் தலைமைப் பணிமனைகளும் மற்றும் 27 நடமாடும் பணிமனைகளும் இத்துறையில் இயங்குகின்றன. சென்னையில் ஒரு மறுசீர் பிரிவு மற்றும் மைய பழுது நீக்கப் பிரிவு செயல்பட்டு வருகின்றன.

13.2.2. இத்துறை 1981-ல் மொத்த வாகனங்களில், நல்ல முறையில் இயங்கி வந்த வாகனங்களின் விழுக்காடு 72.6 ஆக இருந்ததை, 2006 ஆம் ஆண்டில் 96 விழுக்காடாகப் படிப்படியாக உயர்த்தியுள்ளது. மேலும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் இயங்கும் பல்வேறு இயக்ககங்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்ற புதிய ஊர்திகள் வேகமாக வாங்கி வழங்கப்படுவதையும் இத்துறை உறுதி செய்கிறது.

13.2.3. தமிழக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் மற்றும் மைய அரசின் தொழிற்பழகுநர் பயிற்சிக்குழுமத்தின் இயக்குநர், தரமணி ஆகியோரால் அனுப்பப்படும் தொழிற்பயிற்சி சான்றிதழ் பெற்றவர்கள், பொறியியல் பட்டம் பெற்றவர்கள் மற்றும் பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் ஆகியோர்களுக்கு, தொழிற்பழகுநர் பயிற்சி

இத்துறையினால் அளிக்கப்படுகிறது. இத்துறையில் ஆண்டுதோறும் பொறியியல் பட்டம் பெற்ற 17 நபர்களுக்கும், பொறியியல் பட்டயம் பெற்ற 29 நபர்களுக்கும் மற்றும் தொழிற்பயிற்சிச் சான்றிதழ் பெற்ற 45 நபர்களுக்கும் தொழிற்பழகுநர் பயிற்சி அளிக்கத் திறன் உள்ளது.

13.3. 2006–07 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டம்:

சென்னை, வேலூர், சேலம், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள 7 மாவட்டப் பணிமனைகளுக்குத் துணைக் கருவிகளுடன் புதிய கணினிகள் ரூ.3.50 இலட்சத்தில் வாங்கித் தரக் கருதப்பட்டுள்ளது.

\+ + + + +

227426